







இந்திய
கம்யூனிஸ்ட் கட்சி
(மார்க்சிஸ்ட்)
14வது தமிழ்நாடு மாநில மாநாடு

மாநிலக்குழுவின் வேலைஅறிக்கை



4–7, டிசம்பர் 1991

பி.டி.ஆர்
நினைவரங்கம்
தஞ்சாவூர்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)
14-வது மாநில மாநாடு, தஞ்சை
மாநிலக்குழுவின் வேலை அறிக்கை

தோழர்களே!

மாநாட்டிற்கு வருகை தந்துள்ள பிரதிநிதிகள், பார்வையாளர்கள் அனைவரையும் மாநிலக்குழு புரட்சி வாழ்த்துக்களுடன் வரவேற்கிறது.

(1) தமிழ் மாநில அரசியல் நிலைமை

1-1 நமது கட்சியின் கடந்த மாநாட்டிற்குப்பின் சர்வதேச, தேசிய நிலைமைகளில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. அவைகளைப் பற்றிய நமது நிலைபாடு பற்றி மத்திய குழுவின் நகல் தீர்மானங்கள் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளன. இந்த முறை நகல் அரசியல் தீர்மானத்துடன் கம்யூனிஸ்ட் இயக்கம் இப்போது எதிர்நோக்கும் தத்துவார்த்த பிரச்னைகள் குறித்த ஒரு தீர்மானமும் விவாதத்திற்காக வெளியிடப்பட்டுள்ளது. அவைகளை நீங்கள் படித்திருப்பீர்கள். கட்சி அமைப்புகளில் அவைகளை விவாதிக்கவும், கருத்துக்கள் கூறவும், கட்சி காங்கிரசுக்கு திருத்தங்கள் அனுப்பவும், உங்களுக்கும் அனைத்து கட்சி கமிட்டிகளுக்கும், கிளைகளுக்கும் - உறுப்பினர்களுக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. ஆகவே, அவைகளைப் பற்றி மீண்டும் இந்த அறிக்கையில் குறிப்பிட வேண்டியதில்லை என்று கருதுகிறோம். அவைகள் மாநில மாநாட்டில் விவாதிக்கவேண்டிய விஷயமும் அல்ல.

1-2 கடந்த மாநில மாநாட்டிற்குப்பின் தமிழ்நாட்டில் பலமுக்கிய அரசியல் மாறுதல்கள் ஏற்பட்டன மாநாடு நடைபெற்று இரண்டு மாத காலத்திலேயே நாம் மாநில சட்டமன்ற தேர்தலைச் சந்திக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. திமுக, ஜனதாதள கட்சிகளுடன் தொகுதி உடன்பாடு கண்டு நாம் தேர்தலில் போட்டியிட்டோம். சிபிஐ, அவர்கள் சக்திக்கு மீறிய அளவில் தொகுதிகள் வேண்டும் என்று வற்புறுத்தியதனுல், அவர்களுக்கும் திமுக வுக்கும் உடன்பாடு ஏற்படவில்லை. அவர்கள் ஜெயலலிதா அணியில் சேர்ந்தனர். ஜெயலலிதா அணி, ஜானகி அணி, காங்கிரஸ் அணி என்று எதிர்தரப்பினர் பிரிந்து நின்றதனுல் திமுக-வும், அதனுடன் உடன்பாடு செய்த கட்சிகளும் குறிப்பிடத்தக்க அளவு தொகுதிகளில் வெற்றி பெறுவது சாத்தியமாகியது. 13 ஆண்டுகளுக்குப்பின் திமுக மீண்டும் ஆளும் கட்சியாக மாறியது.

1-3 தி.மு.க., இத்தேர்தல்களில் முஸ்லிம் லீகின் ஒரு பிரிவுடன் தொகுதி உடன்பாடு செய்து கொண்டது. அவர்கள் திமுக சின்னத்தில்

போட்டியிட்டனர். இருப்பினும், நாம் இந்த உடன்பாட்டில் நம்மை சம்பந்தப்படுத்திக் கொள்ளவில்லை. கூட்டு மேடைகளில் நம்முடன் முஸ்லிம் லீக் பங்கு பெறுவதை நாம் அங்கீகரிக்கவில்லை. அதேநேரத்தில், இவர்கள் போட்டியிட்ட தொகுதிகளில் காங்கிரஸ் மற்றும் எதிர்தரப்பு வேட்பாளர்களைத் தோற்கடிக்கக்கூடிய முறையில் நமது வாக்குகளை அளித்தோம்.

1-4 இலங்கை தமிழர் பிரச்னை குறித்து நமது கொள்கையை நம்முடைய சுயேச்சையான மேடைகளில் விளக்கிப் பேசினோம். இலங்கைப் பிரச்சனையில் திமுக நிலை நமது நிலைக்கு மாறானது. இந்த மாறுபட்ட கருத்தினை நாம் பங்குகொள்ளும் கூட்டு மேடைகளில், அவர்கள் பேசக்கூடாது என்று நாம் திமுக தலைமையிடம் வற்புறுத்தினோம். அவர்களும் ஏற்றுக்கொண்டனர். தேசிய முன்னணி-இடதுசாரி கட்சிகளின் உடன்பாடான கருத்துக்களின் அடிப்படையிலேயே தேர்தல் பிரச்சாரம் நடைபெற்றது.

1-5 திமுக அரசு: 1989 ஜனவரி முதல் 1991 ஜனவரி முடிய இரண்டாண்டு காலம் தமிழகத்தில் திமுக ஆட்சி நடைபெற்றது. இக்காலத்தில் பல பகுதி மக்களுக்கு இலவச அரிசி, வேட்டி-சேலை போன்ற பல சலுகைகளை வழங்கினார்கள். குறிப்பாக, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், கடன் நிவாரணம், ஜப்தி நிறுத்தம், 8-வது வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு இலவச பஸ் பயண சலுகை, பெண்களுக்கு சொத்துரிமையில் சமபங்கு கிடைக்க வகை செய்யும் சட்டம், ஆரம்பப் பள்ளி ஆசிரியர் பணியில் பெண்களுக்கு 30% இடஒதுக்கீடு, 8-வது வகுப்பு வரை படித்த கிராமப்புற ஏழை பெண்களுக்கு திருமணத்திற்கு ரூ. 5000 உதவி முதலிய சலுகைகள் வழங்கியது ஆகியவைகள் குறிப்பிடத்தக்கவையாகும். இருப்பினும், மூடிய ஆலைகளைத் திறப்பது, விலைவாசியைக் கட்டுப்படுத்துவதில் பலகீனம், பொது விநியோக முறையை திருத்தி அமைப்பதில் குறைபாடு, ஜனநாயக உரிமைகளைப் பறிக்கும் போலீஸ் கொள்கை, அரசு நிர்வாகத்திலும் மற்ற துறைகளிலும் நடைபெற்ற ஊழல்கள், தொழிலாளர் விரோதக் கொள்கை, எல்டிடிஇ-யின் பால் திமுக கடைபிடித்த பரிவான அணுகுமுறை முதலிய பல காரணங்களால் திமுகவிற்கு இருந்த அரசியல் செல்வாக்கு குறையும் நிலை ஏற்பட்டது. 1989 நவம்பர் நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் இதை வெளிப்படுத்தின. தேர்தல் முடிவு விவரங்கள் அறிக்கையின் கடைசியில் இணைக்கப்பட்டுள்ளது.

1-6, 1991-வது ஆண்டு மே மாதம் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட பின்னணியில் நடைபெற்ற தேர்தலில் அந்தக் கொலையைப் பயன்படுத்தி காங்கிரஸ்-அதிமுக அணியினரால் தூண்டிவிடப்பட்ட பொய்ப் பிரச்சாரமும், உணர்வுகளும், உருவாக்கப்பட்ட கருத்துக்களும் தேர்தல் முடிவுகளைப் பெரிதும் பாதித்தன. திமுகவுக்கும் அதனுடன் உடன்பாடு கொண்டிருந்த கட்சிகளுக்கும் கிடைத்திருக்க வேண்டிய ஓட்டும், சீட்டும் கணிசமாகக் குறைவதற்கு இது முக்கிய காரணமாகும். 1989 நவம்பர் நாடாளுமன்றத் தேர்தல் தோல்வியும், 1991-வது ஆண்டின் தேர்தல் தோல்வியும் திமுக-வினருக்கு அவநம்பிக்கையையும், சோர்வையும் ஏற்படுத்தியது. அக்கட்சியின் செல்வாக்கு தொடர்ச்சியாகக் குறைந்து வருகிறது என்பதை மூன்று தேர்தல்களிலும் அவர்கள் பெற்றுள்ள வாக்கு

களின் விபரம் வெளிப்படுத்துகிறது. 'இரண்டாண்டுகால ஆட்சியில் அவர்கள் புதிய பகுதி மக்களை வென்றெடுக்கவில்லை. மாறாக, இருந்த செல்வாக்கை சிறிதளவு இழந்துள்ளனர்.

1–7 தேர்தலுக்குப்பின் சில மாதங்கள் கழித்து திமுக மீண்டும் செயல்படத் தொடங்கி உள்ளது. ஆனால், அவர்கள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகள், நாட்டையும், மக்களையும் பாதிக்கும் பொருளாதாரக் கொள்கைகள் போன்ற பிரச்சனைகளில் இயக்கங்கள், கிளர்ச்சிகள் நடத்த முன்வரவில்லை. நமது வற்புறுத்தலினால் சில பிரச்சனைகளில் பெயரளவுக்கு பங்குகொள்ளும் நிலைதான் உள்ளது. அவர்கள் இப்போது அதிக கவனம் செலுத்துவது பிரதானமாக நீதிக் கட்சியின் பவள விழா, திராவிட இயக்க வரலாற்றுப் பிரச்சாரம், பிராமண எதிர்ப்பு ஆகியவைகளில்தான். ஜெயலலிதா பிராமண சமூகத்தைச் சார்ந்தவர் என்பதை அடிப்படையாகக் கொண்டு பிராமண ஆதிக்க எதிர்ப்புப் பிரச்சாரத்தைத் தீவிரப் படுத்தியுள்ளனர். இவைகள் இனவாத, சீர்குலைவு சக்திகளுக்கு ஊக்கம் ஊட்டுவதாக அமையும் அபாயம் ஏற்படக்கூடும் என்பதையும் நாம் கணக்கி லெடுத்துக்கொள்ளவேண்டும். அவர்களின் இந்த தவறான நிலைபாட்டை நாம் எதிர்த்துப்போராட வேண்டிய நிலையில் உள்ளோம். அதேநேரத்தில் ஜனநாயக இயக்கத்தில் அவர்களைத் தொடர்ந்து இணைத்துக்கொண்டு போகவேண்டிய பொறுப்பும் நமக்கு உண்டு என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

1–8 அதிமுக பிளவுபட்டிருந்த நிலையில் 1989 ஜனவரியில் தமிழ கத்தில் முதல் கட்சியாக திமுக திகழ்ந்தது. ஆனால், ஜெயலலிதா-ஜானகி பிரிவு அதிமுகவினர் ஒன்றிணைந்த போது திமுக மீண்டும் இரண்டாவது இடத்திற்கு வந்துள்ளது இருப்பினும், காங்கிரசின் எதேச்சாதிகாரத்திற் கும், மதவெறிக்கும் எதிராக இயங்குகிற ஒரு கட்சியாகவும், தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சியாகவும், கணிசமான அளவு செல் வாக்குள்ள கட்சியாகவும் இப்போதும் திமுக இருந்து வருகிறது என்பதை யும் நாம் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும். அதேநேரத்தில் பிராமண எதிர்ப்பு போன்ற திராவிட இயக்கத்தின் அடிப்படைத் தத்துவங் களையும், நீதிக் கட்சியின் பாரம்பரியத்தையும் விரிவாக அவர்கள் பிரச் சாரம் செய்யத் தொடங்கியுள்ளதால் திராவிட இயக்க இனவாத தத்து வங்களுக்கெதிரான நமது சித்தாந்த போராட்டத்தை நாமும் திட்டமிட்டு முறையாக நடத்த வேண்டிய கடமையும் நமக்குள்ளது.

1-9 கடந்த மூன்றாண்டு காலத்தில் முன்னுக்கு வந்த முக்கிய அரசியல் பிரச்சனைகளிலும், மக்கள் பிரச்சனைகளிலும் நமது கட்சி தலையிட் டுள்ளது. நமது நிலைபாட்டை தெளிவுபடுத்தியுள்ளோம். பல்வேறு பிரச் சனைகளில் தனித்தும், கூட்டாகவும் இயக்கங்கள் நடத்தியுள்ளோம். திமுக வுடன் நாம் மாறுபட்ட பிரச்சனைகளில், உதாரணமாக இலங்கைப் பிரச் சனை, போலீஸ் கொள்கை, தொழிலாளர் கொள்கை, உணவு விநியோக கொள்கை, பஸ் கட்டண உயர்வு போன்ற பிரச்சனைகளில் நமது சுயேச்சை யான நிலையை வேறுபடுத்திக் காட்டியுள்ளோம்.

இலங்கைப் பிரச்சனை:

1-10 இலங்கைத் தமிழர் பிரச்சனையில் திமுக நிலையும் நமது நிலையும் மாறுபட்டது. ஒன்றுபட்ட இலங்கை என்ற அமைப்பில் ஈழத் தமிழர் வாழும் பிரதேசங்களை ஒன்றுபடுத்தி விரிவான சுயாட்சி வழங்குவதன் அடிப்படையில்தான் இப்பிரச்சனைக்குத் தீர்வு காண முடியும்என்பது நமது நிலைபாடு. இதன் அடிப்படையில் நாம் எல்டிடிஇ-மற்றும் பிரிவினைவாத குழுக்களின் கோரிக்கைகளை எதிர்க்கிறோம். ஆனால், திமுக நிலைபாடு எல்டிடிஇ அமைப்புக்கு பரிவுள்ளதாக இருந்து வந்துள்ளது. 1983-வது ஆண்டிலிருந்து இலங்கை அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக தமிழ் போராளிகள் போராடிக்கொண்டிருந்த காலத்தில், ஈழத்தமிழர் பிரச்னைக்குத் தீர்வு காண இலங்கை அரசை நிர்ப்பந்திக்க எல்டிடிஇ உட்பட போராளிக் குழுவினருக்கு இந்திய அரசும் தமிழ்நாடு அரசும் உதவிகள் செய்து வந்தன. ஆகவே அப்போதிருந்தே தமிழ்நாட்டில் இவர்களின் தளங்கள் உருவாகத் தொடங்கின. இலங்கை, இந்தியாவுக்கெதிரான ஏகாதிபத்திய தளமாக மாறுவதைத் தடுக்கவும், தமிழர் வாழும் பிரதேசத்திற்கு சுயாட்சி, தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து என்ற அடிப்படையில் இலங்கை தமிழர் பிரச்சனைக்குத் தீர்வுகாண இலங்கை அரசை நிர்ப்பந்திக்க வேண்டியது அன்றைய தேவையாக இருந்தது. அதற்காகப்போராளிகளுக்கு மத்திய,மாநில அரசுகள் உதவி செய்தன.

1-11, 1987 ஜூலையில் இந்திய-இலங்கை உடன்பாடுஏற்பட்டது. அதனை அமுலுக்குக் கொண்டுவர இந்தியப்படை இலங்கை சென்றது. நாம் அதனை ஆதரித்தோம். பல போராளிக்குழுக்களும், இதனை ஏற்றுக் கொண்டன. ஆரம்பத்தில் இந்த ஒப்பந்தத்தை ஏற்பதாகக் கூறிய எல். டி டி. இயினர் பின்னர் தங்கள் நிலையை மாற்றிக்கொண்டனர். எல் டி டி இயும் அவர்களுடன் இணைந்த சில போராளிக் குழுக்களும் தனி ஈழத்திற்கான போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தின. இந்நிலையில் அவர்கள் இந்திய அரசு மற்றும் தமிழ்மாநில அரசுகளின் ஆதரவை இழந்தனர். தமிழ்நாட்டில் திமுக, திக மற்றும் சில குழுக்கள் எல் டி டி இ நிலையை ஆதரித்தன. நாம் இதனை எதிர்த்துப் போராட வேண்டிய நிலை ஏற்பட்டது. தி மு க வுடன் மாறுபட்ட நிலை எடுத்தோம். இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து தி மு க பின்பற்றி வந்த எல் டி டி இ ஆதரவு நிலைபாடுதான் ராஜீவ் மரணத்தைத் தொடர்ந்து தி மு க வுக்கு எதிரான உணர்வு மக்கள் மத்தியில் வலுவாக ஏற்படக் காரணமாக இருந்தது

1-12 தமிழ்நாட்டில் எல்டிடிஇ தளங்கள் 1983-வது ஆண்டிலிருந்து உருவாகத் தொடங்கின. மத்தியில் காங்கிரஸ் ஆட்சி காலத்திலும் தமிழ் நாட்டில் அதிமுக ஆட்சிக் காலத்திலும், கவர்னர் ஆட்சிக் காலத்திலும், தி. மு. க. ஆட்சி காலத்திலும் தொடர்ந்து இருந்து வந்தது. அவைகளின் நடவடிக்கைகளைத் தடுக்க உறுதியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.ராஜீவ் காந்தியின் கொலையைத் தொடர்ந்துதான் தீவிரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1-13 இப்போது பல்வேறு பிரிவினைவாத, தீவிரவாதக் குழுக்களுடன் தொடர்பு கொண்டு எல்டிடிஇ நடவடிக்கைகள் தொடர்ந்து

நீடித்து வருகிறது. அவர்களுக்கு ஆதரவாக சில துணை அமைப்புகள் இந்த செயல்பட்டு வருகின்றன என்பதையும் நாம் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும். இதனால் தொடர்ந்து பல பாதிப்புகள் ஏற்படும் அபாயம் உண்டு.

அகதிகள் பிரச்சனை

1-14 பிரேமதாசா அரசின் உதவியுடன் வடகிழக்கு பகுதியில் இபிஆர்எல்எப் தலைமையில் பல தமிழ் குழுக்கள் அமைத்திருந்த தமிழர் ஆட்சிக்கெதிராக எல்டிடிஇ கடுமையான தாக்குதல் தொடுத்தது. அந்த அரசு செயல்பட முடியாத நிலை ஏற்பட்டது. இந்நிலையில் அமைச்சர்கள் உட்பட 1600 தமிழர்கள் அங்கிருந்து வெளியேறும் நிலைமை ஏற்பட்டது. அகதிகளாக வந்த அந்த தமிழர்களை தமிழ்நாட்டில் அனுமதிக்க முடியாது என்று திமுக அரசு எடுத்த நிலையை நாம் கண்டனம் செய்தோம். இதில் நமக்கும் திமுகவுக்கும் கடுமையான கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

1-15 அதேபோல, இலங்கையிலிருந்துதிரும்பி வந்த இந்தியப் படை வீரர்களை வரவேற்க முதலமைச்சர் என்றமுறையில் திரு கருணாநிதி போகாமல் இருந்ததையும் நாம் ஆட்சேபித்து அறிக்கை வெளியிட்டோம்.

1-16 இபிஆர் எல் எப் தலைமையிலான ஆட்சி கவிழ்க்கப்பட்ட பின் மீண்டும் இலங்கை அரசு படை எல்டிடிஇ மீது தாக்குதல் தொடுத்தது. தொடர்ந்து இலங்கை அரசுக்கும் எல்டிடிஇ போராளிகளுக்குமிடையில் சண்டை நடைபெற்றுவருகிறது. இபிஆர்எல்எப் பொதுச்செயலாளர் பத்மநாபா உட்பட 14 பேர் சென்னையில் எல்டிடிஇ-யினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். கொலைகாரர்களைக் கண்டுபிடிக்க எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இவைகள் எல்லாம் சேர்ந்து திமுக, எல்டிடிஇ-க்கு ஆதரவாக உள்ளது என்ற கருத்தை மக்கள் மத்தியில் பலப்படுத்தியது.

1-17 இத்தகைய ஒவ்வொரு பிரச்சனையிலும் நாம் திமுக நிலையிலிருந்து மாறுபட்ட நிலையை எடுத்துள்ளோம். நமது சுயேச்சையான நிலைபாட்டை மக்கள் மத்தியில் பகிரங்கமாக எடுத்துக் கூறியுள்ளோம்.

1-18 கடந்த காலத்தில் திமுக-வுடன் ஜனநாயகப் பிரச்சனைகளில் இணைந்து செயல்பட்ட காலத்திலேயே திமுக-வின் தவறுகளைச் சுட்டிக் காட்டுவதில் சில நேரங்களில் நமக்கு தயக்கமும் தாமதமும் ஏற்பட்டுள்ளது. உதாரணமாக, திமுக அரசு ஜெயலலிதாவின் ராஜினாமா கடிதத்தை தவருகப் பயன்படுத்தியது, பழிவாங்கும் முறையில் நடந்துகொண்டது, கூட்டுறவுதேர்தலில் எப்படியும்தங்கள் கட்சிக்காரர்கள் வெற்றிபெறவேண்டும் என்றமுறையில் நடந்து கொண்டபோது அதனைக்கண்டிக்காதது, ஆகியவை குறிப்பிடத்தக்கதாகும். அவர்கள்பிராமணஎதிர்ப்புநிலையை மீண்டும் முன்னுக்குக் கொண்டு வந்த போது நாம் அதை பொதுக்கூட்டங்களில் கண்டித்து பேசினோம். என்ருலும் மாநில செயற்குழு அதைப் பற்றி உடனடியாக நமது கருத்தை அறிக்கையாக வெளியிடாதது, போன்ற குறைபாடுகள் ஏற்பட்டன. எனினும், மாநில செயற்குழு தோழர்களில் ஒருகுழு திமுக தலைமையை '91' அக்டோபர் மாதத்தில்

சந்தித்து அவர்களுடைய பிராமண எதிர்ப்பு நிலைபாடு எவ்வளவு தவறானது என்பது குறித்து விளக்கமாக பேசியுள்ளது. உள்ளாட்சித் தேர்தலில் வாக்குரிமை வயதை 18-லிருந்து 21—ஆக உயர்த்தியதை நாம் எதிர்க்காமலிருந்தது நாம் செய்த ஒரு தவறாகும். மக்கள் பிரச்சனைகள் மற்றும் ஜனநாயக இயக்கங்களில் இவர்களை ஒன்றிணைத்துக் கொண்டு போகவேண்டும் என்பதில் நமக்குள்ள ஆழ்ந்த அக்கறையின் காரணமாக இத்தகைய தயக்கங்களும், தவறுகளும் ஏற்பட்டன. எதிர்கால நடவடிக்கைகளில் இதனைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

1-19 அதிமுக 1989 ஜனவரியில் சட்டமன்றத் தேர்தலுக்குப்பின் ஜெயலலிதா-ஜானகி அணிகள் ஒன்றிணைந்ததனாலும், இரட்டை இலை சின்னத்தை மீண்டும் பெற்றதனாலும், அக்கட்சி மீண்டும் தமிழ்நாட்டில் முதல் பெரும் கட்சியாகி விட்டது. மதுரை (கிழக்கு), மருங்காபுரி தொகுதிகளில் நடைபெற்ற சட்டமன்ற இடைத்தேர்தல்கள் இதனை நிரூபித்தது. 1991 ஜூன் சட்டமன்ற தேர்தல் நடந்த அரசியல் சூழ்நிலையும் அதற்குசாதகமாக அமைந்ததனால் இதுவரை எந்தக் கட்சியும் பெறாத அளவில் இக்கட்சியும், காங்கிரசும் சேர்ந்து சட்டமன்றத்தில் மிகப்பெரிய பலத்தைப் பெற்றுள்ளன. அதிமுக ஆட்சியில் அமர்ந்து 5 மாதங்களுக்கு மேலாகியும் அது மக்களுக்கு உருப்படியான எந்த நிவாரணத்தையும் அளிக்கவில்லை. மின் கட்டண உயர்வு, பஸ் கட்டண உயர்வு போன்ற நடவடிக்கைகளினால் மக்களிடம் அதிருப்தி வளரத் தொடங்கியுள்ளது. பொது விநியோக முறையில் அபிவிருத்தி ஏதும் இல்லை. மக்களிடம் அவநம்பிக்கையும், உற்சாகமின்மையும் வளரத் தொடங்கியுள்ளது. இவர்கள் ஆட்சிக்கு வந்து இரண்டு மாதம் கழித்து நடந்த இடைத் தேர்தல்களிலேயே வாக்குப் பதிவு மிகக் குறைவாக இருந்தது. சென்னை நகரத்திலேயே 41 சதவீதம் வாக்குகள்தான் பதிவாயின. சென்னையில் இரண்டு தொகுதிகளிலும் அதிமுக ஆதரவுடன் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர்கள் தோல்வி அடைந்தனர் என்பதும், திமுக வேட்பாளர்கள் வெற்றி பெற்றதும் குறிப்பிடத்தக்கதாகும். இருப்பினும், அதிமுக அரசின் மீது பெரும் அளவுக்கு எதிர்ப்பும், அதிருப்தியும் வளர்ந்துள்ளது என்ற முடிவுக்குப் போவதும் சரியாக இருக்காது.

1-20 பஸ் கட்டணத்தைப் பெருமளவு உயர்த்தியதனால் ஏழை—எளிய மக்களும், நடுத்தர மக்களும், பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கெதிராக மாணவர்களும், வாலிபர்களும் துவக்கிய போராட்டம் மக்களின் கவனத்தை கவர்ந்தது. இதில் நமது தோழர்கள் முக்கிய பங்கு வகித்தனர் நமது முன்முயற்சியில் திமுக, சிபிஐ, ஜனதா தளம் ஆகிய கட்சிகளும் பங்குகொண்டு நடைபெற்ற அனைத்து கட்சி இயக்கம், பாட்டாளி மக்கள் கட்சியினரின் போராட்டம் எல்லாம் இணைந்தபோது அது ஒரு புதுவேகம் பெற்றது. பெயரளவுக்கு கட்டணக் குறைப்பு செய்யவும், கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யவும் அரசுக்கு நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இருப்பினும் தனக்கு இன்னும் பெருமளவு செல்வாக்கு இருக்கிறது என்ற மமதையில் பெருமளவு கட்டண உயர்வைத்தொடர்ந்து அமுல்படுத்தி வருகிறது.

1-21 இதுபோன்ற மக்கள் விரோதக் கொள்கைகளை எதிர்த்து மக்களைத் திரட்டிப் போராடுவதன் மூலமே இவர்களை அம்பலப்படுத்தவும், தனிமைப்படுத்தவும் முடியும். இதற்கு மாறாக, ஜாதி அடிப்படையில் பிராமண எதிர்ப்பு பிரச்சாரத்தில் ஈடுபடுவது அதிமுகவுக்கே உதவி செய்யும். இதனை திமுக தலைமைக்கும், அணிகளுக்கும் உணர்த்த வேண்டும். கோவில் நிலத்தில் குத்தகை விவசாயம் செய்யும் விவசாயிகள் நீண்ட காலமாக அனுபவித்து வரும் குத்தகை உரிமையை பறித்து அவர்களை நில வெளியேற்றம் செய்யும் ஒரு திட்டத்தினை அதிமுக அரசு முன் வைத்துள்ளது. இதனை எதிர்த்து வலுவான போராட்டத்தினை நடத்த நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1-22 மூடப்பட்ட ஆலைகளை திறப்பது, வேலைவாய்ப்பு, விலைவாசியைக் கட்டுப்படுத்துவது, அடக்குமுறை நடவடிக்கைகளை நிறுத்துவது, தொழிலாளர், விவசாயிகள் மற்றும் பல்வேறு பகுதி உழைப்பாளி மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான கோரிக்கைகளுக்காகப் போராடுவது, மாற்று அரசியல் பொருளாதாரக் கொள்கைகளை முன் வைத்து மக்களைத் திரட்டுவது ஆகியவைகள் மூலமே மாநில ஆளும் கட்சிக்கெதிராக மக்களைத் திரட்ட முடியும். மத்திய ஆளும் கட்சி பின்பற்றி வரும் பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாக விலைவாசியும், வேலையின்மையும் வேகமாக அதிகரிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. அதிமுக, மத்திய அரசுக்கும் அதன் கொள்கைகளுக்கும் பெரும் துணையாக உள்ளது. இதன் விளைவாக மத்திய அரசின் மக்கள் விரோதக் கொள்கையை தமிழகத்தில் அமுல்படுத்தும் ஆட்சியாகவே அது செயல்படுகிறது. மக்களுக்கு ஏற்கெனவே கிடைத்து வந்த நிவாரணங்களையும், பறிக்கும் பாதையில் அது செல்கிறது இவைகளையெல்லாம் மக்களிடம் அம்பலப்படுத்த வேண்டும். மக்கள் நலனுக்கான போராட்டங்களைத் தொடர்ந்து நடத்த வேண்டும். இதில் விரிவான பகுதி மக்களை பங்குபெறச் செய்ய வேண்டும்.

1-23 அதிமுக இக்கொள்கையின் அடிப்படையில் தமிழ் நாட்டில் தனியார் துறையை ஊக்குவிக்கும் பாதையில் செல்கிறது. இதுபற்றிய அறிவிப்புகள் வெளியிடப்பட்டு வருகிறது. குறிப்பாக, பிர்லா கம்பெனியுடன் கூட்டு சேர்ந்து ஜெயங்கொண்டத்தில் அனல் மின் நிலையம் அமைக்க ஏற்பாடுகள் ஆரம்பமாகியுள்ளது. ஆனால், இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடியில் தனியார் துறையில்கூட தொழில்கள் துவங்குவதற்கும், வளர்ப்பதற்கும் உள்ள வாய்ப்புகள் மிகக் குறைவு. இது தமிழ்நாட்டில் இப்போதே வெளிப்படத் தொடங்கியுள்ளது. பொறியியல் உற்பத்தியாளர் சங்கம் விடுத்துள்ள அறிக்கை அதற்கு ஓர் உதாரணமாகும். மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கை மேலும் மேலும் மக்களைத் தாக்குகிறபோது, அதனை ஆதரித்து அதே கொள்கைகளை அதிமுக அரசு பின்பற்றும் நிலையில் இந்த ஆட்சியின் மீது மக்களின் அதிருப்தி வேகமாக வளரும். மக்களின் போராட்டங்களும் வலுக்கும்.

கச்சத்தீவு பிரச்சனை

1—24 வளர்ந்து வரும் மக்களின் அதிருப்தியிலிருந்து தப்பிக்க அதிமுக அரசு மக்களைத் திசைதிருப்பும் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு

வருகிறது. அவைகளில் ஒன்றுதான் கச்சத்தீவு பிரச்சனை. 1979-ல் ஏற்பட்ட ஒப்பந்தப்படியே இத்தீவு இலங்கைக்கு சொந்தமானது என்று இந்திய அரசு அங்கீகரித்துள்ளது. இதனை மீண்டும் இந்தியாவுடன் இணைக்க வேண்டும் என்று கோருவது இரு நாடுகளுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தை மீறக்கூடிய காரியமாகும். இந்தியா அப்படி ஒரு நிலை எடுத்தால் அதனால் உலக அரங்கில் இந்தியாவின் அந்தஸ்து பாதிக்கப்படும். மீனவர்கள் வலை உலர்த்துவதற்கும் அங்குள்ள கோவிலில் வழிபாட்டிற்குச் செல்வதற்கும் ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள உரிமை வேண்டும் என்று கேட்பது தான் நியாயமானது; நடைமுறைக்குச் சாத்தியமானது. ஆனால் அதிமுக அரசின் நோக்கம் அதுவல்ல. கச்சத்தீவை மீட்க முயற்சிப்பதாகக் காட்டி தாங்கள்தான் தமிழ்நாட்டில், தமிழர்களின் நலனுக்காகப் பாடுபடக்கூடியவர்கள் என்ற எண்ணத்தை உருவாக்கி அரசியல் ஆதாயம் தேடுவதே இதன் உண்மையான நோக்கம்.

காவிரி பிரச்சனை

1-25 இது இரு அண்டை மாநிலங்களுக்கிடையிலான பிரச்சனை. சுமூகமான முறையில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனையாகும். ஆனால், இதில் அடங்கியுள்ள சிக்கல்களின் காரணமாக தீர்வு காணப்படாமல் நீடித்து வருகிறது. இந்நிலையில் பிரச்சனை நடுவர் மன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. நடுவர் மன்றம் அதன் இடைக்கால உத்தரவில் 205 டிஎம்சி தண்ணீர் கர்நாடகம் அடுத்த ஓர் ஆண்டு காலத்தில் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டும் என்று தீர்ப்பு வழங்கியது. கர்நாடகத்தில் உள்ள காங்கிரஸ் ஆட்சி அதனை ஏற்க மறுத்தது. மத்திய காங்கிரஸ் ஆட்சியும் தலையிட்டு கர்நாடக அரசு அதனை ஏற்கச் செய்ய முயற்சிக்க வில்லை. இந்நிலையில், தமிழ்நாட்டில் அரசு முன்முயற்சியில் அனைத்து கட்சியினரும் பங்கு கொண்ட பந்த் நடைபெற்றது. மக்களின் உணர்வுகளையும் பிரச்சனையின் தன்மையையும் கணக்கில் கொண்டு நாமும் அதில் பங்கு கொண்டோம். அதேநேரத்தில் இனவெறியை தூண்டுவதற்கு இடமளிக்காத முறையில் நாம் எச்சரிக்கையாக இருந்தோம். நமது நிலையை தெளிவுபடுத்தி அறிக்கை வெளியிட்டோம். கர்நாடக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த மாட்டேன் என்று முதலமைச்சர் ஜெயலலிதா பிடிவாதமான நிலை எடுத்தபோது, குறிப்பாக இரு மாநில அரசுகளும் பேசித் தீர்வு காண முயற்சிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் ஆலோசனை கூறியும் பேச மறுத்தபோது நாம் அது தவறான நிலைபாடு என்று சுட்டிக்காட்டி விமர்சித்தோம். இதிலும் பிரச்சனைக்குத் தீர்வு காணுவதைக் காட்டிலும் தமிழ் இன வெறியைத் தூண்டி அரசியல் ஆதாயம் தேடக்கூடிய முறையிலேயே அதிமுக அரசின் போக்கு இருந்தது. இப்பிரச்சனையில் மத்திய அமைச்சர்களுக்கு எதிராகக் கூட அதிமுக கட்சி தலைமை கலவரத்தைத் தூண்டிவிட்டது. ஆயினும் இ. காங்கிரசோ, அதிமுக-வோ தங்களுக்கிடையிலான உறவை முறித்துக்கொள்ளவில்லை என்பது அவர்களின் சந்தர்ப்பவாதத்தை எடுத்துக்காட்டுகிறது.

இட ஒதுக்கீடு

1-26 மத்திய அரசு உத்தியோகங்களில் பிற்பட்டோருக்கு 27சதவித இடஒதுக்கீடு செய்து திரு.நரசிம்மராவ் அரசு வெளியிட்ட உத்தரவிற்கு எதிராக 50 சதவீதமாக உயர்த்தவேண்டும் என்று சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றியதும் அரசியல் லாபநோக்குடன் செய்யப்பட்ட காரியமாகும். 27 சதவீத ஒதுக்கீட்டு முறையை அமுல்படுத்துவதற்கே கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் 50சதவீதம் என்று உயர்த்தக் கோருவது மக்களை ஏமாற்றச் செய்யும் ஒரு முயற்சியைத்தவிர வேறல்ல. இக்கோரிக்கை நியாயமானதோ நடைமுறை சாத்தியமானதோ அல்ல. நமது நிலைமையை சட்டமன்றத்தில் தெரிவித்துள்ளோம். பிற்பட்டோருக்கான இந்த 27 சதவீத இடஒதுக்கீட்டில் ஒரு பொருளாதார வரம்பு இருக்க வேண்டுமென்பதும், முற்பட்ட சாதியினரில் ஏழ்மை நிலையிலுள்ளவர்களுக்கு 10% இடத்தை ஒதுக்க வேண்டும் என்று மத்திய அரசு இப்போது எடுத்துள்ள நிலைபாடும் நமது நிலைபாட்டுக்கு ஒத்ததாக உள்ளது. அதிமுக இந்தப் பிரச்சனையிலும் ஒரு கொள்கை அற்ற சந்தர்ப்பவாத நிலையையே மேற்கொண்டுள்ளது. இதனால் மக்களுக்கு எந்தப்பயனும் கிடைக்கப் போவதில்லை.

இந்து கோவில் பராமரிப்பு நிதி

1-27 இந்த பெயரில் முதலமைச்சர் ஒரு நிதி வசூலைத் தீவிரமாக நடத்தி வருகிறார். இந்த வசூலில் பலவிதமான நிர்ப்பந்தங்களும் செலுத்தப்படுகின்றன. இந்து அறநிலையத்துறைக்குப் பதிலாக முதல்வரின் தலைமையில் இந்து கோவில்கள் அபிவிருத்தி வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. நீண்டகாலமாக செயல்பட்டுவரும் இந்து அறநிலையத்துறைக்குப் பதிலாக இந்த வாரியத்தை ஏற்படுத்துவது தேவையற்றது என்பது நமது நிலைபாடு. இதுவும் திசை திருப்பும் முயற்சிகளில் ஒன்றாகும். பெரும்பான்மை மதத்தினரான இந்துக்களின் பக்தி உணர்வைப் பயன்படுத்தி அரசியல் ஆதாயம் தேடும் முயற்சியைத் தவிர வேறல்ல. ஒரு முதலமைச்சரே இவ்வாறு செய்வது நாட்டின் மதச்சார்பற்ற கொள்கைக்கு முரணான செயலாகும். மக்களின் பொருளாதாரப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணும் கொள்கையோ திட்டமோ, மத்திய அரசின் பிற்போக்கான கொள்கைகளை எதிர்த்துப் போராடும் அரசியல் கொள்கையோ இல்லாத அதிமுக இத்தகைய சந்தர்ப்பவாத நடவடிக்கைகளின் மூலம் தனது அரசியல் செல்வாக்கைப் பாதுகாக்கச் செய்கின்ற முயற்சியே இது.

சந்தர்ப்பவாதத்தின் உச்சக்கட்டம்

1-28 தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஜெயலலிதா ஒரு பக்கம் இந்து மதாச்சாரியர்கள் மற்றும் பி.ஜே.பி. போன்ற இந்து மத வகுப்புவாதிகளின் ஆதரவைப் பெறக் கூடிய முறையில் பல காரியங்களைச் செய்து வருகிறார். இன்னொரு பக்கம் இதற்குக் கொஞ்சம்கூட சம்பந்தமில்லாத நாத்திகக் கொள்கை கொண்டிருந்த பெரியார் ஈ.வே.ரா-வின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார். அவர் பெயரால் அமைக்கப்பட்டுள்ள அறக்கட்டளைக்கு ரூ. 5 லட்சம் நன்கொடையளிக்கிறார். இந்த இரண்டுவிதமான நிலைபாட்டிற்கும் ஏதா

வது சம்பந்தம் உண்டா? செல்வி ஜெயலலிதா இவ்வாறு செய்வதன் நோக்கம் என்ன? ஒரு பக்கம் இந்துமத உணர்வை தன்னுடைய அரசியல் ஆதாயத்திற்குப் பயன்படுத்துவது—இன்னொரு பக்கம் தமிழ்நாட்டு மக்களில் கணிசமான பகுதியினரிடம் திராவிட இயக்கத்தின் செல்வாக்கு நீடித்து வருவதனால் அதையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வது என்பதுதான் இதன் நோக்கம். ஒரேநேரத்தில் இந்துமதக் காவலாளியாக வும், திராவிட இயக்கத்தின் பிரதிநிதியாகவும் தன்னைக் காட்டிக் கொள்ள செய்யும் முயற்சிதான் இது. இதில் அடங்கியுள்ள மதச்சார்பு போக்கையும் சந்தர்ப்பவாதக் கொள்கையையும் மக்களிடம் விரிவான அளவில் அம்பலப் படுத்த வேண்டும்.

ஜனநாயக விரோதப் போக்குகள்

1-29 மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பறிப்பதும், எதிர்க்கட்சி களைப் பழிவாங்கக் கூடிய முறையில் பல நடவடிக்கைகளை மேற்கொள்வதும் அதிமுக அரசின் கொள்கையாக உள்ளது. குறிப்பாக தனது பிரதான எதிரியாகக் கருதும் திமுக-வினர் மீது நியாயமற்ற முறையில் பல வழக்கு கள் தொடுக்கின்றனர், பல இடங்களில் தாக்குதல் நடத்து கின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டுறவு சங்கங்கள் அனைத்தை யும் தங்களின் அரசியல் ஆதாயத்திற்காக எந்தவிதமான பரி சீலனையும் இன்றி ஒரேயடியாக கலைத்தனர். சட்டமன்றத்தில் திமுகவின் ஒரு சட்டமன்ற உறுப்பினர் சபையின் கூட்டம் நடைபெறும் காலம் முழு வதும் விலக்கி வைக்கப்பட்டார். பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் சட்டமன்றத்திலேயே தாக்கப்பட்டார். நம் கட்சியைக் குறி வைத்து தாக்குகின்றனர். பஸ் சட்டண உயர்வு போராட்டத்தில் பா.ம.கவினர் அனைவரும் இரண்டு நாட்களில் விடுதலை செய்யப்பட்டனர். இதுவும் பா.மா.க-வுடன் அரசியல் உறவு ஏற்படுத்திக் கொள்ளும் சந்தர்ப்பவாத நோக்கில் செய்யப்பட்டதாகவே தெரிகிறது. ஆனால், பஸ் கட்டண உயர்வை எதிர்த்த போராட்டத்தில் கைது செய்யப்பட்ட நமது தோழர் கள் 10 நாட்கள் வரை சிறையிலிருந்த பின்னரே விடுதலை செய்யப்பட்ட னர். பலர் மீது வழக்குகளும் உள்ளன. நமது கட்சி இவர்களின் கொள்கைகளை கடுமையாக எதிர்ப்பதனால் நம்மை பழிவாங்கும் நோக்குட னேயே இவ்வாறு செய்கின்றனர். எதிர்க்கட்சிகள் மீது இத்தகைய தாக்குதலைத் தொடுத்துள்ள அரசு ராஜீவ் கொலையைத் தொடர்ந்து எதிர்க்கட்சியினர் மீது கொலை வெறித் தாக்குதல் நடத்திய அதிமுக—காங் கிரஸ் கட்சியினர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பதிவு செய் யப்பட்டிருந்த வழக்குகளையும் வாபஸ் பெற்றனர். மிகவும் எதேச்சாதி காரமான முறையில் எதிர்க்கட்சிகளின் பேச்சுரிமையைப் பறிக்க, கூட்டங் களைத் தடுக்க 1911-வது ஆண்டில் ஆங்கிலேயே ஆட்சியாளர்களால் இயற்றிய சட்டத்தை இப்போது அதிமுக அரசு பின்பற்றுகிறது.

காங்கிரசின் சந்தர்ப்பவாதப் போக்கு

1-30 ஒரு மதச்சார்பற்ற தேசியக் கட்சி என்று கூறிக்கொள்ளும் காங்கிரஸ் கட்சி கச்சத்தீவு, இடஒதுக்கீடு, காவிரி, இந்துக் கோவில் அபிவிருத்தி நிதி போன்ற பல பிரச்சனைகளில் அதிமுக அரசு பின்பற்றும்

தவறுன மதச்சார்பான நிலைபாடுகளைப் பற்றி ஒரு வார்த்தை கூடப்பேசுவதில்லை. தங்கள் கொள்கை என்ன என்பதைத் தெளிவுபடுத்தவும் இல்லை. அவர்களும் அதிமுக ஆதரவில்தான் தேர்தல் ஆதாயம் பெறமுடியும் என்ற நிலையில் பச்சையான சந்தர்ப்பவாத அரசியல் கொள்கையைப் பின்பற்றுகின்றனர். அவர்களின் அகில இந்தியக்கொள்கைகள் எதையும் இங்கே பேசுவதில்லை.

1-31 காங்கிரஸ் கட்சிக்கு இன்று நாட்டின் பிரச்சனைகளுக்கு தீர்வுகாணும் எந்தக் கொள்கையும் இல்லை. நேரு உருவாக்கிய பொதுத் துறையை மையமாகக் கொண்ட தொழில் கொள்கையையும் அவர்கள் கைவிட்டு விட்டனர். ஏகாதிபத்திய ஆதிக்கத்தில் உள்ள உலக வங்கி, ஐ எம் எப் நிதி நிறுவனங்களின் கட்டளைகளுக்கு ஏற்ப இப்போது இந்திய நாட்டின் நிதிக்கொள்கையும் தொழில் கொள்கையும் உருவாக்கப்பட்டுள்ளது. இதனுல் இந்திய நாடும் மக்களும் மிகப்பெரிய பாதிப்புக்கு உள்ளாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனை தடுத்து நிறுத்த மக்களின் போராட்டங்கள் தோன்ற தொடங்கியுள்ளன. இதனை பலப்படுத்த வேண்டும்.

திராவிட இயக்கத்தின் செல்வாக்கு

1-32 தமிழ்நாட்டில் சுமார் 70% மக்கள் திராவிட இயக்க கட்சிகளின் அரசியல் செல்வாக்கில் உள்ளனர். ஆனுல், திராவிட இயக்க பாரம்பரியத்தின் வளர்ச்சி பெற்று இன்று பல கூறுகளாக பிரிந்துள்ள திக, திமுக, அதிமுக கட்சிகள் தங்களின் அரசியல் ஆதாயத்திற்காக திராவிட இனவாத தத்துவஉணர்வுகளையும், கருத்துக்களையும் பயன்படுத்துகின்றனர். குறிப்பாக.திமுக,திக,ஆகியவை பிராமணஎதிர்ப்பு,சாதி அரசியலை முன் வைக்கின்றனர். அதிமுகவினர் பெரியாரின் வாரிசுகள், அண்ணுவின் வாரிசுகள் என்று கூறியும் தமிழ் இன வெறியை தூண்டியும், ஏற்கெனவே சுட்டிக்காட்டியது போன்ற பல கோரிக்கைகளை முன் வைத்தும் திராவிட இயக்க உணர்வை தங்களின் அரசியலுக்கு சாதகமாக பயன்படுத்த முயற்சிக்கின்றனர். ஆகவே,திராவிட இயக்கத்தின் இனவாத சித்தாந்தங்களுக்கு எதிரான போராட்டத்தை நாம் தொடர்ந்து நடத்துவது அவசியமாகிறது. இதுபற்றி வருங்காலங்களில் மாநிலக்குழு ஸ்தூலமான ஆய்வினை நடத்தி, தொடர்ந்து பிரச்சாரத்தினை மேற்கொள்ள வேண்டியது. இந்த பிரச்சாரத்தினை விரிவான பகுதி மக்களிடம் கொண்டு செல்லும் வகையில் கலை இலக்கியம் உள்ளிட்ட பல்வேறு வடிவங்களையும் மேற்கொள்ள வேண்டும்.

சி. பி. ஐ.

1-33, 1989 ஜனவரி சட்டமன்றத் தேர்தலில் திமுக-விடமிருந்தும் நம்மிடமிருந்தும் முரண்பட்டு நின்றது. திமுக-வும் இவர்களை இணைத்துக் கொள்வதில் அக்கறை காட்டவில்லை. தேர்தல் முடிந்தபின் இந்நிலை படிப்படியாக மாறியது. அதே ஆண்டு நவம்பரில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மீண்டும் திமுக-வுடன் தொகுதி உடன்பாடு செய்துகொண்டனர். நாமும் அவர்களும் ஒத்துழைத்து செயல்பட்டோம். நாகை தொகுதியில் அவர்கள் வெற்றிபெற்றனர். தொடர்ந்து பல்வேறு கூட்டு இயக்கங்களில் நம்முடன் இணைந்து செயல்பட்டு வருகிறுர்கள். இக்காலத்தில் அக்கட்

சியின் அரசியல் செல்வாக்கு எந்த மாவட்டத்திலும் அதிகரித்திருப்பதாகத் தெரியவில்லை. உள்ள பலத்தைப் பெரும்பாலான இடங்களில் தக்கவைத்து கொண்டுள்ளனர். கடந்த சட்டமன்றத் தேர்தலில் திருவாரூரில் நாம் வெற்றி பெறவும், திருத்துறைப்பூண்டியில் அவர்கள் வெற்றி பெறவும் திமுக ஆதரவுடன் சிபிஐ (எம்), சிபிஐ பலம் இந்த இரண்டு தொகுதிகளில் குறிப்பிடத்தக்க அம்சமாக இருந்தது. அவர்களின் ''ஜனசக்தி'' தினசரியை நிறுத்திவிட்டனர். இப்போது வார இதழாக வெளியிடுகின்றனர். பல்வேறு நடைமுறை பிரச்சனைகளிலும், தத்துவார்த்த பிரச்சனைகளிலும் அவர்களுக்கும், நமக்கும் வேறுபாடு இருந்தபோதிலும் ஒரு இடதுசாரி கட்சி என்ற முறையில் அவர்களுடனான நமது ஒற்றுமையை பலப்படுத்துவதிலும் கட்சியின் எல்லா மட்டத்திலும் கவனம் செலுத்தவேண்டும். இதில் பல சிரமங்கள் ஏற்பட்டபோதிலும் அவைகளை சமாளித்தாக வேண்டும்.

யு.சி.பி.ஐ.

1-34 ஏற்கெனவே ஐ.சி.பி.யாக இருந்த கல்யாணசுந்தரம் கட்சியினர் இப்போது யு.சி.பி.ஐ. என்று பெயர் மாற்றம் செய்துள்ளனர். அனைத்திந்திய அளவில் இதன் தலைவர் மொகித்சென் கடைபிடித்த வலது திருத்தல்வாதி இவர்கள் இப்போது முழுக்க முழுக்க காங்கிரசோடு ஐக்கியமாகி உள்ளனர். காங்கிரஸ்—அதிமுக கூட்டில் சேர்ந்து 'கை' சின்னத்தில் போட்டிபோட்டு ஒரு எம்.பி., ஒரு எம்.எல்.ஏ. பதவி பெற்றுள்ளனர். குறிப்பிடத்தக்க அளவுக்கு அரசியல் செல்வாக்கு ஏதும் இல்லை. காங்கிரசின் தொங்கு சதையாக உள்ளனர். தர்மபுரி மாவட்டத்தில்தான் அவர்களுக்கு சிறிதளவு பலம் இருந்தது. அங்கிருந்த அதன் உறுப்பினர்களில் மிகப் பெரும்பாலோர் நமது கட்சிக்கு வந்துவிட்டனர். சி. பி. ஐ. யிலிருந்தும் பலர் வந்துள்ளனர். ஆக, யுசிபிஐ என்பது வேகமாக கரைந்து வரும் ஒரு கட்சி என்று கூறுவதே பொருத்தமாக இருக்கும்.

ஜனதாதளம்

1-35 தேசிய முன்னணியில் தேசிய அளவில் முக்கிய கட்சி, ஆனால், தமிழ்நாட்டில் அதற்கு குறிப்பிடத்தக்க அளவில் ஸ்தாபன பலம் இல்லை. ஆனால் பரவலான அரசியல் செல்வாக்கு உள்ளது. கூட்டு இயக்கங்களில் கலந்து கொள்கின்றனர்.

இ. காங்கிரஸ்

1—36 தமிழ்நாட்டில் அதிமுக, தி.மு.க.வுக்கு அடுத்து மூன்றாவது இடத்திலுள்ள கட்சியாக உள்ளது. 1989-ல் தனித்து நின்று 21.24 சதவிகித வாக்குகளையும், 26 இடங்களையும் வென்றனர். 1989 நாடாளுமன்றத் தேர்தலிலும், 1991 நாடாளுமன்ற சட்டமன்றத் தேர்தல்களிலும் அதிமுக-வுடன் தேர்தல் உடன்பாடுசெய்து போட்டியிட்டனர். 1991தேர்தலில் 29 நாடாளுமன்றத் தொகுதிகளிலும், 62 சட்டமன்றத் தொகுதிகளிலும் வெற்றி பெற்றனர். இக்கட்சியின் பின்னால் தமிழ்நாட்டு முதலாளிகளில் ஒரு கணிசமான பிரிவினரும், நிலப்பிரபுக்கள், பணக்காரவிவசாயிகளில் பெரும் பகுதியும், ஒரு பகுதி மக்களும் உறுதியாக நிற்கின்றனர். கட்சி மேலிடத்தில் என்ன மோதல்கள் நடந்தாலும் இவர்களின் ஆதரவு

அக்கட்சிக்கே தொடர்ந்து கிடைத்து வருகிறது. இப்போது. இக்கட்சி தமிழ்நாட்டில் பகிரங்கமாகவே மூப்பனார் கோஷ்டி என்றும், வாழப்பாடி கோஷ்டி என்றும் பிளவுபட்டு உள்ளது. இத்தகைய கோஷ்டிப் போக்குகள் காங்கிரஸ் கட்சியில் தேசிய அளவிலும் உள்ளது. காங்கிரஸ் கட்சியினால் நாட்டின் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண முடியாததும், வளர்ந்து வரும் கோஷ்டிப் போக்குகளும் காங்கிரசில் ஒரு பகுதியினரை அதிருப்தி அடையவைத்துள்ளது.

பாட்டாளி மக்கள் கட்சி

1-37 இக்கட்சி 1989 ஜனவரி சட்டமன்றத் தேர்தல் காலத்தில் வன்னியர் சங்கமாக இருந்தது. அப்போது தேர்தலைப் புறக்கணித்தனர். அதன்பிறகு சில மாதங்களில் பாட்டாளி மக்கள் கட்சி என்று தங்களைப் புனரமைத்துக் கொண்டனர். தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதிகளும் இக்கட்சியின் தலைமையில் இடம் பெற்றுள்ளனர். இருப்பினும், பல இடங்களில் இவ்விரு பிரிவினருக்கும் இடையிலான பழைய பகை நிலை முழுமையாக மறையவில்லை. இவர்களுக்கு இடையிலான ஒற்றுமையை நடைமுறைப்படுத்தினால் நல்லது. இக்கட்சி இப்போதும் பல தவறான கொள்கைகளை மேற்கொண்டு வருகிறது. உதாரணமாக, பிராமண எதிர்ப்பு, ஆரியர்களை நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்று கோருவது, தனி ஈழக் கோரிக்கைக்கு ஆதரவு, எல்டிடிஇ ஆதரவு நிலை, பழனிபாபா போன்ற முஸ்லிம் பழமைவாதிகளுடன் கூட்டு, இன்னும் பல சீர்குலைவு குழுக்களையும் சேர்த்து ஒரு தனி அணி அமைத்து ஜனநாயக இயக்கத்திற்கு எதிரான நிலை எடுப்பது போன்றவை இப்போதும் தொடர்கிறது.

1-38 இப்போக்குகளின் காரணமாகவே கடந்த தேர்தலிலும், மூன்றாவது அணி அமைத்து இ. காங்கிரஸ், அதிமுக எதிர்ப்பு ஓட்டுகளைப் பிரித்தனர். இவர்களின் இத்தகைய தவறான கொள்கைகளை எதிர்த்து நாம் தொடர்ந்து போராட வேண்டியுள்ளது. அதேநேரத்தில், அவர்கள் தாழ்த்தப்பட்டோர், பிற்பட்டோர் மற்றும் மக்கள் பிரச்னைகளில் ஸ்தல மட்டத்தில் முன்வைக்கும் சரியான கோரிக்கைகளையும் நடத்துகின்ற சரியான வடிவத்திலான இயக்கங்களையும் மாநிலக் குழுவின் அனுமதியுடன் கட்சியின் மாவட்ட கமிட்டிகள் ஆதரிக்கலாம்.

1-39 அதே நேரத்தில் தாழ்த்தப்பட்டோர், பிற்பட்டோரை பாதிக்கும் பிரச்சனைகளில் நாம் உடனே தலையிட்டு செயல்பட வேண்டும். அவர்கள் நம்முடன் இருக்க வேண்டியவர்கள் என்ற உணர்வுடன் செயல்

பட வேண்டும். இத்தகைய நடவடிக்கைகளின் மூலமே அவர்களை வர்க்கப் போராட்ட நீரோட்டத்தில் ஈர்க்க முடியும். நமது முன் முயற்சியில் உருவாகும் இத்தகைய இயக்கங்களில் பா. ம. க–வும் மற்ற கட்சிகளும் பங்கு கொள்ள முன்வந்தால், இணைந்து நடத்தவும் செய்யலாம். தாழ்த்தப்பட்ட பிற்பட்ட மக்களை பாட்டாளி வர்க்க அணியில் கொண்டு வருவது நமது குறிக்கோளாக இருக்க வேண்டும். இப்பகுதியினரை சாதி அடிப்படையில் தனித்து அணி திரட்டி உழைக்கும் மக்களை பிளவுபடுத்த எதிரி வர்க்கத்தினர் செய்யும் முயற்சிகளை உணர்ந்து நாம் செயல்பட வேண்டும். பாட்டாளி மக்கள் கட்சி, கடந்த இரண்டு தேர்தல்களிலும் பங்குகொண்டு சுமார் 6% வாக்குகளைப் பெற்றுள்ளன என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

1-40 திருவனந்தபுரம் கட்சி காங்கிரஸ் தீர்மானம் வருமாறு:-

''அடுத்த தேர்தலில் இ. காங்கிரசை முறியடிப்பதற்கான போராட்டம், இடதுசாரி ஜனநாயக முன்னணியைக் கட்டுவதற்கான போராட்டம் ஆகிய இரண்டிற்குமே ஒடுக்கப்பட்ட மக்களின் அனைத்துப் பிரிவினரையும் ஒன்று திரட்டும் தீவிர முயற்சிகள் அவசியமாகும். இவர்களில் பெரும் பகுதியினர் பல நேரங்களில் ஜனநாயக இயக்கத்திலிருந்தும், உழைக்கும் வர்க்க இயக்கத்திலிருந்தும் ஒதுங்கியே இருக்கிறார்கள். இவர்கள் அந்தந்த பகுதித் தலைமையால் அலைக்கழிக்கப்படுகிறார்கள். அந்தத் தலைமை இவர்களது அதிருப்தியையும், ஆத்திரத்தையும் குறுகிய பாதைகளில் திசை திருப்பி விடுகிறது. நமது கடந்த காங்கிரசைத் தொடர்ந்து வந்த கால கட்டத்தில் ஆதிவாசிகள், அரிஜனங்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரிடையே ஒரு புதிய போர்க்குணமிக்க விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. இந்த விழிப்புணர்வை ஒரு பொதுப் போராட்டத்தை நோக்கி ஈர்ப்பதும் அவர்களது ஸ்தாபனம் தொடர்பான ஒரு சரியான அணுகுமுறையையும், நடைமுறையையும் உருவாக்குவதும் அவசியம்.''

1-41 தாழ்த்தப்பட்ட மக்களை சாதி அடிப்படையில் அணி திரட்டவும், உழைக்கும் வர்க்க இயக்கத்திலிருந்து அவர்களைப் பிரித்துத் தனிமைப்படுத்தவும் திட்டமிட்ட முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஆளும் வர்க்க ஆதரவுடன் சாதியத் தலைவர்கள் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர். தமிழ்நாட்டில் இம்மக்களில் கணிசமான பகுதியினர் அதிமுக செல்வாக்கில் உள்ளனர் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். தமிழ்நாட்டிலும், இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், இம்மக்கள் பலவிதமான சமூகக் கொடுமைகளுக்கு தொடர்ந்து இரையாகி வருகின்றனர். இத்தகைய கொடுமைகளை எதிர்ப்பதில் நமது கட்சி தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டும். இதில் நாம் போதுமான கவனம்செலுத்தாத நிலைமை பல நேரங்களில்ஏற்பட்டுள்ளது. இதைப் பற்றி நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

மலைஜாதி மக்கள்

1-42 இன்று சமுதாயத்தின் மிகவும் அடித்தட்டில் உள்ள மக்களாக உள்ளனர். பல்வேறு விதமான சுரண்டல்களுக்கும், கொடுமைகளுக்கும்

உள்ளாகி வருகின்றனர். காட்டிலாகா அதிகாரிகளும், காண்ட்ராக்டர்களும், கந்து வட்டிக்காரர்களும் இவர்களை அடக்கி ஒடுக்கிச் சூறையாடி வருகின்றனர். இதுவரையில் எந்த அரசும் இவர்களின் நலன்களையும், உரிமைகளையும் பாதுகாக்க உருப்படியான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை. இவர்களின் நலன்களுக்காக நாம் முன்முயற்சி எடுத்து அவர்களை அணிதிரட்டிப் போராடத் தவறினால், அன்னிய சக்திகளும், சீர்குலைவு சக்திகளும் இவர்கள் மத்தியில் பிரிவினை உணர்வைத் தூண்டி விடும் அபாயம் ஏற்படும்.

1-43 தமிழ்நாட்டில் கல்வராயன் மலை, கொல்லி மலை, ஜவ்வாது மலை, ஏலகிரி மலை போன்ற 10 மலைப்பகுதிகளில் நமது தலைமையில் இந்த மக்கள் அணி திரட்டப்பட்டுள்ளனர். இதனை மேலும் விரிவுபடுத்தி பலப்படுத்தவேண்டும்.

பி. ஜே. பி

1-44 நாட்டின் இதர பகுதிகளைப் போலவே தமிழ்நாட்டிலும் இக்காலத்தில் இந்து வகுப்புவாத சக்திகளின் செயல்பாடு அதிகரித்துள்ளது. இந்து மத உணர்வைத் தூண்டிவிட்டு, தங்களின் அரசியல் செல்வாக்கை வளர்த்துக்கொள்வதில் பாரதீய ஜனதா கட்சி, மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. கோவில் திருவிழாக்களையும், கோவில்களையும், மதவெறிப் பிரச்சாரத்திற்கான இடமாகப் பயன்படுத்துகின்றனர். இவற்றை பயனுள்ள முறையில் தடுப்பதற்கான யுக்திகளை பற்றி நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. ஆர் எஸ் எஸ், விஸ்வ இந்து பரிஷத் ஆகியன இதன் துணை உறுப்புகளாக உள்ளன. அண்மைக்காலத்தில் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் மத கலவரங்களை தூண்டிவிடுவதில் அவர்கள் வெற்றிபெற்றனர். சென்னை, கோவை, நாகை, குமரி, திண்டுக்கல், தர்மபுரி ஆகிய இடங்களில் இக்கலவரங்கள் நடைபெற்றன. சிலர் கொல்லப்பட்டனர். ஏராளமான சொத்துக்கள் சூறையாடப்பட்டன. சிறுபான்மையோர் பீதியடையும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இராமஜென்ம பூமி–பாபர் மசூதி பிரச்சனை மற்றும் இந்து தத்துவத்தை அடிப்படையாகக்கொண்டு அவர்கள் தேர்தலில் போட்டியிட்டனர். 1.71 சத வாக்குகளைப்பெற்றனர். இவைகளை எல்லாம் கணக்கிலெடுத்துக்கொண்டு, இந்து வகுப்புவாதத்திற்கு எதிரான போராட்டத்தைப் பலப்படுத்த வேண்டும்.

1-45 இந்து தத்துவம் என்ற பேரால், இந்து மதவாதத்தையும். இந்தியா இந்துக்களின் நாடு என்ற தத்துவத்தையும் பரப்பும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். குறிப்பாக, நடுத்தர வர்க்கத்தின் மத்தியில் இவர்களின் பிரச்சாரம் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இவர்களின் ஏ.பி.வி.பி.எனும் மாணவர் அமைப்பு, மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியில் இந்து மதவாதத்தைப் பரப்பும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது. தொழிலாளர்கள் மத்தியிலும் ஊடுருவ முயற்சிக்கின்றனர். குறிப்பாக. கோவை மாவட்டத்தில் இது வெளிப்படையாகத் தெரிகிறது. நகர்ப்புற, குடிசைவாழ் மக்கள் மத்தியிலும் ஊடுருவியுள்ளனர். தமிழ்நாட்டில் வெளிவரும் ஒருசில பத்திரிக்கைகளும் இவர்களுக்கு ஆதரவாகப் பிரச்சா

ரம் செய்கின்றன. இவைகளை எல்லாம் கவனத்தில் கொண்டு, வகுப்பு வாதத்திற்கெதிரான போராட்டத்தைப் பலப்படுத்த வேண்டும்.

1-46 வகுப்புவாதத்தை எதிர்த்து போராடவும், மத கலவரங்களை தடுக்கவும் குறிப்பாக, மைனரிட்டி சமூகத்தினர் தாக்கப்படுகிற பேர்து அவர்களை பாதுகாக்கவும் அனைத்து மத சார்பற்ற சக்திகளையும் ஒன்று திரட்ட வேண்டும். தக்க சமயத்தில் தலையிட வேண்டும். நமது வர்க்க— வெகுஜன அமைப்புகள் குறிப்பாக தொழிலாளி வர்க்கம் இதில் கவனம் செலுத்தவேண்டும். சென்னை, நாகை, திண்டுக்கல், கோவை, தர்மபுரியில் பி.ஜே.பி. தூண்டிவிட்ட மத கலவரங்களுக்கெதிராக நமது கட்சி தலையிட்டு நடவடிக்கை எடுத்துள்ளது. கோவை போன்ற இடங்களில் தாமதம் ஏற்பட்டதை தவிர்த்திருக்க வேண்டும்.

முஸ்லிம்

1—47 பழமைவாதிகளின் மதவெறிப் பிரச்சாரத்தையும், நடவடிக்கைகளையும் நாம் எதிர்த்து போராட வேண்டும். மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகளுடனும், இடதுசாரி சக்திகளுடனும் முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டு நிற்பதுதான் அவர்களின் நலனுக்கு உகந்தது என்ற உணர்வை வளர்க்கவேண்டும். எல்லாவிதமான வகுப்புவாதங்களையும் எதிர்த்து போராடுவது, அனைத்து மதங்களையும் சேர்ந்த மக்களின் நலனுக்கும், நாட்டின் நலனுக்கும் இன்று இன்றியமையாதது.

எஸ்.யு.சி.ஐ.

1-48 இந்த அமைப்பும் இடதுசாரி கோஷங்களுடன் சில இடங்களில். செயல்படுகின்றது. இவர்களில், இப்போதும் சிபிஐ (எம்) எதிர்ப்பு, மேற்கு வங்க அரசை எதிர்ப்பது ஆகியவைகளையே பிரதானமாகக் கொண்டுள்ளனர். இத்தகைய நிலைபாடு கொண்ட எந்த கோஷ்டியுடனும் நாம் எந்த உறவும் கொள்ள முடியாது. அவர்களை இடதுசாரிகள் என்று அங்கீகரிக்கவும் முடியாது. இத்தகைய சீர்குலைவாளர்களை எதிர்த்து தொடர்ந்து நமது அரசியல் தத்துவார்த்தப் போராட்டம் நடைபெற வேண்டும்.

திராவிடர் கழகம்

1-49 திராவிடர் கழகம், தமிழ்நாட்டில் திராவிட இயக்கத்தின் மூல அமைப்பாக செயல்பட்டு வருகிறது. பிராமண எதிர்ப்புதான் அவர்களின் அடிப்படைக் கொள்கை. பெரியார் பெயரில் குவிந்துள்ள ஏராளமான சொத்துக்கள், டிரஸ்டுகளின் நிர்வாகிகளாக அதன் முன்னணித் தலைமை இருப்பதால், ஆட்சியிலிருக்கும் கட்சிகளுடன் மென்மையான அணுகுமுறையை கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு ஏற்படுகிறது. ஆட்சியாளர்களும், அவர்களை தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்கின்றனர். இதற்கேற்ப அவர்களின் பிராமண எதிர்ப்பு, திராவிட இனப் பிரச்சாரம் என்பதன் வேகம் அமையும். இருப்பினும் சாராம்சத்தில் அவர்களின் கொள்கை, ஈழப் பிரிவினைக்கு ஆதரவு, எல்.டி.டி.இ-க்கு ஆதரவு, பிராமண எதிர்ப்பு என்பதுதான். ஆகவே, இதுவும்

நாம் கவனமாக கண்காணிக்க வேண்டிய, அதன் தவறான தத்துவங்களை எதிர்த்துப் போராட வேண்டிய ஓர் இயக்கமாகும். இவர்கள் இப்போது தி.மு.க.-விடமிருந்து பிரிந்து அ.தி.மு.க. ஆதரவுநிலை எடுத்துள்ளனர் என்பதையும் கணக்கில் கொள்ள வேண்டும்.

புதுவை அரசியல் நிலையும் நமது கடமையும்

1-50 கடந்த மாநில மாநாட்டின் போது புதுவை யூனியன் பிரதேசத்தில் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தது. 1990 பிப்ரவரி மாதத்தில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் திமுக-ஜனதா தள கூட்டணி அரசு அமைந்தது. மத்தியில் தேசிய முன்னணி ஆட்சி கவிழ்ந்து, காங்கிரஸ் ஆதரவோடு சந்திரசேகர் அரசு அமைந்தவுடன், புதுவையில் திமுக தலைமையிலான அரசு கவிழ்க்கப்பட்டது. 1991 ஜூன்மாதத்தில் நாடாளுமன்றத் தேர்தலோடு, சட்டமன்றத் தேர்தலும் நடைபெற்று மீண்டும் காங்கிரஸ் கட்சி, புதுவையில் ஆட்சிக்கு வந்துள்ளது. இந்த மூன்று ஆண்டு காலத்தில் மாநில மையத்தின் வழிகாட்டுதலோடு, நமது கட்சியின் புதுவை மாவட்டக்குழு, புதுவை அரசியலில் ஒரு சரியான நிலைபாட்டினை மேற்கொண்டுள்ளது. நடைபெற்ற இரண்டு சட்டமன்றத் தேர்தலிலும் லாஸ்பேட்டை தொகுதியில் போட்டியிட்டு தோற்றாலும், அரசியல் போராட்டமாக தேர்தலில் பிரச்சாரம் செய்தோம்.

1-51 காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்த பொழுது அந்த அரசின் மக்கள் விரோத கொள்கையை எதிர்த்து நமது கட்சி சுயேட்சையாகவும், திமுக, ஜனதா தளம், சிபிஐ ஆகிய கட்சிகளுடன் கூட்டாகவும் இயக்கங்கள் நடத்தப்பட்டுள்ளன.

1-52 1990 பிப்ரவரியில் நடந்த தேர்தலில் திமுக-ஜனதா தள கூட்டணி அரசு உருவாயிற்று. தேசிய முன்னணியில் ஒரு அங்கம் என்ற முறையில் நாடு தழுவிய அளவில் எழுந்த பிரச்னைகளில் திமுக-வையும், இணைத்து கூட்டு இயக்கம் நடத்துவதில் நமது கட்சி முன்முயற்சி எடுத்தது. திமுக-ஜனதா தள அரசின் தவறான நடவடிக்கைக்கு எதிராகவும், நமது கட்சியும், வெகுஜன அமைப்புகளும் இயக்கங்கள் நடத்தியுள்ளன.

1-53 கடந்த 4 மாத காலத்தில் காங்கிரஸ் கட்சியின் மக்கள் விரோத நடவடிக்கைகளை எதிர்த்தும் நமது கட்சிஇயக்கம் நடத்தி வருகிறது.

1-54 கடந்த மூன்று ஆண்டுகளில் புதுவையில் நமது கட்சி கடைப்பிடிக்கும் அணுகுமுறையினால் கட்சியின் மரியாதை உயர்ந்துள்ளது. கடந்த மாநாட்டிற்குப் பிறகு நமது கட்சி, வெகுஜன அமைப்புகளில் முன்னேற்றம் ஏற்பட்டிருந்தாலும், நமது அரசியல் செல்வாக்களவிற்கு ஸ்தாபன வளர்ச்சி இல்லை.

1-55 புதுவை அரசியல் நிலைமைக்கும், தேவைக்கும் ஏற்ப கட்சி ஸ்தாபனத்தைப் பலப்படுத்தவும், நமது கட்சியின் அரசியல் தத்துவார்த்த கொள்கைகளை புதுவை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லவும், கட்சியின் சுயேட்சையான நடவடிக்கைகளை விரிவுபடுத்தவும், இடது மற்றும் ஜனநாயக சக்திகளுடன் இணைந்து காங்கிரஸ்-அதிமுக கூட்டுக்கு எதிராகவும்,

புதுவை அரசின் மக்கள் விரோதக் கொள்கையை எதிர்த்து விரிவான இயக்கங்கள் நடத்தவும் தொடர்ந்துதிட்டமிட்டு முயற்சிசெய்யவேண்டும்

1-56 ஒரு தனி மாநிலம் என்ற முறையில் புதுவையின் பிரச்னை களுக்கு வழிகாட்ட வேண்டிய பொறுப்பு மாநிலக் குழுவின் முன் உள்ளது.

நமது கட்சி

1-57 சென்ற சென்னை மாநில மாநாட்டிற்குப் பின் இதுவரை, 13-வது கட்சி காங்கிரஸ் வகுத்த அரசியல் கொள்கையின் அடிப்படை யிலும், அவ்வப்போது கட்சியின் மத்தியக் கமிட்டியும் அரசியல் தலைமைக் குழுவும் கொடுத்த ஆலோசனைகளின் அடிப்படையிலும் செயல்பட்டுள் ளோம்.

காங்கிரசின் எதேச்சாதிகாரத்திற்கெதிராகவும் பாரதியஜனதா கட்சியின் மதவாத சிர்குலைவுக்கு எதிராகவும், அதிமுக, காங்கிரஸ் சந்தர்ப்ப வாத கூட்டணிக்கெதிராகவும் நாம் போராடியுள்ளோம்.

இடதுசாரி—தேசிய முன்னணி கட்சிகளின் ஒன்றுபட்ட அரசியல் இயக்கங்களுக்காகவும் செயல்பட்டு உள்ளோம். அதே நேரத்தில் தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் திமுக வின் தவறான சித்நாந்த மற்றும் அரசியல் போக்குகளுக்கு எதிராகவும் செயல்பட்டோம்.

கட்சியின் இந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில், பொது வாக, சரியாக செயல்பட்டோம் என்பது மாநிலக்குழுவின் மதிப்பீடாகும் அதே நேரத்தில் சில குறைபாடுகளும் தயக்கங்களும் இருந்தன என்பதும் மாநிலக் குழுவின் சுய விமர்சனமாகும். இவ் அறிக்கையின் முற்பகுதியில் இவை விளக்கப்பட்டுள்ளன.

1-58 இதனடிப்படையில் நமது இயக்கம், இக்காலத்தில் புதிய பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தொழிலாளர்கள், விவசாயிகள், மாதர்கள், மாணவர்கள், வாலிபர்கள் மற்றும் பல்வேறு பகுதி நடுத்தர வர்க்க மக்களை திட்டமிட்டு அணிதிரட்டும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வரும் கட்சி நமது கட்சி. 50,000 உறுப்பினர்களையும் 24 மாவட்டக் குழுக்களையும் கொண்டதாக நமது கட்சி வளர்ச்சி அடைந் துள்ளது. நாம் தனித்தும், தமிழ்நாட்டில் உள்ள இடதுசாரி மற்றும் ஜன நாயக சக்திகளை ஒன்றிணைத்தும் மக்கள் பிரச்சனைகளுக்காக பல இயக்கங் களை நடத்தி வருகிறோம். ராஜீவ் அரசை எதிர்த்து நடந்த ''பாரத்பந்த்'', வி.பி.சிங் அரசு கவிழ்த்தப்பட்ட துரோகச் செயலை எதிர்த்து இயக்கம், தி.மு.க. ஆட்சி கலைப்பிற்கு எதிராக மாநிலங்களின் உரிமைகளைப் பாது காக்க நடத்திய ''பந்த்'' முதலியவை இதற்கு சில முக்கிய உதாரணங்களா கும். 1989 சட்டமன்ற தேர்தலில் நாம் 21 தொகுதிகளில் போட்டியிட்டு 15 தொகுதிகளில் வெற்றி பெற்றோம். 3.44% வாக்குகள் பெற்றோம். 1991 சட்டமன்றத் தேர்தலில் நாம் 22 தொகுதிகளில் போட்டியிட் டோம். ஏற்கெனவே விவரிக்கப்பட்டுள்ள அரசியல் சூழ்நிலையில் ஒரு இடத் தில்தான் வெற்றிபெற முடிந்தது. ஆனால், அந்தச் சூழ்நிலையிலும் மொத்தத் தில் 3.18% வாக்குகள் பெற்றோம்.

1-59 ஆகவே, அரசியல் ரீதியாகவும், அமைப்பு ரீதியாகவும் நாம் தமிழ்நாட்டில் ஒரு குறிப்பிடத்தக்க சக்தியாக வளர்ந்து வருகிறோம். நமது தலைமையில் 10லட்சத்திற்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட வர்க்க, வெகுஜன அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. இருப்பினும், நமது வளர்ச்சி வேகம் இன்றைய தேவைக்கு போதுமானதல்ல. நமது வளர்ச்சி தமிழ்நாட்டில் பரவலாக ஏற்பட்டு வருகிறது. இது ஒரு நல்ல அம்சம். அதே நேரத்தில் எந்த ஒரு பகுதியிலும், தொகுதியிலும் நமது செல்வாக்கு, முதல் கட்சி என்ற அளவுக்கு இல்லை. இது ஒரு பலஹீனமான அம்சம். ஆகவே, தேர்தல் வெற்றிக்கு அரசியல் அணிகளின் சேர்க்கையுடன் மற்ற கட்சிகளுடனான பரஸ்பர உதவியும், ஒத்துழைப்பும் தேவைப்படுகிறது. வலுவான மக்கள் போராட்டங்களை நடத்திடவும், இத்தகைய ஒற்றுமையும், ஒத்துழைப்பும் அவசியம்.

1-60 அதே நேரத்தில், நமது கட்சி முன்வைத்துள்ள மாற்றுக் கொள்கைகளை முழுமையாக நமது சுயேச்சையான மேடைகள், பிரசுரங்கள், பத்திரிகைகள் மூலம் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். நமது சுயேச்சையான நடவடிக்கைகளின் மூலம் மேலும் மேலும் அதிகமான மக்களை நமது தலைமையில் திரட்ட வேண்டும். நமது பலம் அதிகரிப்பதை பொறுத்தே, இடதுசாரி அணி உருவாகும்; உறுதிப்படும். அதைப் பொறுத்தே விரிவான பகுதி மக்களின் போராட்டங்கள் மூலம் இடதுசாரி ஜனநாயகஅணி உருவாகும். ஆகவே கட்சியை கட்டும்பணிக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். கட்சி முழுமையும் செயல்படும் அமைப்பாக மாற வேண்டும். நமது கட்சி முன்வைத்துள்ள சரியான அரசியல் கொள்கையைப் பின்பற்றி நாம் வேகமாக முன்னேறுவது நமது நாட்டில் இன்றைய நிலைமையில் சாத்தியமானது; அவசியமானது.

நமது அரசியல் கடமைகள்

1-61 தமிழ்நாட்டின் இன்றைய அரசியல் நிலைமையில் நாம் பல்வேறுவிதமான அரசியல் பிரச்சனைகளை எதிர்நோக்குகிறோம். பல்வேறு விதமான கடமைகளையும் நிறைவேற்ற வேண்டியுள்ளது. மத்திய அரசின் மக்கள் விரோதக் கொள்கைகள், வளர்ந்து வரும் வகுப்புவாத அபாயம், உழைக்கும் மக்களை சாதிய அடிப்படையில் பிளவுபடுத்தும் போக்குகள், சீர்குலைவு, பிரிவினைவாத சக்திகள் தலைதூக்கி வருவது, குறிப்பாக தமிழ்நாட்டில் தொடர்ந்து நீடித்துவரும் எல்.டி.டி.இ. நடவடிக்கைகளும் அவர்

களுக்கு ஆதரவான குழுக்களின் செயல்பாடுகளும், மத்திய ஆளும் கட்சியுடன் கூட்டுசேர்ந்து அவர்களின் பிற்போக்கான கொள்கைகளை பின்பற்றி வரும் அ தி மு க அரசு, அ தி மு க-காங்கிரஸ் அரசியல் கூட்டு -இவர்கள் மக்கள் மீதும், எதிர்க்கட்சிகள் மீதும் தொடுக்கும் தாக்குதல்கள்-இவற்றை முறியடிக்க விரிவான மக்கள் போராட்டங்களை உருவாக்க வேண்டும். மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகள் அனைத்தையும் இதில் ஒன்றுபடுத்த வேண்டும். தி மு க- வின் போக்கில் நாம் எதிர்த்துப் போராட வேண்டிய அம்சங்கள் இருந்த போதிலும், அதனை நடத்திக் கொண்டே அவர்களை இந்த விரிவான ஜனநாயக இயக்கத்தில் ஈடுபடச் செய்வது அவசியம். அத்துடன் ஜனதா தளத்தையும், சிபிஐ-யையும் இணைத்து தேசிய முன்னணி-இடதுசாரி சக்திகளின் இயக்கங்களையும் ஒற்றுமையையும் பலப்படுத்த வேண்டும்.

இடதுசாரிகளின் பங்கு அதிகரிக்கவேண்டும்

1-62 முதலாளித்துவ–நிலப்பிரபுத்துவ வர்க்க கொள்கைக்கு மாற்றான பாதையில் மக்களை அணி திரட்ட, உண்மையான மாற்றான இடதுசாரி ஜனநாயக அணியைக் கட்ட, இடதுசாரி சக்திகளின் பங்கும், பலமும் அதிகரிக்க வேண்டும். நமது கட்சியும் மற்ற இடதுசாரி கட்சிகளும் வேகமாக வளரவேண்டும் குறிப்பாக நமது கட்சியும் நமது தலைமையிலான வர்க்க, வெகுஜன அமைப்புகளும் வலுவாக வளர்ச்சியடைய வேண்டும். நமது அடிப்படையான அரசியல், தத்துவார்த்த நிலைபாடுகளை விரிவான அளவில் மக்களிடம் கொண்டுபோக வேண்டும். இடதுசாரி ஜனநாயக அணியே உண்மையான அடிப்படை மாற்று என்ற கருத்தை மக்களிடம் விரிவாகக் கொண்டு செல்ல வேண்டும். சோவியத் யூனியனில் சோஷலிஸத்திற்குப் பின்னடைவு ஏற்பட்டுள்ள நிலையில் சோஷலிஸத்தின் கொடியை உயர்த்திப்பிடிக்க வேண்டும். மார்க்சிய–லெனினிய தத்துவத்தை உறுதியாகப் பற்றி நிற்க வேண்டும்.

2. அரசியல் இயக்கங்கள்

2-1 கடந்த மூன்று ஆண்டுகளில் இடைவிடாது பல இயக்கங்களை நாம் நடத்தியுள்ளோம். நாம் மேற்கொண்ட சரியான நடவடிக்கைகள் நமது அந்தஸ்தை தமிழக அளவில் மேலும் உயர்த்தியுள்ளது. இந்த பின்னணியில் சில முக்கியமான இயக்கங்களை பரிசீலிப்பது, எதிர்கால பணிகளை, சவால்களை சந்திக்க உதவும்.

அமெரிக்க ஏகாதிபத்திய சதிகளை எதிர்த்து

2-2 தென் அமெரிக்காவில் உள்ள பனாமா நாட்டின்மீது அமெரிக்க ஏகாதிபத்தியம் மேற்கொண்ட ஆக்கிரமிப்பை கண்டித்து 2.1.1990 அன்று மாவட்ட மையங்களில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

2-3 27ஆண்டுகள் இருண்ட சிறையில் இருந்த தென்ஆப்பிரிக்க விடுதலைப் போராட்ட வீரர் நெல்சன் மண்டேலாவின் விடுதலை நமக்கு பெருத்த உற்சாகத்தைக் கொடுத்தது. இந்த தினத்தை நமது கட்சி, சிபிஐ, திமுக ஆகியவற்றுடன் இணைந்தும், தனியாகவும், சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. மாநிலத்தில், பல ஆலை நுழைவாயில்களில் கூட்டங்கள் நடத்தி, தென் ஆப்பிரிக்க இனவெறி அரசாங்கத்தின் கொடுமைகள் அம்பலப்படுத்தப்பட்டது.

வளைகுடா போர்

2—4 இராக்,குவைத்தை கைப்பற்றியதை நமது கட்சி கண்டித்தது. இதை பயன்படுத்தி, அமெரிக்கா இராக்கை தாக்குவதற்கான தயாரிப்பில் இறங்கிய போது அரசியல் தலைமைக்குழு 13.1.91 அன்று கண்டன இயக்கம் நடத்துமாறு கேட்டுக் கொண்டது. அதனடிப்படையில் சென்னை, மதுரை, கோவை, திருப்பூர், திண்டுக்கல், தூத்துக்குடி போன்ற நகரங்களில் 15.1.91 அன்றும், மற்ற ஊர்களில் 17.1.91 அன்றும் ஆர்ப்பாட்டம் நடத்தும்படி மாநில மையத்திலிருந்து வேண்டுகோள் விடுத்தோம்.

2-5, 50க்கும் மேற்பட்ட நகரங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது. பொங்கல் திருவிழாவிற்கு மத்தியிலும் நமது கட்சி, வெகுஜன அமைப்புகளின் சார்பிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளன. ஒரு நாள் தயாரிப்பில் சென்னையில் சுமார் 1,000 பேர் அமெரிக்க கான்ஸல் அலுவலகத்தின்முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுத்தது பாராட்டத்தக்கது.

2—6 ஜனவரி 29ம்தேதியன்று யுத்த எதிர்ப்பு இயக்கத்தையொட்டி சென்னை அமெரிக்க தூதரகம் முன்பாக வர்க்க, வெகுஜன அமைப்புகளின் சார்பில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் காவல்துறை தடியடி நடத்தியதில் பெண்கள் உட்பட பல தோழர்கள் காயமடைந்தனர். போலீசின் இந்தத் தாக்குதலை எதிர்த்து நடந்த கண்டன ஊர்வலத்தில் அடிபட்ட ஆண்களும், பெண்களும் திரளாக அணிவகுத்தது பாராட்ட வேண்டிய

அம்சமாகும். எனினும், யுத்த எதிர்ப்பு ஊர்வலத்தை ஒழுங்குபடுத்துவதில் நமது தரப்பிலும் பலகீனம் இருந்தது என்று சென்னை மாவட்டக்குழு, தனது வேலை பரிசீலனை அறிக்கையில் தெரிவித்துள்ளதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். காவல்துறையின் அராஜகத்தைக் கண்டித்தும், யுத்த எதிர்ப்புக்காகவும் சென்னை மாவட்டத்தில் பல இடங்களில் 26, 28ம் தேதிகளில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

2–7 வளைகுடாப் போரில் பாதிக்கப்பட்ட இராக் குழந்தைகளுக்கு உணவு மற்றும் மருந்துப் பொருட்களை சேகரித்து அனுப்பியதில் நமது அமைப்புகள், குறிப்பாக வாலிபர் சங்கத்தின் பங்கு பாராட்டத்தக்கது.

2-8, 1989 ஜூலை மாதத்தில் நிகரகுவா உதவி நிதி அளிக்கப்பட்டது. சென்னை பெரியார் திடலில் நிகரகுவாவின் தூதுவர் கலந்துகொண்ட கூட்டத்தில் இந்த நிதி அளிக்கப்பட்டது. மாநிலம் முழுவதும் பரவலாக நிதி வசூலிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

2-9 மார்க்சிய தத்துவத்தைப் பாதுகாப்பது, ஏகாதிபத்திய எதிர்ப்பு போன்ற பிரச்சனைகளில் நாம் ஓர் அளவிற்கு செயல்பட்டுள்ளோம். கடந்த காலத்தைவிட நமது செயல்பாட்டில் முன்னேற்றம் உண்டு என்றாலும் திருப்தி மனப்பான்மை ஏற்பட நியாயமில்லை.

பஞ்சாயத்து ராஜ் சட்டத்தை எதிர்த்து இயக்கம்

2-10 பஞ்சாயத்துக்களின் நிர்வாகத்தை கவர்னர் மூலமாக மத்திய அரசே தனது ஆளுகையின் கீழ் கொண்டுவர முயற்சிக்கும் வகையில் 64வது அரசியல் சட்ட திருத்தத்தைக் கொண்டுவர எத்தனிக்கும் போக்கினை கண்டித்து தமிழகம் முழுவதும் 1989 ஜூன் 1 முதல் 7 வரை பிரச்சார இயக்கங்கள் நடைபெற்றது. மத்திய அரசின் இத்தகைய போக்கினை அம்பலப்படுத்தும் வகையில் ஒரு சிறு பிரசுரம் 2லட்சம் பிரதிகள் அச்சிடப்பட்டு அந்த இயக்கத்தின் போது விற்கப்பட்டது. பல மாவட்டக் குழுக்கள் திட்டமிட்டு ''ஸ்குவார்டு'' முறையில் விரிவான பிரச்சாரத்தை மேற்கொண்டது. தமிழகத்தில் நமது கட்சி மட்டும்தான் இத்தகைய மாநில அளவிலான ஒரு திட்டமிட்ட பிரச்சாரத்தை மேற்கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

பாரத் பந்த்

2–11 ராஜீவ் அரசின் மீது பீரங்கி ஊழல் பிரச்சனை சூடுபிடித்தவுடன் மைய அரசு ராஜினாமா செய்ய வேண்டும் என்று எதிர்க் கட்சிகள் கோரின. இதை எதிர்த்து காங்கிரஸ் ஜனநாயக விரோத வேலைகளில் இறங்கியது. மக்களை திரட்டி, இதனை ஒரு பெரிய போராட்டமாக மாற்ற, இடதுசாரி கட்சிகள் 1989 ஆகஸ்ட் 9ம்தேதி ''இந்தியாவை காக்கும் தினம்''-ஆக அறிவித்தது. இந்த இயக்கத்தின் ஒரு உச்சகட்டமாக ஏழு அம்ச கோரிக்கைகளுடன் ஆகஸ்ட் 30ம் தேதி ''பாரத் பந்த்'' அனுஷ்டிக்க திட்டமிடப்பட்டது.

2-12 தமிழகத்தில் இந்த இயக்கத்தினை வெற்றிகரமாக நடத்த நாம் நடவடிக்கைகள் எடுத்தோம். மாவட்ட தலைநகரங்களில் 9ஆமதேதிய

கூட்டம் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. அக். 20ம் தேதி முதல் 29ம் தேதி வரை நமது கட்சியின் சுயேட்சையான பிரச்சார இயக்கத்தை நடத்தினோம். சைக்கிள் பேரணி, தெருமுனைக் கூட்டங்கள், வேன் பிரச்சாரம் என்ற வடிவில் சிறப்பாக அமைந்தது. பந்த்-ின் நோக்கத்தை விளக்கி 0.25 பைசாவுக்கு சிறு பிரசுரம் வெளியிட்டோம். இந்த இயக்கத்தில் மாவட்ட, வட்ட அளவில் பல லட்சக்கணக்கான துண்டு பிரசுரங்களும் வால்போஸ்டர்களும், கலை நிகழ்ச்சிகளும் மக்கள் மத்தியில் பிரச்சாரத்திற்கு இறக்கிவிடப்பட்டது.

2-13 ''பாரத் பந்த்''திற்கான நமது தனி இயக்கம், கூட்டு இயக்கத்திற்கு உதவியது. 26.08.1989-ல் அனைத்து கட்சிகளின் மாபெரும் பொதுக்கூட்டத்தில் ஜோதிபாசு, வி.பி. சிங், என்.டி. ராமாராவ், மு.கருணாநிதி ஆகியோர் பேசினார்கள்.

2-14 இ.காங்கிரஸ், அதிமுக, பந்த்திற்கு எதிராக எடுத்த நடவடிக்கைகளை நாம் அரசியல் ரீதியாக சந்தித்தோம். தமிழக அரசு ஒருநாள் விடுமுறையை அறிவித்தது. மாநிலத்தில் பல இடங்களில் ரயில் மறியல் நடத்தப்பட்டது. நமது தோழர்கள் இதில் முன்கை எடுத்து செயல்பட்டனர். அகில இந்திய அளவில் நடந்த மிகப்பெரிய போராட்டத்தில், தமிழகத்தில் நாம் முழுமையாக ஈடுபட்டு வெற்றிபெறச் செய்தோம்.

வகுப்புவாத சக்திகளை எதிர்த்த இயக்கம்

2-15 பாரதீய ஜனதா கட்சியும், முஸ்லிம் பழமைவாதிகளும் தீவிரமாக செயல்படும் காலம். இது குறித்து 13-வது காங்கிரஸ் ''இன்றைய வகுப்புக்கலவரங்கள் இதற்குமுன்னர் நடந்தவை போன்றவையல்ல. பொதுவாக பழைய காலகட்டத்தில் தற்காலிகமான உணர்ச்சிவசப்பட்ட செயல்களாகவே நிகழ்ந்தன. இப்போது அவை உள்நாட்டில் உள்ள பிற்போக்கு சக்திகளும், அன்னிய சக்திகளும் இந்தியாவின் ஒற்றுமையைக் குலைப்பதற்கு பயன்படுத்தும் திட்டமிட்டு உருவாக்கிய கருவியாக உள்ளன'' என்று குறிப்பிடுகிறது. இதை மனதிற்கொண்டு இந்த இயக்கங்கள் திட்டமிடப்பட்டன.

2-16, 1988, செப்.28ல் ''வகுப்பு ஒற்றுமை தினம்'' 1989 ஜூலை 9 முதல் 15வரை ''வகுப்புவாத எதிர்ப்பு இயக்கம்'' 1990 அக்டோபர் மாதம், இடதுசாரி கட்சிகள் சார்பாக நடத்தப்பட்ட ''கூட்டுப் பிரச்சார இயக்கம்'' ஆகியவை பிரதான இயக்கமாக நடத்தப்பட்டது. மேலும் 1991 பிப். 18 முதல் 28 வரை அமெரிக்க ஏகாதிபத்தியம், வளைகுடாவில் யுத்தத்தைத் துவக்கி பல ஆயிரக்கணக்கான மக்களை படுகொலை செய்ததைக் கண்டித்தும், பாபர் மசூதியை இடித்து, இராமர் கோவில் கட்டுவதாக கூறி பி.ஜே.பி., வி.எச்.பி. ஆகியன நடத்திய மதவெறி பிரச்சாரத்தின் விளைவாக சில நூற்றுக்கணக்கான அப்பாவி முஸ்லிம் மக்கள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும், இந்த மதவெறியர்களை அம்பலப்படுத்தவும் பிரச்சாரம் நடத்தப்பட்டது.

2-17 மாநிலத்தில் நம்முடைய பிரச்சாரத்தைபரவலாக கொண்டு செல்ல முடிந்தது. குறிப்பாக, சிறுபான்மை முஸ்லிம் மக்கள் மத்தியில் நமது இயக்கத்தின் மீது நம்பிக்கையை ஏற்படுத்தியது. இதே காலத்தில்

சென்னை, நாகூர், திண்டுக்கல், கோவை, கன்னியாகுமரி, திருச்சி போன்ற இடங்களில் மத மோதல்களுக்கு எதிராக நாம் குரல் கொடுத்துள்ளோம். நாம் நேரிடையாக தலையிட முடிந்த பகுதிகளில் நம் இயக்கத்திற்கு சிறு பான்மையினரிடம் இருந்து வாலிபர்கள் வந்துள்ளனர். நமது கட்சியின் அந்தஸ்து இந்த பகுதிகளில் உயர்ந்துள்ளது.

இலங்கை பிரச்சனை— 1990 ஜூலை 20–ம்தேதி ''பந்த்''

2-18 ஜூன் 11-ம் தேதியிலிருந்து இலங்கைராணுவத்திற்கும்,எல்.டி.டி.இ. யினருக்கும் இடையே நடைபெறும் மோதலில் 100-க்கணக்கான இலங்கை தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். 20,000-க்கும் மேற்பட்ட இலங்கை தமிழ் மக்கள் அகதிகளாக தமிழகம் வந்துள்ளார்கள்.இது மிகுந்த கவலையடையத்தக்க நிலைமையை தோற்றுவித்துள்ளது.

2-19 ஒருபுறம் தி.மு.க., எல். டி. டி. இ.–க்கு ஆதரவான நிலையை மேற்கொண்டு தமிழகத்தில் இனவெறியை கிளப்ப முயற்சிக்கிறது.மறுபுறம் காங்கிரஸ்—அ.தி.மு.க. ஆகிய கட்சிகள் இந்த நிலையினை தங்கள் அரசியல் நிலைக்கு ஆதாயம் தேடும் வகையில் பிரச்சாரத்தை மேற்கொண்டுள்ளன. ஆளும் கட்சியான திமுக, தன்னிச்சையாக 20.7.1990ல் ''பந்த்'' என்று அறிவித்தது. தமிழ் மக்கள் ஒன்றுபட்டு குரல் எழுப்ப வேண்டிய இப்படிப்பட்ட பிரச்னைகளில் அனைத்துக் கட்சி கூட்டம் நடத்தி, கருத்துக்களை உருவாக்காமல் செயல்பட்ட திமுக அரசை மாநில செயற்குழு, சரியான அணுகுமுறை இல்லை என விமர்சித்தது.

2-20 இலங்கை தமிழர்கள் படும் துயருக்கு நமது அனுதாபத்தையும், ஆழ்ந்த கவலையையும் தெரிவிக்கும் வகையில் 20ம் தேதி ''பந்த்''ல் கலந்து கொள்வது என மாநில மையம், அரசியல் தலைமைக்குழுவின் ஆலோசனையைப் பெற்று முடிவு செய்தது. மேலும் தலைமைக்குழுவின் அறிக்கையையும்,மாநில மையத்தின் அறிக்கையையும் 'துண்டுபிரசுரங்களாக' அச்சிட்டு மக்களிடம் பிரச்சாரம் செய்யப்பட்டது. சில இடங்களில் வீடு வீடாகவும் நமது தோழர்கள் பிரச்சாரம் செய்தனர்.

தேசிய முன்னணி, இடதுசாரி கட்சிகளின் பிரச்சார இயக்கம்- 1990-டிச. 8,9

2-21 மத்திய ஆட்சியிலிருந்து இறக்கப்பட்ட திரு வி.பி. சிங், நாடு முழுவதும் அதற்கான காரணங்களை விளக்கி மக்களிடம் பிரச்சார இயக்கம் நடத்த வேண்டுமென இடதுசாரி கட்சிகள், குறிப்பாக நமது கட்சி முயற்சி எடுத்தது. தமிழகத்தில் டிச. 8,9 தேதிகளில் இந்த பிரச்சார பயணம் நடக்குமென மத்திய கமிட்டி நமக்கு தகவல் கொடுத்தது.

2-22 திமுக தலைவர்கள் நம்முடன் முதலில் கலக்கவில்லை. திரு வி.பி. சிங், திரு. கருணாநிதி, சுற்றுப் பயணத்தை அவர்கள் விளம்பரப் படுத்தினர். இடதுசாரி கட்சிகளுடன் இணைந்து நடத்துவதில் திமுக-வுக்கு தயக்கம் இருந்தது. நம்முடைய முயற்சிக்குப் பிறகு கூட்டு இயக்கத்திற்கு தயாரானார்கள். பிரச்சாரத்தில் நமது கட்சி சார்பில் தோழர் இ.எம்.எஸ்.

கலந்து கொள்வார் என்ற செய்தி வந்தது நல்லதாயிற்று. அதற்கு ஒரு தனி சிறப்பும் இருந்தது. நமது அணிகள் உற்சாகமாக எல்லா வரவேற்பு நிகழ்ச்சிகளிலும், பொதுக்கூட்ட நிகழ்ச்சிகளிலும் கணிசமான அளவிற்கு கலந்து கொண்டனர்.

2-23 கூட்ட நிகழ்ச்சிகளில் பொதுமக்கள் ஏராளமாக திரண்டனர். சிறுபான்மையிலரான முஸ்லிம் மக்களும் வரவேற்பு நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டனர். தோழர் ஏ.என். அனைத்து வரவேற்பு கூட்டங்களிலும் கலந்து கொண்டார். பிரச்சார இயக்கம் பயன் உள்ளதாக இருந்தது. சிபிஐ முழுமையாக தங்கள் அணிகளை திரட்டியதாக தெரியவில்லை.

2-24 பிரச்சார இயக்கத்தின் சிறப்பான அம்சம் திரு.கருணாநிதி பேசிய பிறகுகூட திரு வி.பி. சிங் பேசியபோது மக்கள் பொறுமையாக இருந்து அவரின் பேச்சைக் கேட்டது குறிப்பிடத்தக்கது. மதுரையில் 9ம்தேதி காலை ரோட்டின் இருமருங்கிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் காத்திருந்தும் திறந்த ஜீப்பில்சென்றுஅந்த மக்களின்வரவேற்பை ஏற்கதவறிவிட்டார்கள். திமுக,மக்களின் உணர்வுகளை சரியாக புரிந்து கொள்ளவில்லை. இந்த பிரச்சார இயக்க ஏற்பாட்டிற்காக நடந்த ஆரம்பகூட்டத்தில்கூடதிமுக தலைமை உற்சாகமாகவோ, நம்பிக்கையாகவோ இல்லை. ஆனால், மாவட்டங்களில் கூட்டத்திற்காக ஏற்பாடுகள் செய்தபோது அதை திமுக நிகழ்ச்சியாக நடத்த முயற்சித்தனர். சில இடங்களில் தலைவர்கள் வரும்வரை யாரையும் மேடை மீது கூட விடவில்லை. இருந்தும் இந்த பிரச்சாரம் எழுச்சிகரமாக அமைந்தது.

திமுக ஆட்சி கலைப்பினை எதிர்த்து

2–25 திமுக ஆட்சி கலைக்கப்படுவது பற்றிய தகவலை திரு. கருணாநிதி 30.1.91 அன்று பிற்பகல் நமது கட்சிக்கு தெரிவித்தார்.நாமும் உடனே கட்சியின் மத்தியக்குழு அலுவலகத்துடன் தொடர்புகொண்டு தகவல்களை சேகரித்தோம். திமுக, சிபிஐ(எம்), சிபிஐ, ஜனதாதளம் ஆகிய கட்சிகள் சார்பில் கண்டன அறிக்கை விடப்பட்டது. 31ம்தேதி பல மாவட்டங்களில் கண்டன பேரணியும், கடை அடைப்பும் நடந்தன.பஸ்கள் தாக்கப்பட்டன, எரிக்கப்பட்டன.

2-26, 3.2.91ல் தமிழகம் முழுவதும் கண்டன கூட்டங்கள் நடத்தப்பட்டன. சென்னையில் இ.எம்.எஸ்., வி.பி. சிங், என்.டி. ராமாராவ், மு. கருணாநிதி, பலராமன்.ஆகியோர் பேசினர்.

2-27, 6.2.91 அன்று ''பந்த்'' வெற்றிகரமாக நடைபெற்றது. அனைத்துகட்சி ஊழியர்கள் முன்கூட்டியே கைதுசெய்யப்பட்டார்கள். ஏறக்

குறைய 40,000 பேர் கைது செய்யப்பட்டார்கள். நமது தோழர்கள் 2,000 பேர் கைது செய்யப்பட்டனர். திமுக ஊழியர்கள் இரண்டு பேர் போலீஸ் தாக்குதலுக்கு பலியானார்கள். பேருந்துகளையும், ரயில் போக்குவரத்தையும் அரசே நிறுத்தியது. பள்ளிகளையும் மூடியது. சிஐடியு, ஏஐடியுசி, தொ.மு.ச. ஆகியன மாநில ''பந்த்''திற்கான அழைப்பு விடுத்தன. 'பந்த்' வெற்றிகரமாக நடந்தது.

திரிபுரா தினம்

2-28 திரிபுராவில் நமது கட்சித் தோழர்கள் மீதும், அனுதாபிகள் மீதும் காங்கிரஸ்-திரிபுரா உபஜாதி ஜுபசமிதி கூட்டணி மாநில அரசைக் கையில் வைத்துக்கொண்டு 'பாசிஸ்ட்' அடக்குமுறை அக்கிரமங்களை கட்டவிழ்த்து விட்டது. 17.8.90 அன்று இதை எதிர்த்து தெருமுனைக் கூட்டம், தர்ணா, ஆர்ப்பாட்டம், பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. தோழர் நிருபன்சக்கரவர்த்தி 16,17,18 தேதிகளில் பொதுக்கூட்டங்களில் பேசினார். அருகில் உள்ள மாவட்டங்களில் இந்த தேதிகளில் தோழர் நிருபன் கூட்டத்திற்கு வந்து நிதி அளிக்குமாறு கோரினோம். அனைத்து மாவட்டக் குழுக்களும் இந்த இயக்கத்தை சிறப்பாக நடத்தின.

துரோக அரசை கண்டித்து இயக்கம்

2-29 பி.ஜே.பி.யின் ''ரதயாத்திரை'' வகுப்பு கலவரத்தை எதிர்த்து வி.பி. சிங் நடவடிக்கை எடுத்தார். பிஜேபி தன் ஆதரவை வாபஸ் பெற்றதால், காங்கிரஸ் உதவியுடன் சந்திரசேகர் அரசு உருவானது. துரோக அரசைக் கண்டித்தும், மதவாதத்தை எதிர்த்தும் 22.11.90 அன்று மாநிலம் முழுவதும் பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

2-30 ஒவ்வொரு ஆண்டும் மே தினம், அக்டோபர் புரட்சி தினம், ஜனவரி 19 தியாகிகள் தினம் மற்றும் லெனின் பிறந்ததினம் ஆகியவற்றை மாநிலம் முழுவதுமுள்ள கட்சி அமைப்புகள் கொண்டாடி வந்துள்ளன. இதில் மே தின விழாவை கட்சி மற்றும் வர்க்க, வெகுஜன அமைப்புகள் மிகச் சிறப்பாக கொண்டாடி வருகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் பல்வேறு அரசியல் இயக்கங்களும், வேலைகளும் சிறப்பாக நடைபெற்றுள்ளன. இருப்பினும், இவ்வியக்கங்களில் பொதுவான சில பலகீனங்கள் தொடரவே செய்கின்றன.

2-31 மாநிலம் தழுவிய அளவில் நாம் நடத்தும் பல பிரச்சார இயக்கங்கள் ஒரு பகுதி மக்களை மட்டுமே சென்றடைகின்றன. விரிந்து பரந்துள்ள தமிழகம் முழுவதும் பெரும்பாலான மக்களிடம் நமது பிரச்

சாரத்தை கொண்டு செல்வதற்கான ஸ்தாபன பலம் இல்லாததையும், சில இடங்களில் அதற்கான திட்டமிட்ட முயற்சி இல்லாததையும் காண முடிகிறது.

2-32 தமிழகத்தில் நடைபெறும் பல்வேறு பொதுக் கூட்டங்களில் ஒரு சில இடங்களைத் தவிர இதர இடங்களில் 200, 300 பேர் என்ற அளவிலேயே மக்கள் பங்கேற்றுள்ளனர். அதிலும் பெரும்பாலும் கட்சி அணிகளே அதிகம்.

2-33 ஆர்ப்பாட்டம், ஊர்வலம் ஆகியவைகளில் சில முக்கிய மாவட்ட தலைநகரங்களில் கூட 200 (அ) 300 பேர் என்ற அளவிலேயே கட்சி அணிகள் பங்கேற்கின்றன. இது வளர்ந்துள்ள நமது அரசியல் செல்வாக்கிற்கு மிகவும் குறைவானது. குறிப்பாக, இதில் கட்சிக்கு அப்பாலுள்ள பொதுமக்கள் பங்கேற்பு என்பது இல்லை.

2-34 மாவட்ட, வட்ட அமைப்புகள் ஒவ்வொருஇயக்கமும் நடந்து முடிந்தவுடன் அதுபற்றி உடனடியாக மாநில மையத்திற்கு தகவல் அனுப்புவதிலும், இயக்கங்கள் பற்றி பரிசீலனை செய்வதிலும் பெரும் பலகீனம் நீடிக்கிறது.

2-35 எதிர்காலத்தில் இத்தகைய குறைபாடுகளை களைந்து பெருவாரியான அளவில் இயக்கங்களில் முழுமையாக கட்சி அணியினரையும், கட்சிக்கு அப்பாலுள்ள மக்களையும் பங்கேற்க செய்ய வேண்டும்.

2-36 பல்வேறு பிரச்னைகளையொட்டி நடைபெறும் இயக்கங்களில் நமது கட்சியின் லைனை கொண்டு செல்லும் வகையில் திட்டமிட்ட தயாரிப்புடன், பேச்சு குறிப்புகளுடன் இதனை செய்திட வேண்டும்.

2-37 மாவட்ட அளவில் அதிக அளவில் பேச்சாளர்களைஉருவாக்குவதற்கு திட்டமிட்ட ஏற்பாடு செய்ய வேண்டும்.

2-38 மாநில அளவில் தயாரிக்கப்படும் சிறு பிரசுரங்களை பெருமளவில் இவ்வியக்கங்களின் போது மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும்.

2-39 அதிகரித்து வரும் அரசியல், ஸ்தாபன கடமைகளை கணக்கில் கொண்டு நமது பிரச்சாரத்தினையும், இயக்கங்களையும் மேலும் பன்மடங்கு விஸ்தரித்திட வேண்டும்.

3. தொழிற்சங்க அரங்கம்

சென்னை மாநாடு, தொழிற்சங்க அரங்க கடமைகளை கீழ்வருமாறு வரையறுத்திருந்தது:-

3—1. ''மாநில, மாவட்ட தொழிற்சங்க மையங்களை மேலும் வலுப்படுத்துவது; தொழிற்சங்க பிரச்னைகளையும், நமது செயல்பாடுகளையும் அனைத்து மட்டங்களிலும் கட்சி கமிட்டிகளில் பரிசிலனை செய்வது; உறுப்பினர் எண்ணிக்கையை உயர்த்த விசேஷ கவனம் செலுத்துவது; கேந்திர தொழில்களில் முன்னேற்றம் காண்பது; அதற்கான ஊழியர்களை ஒதுக்குவது; அமைப்பு ரீதியில் இல்லாத தொழிலாளிகளை அணி திரட்டுவது; பிரச்சார பிரசுரங்கள் வெளியிடுவது; வகுப்புகள் நடத்துவது; ''சி. ஐ. டி. யு. செய்தி'' விற்பனையை 20,000 ஆக உயர்த்துவது; இதர அரங்க பத்திரிக்கைகளின் விற்பனையிலும்முன்னேற்றம் காண்பது; முன்னுரிமை கடமைகளை முழுமையாக நிறைவேற்ற திட்டமிட்டு செயல்படுவது; விவசாய இயக்க நிதியை சிஐடியு உறுப்பினர்கள் அனைவரிடமும் வசூலிப்பது; தொழிற்சங்க அரங்கத்திலிருந்து கட்சி உறுப்பினர்களை கூடுதலாக சேர்ப்பது''.

3-2 இந்த கடமைகளை நிறைவேற்றுவதற்கானமுயற்சிகளுடன், இந்த காலத்தில் முன்னுக்கு வந்த இதர பிரச்னைகளையும் தொழிற்சங்க அரங்கத்தில் நாம் சந்திக்க வேண்டியிருந்தது. 1989 செப்டம்பரில் சிஐடியு வின் ஐந்தாவது மாநில மாநாடும், நமது பணிகளை பரிசிலனைக்கு உட்படுத்தியது. நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள பொருளாதார தொழில் நெருக்கடியின் பாதிப்புகள், தமிழ்நாட்டிலும் முழுமையாக நாம் சந்திக்க வேண்டியிருந்தது. மூடப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை பெருகுகிறது. மூன்று ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலையில் ஜவுளி ஆலைகளும், சிறு தொழில் நிறுவனங்களும் இதில் கடுமையாக பாதிக்கப்பட்டன. ஜவுளி தொழிலில் இடைக்காலத்தில் ஏற்பட்ட செழிப்பான நிலை காரணமாக மூடப்பட்ட சில ஆலைகள் திறக்கப்பட்டன. மூடப்படுவதாக அச்சுறுத்தப்பட்ட மில்கள்மூடப்படுவது தவிர்க்கப்பட்டது 30,000க்கும் மேற்பட்ட சிறுதொழில் நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. ஸ்டாண்டர்டு மோட்டார், சேஷசாயி இண்டஸ்ட்ரீஸ், பின்னி மில் போன்ற பெரிய ஆலைகளும் மூடப்பட்டே உள்ளன. கைத்தறி, விசைத்தறி போன்ற துறைகளில் நெருக்கடி மிக்க நிலைமை தொடர்கின்றது.

3-3 இன்றைய நிலையில், புதியபொருளாதார கொள்கைகளின் விளைவாக தொழில் நெருக்கடி மேலும் முற்றிவிடும் அபாயம் உள்ளது. ஏற்கனவே நெருக்கடியில் சிக்கியுள்ள துறைகளைத் தவிர, மத்திய-மாநில பொதுத்துறை நிறுவனங்கள், அரசு இலாகாக்கள் உட்பட பல்வேறு துறைகளில் கடுமையான நிலைமையை நாம் சந்திக்க வேண்டியிருக்கும். நாட்டின் ஒட்டுமொத்தமான தொழில்—பொருளாதார நெருக்கடியின் விளைவுகளை தொழிலாளர்களின் தலையில் திணிப்பதற்கான முயற்சிகளை அரசாங்கமும், ஆளும் வர்க்கங்களும் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்

றன. நீண்ட நெடும் போராட்டங்களின் மூலமாக பெற்றெடுத்த பல்வேறு உரிமைகளும் பறிக்கப்படுகின்றது. அது மேலும் அதிகமாகும் நிலை ஏற்பட்டுள்ளது. வேலையின்மை பெருகி வருவதோடல்லாமல், இருக்கின்ற வேலையும் பறிபோகும் அபாயம் மேலும் மேலும் அதிகமாகி வருகின்றது. நவீனமயமாக்குதலும், கம்ப்யூட்டர்களும் அனைத்து துறை களிலும் வேகப்படுத்தப்பட்டுள்ளது.

3–4 தமிழகத்தில் நமது தொழிற்சங்க அரங்க பணிகள் என்பது சிஐடியு வின் நேரடியான தலைமை, சிஐடியு தலைவர்களால் வழிநடத் தப்படுகிற சிஐடியு-வில் இணைக்கப்படாத சங்கங்கள், நமது தோழர் களால் தலைமை தாங்கப்படுகிற பல்வேறு துறைகளை சார்ந்த ஊழியர் சங்கங்கள், இதர தலைவர்களால் தலைமை தாங்கப்படுகிற சங்கங்களுக்குள் நமது செயல்பாடுகள் என பலதரப்பட்டவையாக உள்ளன. ஒட்டு மொத்தமாக பார்த்தால், மாநிலத்தில் நமது தொழிற்சங்க பலமும், தொழிற்சங்க அரங்க செல்வாக்கும் ஓரளவு முன்னேறியிருப்பதை நாம் காணமுடியும். அதே நேரத்தில், நமது பொதுவான செல்வாக்கிற்கு ஏற்றாற்போல் நமது ஸ்தாபன பலத்தை அதிகரிப்பதில் உள்ள பலஹீனம், பல்வேறு பிரிவுகளிலும் தொடர்ந்து நீடிக்கிறது.

3–5 இந்த பலஹீனங்களையும், நமது செயல்பாடுகளிலுள்ள இதர குறைபாடுகளையும் களைந்து, தொழிற்சங்க அரங்கத்தில் நமது நிலையை பெருமளவு அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதை கவனத்தில் கொண்டு, கடந்த காலப் பணிகளை பரிசிலித்து, வருங்காலப் பணிகளுக்குத் திட்டமிட வேண்டும்.

1989 சட்டமன்றத்தேர்தல்

3-6 சென்னை மாநாடு முடிந்தவுடன், மாநிலத்தில் பெரும் போராட்டமாக நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், தொழிற்சங்க அரங்கத்திலுள்ள தோழர்களும் குறிப்பிடத்தக்க அளவில் பணியாற்றினர் கள். முந்தைய அரசுகளின்-அதிமுக- ஆளுநர் ஆட்சி—தொழிலாளர் விரோத கொள்கைகளுக்கு எதிராக சிஐடியு-வுடன் இணைந்து நின்று திமுக வின் தொழிற்சங்க பிரிவானது பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வந் ததும், மத்திய அரசை எதிர்த்து நடத்தப்பட்ட போராட்டங்களில் திமுக பங்கேற்று வந்ததுமான பின்னணியில், தமிழக சட்டமன்றத் தேர்தலில் திமுக பெற்ற வெற்றி தமிழகத்தில் பொதுவாகவும், தொழிற்சங்க அரங் கத்தில் குறிப்பாகவும் பெரும் எதிர்பார்ப்புகளை உருவாக்கியது. இந்த எதிர்பார்ப்புகளுக்கும், தமிழக அரசின் செயல்பாட்டுக்கும் இடையே இருந்த இடைவெளி பெருகிக் கொண்டே இருந்தது என்பதை 1989, 1990 ஆம் ஆண்டுகளில் கண்டோம்.

ஆகஸ்ட்-30 ''பந்த்''

3–7, 1987, 1988-ம் ஆண்டுகளில் ராஜீவ் அரசுக்கு எதிராக நடைபெற்ற நாடு தழுவிய வலுவான இயக்கங்களில் தொடர்ச்சியாக நடைபெற்ற 1989 ஆகஸ்ட் 30 ''பாரத் பந்த்''-ல் தொழிலாளர்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாக இருந்தது. தனியார் துறையில் வெற்றிகரமாக

வேலைநிறுத்தம் நடைபெற்ற போதிலும், அரசுத் துறைகளில் நமது பலஹீனம் பளிச்செனத்தெரிந்தது. போக்குவரத்தை அரசே நிறுத்தி விட்டது, மின்வாரியத்தில் மொத்தத்தில் சிறுபான்மையினரே வேலைநிறுத்தத்தில் பங்கேற்றனர். சிஐடியு உறுப்பினர்களின் பங்கேற்பும் மிகவும்குறைவாக வெறும் 15 சதமாக இருந்தது. அரசியல் போராட்டங்களில் தொழிலாளர்களைப் பங்கேற்கச் செய்வதில் உள்ள பலஹீனமான நிலைதொடர்வதை இது எடுத்துக்காட்டியது. அரசியல் ரீதியாக சாதகமான நிலைமையிலும்கூட இந்த பலஹீனம் ஏற்பட்டது என்பதை நாம் கணக்கிலெடுக்க வேண்டும். 1991, பிப்ரவரி 6 ''பந்த்''தின் போது இது மேலும் வெளிப்பட்டது. மின்வாரியத்தில் சுமார் 7 சதம் பேரே பங்கேற்றனர். வேறு சில தொழில்களிலும் இந்த பலஹீனம் தெளிவாக தெரிந்தது.

3-8 ஆகஸ்ட் 30 ''பந்த்'' தயாரிப்புகளிடையே சிஐடியு-வின் மாநில மாநாட்டிற்கான தயாரிப்புப் பணிகளிலும் ஈடுபட வேண்டியிருந்தது. செப்டம்பர் 21 முதல் 24 தேதிகளில் மாநில மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடித்தோம், இதைத் தொடர்ந்து மீண்டும் நவம்பரில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. ஒட்டு மொத்தமாக 1989ஆம் ஆண்டில், இது போன்ற பொது இயக்கங்களே தொழிற்சங்க அரங்கத்தில் முக்கிய பணிகளாக இருந்தன.

பஞ்சாலை போனஸ் போராட்டம் மற்றும் இதர போராட்டங்கள்

3-9, 1989ம் ஆண்டில் நடைபெற்ற போராட்டங்களில் முக்கியமானது பஞ்சாலைத் தொழிலாளர்களின் போனஸ் போராட்டமாகும். சட்ட வரம்புகளுக்கும் மேலாக கூடுதல் போனஸ் பெற்று, போனஸ் இயக்கத்தில் புதிய நிலையை உருவாக்கிய கோவை பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு சட்ட ரீதியான போனஸும், ஆஜருக்கேற்ப ஒரு தொகையும் என இதர சங்கங்கள் ஒத்துக்கொண்டன. இது, தொழிலாளர்களின் உணர்வு நிலைக்கும், தொழிலின் நிலைமைக்கும் பொருத்தமற்றதாக இருந்தது. சட்டப்படி போனஸும், ஆஜருக்கேற்ற தொகையும் சேர்ந்து, நாம் கோரிய குறைந்தபட்ச சதவிகிதத்திற்கு சமமாக உள்ளது என்பதால் சிஐடியு-வும் அந்த ஒப்பந்தத்தை ஏற்கலாம் என்பது கோவை மில் சங்கப் பொறுப்பாளர்களின் கருத்தாக இருந்தது. மாநில மையத்திலிருந்து தலையிட்டு, அதைத் தடுத்தோம். நாம் எடுத்த நிலை மிகவும் சரியானது என்பதை 1990ம் ஆண்டு அனுபவங்கள் எடுத்துக் காட்டியது. 1989ம் ஆண்டு ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டவர்கள் அனைவரும் அதை கைவிட்டு, கூடுதல் போனசுக்கு ஒப்பந்தம் போட வேண்டியதாயிற்று.

3-10, 1989ல் நாம்எடுத்த சரியான நிலையின் தொடர்ச்சியாகத்தான் இந்த ஆண்டு அக்டோபர் 22 முதல் கோவை, பெரியார், சேலம் மாவட்டங்களில் ஒரு லட்சம் பஞ்சாலைத் தொழிலாளர்களின் கூட்டான வேலைநிறுத்தப் போராட்டம் நடைபெற்றது. 1990ம் ஆண்டு வழங்கப்பட்ட அளவு போனஸ் வழங்க வேண்டுமென்று அரசே கூறவேண்டியதாயிற்று.

3-11, 1989 ஏப்ரல்-மே மாதங்களில் நடைபெற்ற தூத்துக்குடி அனல் மின்திட்ட காண்ட்ராக்ட் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம்

திமுக அரசு பொறுப்பேற்ற சில மாதங்களுக்குள்ளேயே அதன் தொழிலாளர் கொள்கை, போலீஸ் கொள்கை பற்றிய கேள்விகளை எழுப்பியது. போலீஸ், குண்டர்கள் தாக்குதலையும் மீறி இதர பகுதி தொழிலாளர்களின் ஒத்துழைப்பு, மாநிலம் தழுவிய ஆதரவு இயக்கங்களின் உதவியோடு இந்தப் போராட்டம் வெற்றிகரமாக முடிந்தது.

3-12, 1989ல்நடைபெற்ற மற்றொருகுறிப்பிடத்தக்க போராட்டம் நெய்வேலி லிக்னைட் நிறுவனத்தில் சிஐடியு -வுக்கும், அங்கிகாரம் வழங்க வேண்டுமென்பதற்கான போராட்டமாகும். கடந்த கால நடைமுறைகளிலுள்ள தவறுகளை களைய,மாநில மையத்தின் வழிகாட்டுதல்களோடு, அங்கு செய்யப்பட்ட பணிகளும், சரியான நேரத்தில் பிரச்னையை முன்னெடுத்துச் சென்று, நாம் நடத்திய இயக்கம், சிஐடியு சங்கத்திற்கு அங்கீகாரம் என்ற கோரிக்கைக்காக இதர சங்கங்களிலுள்ள தொழிலாளர்கள் உட்பட 90% தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் என்கிற நிலைமையை உருவாக்கியது. 7 ஆண்டு காலம் அங்கிகாரம் மறுக்கப்பட்ட நிலையில் நாம் மேற்கொண்ட திட்டமிட்ட பணிகள் நிலைமையில் மாற்றம் காண நமக்கு உதவியது. இதர சங்க தலைமைகள், நிர்வாகம் மற்றும் மாநில அரசுகளின் விருப்பத்திற்கு மாறாக நாம் முன்முயற்சி எடுத்து நடத்திய இயக்கத்தின் மூலமாக வெற்றி கண்டோம்.

3-13, 1990ம் ஆண்டில் வேலையின்மைக்கு எதிரான மாநிலம் தழுவிய இயக்கம், போனஸ் போராட்டங்கள், 1991ல் மீண்டும் நாடாளுமன்ற-சட்ட மன்ற தேர்தல்கள் என்று பொது இயக்கங்கள் இந்த காலத்தில் மேலோங்கி இருந்தன.

கூட்டு இயக்கங்கள்

3-14 நாடு தழுவிய முறையில் தேசிய கிளர்ச்சி பிரச்சாரக்குழு (என்சிசி), பொதுத்துறை தொழிற்சங்க ஒருங்கிணைப்புக்குழு போன்ற அமைப்புகள், தொழிற்சங்க இயக்கத்தில் கூட்டு இயக்கங்களை உருவாக்கினாலும், அந்த அமைப்புகளையும் தமிழ்நாட்டில் உள்ள தொழிற்சங்க மத்திய அமைப்புகளையும் ஒன்றுபடுத்தி மாநிலம் தழுவிய கூட்டு இயக்கங்களை நடத்துவதில் சிரமமான நிலை நீடிக்கிறது ஆளும் கட்சி சங்கமாக மாறும் போது சில அமைப்புகள் மேற்கொள்ளும் நிலையும்; எச்.எம்.எஸ்., என்.எல்.ஓ.-வின் மாநிலத் தலைமைகள் மேற்கொள்ளும் போக்கும் இந்த சிரமத்தை அதிகப்படுத்துகின்றன. நமது விடாப்பிடியான முயற்சிகளின் மூலம் எல்.பி.எப். அமைப்பை இந்த கூட்டு இயக்கங்களில் பங்கேற்க வைக்கிறோம். 1989 ஆகஸ்ட் 30ல் அவர்களை பங்கேற்கச் செய்தோம். ஆனால், 1991 பிப். 6 'பந்த்'-ல் கூட்டாக அறிக்கை வெளியிட்டாலும் அவர்களது பங்கேற்பு பலஹீனமாக இருந்தது. இந்த ஆண்டு நவம்பர் 29 பொது வேலைநிறுத்த தயாரிப்பில் எல்.பி.எப்., எச் எம் எஸ்., என்.எல்.ஓ. உட்பட மத்தியதர வர்க்க அமைப்புகளும் பங்கேற்கும் நிலையை நாம் முன்முயற்சி எடுத்து உருவாக்கினோம்.

3-15 நாடு தழுவிய கூட்டு இயக்கங்களில் பங்கேற்பு, மாநிலம் தழுவிய இயக்கங்கள் நடத்துவது என்பதோடு மாவட்ட ரீதியானதும், பிர

தேச வாரியானதும், தொழில் வாரியானதுமான கூட்டு இயக்கங்களும், போராட்டங்களும் நடந்துள்ளது. இந்த இயக்கங்களில் பல நேரங்களில் நமது அமைப்புகள், முன்முயற்சி எடுத்து செயல்பட்டுள்ளதும் குறிப்பிடத் தக்கதாகும்.

3-16 இந்தப் போராட்டங்களில் பல நேரங்களில் ஐ என் டி யு சி, ஏ டி பி அமைப்புகளையும் பங்கேற்கச் செய்ய முடிந்துள்ளது. கூட்டு நடவடிக்கைகளுக்கான நமது முன்முயற்சியும், ஒருங்கிணைப்பதிலுள்ள கவனம் மூலமும் அரசு போக்குவரத்து, சர்க்கரை, மின்சாரம் போன்றவற்றில் தொழில்வாரியான ஊதிய உயர்வு ஒப்பந்தங்களை உருவாக்கவும் முடிந்தது. தூத்துக்குடி காண்ட்ராக்ட், நெய்வேலி லிக்னைட் போன்றபோராட்டங்களில் நாம் சரியான நிலை எடுத்துப் போராடிய போது, மாற்றுத் தலைமைகள் குறுக்கே நிற்பதையும் மீறி, தொழிலாளர்களை ஒற்றுமை படுத்தி வெற்றிகரமான கூட்டுப் போராட்டங்களை நடத்த முடிந்த அனுபவமும் உண்டு.

3—17 தொழிற்சங்கங்களின் கூட்டு இயக்கங்களை மேலும் மேலும் வலுப்படுத்தி, தொழிலாளி வர்க்க ஒற்றுமையாக முன்னேற்றம்காண வேண்டிய மிகப் பெரும் கடமையும், பொறுப்பும் நமக்கு இருக்கிறது. கூட்டு இயக்கங்களை வலுப்படுத்திக் கொண்டு போவதில், இதர அமைப்புகளுடன் இணைந்து போராடுவதில் விருப்பம் காட்டாத போக்குகளை இன்னமும் பல இடங்களில் காணமுடியும். அதே நேரத்தில் கூட்டு நடவடிக்கைகளை வலுப்படுத்துவது என்ற பேரால் நமது சுயேட்சையான நடவடிக்கைகளில் கவனம் செலுத்தத் தவறுவது என்ற கடந்த காலத்தில் சுட்டிக்காட்டப்பட்ட பலஹீனமும் உள்ளது.

3—18 கூட்டு இயக்கங்களை சக்தியாக நடத்துவதற்கு நமது சுயேட்சையான நடவடிக்கைகளை திட்டமிட்டுத் துவக்குவது அவசியமாகும். பலாபலத்தில் மாற்றம் காண்பது என்ற நோக்கத்தோடு, இந்த கூட்டு இயக்கங்கள் திட்டமிட்டு நடத்தப்படவும் வேண்டும். இதில் இன்னமும் பலஹீனம் நீடிக்கிறது. இது களையப்படாவிட்டால், நாம் நடத்துகின்ற பல்வேறு இயக்கங்களின் பலனை நாம் பெறமுடியாமல் போய் விடும். கட்சி, எல்லா மட்டங்களிலும் கவனம் செலுத்த வேண்டிய ஒரு அம்சம் இது. கடந்த மூன்றுண்டுகளை மொத்தமாக எடுத்துக் கொண்டால் கூட்டு இயக்கங்களும், போராட்டங்களும் அதற்கு முந்தைய மூன்றுண்டுகளைவிட குறைவாகவே நடைபெற்றுள்ளது. நாட்டின் அரசியல் வளர்ச்சிப் போக்குகள் இதற்கு ஒரு காரணமாகும்.

சென்னை அனுபவம்

3—19 ஒரு தொழிற்சாலைக்கு ஒரு சங்கம் என்ற முறையில் சென்னையில் செயல்படுவதிலுள்ள படிப்பினைகளை முழுமையான பரிசீலனைக்கு நாம் உட்படுத்தியதில்லை. இருப்பினும், நமது தொழிற்சங்க அரங்க கோட்பாடுகளைப் பின்பற்றி செயல்பட்டால், நமது செல்வாக்கும், ஸ்தாபன பிடிப்பும் வளர வாய்ப்புள்ளதை சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. கடந்த மூன்றுண்டுகளில் சில சங்கங்களின் தேர்தல்களில் நமது தலைவர்கள்தோல்வியடைந்த போதிலும் சில சங்கங்களில் நாம் மீண்டும் வெற்றி பெற முடிந்

துள்ளது. இவற்றில் சில சங்கங்களை சிஐடியு—வில் இணைப்பதிலும் வெற்றி கண்டுள்ளோம்.

3—20 சேலம் மாநாட்டிலும், சென்னை மாநாட்டிலும் சுட்டிக் காட்டிப்பட்டுள்ள அடிப்படையில் ''நமது பலத்தை பெருக்குவதிலும், நமது நிலையை ஸ்திரப்படுத்துவதிலும் பெருமளவில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.'' நமது பணிகளை பரிசிலனைக்குட்படுத்தி, கடந்தகால படிப்பினைகளை பொதுமைப்படுத்துவதும், இதில் முன்னேற்றம் காண்ப தும் அவசியமாகும். சென்னை மாவட்டக்குழு இதை அவசரஉணர்வோடு நிறைவேற்ற வேண்டும்.

முன்னுரிமைக்ளும் — முக்கிய அரங்கங்களும்

3—21 சென்னை மாநாட்டின் வழிகாட்டுதலுக்கேற்ப, தொழிற் சங்க அரங்க கடமைகள் பற்றிய ஆவணப்படியான முன்னுரிமைகளை நிறைவேற்றுவதில் உணர்வுப்பூர்வமான முயற்சிகளை மேற்கொண்டுள் ளோம். கடமைகள் ஆவணத்திலுள்ள முன்னுரிமை கடமைகளான அணி திரட்டப்படாத தொழில்களில் உள்ளவர்களை சங்கரீதியாக திரட்டுவது, காண்ட்ராக்ட், காஷுவல் பயிற்சியாளர்களை சங்கத்தில் சேர்ப்பது, உழைக்கும் பெண்களை திரட்டுவது, வேலையின்மைக்கு எதிராக போராடு வது, கேந்திர தொழில்களில் முன்னேற்றம் காண்பது, கிளர்ச்சி பிரச் சார நடவடிக்கைளை விஸ்தரிப்பது, போராட்ட பரிசிலனைகளை நடத்தி கீழ் அணிகளுக்கு கொண்டு செல்வது, சர்வதேச ஒருமைப்பாட்டை வளர்ப்பது ஆகியவற்றில் நமது பணிகளில் கூடுதலான கவனம் தேவை என்ற நோக்கோடு எல்லா மாவட்டங்களிலும் மாவட்ட குழு உறுப் பினர்கள் உட்பட முன்னணியினருக்கும், விசேஷ அரங்கங்களிலுள்ள முன்னணி தோழர்களுக்கும் ரிப்போர்ட்டிங் நடைபெற்றது. தொழிற் சங்க அரங்க கடமைகள் பற்றிய ஒரு சரியான பார்வையை உருவாக் கும் முயற்சியின் நல்ல துவக்கமாக இது அமைந்தது. மாநிலரீதியாகவும், சில மாவட்டங்களிலும், சிறு முன்னேற்றத்தை காண்பதற்கு இது உதவியது.

சர்வதேச ஒருமைப்பாடு

3—22 உலக சமாதானம், சர்வதேச ஒருமைப்பாடு பிரச்னைகளில் தொழிலாளர்களின் கவனத்தை ஈர்க்கும் முறையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில், தென் ஆப்பிரிக்க மக்களுக்கு ஆதரவான இயக்கம்— தென்னாப்ரிக்க போராட்ட ஆதரவு, தென்ஆப்ரிக்க தொழிற்சங்க(கொசாடு) குழுவிற்கு வரவேற்பு இயக்கங்கள், நெல்சன் மண்டேலா விடுதலையை யொட்டிய வரவேற்பு இயக்கம் ஆகியவை குறிப்பிடத்தக்கதாகும். பெருமளவிலான துண்டு பிரசுரங்கள் இந்த இயக்கங்களை ஒட்டி வெளி யிடப்பட்டன. சிஐடியு மட்டுமல்லாது, நமது தோழர்கள் தலைமையேற் கிற மத்தியதர வர்க்க அமைப்புகளும்கூட இந்த இயக்கங்களை நடத்தி யுள்ளன. நிகரகுவா மக்களுக்கென ஒரே மாதத்தில் ரூபாய் ஒரு லட் சத்து ஓராயிரம் வசூலித்து கொடுத்தோம். ரூபாய் முப்பதாயிரம் வரையில்தான் வசூலிக்க முடியுமென்றே நாம் எதிர்பார்த்தோம். ஆனால், திட்டமிட்ட பிரச்சாரமும், செயல்பாடும் இந்த இயக்கத்தை

வெற்றிபெறச் செய்தது. சரியாக திட்டமிடப்பட்டால், சர்வதேச ஒருமைப்பாட்டு இயக்கங்களிலும், நமது தொழிலாளர்களை பங்கேற்கவைக்கும் வாய்ப்புகள் அதிகம் என்பதை இந்த இயக்கங்கள் தெளிவுபடுத்தின. மூன்றுண்டுகளில் தென்ஆப்ரிக்கா, நிகரகுவா பிரச்னைகளை தொழிலாளர்கள் மத்தியில் கொண்டு செல்ல சில இயக்கங்கள் நடத்தினேம் என்பதும், இந்த இயக்கங்கள் வெற்றிகரமாக அமைவதற்கு உதவிற்று. அதே நேரத்தில் இந்த இயக்கங்களிலும் தொழிலாளர் பங்கேற்பு, நிதி திரட்டுதல் ஆகியவற்றிலுள்ள ஏற்றத்தாழ்வான நிலையை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். வளைகுடா போருக்கு எதிராக நடைபெற்ற இயக்கங்களில் தொழிலாளர்கள் பங்கேற்பு பரவலாக இருந்துள்ளது.

3—23 சோஷலிஸ நாடுகளில் இன்று ஏற்பட்டுள்ள பின்னடைவுகளின் பின்னணியில், சர்வதேச ஒருமைப்பாடு, ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்களில் நாம் கூடுதலான கவனத்தை செலுத்த வேண்டியவர்களாக உள்ளோம். சாதாரண தொழிலாளர்களை எட்டுகின்ற அளவிற்கு நமது பணிகள் திட்டமிடப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

முக்கிய தொழில் துறைகள்

3—24 கேந்திர தொழில்களான போக்குவரத்து, மின்சாரம் ஆகிய துறைகளில் உறுப்பினர் எண்ணிக்கையில் சிறு உயர்வு காண முடிந்துள்ளது. அரசு போக்குவர்த்து துறையில் 20,000-லிருந்து 22,000 ஆகவும்; இதர போக்குவரத்துப் பிரிவுகளையும் சேர்த்து 23,694 (1989); மின்வாரியத்தில் 12,000-லிருந்து 20,243 ஆகவும் (1990); (நிரந்தர தொழிலாளர்கள் 10,500-லிருந்து சுமார் 12,000ஆக) உயர்ந்துள்ளது. இரயில்வேயில் 1988-ல் 8,965 என்பது 1989-ல் 10,148 ஆக உயர்ந்து, 1990ல் 8,472ஆக குறைந்துள்ளது. குறித்த காலத்தில் சந்தா தொகை மற்றும் விபரங்கள் மையத்தில் சேர்ப்பிக்கப்படாததால் இந்த குறைவு ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவும் ஸ்தாபன பலஹீனத்தின் பிரதிபலிப்பாகும்.

3—25 *(அ)* **போக்குவரத்து துறையில்** அரசுப் போக்குவரத்தில் மட்டுமே கவனம் செலுத்துகிறேம் என்ற சென்னை மாநாடுசுட்டிக் காட்டிய பலஹீனத்தைப் போக்க முயற்சி துவக்கப்பட்டுள்ளது. தனியார் போக்குவரத்து, ஆட்டோ, டெம்போ தொழிலாளர்களைத் திரட்டும் முயற்சி சேலம், சென்னை, திருச்சி, சிதம்பரனர், கோவை உட்பட பல மாவட்டங்களில் துவங்கப்பட்டுள்ளது. மிக முக்கியமான இந்தத் துறையில், உதிரித் தொழிலாளர்களாக உள்ள இந்தப் பகுதியினரை சங்க ரீதியாக திரட்டுவதில் பல சிரமங்கள் இருந்தாலும், தொடர்ந்து கவனம் செலுத்தி முன்னேற்றம் காணவேண்டியுள்ளது.

3—26 (ஆ) **அரசுப் போக்குவரத்துத் துறையில்** நமது செல்வாக்கும், ஸ்தாபனமும் வலுப்பெற்றுள்ளது. ஒவ்வொரு பிரச்னையிலும் நாம் மேற்கொள்ளும் நிலை பற்றி தொழிலாளர்களுடன் நெருக்கமான உறவு ஏற்படுத்துவதில், சம்மேளனத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் நல்ல பலனைத் தந்துள்ளன. இந்தப் பணிகளை திட்டமிட்டுத் தொடரவேண்

டும். பல பிரச்னைகளில் நாம் மேற்கொள்ளும் நிலையை மற்றவர்களும் மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம்ஏற்படுகிற அளவிற்கு, அரசுபோக்குவரத்து துறையில் பொதுவர்க நமது முன்னேற்றம் உள்ளது. ஆனால் தீரன், சோழன், அன்னை சத்யா போன்ற கழகங்களில் நாம் பெயரளவில்தான் செயல்படுகிறோம் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இதில் அவசர உணர்வோடு மாற்றம் காணவேண்டும்.

3–27 (இ) மின்வாரியத்தில் நமது உறுப்பினர் பலத்திலும், செயல்பாட்டிலும் முன்னேற்றம் காண முடிந்துள்ளது. காண்ட்ராக்ட் தொழிலாளர்கள் இயக்கத்தில் பெற்றெடுத்த வெற்றி நாம் இந்தக் காலத்தில் வென்றெடுத்த குறிப்பிடத்தக்க வெற்றியாகும். நமது சங்கத்திற்கு எதிராக குறிவைத்துத் தாக்கும் நிர்வாகத்தின் போக்கை வெற்றிகரமாக சமாளித்துள்ளோம். நம்மை தனிமைப்படுத்தும் நோக்கத்தோடே செயல்படும் பிரதான சங்கங்களையும் இணைத்து, கூட்டு இயக்கத்திற்கு தொடர்ந்து முயற்சித்து வந்துள்ளோம். இதில் சிறு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கூட்டு இயக்கத்தையொட்டிய பல பிரச்னைகளில் மேலும் கவனமாக செயல்பட்டு, கீழ்மட்டத்திலிருந்து ஒற்றுமையை கட்டுவதற்கு திட்டமிட்ட முயற்சிகள் தேவைப்படுகிறது. உறுப்பினர் எண்ணிக்கையில் ஒட்டு மொத்தமாக முன்னேற்றம் கண்டுள்ளோம். ஆனால், நமது செயல்பாட்டிற்கும், செல்வாக்கிற்கும் ஏற்ப இதில் உயர்வு காணமுடியாத பலஹீனம் நீடிக்கிறது. பசும்பொன்-முகவை போன்ற பகுதிகளில் பின்னடைவும்; திருச்சி, செங்கை போன்ற மாவட்டங்களில் சிறு முன்னேற்றம் இருந்தாலும் மிகவும் பலஹீனமான நிலையும், தஞ்சை பகுதியில் ஸ்தாபனமே இல்லாததும் இந்த அரங்கில் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சங்களாகும். காண்ட்ராக்ட் தொழிலாளர்களை நிரந்தர தொழிலாளர்களுடன் ஒரே சங்கத்தில் திரட்டி, இரு பகுதியினரையும் இணைத்துப் போராட்டங்களையும், இயக்கங்களையும் நடத்தியது நமது ஸ்தாபனத்தை விஸ்தரிக்க உதவியுள்ளதை மின் அரங்கில் தெளிவாக காணலாம்.

3–28 (ஈ) இரயில்வேயைப் பொறுத்தமட்டில், செயல்பாட்டில் முன்னேற்றம் காண முடிந்துள்ளது. சங்க மையத்தை சென்னைக்கு மாற்றியுள்ளோம். கூட்டாக செயல்படும் மையத்தை உருவாக்கி, திட்டமிட்டு செயல்பட நல்ல வாய்ப்புள்ளது நமது செயல்பாட்டை விஸ்தரிக்க வாய்ப்புடைய பகுதிகளென ஏற்கெனவே சுட்டிக்காட்டியுள்ள பகுதிகளில் கவனம் செலுத்தாத நிலை நீடிக்கிறது. கட்சியின் மாவட்டக் குழுக்கள் இந்த அரங்கப் பணிகளில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியுள்ளது: சென்னையில் இதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் நல்ல பலனை தந்துள்ளது. துறைமுகத்திலும் சிறிய முன்னேற்றமேயுள்ளது. தூத்துக்குடி துறைமுகப் பகுதியில் முன்னேற்றம் கண்டுள்ளோம். ஆனால், டாக் பகுதியில் ஏற்கனவே இருந்த நிலையில் பலஹீனம் ஏற்பட்டுள்ளது. சென்னையில் பொதுவான செல்வாக்கு கூடியுள்ளது. ஸ்தாபனம் வலுப்படுத்தப்பட வேண்டியுள்ளது. உறுப்பினர் சேர்ப்பு உட்பட பணிகள் முறைப்படுத்தப்பட வேண்டியிருக்கிறது.

3-29(உ) மத்திய பொதுத்துறை நிறுவனங்களில் ஒட்டு மொத்தமாக பார்த்தால் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இல்லை. சேலம்

எஃகு ஆலையில் தொடர்ச்சியான போராட்டங்களுக்குப் பிறகு அங்கிகாரம் பெற்றுள்ளதும், நெய்வேலியிலும் அங்கிகாரம் பெற்றதும் இந்தக் காலத்தில் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும். ராணிப்பேட்டை பி எச் ஈ எல்லில் சிஐடியு சங்கம் துவக்கப்பட்டுள்ளது. திருச்சி பி எச் ஈ எல்லில் முதன்மையாக இருந்த நிலை தற்போது பாதிப்புக்குள்ளாகி இருக்கிறது. தஞ்சையில் ஓ.என்.ஜி சி. போன்ற பகுதிக்கு விஸ்தரிப்பு பற்றி தொடர்ந்து விவாதிக்கப்பட்ட போதிலும் நடைமுறைப்படுத்துவதற்கான ஊழியர் இன்மையால் முன்னேற்றம் இல்லை. மாநிலக்குழு உடனடியாக கவனம் செலுத்த வேண்டிய பகுதியாகும் இது. மத்திய பொதுத்துறை நிறுவனங்களில் நாடு தழுவிய முறையிலும், மாநிலத்திலும் நமக்கு பொதுவாக செல்வாக்கும், அந்தஸ்தும் கூடியுள்ளது. நமது ஸ்தாபன நிலையிலும், அரசியல் பிடிப்புகளிலும் உள்ள தேக்கத்தைப் போக்க திட்டமிட்டு செயல்பட வேண்டியுள்ளது.

3-30(ஊ) மாநிலத்தின் இதர முக்கிய தொழில்துறைகளான பஞ்சாலை, சிமெண்ட், சர்க்கரை போன்ற பாரம்பரியமான துறைகளின் செயல்பாடுகளில் மாற்றம் காண முடிந்துள்ளது. அகில இந்திய ரீதியிலும், மாநிலம் தழுவிய முறையிலும், சம்மேளனம், ஒருங்கிணைப்புக் குழுக்கள் மூலம் செயல்படத் துவங்கியுள்ளோம். ஆனால் ஸ்தாபன பலம் குறைவாக உள்ள நிலை தொடர்கிறது. பஞ்சாலைகளில் நமக்குள்ள ஸ்தாபன பலஹீனங்கள் பற்றி கடந்த மாநாடுகளில் சுட்டிக்காட்டியுள்ள போதிலும் முன்னேற்றம் காணமுடியவில்லை. மாநில சம்மேளனம் அமைக்கப்பட்டு, மாநில ரீதியான நடவடிக்கைகள்சில மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும், தேக்க நிலை உடைக்கப்படாமலேயே உள்ளது. பஞ்சாலைகள் புதியதாக துவக்கப்பட்ட பகுதிகளிலும் நமது நிலை மிகவும் பலஹீனமாகவே உள்ளது. இந்தப் பகுதிகளில்ஸ்தாபனத்தை விஸ்தரிப்பதன் மூலமே இந்தத் துறையில் கூடுதலான முன்னேற்றம் காணமுடியும்.

காண்ட்ராக்ட்-காஷுவல்-அணிதிரட்டப்படாத தொழில்கள்

3-31 காண்ட்ராக்ட், காஷுவல் தொழிலாளர்கள் மற்றும் அணி திரட்டப்படாத தொழில்களில் நமது ஸ்தாபனத்தை விஸ்தரிக்க வேண்டுமென்ற முன்னுரிமை கடமையை நிறைவேற்றுவதில் பரவலாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் ஓரளவு பலனும் கிடைத்துள்ளது. மாநில சிஐடியுவின் உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதிக்கும் மேலாக இந்தப் பகுதியினர் உள்ளனர்.

3-32 காண்ட்ராக்ட் தொழிலாளர்களை சங்க உறுப்பினராக்கித் தொடர்ந்து போராடியதன் விளைவாக மின் அரங்கில் 18,000 பேர் நிரந்தரப்படுத்தப்பட்ட வேண்டுமென தீர்ப்பு பெற்று, ஒரு பகுதியினர் நிரந்தரமாக்கப்பட்டு விட்டனர். நமது விடாப்பிடியான போராட்டத்திற்குக் கிடைத்த குறிப்பிடத்தக்க வெற்றியாகும் இது. நெய்வேலி, இரயில்வே உட்பட இதர துறைகளிலும் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. சென்னை உரஆலையில் 1,000க்கும் மேற்பட்ட நமது உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டு பல ஆண்டுகளாகியும் தீர்வின்றி தொடர்கிறது. மாவட்ட

வாரியான மாநாடுகள் நடத்தப்பட்டு, மாவட்டங்களில் இயக்க விஸ்தரிப்புக்குத் திட்டமிடப்பட்டது. இது தொடர வேண்டியுள்ளது.

3-33 அணிதிரட்டப்படாத தொழில்களிலும் நமது செயல்பாட்டில் முன்னேற்றம் உண்டு. ஆனால், அதற்கேற்ப ஸ்தாபன முன்னேற்றம் இல்லை என்ற நிலை நீடிக்கிறது. பீடி, கைத்தறி, விசைத்தறி, பனியன், தோல் பதனிடும் தோல் பொருள், கட்டுமானம், சுமை தூக்குவோர் என பலதரப்பட்ட பிரிவுகளில் நமது ஸ்தாபன பலம் ஓரளவு உயர்ந்துள்ளது. பனியன் தொழிலில் இருக்கின்ற சங்கங்களில் நமது சங்கம்தான் வலுவான சங்கம். தோல் பொருள் பெருமளவில் வளர்ந்து வருவதைக் கணக்கிலெடுத்து சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் நாம் செயல்படவில்லை. பீடி, கைத்தறிகளில் பலலட்சம் தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள் என்றாலும், பீடியில் 9,685(1990)-ம்; கைத்தறியில் 6,696(1989) பேரும்தான் உறுப்பினர்கள் இது, நமது பலஹீனத்தையும், அதேசமயம் வாய்ப்பையும் எடுத்துக்காட்டுகிறது. குடிநீர் வடிகால் வாரியம், கனிம நிறுவனம், காதி, கூட்டுறவுத்துறைகடை ஊழியர்கள், ஸ்தலஸ்தாபனங்கள் என அரசின் பொறுப்பிலுள்ள நிறுவனங்களிலும் நமது சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. கடந்த மூன்றாண்டுகளில் சிறு முன்னேற்றம் காண முடிந்த அரங்கங்களாகும் இவை.

3-34 ஒவ்வொரு மாவட்டத்திலும் கூடுதலான கவனம் செலுத்தி, அணிதிரட்டப்படாத தொழில்களிலுள்ள இந்த உதிரிப் பகுதியினரை. மேலும் சங்க ரீதியாக திரட்டுவதும், அரசியல்படுத்துவதும் அவசியம். பலதரப்பட்ட பின்னணிகளைக் கொண்ட சீர்குலைவு அமைப்புகள் இன்று இவர்களிடையே பணியாற்றிக் கொண்டு இவர்களை திசைதிருப்பிக் கொண்டிருக்கின்றனர் என்பதையும் மனதில் கொள்ள வேண்டும். நமது நாட்டிலுள்ள மொத்தத் தொழிலாளர்களில் சுமார் 90% பேர் இந்தத் துறைகளில் உள்ளனர் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். தமிழகத்தின் முக்கியமான தொழில் அரங்கம் என்ற முறையில் தோட்டத் தொழிலில் நாம் பெயரளவிற்கே உள்ளோம். குமரி மாவட்ட ரப்பர் தோட்டத் தொழிலாளர்களைத் தவிர வேறு எந்த இடத்திலும் இதில் குறிப்பிடத்தக்கவகையில் இல்லை. நீண்ட நெடுங்காலமாக உள்ள இந்த பலஹீனமான நிலைதொடர்வதற்கு அனுமதிக்கக் கூடாது. சிஐடியு மையத்திலிருந்து இடைக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சில முயற்சிகளும் தொடரப்படவில்லை. கோவை, நீலகிரி மாவட்டக்குழுக்கள் இதில் விசேஷ கவனம் செலுத்த வேண்டும். மாநிலக்குழுவும் இதற்கு உதவ வேண்டியுள்ளது.

3-35 பல லட்சக்கணக்கில் உள்ள குழந்தைத் தொழிலாளர்கள் பற்றியும் நாம் கவனம் செலுத்தவேயில்லை. குறிப்பிடத்தக்க அளவில் குழந்தைகள் பணியாற்றும் தீப்பெட்டி, பட்டாசு போன்ற தொழில்களில் சங்க பலமும் இல்லை. குழந்தைத் தொழிலாளர்களும், இளம் பருவத்தினரும் பெருமளவில் பணியாற்றும் பனியன் தொழிலில் மட்டும்தான் அவர்களை சங்க உறுப்பினராக்கியுள்ளோம். குழந்தைத் தொழிலாளர்களின் சில இயக்கங்களையும் நடத்தியுள்ளோம். கொடூரமான சுரண்டல் நடைபெறும் இந்தத் துறைகளில், குழந்தைத் தொழிலாளர்களை அணிதிரட்டும் பணியை நமது சங்கங்கள் மேற்கொள்ள வேண்டும்.

உழைக்கும் பெண்கள்

3-36 உழைக்கும் பெண்கள் பிரச்சனையில் கவனம் செலுத்தும் மாநிலமாக தமிழகம் உள்ளதென்று 13வது மாநாடு சுட்டிக்காட்டியது. கடந்த மூன்று ஆண்டுகளிலும் ஓரளவு இதில் கவனம் செலுத்த முடிந்துள்ளது. சிஐடியுவின் மாநில மாநாட்டையொட்டி உழைக்கும் பெண்களின் மாநில மாநாடு நடத்தப்பட்டது. துறை வாரியாகவும், உழைக்கும் பெண்களை ஒன்றுபடுத்த முயற்சி செய்தோம். மின் அரங்கில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காண முடிந்துள்ளது. பிராந்திய வாரியாக சிறப்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டு கமிட்டிகள் அமைக்கப்பட்டது. சங்கத்தின் மாநாட்டுக்கு முன்தினம் நடத்தப்பட்ட ''உழைக்கும் பெண்கள் மாநாட்டில்'' மாற்று சங்க உறுப்பினர்களான பெண்களையும் திரட்ட முடிந்தது. ரயில்வேயிலும், நெய்வேலியிலும் ஆரம்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. திருப்பூர் பனியன் தொழிலிலுள்ள பெண் தொழிலாளர்களின் தனி மாநாடு, நமது சங்கத்தால் திட்டமிட்டு நடத்தப்பட்டது.

3-37 சிஐடியு சங்கங்கள் மட்டுமல்லாது, மாநில-மத்திய அரசு ஊழியர் அமைப்புகளும், இன்ஷூரன்ஸ் அரங்கமும் இதில் முன்முயற்சி எடுத்து செயல்பட்டன. இந்த முன் முயற்சிகள் கவனமாக தொடரப்பட வேண்டும். பொதுத்துறை, பஞ்சாலை, கைத்தறி, விவசாயத் தொழிலாளர் துறைகளில் கவனம் செலுத்தப்படவே இல்லை என்பதும் கவனிக்கப்பட வேண்டும். பெண்களை சங்க உறுப்பினர்களாக்குவது, சங்க பொறுப்புகளுக்குக் கொண்டுவருவது, அரசியல்படுத்துவது என்ற முக்கிய கடமைகளோடு இணைந்தது இந்தப் பணி என்பதை மனதில் கொண்டு நாம்செயல்பட வேண்டும்.

வேலையின்மைக்கெதிராக

3-38 வேலை தேடும் இளைஞர்களையும், தொழிலாளி வர்க்கத்தின் ஒரு பகுதியாக உணர்ந்து, தொழிற்சங்க இயக்கத்தோடு அவர்களை நெருக்கமாக கொண்டுவர வேண்டுமென்ற கடமையை நிறைவேற்ற திட்டமிட்ட முயற்சி மேற்கொள்ளப்பட்டது. சிஐடியு மாநில மாநாட்டின் முடிவாக எடுத்து மத்தியதர வர்க்க தொழிற்சங்கங்களையும் வாலிபர்–மாதர்-விவசாய அமைப்புகளையும் இணைத்து, 12 அமைப்புகள் உட்பட சி.சி.ஏ.யு. என்ற அமைப்பை உருவாக்கி 1990 பிப்ரவரியிலிருந்து ஜூன் வரையில் இயக்கங்கள் நடத்தினோம். வெற்றிகரமான இயக்கம். 4 முனைகளிலிருந்து சென்னை வந்த பிரச்சாரப் பயணங்கள் மாநிலம் முழுவதும் உற்சாகத்தை ஏற்படுத்தியது. ஸ்தல மட்டத்தில் தொழிற்சங்கங்களும், வாலிபர் சங்கம் போன்ற வெகுஜன அமைப்புகளும் இணைந்து பணியாற்றும் நிலை ஏற்பட்டது. கிராமப்புறங்களில் கூடுதலான வரவேற்பு கிடைத்தது. ஜூன் 6 பேரணியும் வெற்றிகரமாக நடந்தது. ஆலை தொழிலாளர்களின் பங்கேற்பு குறைவாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்க பலஹீனமாக இருந்தது.

3-39 ''வேலை இனி கனவல்ல'' என்ற பிரசுரம் நல்ல வரவேற்பு பெற்றது. 50,000 பிரதிகள் வெளியிட்டோம். 48,000 விற்கப்பட்டது. சென்னையில் மட்டும் 21,000 பிரதிகள் விற்கப்பட்டன. மதுரை, நெல்லை மாவட்டங்களில் இது விற்பனை செய்யப்படாமலேயே போயிற்று என்பதும்

கவனிக்கத்தக்கது. இந்த இயக்கத்தையொட்டி மாநிலம் முழுவதும் பல லட்சக்கணக்கான துண்டுப் பிரசுரங்கள், பல ஆயிரம் போஸ்டர்கள் மற்றும் நல்ல முறையிலான சுவர் விளம்பரங்கள் செய்யப்பட்டன. இந்த இயக்கத்தைத் தொடர வேண்டுமென முடிவுசெய்தோம். திட்டங்களையும் உருவாக்கினோம். இதர பணிகள் அதைத் தொடர முடியாமல் செய்துவிட்டன. ஒரு நல்ல முன்முயற்சி மூலம் உருவான வாய்ப்பை நாம் இழந்துள்ளோம். இந்த இயக்கத்தைத் தொடர்ந்து நடத்த திட்டமிட வேண்டும்.

விவசாய இயக்க ஆதரவு

3-40 விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களுக்கு ஆதரவு என்பது சிஐடியு-வின் சார்பாக ஆண்டுதோறும் வழங்கப்படும் நிதி என்கிற மட்டத்திலேயே உள்ளது. 1989-ல் ரூ.37,376/-ம்; 1990-ல் ரூ.52,000ம்; 1991-ல் ரூ. 73,235/-ம் வழங்கப்பட்டுள்ளது. பல மாவட்டக் குழுக்கள் கவனம் செலுத்தாத நிலை நீடிப்பது இணைக்கப்பட்ட பட்டியலிலிருந்து தெளிவாகிறது. இது போக்கப்பட வேண்டுமென்ற முடிவு அமுலாக்கப்படவில்லை. சென்னை மாவட்டக் குழுவும், போக்குவரத்து அரங்கமும் ஒரு இயக்கமாக நடத்துகிறது. மின் அரங்கில், சந்தாவோடு சேர்த்து ஒரு ரூபாய் வசூலிக்கப்படுகிறது. நிதி வசூல் என்பதோடு, சகோதர வர்க்க ஒருமைப்பாடு என்ற நிலையில் இந்த இயக்கம் கொண்டு செல்லப்பட வேண்டும்.

அரசின் கொள்கைகளுக்கு எதிராக

3-41 மத்திய அரசின் மக்கள் விரோத கொள்கைகளுக்கு எதிராக நாடுதழுவிய முறையில் நடைபெற்ற இயக்கங்களில் பங்கேற்றதோடு, மாநில அரசின் கொள்கைகளை எதிர்த்தும் பல இயக்கங்களை நடத்தினோம். 1989, 1990ம் ஆண்டுகளில் மாநிலத்தில் ஆட்சிநடத்திய திமுக அரசின் தொழிலாளர் கொள்கை பொதுவாக தொழிலாளர்களுக்கு சாதகமானதாக இருக்கவில்லை. அதே நேரத்தில், கூட்டாக நிர்ப்பந்தம் செலுத்தி சில நல்ல முடிவுகளை எடுக்கச் செய்ய முடிந்தது. அரசு போக்குவரத்து, சர்க்கரை, மின்சாரத்துறை ஊதியஒப்பந்தங்கள், அரசுஊழியர்-ஆசிரியர்களின் ஊதிய விகிதம், அவர்களுக்கு போனஸ் போன்றவை குறிப்பிடத்தக்கதாகும்.

3-42 ''அதேநேரத்தில், தூத்துக்குடி காண்ட்ராக்ட் தொழிலாளர் போராட்டம், குடிநீர் வடிகால் வாரியத்தில் வேலை நீக்கங்கள், பல அரசு நிறுவனங்களில் பழிவாங்குதல்கள், சென்னை உட்பட பல இடங்களில் ஜனநாயக உரிமைகளையும் பறிக்கும் காவல் துறையின் போக்கு,கூட்டுறவுத் துறையில் அரசின் மோசமான தலையீடுகள் என பல பிரச்சனைகளில் நாம் போராட வேண்டியிருந்தது. அதை ஓரளவு நிறைவேற்றவும் செய்தோம்.'' அரசே கொள்கையை மாற்றுக'' என விரிவான பிரச்சார இயக்கத்தை நடத்தினோம். பிரச்சனைகளை விளக்கி லட்சக்கணக்கான துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டு, அனைத்து பகுதி உழைப்பாளி மக்களிடமும் விநியோகம் செய்தோம்.

3—43 ஜனநாயக உரிமைகள் பற்றிய பிரச்சனையில், சென்னையில் ஏஐடியுசி,எச்எம்எஸ்,ஏடிபி-யும் இணைந்து தடையை மீறினோம். மாநிலம்

முழுவதும் அதே நாளில் இயக்கங்கள் நடத்தினோம். அரசு, அதன் போக்கை மாற்ற வேண்டியதாயிற்று. ஆனால், மேற் குறிப்பிட்டவற்றில் பல பிரச்சனை களுக்கு தீர்வு காண முடியாமல் போயிற்று. கூடுதலான நிர்ப்பந்தம் செலுத்துமளவிற்கு, ஒரு சில பிரச்சனைகளில் இயக்கங்களை முன்னெடுத்துச் செல்ல மறியல் என முடிவு செய்தபோதிலும், அரசியல் நிகழ்ச்சிப் போக்கு கள் காரணமாக ஒத்திவைத்தோம்.

3—44 இந்தப் பின்னணியில்தான் 1991 ஜனவரியில், மாநில அரசு கவிழ்க்கப்பட்டபோது, ஜனநாயகப்படுகொலை என்றமுறையில் நடை பெற்ற கண்டன இயக்கங்களிலும் பங்கேற்றோம். பிப்ரவரி 6 அன்று நடந்த மறியலில் சில பகுதிகளில் நமது தொழிலாளர் பங்கேற்பு மிகக் குறைவாக வும், பெயரளவிற்குமானதாகவும் இருந்தது. இது நமது பலஹீனத்தையே காட்டுகிறது. தொழிற்சங்க முன்னணியினர்கூட மாநில அரசின் கடந்த கால செயல்பாட்டை காரணம் காட்டி வேலை நிறுத்தத்தில் பங்கேற்காத நிலை இருந்தது. இதையும் கணக்கிலெடுத்துதான் மே மாதம் தேர்தல் அறி விக்கப்பட்டபோது, தேர்தல் தயாரிப்புக்கென சிஐடியு மாநிலக் குழுவைக் கூட்டி திட்டமிட்டோம். அரசியல் அணுகுமுறை பற்றி விவாதித்து விளக்க மளிக்கப்பட்டது. மாவட்ட வாரியான பேரவைக் கூட்டங்கள் நடத்தி னோம். நமது தோழர்கள் போட்டியிட்ட இடங்களில் இருந்த அளவிற்கு இதர பகுதிகளில் செயல்பாடு இல்லையென பொதுவாக தெரிவிக்கப்பட் டது.

3-45 தேர்தலில் நமது தொழிற்சங்க அரங்கத் தொழிலாளர்களின் பணி, நமது அணிகள் வாக்களித்த விபரம் போன்றவற்றை மாவட்ட வாரி யாக பரிசீலனை செய்ய வேண்டுமென்ற சிஐடியு மாநில நிர்வாகிகளின் முடிவும் நிறைவேறவில்லை. புதுவையைப் பொறுத்தவரை, காங்கிரஸ் அரசின் கொள்கைகளை எதிர்த்து தொடர்ந்து பல இயக்கங்கள் நடை பெற்றுள்ளன.

வகுப்புவாத, ஜாதீய பிரச்னைகள்

3—46 வகுப்புவாத, ஜாதீய அமைப்புகளின் தொழிற்சங்க அரங்கத் திலுள்ள செயல்பாடுகள் பற்றி நாம் கூடுதலாக கவனம் செலுத்த வேண்டி யுள்ளது. குறிப்பாக ஜாதி அடிப்படையிலான முயற்சிகள பல பகுதிகளில் நடைபெறுகின்றன. தாழ்த்தப்பட்டவர்கள், சிறுபான்மையினரான தொழிலாளர்களின் விசேஷப் பிரச்னைகள் பற்றி நாம் கூடுதலாக கவனம் செலுத்த வேண்டுமென கடந்த காலத்தில் முடிவுகள் எடுக்கப்பட்டது. ஆனால், திட்டமிட்டு அதை அமுலாக்கும் முயற்சிகள் பொதுவாக நடை பெறவில்லை. சில குறிப்பிட்ட ஆலைகளில் அல்லது துறைகளில் இதற்கு விதிவிலக்காக சில பிரச்னைகளில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

3-47 பி.எம்.எஸ்., பி.எம்.கே. சங்கங்கள் அமைக்கும் முயற்சிகளை யும் இந்தப் பின்னணியில் நாம் கவனிக்க வேண்டும். அணிதிரட்டப்படாத தொழில்கள் உட்பட பி.எம்.எஸ். சங்கம் அமைக்கும் முயற்சியில் ஈடுபடு கிறது. இரயில்வே, தபால்-தந்தித் துறைகளில் ஏற்கெனவே அவர்களது அமைப்புகள் செயல்படுகின்றன. பாட்டாளி சங்கத்தைப் பொறுத்தமட்டி லும், ஜாதி ரீதியாக அவர்களுக்கு செல்வாக்குள்ள பகுதிகளில் அவர்கள்

கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றனர். எஸ்.சி./எஸ்.டி. அமைப்புகள் பல இடங்களில், குறிப்பாக அரசு நிறுவனங்களில் செயல்பட்டு வருகின்றன.

3-48 வகுப்புவாத உணர்வுகளும், ஜாதீய உணர்வுகளும் மென்மேலும் தூண்டிவிடப்படும்போது, தொழில் மையங்களிலும்கூட அது பாதிப்பை ஏற்படுத்துகிறது. தொழிலாளர் ஒற்றுமை பாதிக்கிறது என்பதற்கான அனுபவங்கள் உள்ளன. இந்த முயற்சிகளுக்கு எதிராக விழிப்போடு இருந்து, வகுப்புவாத சக்திகளுக்கு எதிராக நாம் தொழிலாளர்களை திரட்டி மக்களிடம் செல்ல வேண்டும். நமது மாநிலத்தில், கோவை போன்ற தொழில் மையங்கள் உட்பட பல பகுதிகளில் வகுப்புவாத மோதல்கள் உருவாகியபோது நாம் உடனடியாக செயலில் இறங்கவில்லை என்பதை ஒரு படிப்பினையாக எடுத்துக்கொள்ள வேண்டும். கடந்த ஆண்டு திருப்பூரில் நாம் தகுந்த நேரத்தில் தொழிலாளர்களைத் திரட்டி தலையிட்டது, நம் மீது சிறுபான்மை மக்களுக்கு நல்லெண்ணத்தை ஏற்படுத்தியதையும் கண்டோம்.

ஆதரவு இயக்கங்கள்

3-49 தேசிய ரீதியில் அறைகூவல் விடப்பட்ட திரிபுரா மக்களுக்கு ஆதரவு இயக்கம், நிதி திரட்டுதல், அரியானா செங்கல் தொழிலாளர் ஆதரவு இயக்கம், ஆந்திரப் புயல் நிவாரண நிதி போன்றவற்றில் நமது பங்கேற்பு இருந்துள்ளது. திரிபுராவுக்கு நிதிதிரட்ட தோழர் நிருபன், சுற்றுப்பயணம் செய்தபோது, தொழிற் சங்கங்களும் தங்களது பங்கை செலுத்தியுள்ளன. இந்த ஆண்டு நிதி வசூலில் ரூ. 20,000/-மட்டுமே வசூலிக்கப்பட்டது. ஆந்திரா புயல் நிவாரணத்திற்காக ரூ. 5,000/-வரை அனுப்பி உள்ளோம். மாநிலத்தில் குறிப்பிடத்தக்க இயக்கமாக கல்பாக்கம் விபத்து உதவி நிதியாக ரூ. 26,997-30 வசூலித்தோம். வருவாய்த்துறை ஊழியர்களுக்கு ஆதரவான இயக்கங்கள் மாநிலம் முழுவதும் நல்ல முறையில் நடைபெற்றது. ஆதரவு இயக்கங்களிலுள்ள பலஹீனம் பற்றி கடந்த இரண்டு மாநாடுகளில் சுட்டிக்காட்டப்பட்டது இன்னும் தொடர்கிறது என்றே கூறவேண்டியுள்ளது.

தொழிற்சங்க அரங்க கடமைகள் அடிப்படையில்

3-50 மத்திய கமிட்டியின் தொழிற்சங்க அரங்கக் கடமைகள் தஸ்தாவேஜுப்படி நமது செயல்பாடுகளில் மாறுதல் காணவேண்டும் என்ற நமது முடிவுகளின் அடிப்படையில் நாம் மேற்கொண்ட பணிகளை மதிப்பீடு செய்யவேண்டியுள்ளது. தஸ்தாவேஜு சுட்டிக்காட்டும் முன்னுரிமைகள் அடிப்படையில், நமது பணிகளைச் செய்ய ஒரு முயற்சி நடைபெற்றுள்ளது. கடந்த காலத்தைவிட ஒரு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. பலதரப்பட்ட முன்முயற்சிகளை நாம் தொடராமல் விட்டுவிட்டது நமது மிகப்பெரிய குறைபாடாக உள்ளது. அன்றாடப் பணிகளின் அழுத்தமும் தொடர்ந்து கவனம் செலுத்துவதில் தலைமையின் பலஹீனமும் இதற்கு காரணமாகும். இது கவலை தரத்தக்கதாகும். தொழிற்சங்க மையமும், கட்சி மையமும் இதில் தொடர்ச்சியான கவனம் செலுத்த வேண்டும். மேலும், நமது முன்னுரிமைக் கடமைகளை மாவட்ட வாரியாகவும், தொழில்வாரியாகவும்

ஸ்தூலப்படுத்தி திட்டமிடவேண்டியுள்ளது. தொழிற்சங்க மையம் இதற்கு திட்டமிட்டு வழிகாட்டவேண்டியுள்ளது.

போராட்டப் பரிசீலனைகள்

3-51 கடந்த காலத்தில் மிகப்பெரும் பலஹீனமாக சுட்டிக்காட்டப்பட்டது போராட்டங்களை, இயக்கங்களை பரிசிலனை செய்யாத போக்காகும். இதில் ஒரு முறிப்பை ஏற்படுத்தினோம். தூத்துக்குடி காண்ட்ராக்ட் தொழிலாளர் போராட்டம், போக்குவரத்து அரங்க ஊதிய உயர்வு இயக்கம், நெய்வேலி லிக்னைட் போராட்டம், மெட்டல் பாக்ஸ் ஆலை மூடப்பட்டதை எதிர்த்த போராட்டம் ஆகியவை பற்றி மாநில டி. யு. சப்-கமிட்டி பரிசீலித்து, மாநில சிஐடியுவில் முடிவாக்கினோம். கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர்களுக்கும் இந்த அறிக்கைகள் வழங்கப்பட்டன. ஆனால், இந்தப் படிப்பினைகளை சாதாரண தொழிலாளி வரை கொண்டுசெல்ல வேண்டுமென்ற முடிவு ஓரளவே நிறைவேற்றப்பட்டுள்ளது. இது நாம் செய்த பணியின் நோக்கத்தை நிறைவேற்ற உதவவில்லை.

3–52 1989ம் ஆண்டு பஞ்சாலை போனஸ் இயக்கத்தை, கோவை மாவட்டக்குழு பரிசீலித்து அறிக்கை தரவேண்டுமென டி.யு. சப்-கமிட்டி பலமுறை வற்புறுத்தியபின், மாவட்டத்தில் பரிசிலனை நடைபெற்றதே தவிர அது எழுதப்படவில்லை. மதுரை கோட்ஸ் 1990ம் ஆண்டு போனஸ் ஒப்பந்தத்தை சிஐடியு மாநில நிர்வாகிகள், நிர்வாகக்குழு பரிசீலித்தது; அந்த ஒப்பந்தத்தை நமது சங்கம் ஏற்றிருக்கக் கூடாது என முடிவு செய்தோம். (தற்போது இதர சங்கங்களும், நிர்வாகமும் கூட அந்த ஒப்பந்தத்தை கைவிட முடிவு செய்துள்ளன)

3-53 முக்கியமான போராட்டங்களையும், இயக்கங்களையும்குறித்த காலத்தில் பரிசிலனை செய்வது உத்தரவாதம் செய்யப்பட வேண்டும். அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, அதற்கான தயாரிப்பிற்கு உதவவும், பரிசீலனை முடிந்தபின் அணிகளுக்குக் கொண்டு செல்லவும் மாவட்டக் குழுக்கள் முன்முயற்சி எடுக்க வேண்டும்.

அரசியல்படுத்துவது

3-54 தொழிலாளர்களுக்கு அரசியல் உணர்வூட்டும் பணிகளிலுள்ள பலஹீனம் பற்றி நாம் தொடர்ந்து சுட்டிக்காட்டி வந்துள்ளோம். தொழிலாளர்களின் அரசியல் உணர்வு மட்டத்தை உயர்த்துவதற்கான சில முயற்சிகளை நாம் மேற்கொண்டுள்ளோம். ஆனால், சில துண்டு பிரசுரங்கள்; சில பொதுவான பிரச்சார இயக்கங்கள், சில வகுப்புகள் என்ற அளவிற்கு இந்தப் பணி நின்றுவிட்டது. தமிழகத்தை பொறுத்தமட்டிலும் திராவிட தத்துவார்த்த நிலைக்கெதிரான பிரச்சாரம், மத அடிப்படைவாத கருத்துக்களுக்கு எதிரான போராட்டம், ஜாதீய சக்திகளுக்கு எதிரான இயக்கம் ஆகியவை அரசியல்படுத்துவதற்கான போராட்டத்தில் முக்கிய இடம்பெற வேண்டும். இந்த முறையில் நமது பணிகள் மிகவும் குறைந்தஅளவிலேயே நடைபெற்றுள்ளன. சில இடங்களில் துவக்கப்பட்ட சிலநடவடிக்கைகளும் தொடரப்படாமல் விடப்பட்ட அனுபவமே நமக்குள்ளது.

3-55 பிரச்சார பிரசுரங்கள் சிலவற்றைக் கொண்டுவர வேண்டு மென்ற நமது முடிவும் அமுல்படுத்தப்படாமல் போயிற்று. தொழிலாளர் களிடம் தீக்கதிர் விற்பனை போன்ற கடமைகள் கூட திட்டமிட்டு செய்யப் படவில்லை. இவை அனைத்துக்கும் மேலாக, தொழிலாளர்களிடமிருந்து கட்சிக்கு தேர்வு செய்வது என்பது திட்டமிட்டு நடத்தப்படவே இல்லை. இது கட்சியின் மிகவும் பலவீனமான அம்சமாக உள்ளது. தொழிலாளர் களின் அரசியல் உணர்வு மட்டத்தை உயர்த்துவதற்கும், கட்சியில் சேர்ப் பதற்குமான திட்டமிட்ட முயற்சிகள் மாவட்டக் குழுக்களாலும், அரங்க ஃபிராக்ஷன்களாலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஸ்தாபனம்

3-56 ''ஈ'' பாரங்கள் கொடுக்கப்பட்ட அடிப்படையிலான நமது உறுப்பினர் எண்ணிக்கை விபரங்கள் இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள் ளன. 1987-ல் 1,20,468 ஆக இருந்தது. இது, 88-ல் 1,52,489 ஆக வும், 1989-ல் 1,66,784 ஆகவும் இருந்தது. 1990ஆம் ஆண்டு பற்றிய முழு விபரங்கள் மாநில மையத்திற்கு வந்து சேரவில்லை. சிஐடியுவுடன் இணைக்கப்படாமல், சிஐடியு தோழர்கள் தலைமையில் செயல்படும் சங்கங் களில் சுமார் 20,000 பேர் இருப்பார்கள். உறுப்பினர் எண்ணிக்கையில் சிறு முன்னேற்றம் இருந்தாலும், ஒட்டுமொத்தமாக நாம் தேக்க நிலையி லேயே இருக்கிறோம். இந்த பணி பற்றி சென்னை மாநாட்டிலேயே சுட்டிக்காட்டப்பட்டது.

3-57 மாநிலத்தில் ஒட்டுமொத்தமாக எடுத்துக்கொண்டால், தொழிலாளர்களில் 25% -க்கும் குறைவானவர்களே ஏதேனும் சங்கத்தில் உறுப்பினராக இருப்பவர்கள். இவ்வாறு உறுப்பினர்களாக உள்ளவர்களில் சுமார் 15% மட்டுமே சிஐடியுவில் இருக்கிறார்கள் என்பதை கவலையோடு பார்க்க வேண்டும். இதர சங்கங்களைப் பொறுத்தமட்டிலும் தொமுச 1.5 லட்சம், ஐஎன்டியுசி 1 லட்சம், ஏஐடியுசி 1 லட்சம், ஏடிபி 1 லட்சம், டிஎன்டியுசி 75 ஆயிரம் மற்றும் தனி நபர் சங்கங்களில் சுமார் 50,000 என, உறுப்பினர் பலம் மாறுபட்டிருக்குமென மதிப்பிடலாம். ஏடிபி, எல்பி எப் பலாபலம், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி நிலைமைக்கேற்பகூடவும், குறைய வும் செய்கிறது.

5-58 உறுப்பினர் எண்ணிக்கையை உயர்த்த ஆண்டு முழுவதும் தொடர்ச்சியான முயற்சி தேவை. இதற்கும் மேலாக விசேஷ முயற்சியாக 1989ல் காலம் குறிப்பிட்டு செயல்பட முடிவு செய்தோம். உறுப்பினர் புதுப்பித்தல் என்பதுகூட முழுமையாக நடைபெறவில்லை என்பதும் சுட்டிக் காட்டப்பட்டது. அந்த முடிவுக்கேற்றவாறு உறுப்பினர் சேர்ப்பு விசேஷ இயக்கமும் மாநிலம் முழுவதும் நடைபெறவில்லை.

3-59 மாவட்ட ரீதியாக கட்சியின் விசேஷ கவனமும், நிர்ப்பந்த மும் தொழிற்சங்க அரங்கப் பணியில் தேவையாகிறது. நமது சங்கங்கள் ''ஏற்கெனவே தொழிற்சங்க இயக்கத்திற்குள் இருப்பவர்களையும் தாண்டி, தொழிலாளர்களை அணுகுவதற்கு பிரத்யேகமான முயற்சி என் பதையும் மேற்கொள்ளவில்லை'' என்றும் தொழிலாளர்களில் வேறு அரசியலை பின்பற்றுபவர்களை சங்க உறுப்பினர்களாக ஆக்குவதற்கு

பிரத்யேகமான அரசியல் அணுகுமுறை தேவை என்றும் 13-வது மாநாட்டின் அரசியல் ஸ்தாபன அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. இதை ஸ்தூலப்படுத்தி. செயல்படுத்த நாம் கவனம் செலுத்தவில்லை என்பதை ஒப்புக் கொண்டாக வேண்டும்.

3-60 நாம் வலுவான நிலைமையில் இருக்கிறோம் என்று கூறிக் கொள்ளும் அரங்கங்களில்கூட 10 முதல் 15 சதம் உறுப்பினர்கள் நம் சங்கங்களில் உள்ளனர். இது,மிகப்பெரும் பலஹீனமாகும்.கேந்திரத் தொழில்களிலும், இதர தொழில்களிலுமாக குறிப்பிட்ட துறைகளை நிர்ணயித்து, திட்டமிட்டு வேலை செய்து இன்றைய இந்த பலஹீனம் போக்கப்பட்டாக வேண்டும். மாநில மையத்தின் வழிகாட்டுதலும், தலையீடும், தொழில்வாரி சம்மேளனங்கள் அல்லது ஒருங்கிணைப்புக் குழுக்களின் முறையான செயல்பாடும்,உதவியும் இதற்கு மிக அவசியம். அதே நேரத்தில், கட்சியின் மாவட்டக் குழுவானது மாவட்ட சிஐடியு கமிட்டிகள் மூலமாக இதில் கவனம் செலுத்தாமல் பலன் கிடைக்காது.

3–61 நெருக்கடி மிக்க இன்றைய சூழ்நிலையில், ஏற்கெனவே செயல்பட்டுவரும் சங்கங்கள் மீது அதிருப்தி ஏற்பட்டு, அவற்றிலிருந்து விலகும் தொழிலாளர்களில் ஒரு பகுதியினர், சில தனி நபர்களால் தலைமை தாங்கப்படும் சங்கங்களுக்கு செல்வதை சில இடங்களில் காண்கிறோம். இந்த நிலைமை ஏன் ஏற்படுகிறது? என்பது பற்றியும், அவர்களை நம்மால் வென்றெடுக்க முடியாமல் போவது ஏன்? என்பது பற்றியும் சம்பந்தப்பட்ட மாவட்டக் குழுக்களும்,. மாநில சிஐடியு-வும் பரிசீலனை செய்ய வேண்டும்.

3-62 தொழிலாளர்களிடையே சிஐடியு–வுக்குள்ள பொதுவான செல்வாக்குக்கு ஏற்ப நமது ஸ்தாபன பலமில்லை என்பதை தொடர்ந்துசுட்டிக்காட்டி வந்துள்ளோம். நீண்டகால இடைவெளிக்கு பிறகு நடைபெற்ற கூட்டுறவு தேர்தல்கள், பல தொழிற்சாலைகளில் உறுப்பினர் பலத்திற்கு மேலாக நமக்குள்ள ஆதரவை எடுத்துக்காட்டியது. போக்குவரத்துத் துறையிலுள்ள மாநில ரீதியான கூட்டுறவு சங்கம் உட்பட பல்வேறு சங்கங்களில் நாம் வெற்றிபெற்றோம். ஒட்டுமொத்தமாக பார்த்தால், உறுப்பினர் பலம், விஸ்தரிப்பு, அரசியல்படுத்துவது போன்றவற்றில் தற்போது கட்சி கமிட்டிகளின் தலையீடு மிகக் குறைவாக இருப்பதோ அல்லது முற்றிலுமாக இல்லாமலிருப்பதோதான். இது போக்கப்பட வேண்டும்.

மாநில மையம்

3-63 சிஐடியு மாநில மையத்தை வலுப்படுத்த கவனம் செலுத்தி வந்துள்ளோம். தோழர் உமாநாத். டெல்லி மையத்திற்கு சென்று பணியாற்றும் நிலையில், தோழர் டி. கே. ரங்கராஜன், சென்னை மையத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளார். மையத்தில் பணியாற்றும் தோழர்கள் ஏ.கே பத்மநாபன், கே. வைத்தியநாதன், டி.கே. ரங்கராஜன், எஸ். சந்திரசேகர் ஆகியோருடன் தோழர்கள் டி. ஞானகிராமன், ஏ.சௌந்திரராஜன் ஆகியோரும் மையமாக செயல்படுகிறார்கள்.

3-64 மையத்தின் வேலைகளில் பொதுவான முன்னேற்றம் உண்டு. மையக் கூட்டங்கள் நடத்துவதிலும், கலந்து பேசி முடிவுகளை மேற்கொள்வதிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மாநில நிர்வாகிகள் கூட்டமும் சராசரியாக 7 வாரங்களுக்கு ஒரு முறையும், மாநில நிர்வாகக்குழு 4 மாதங்களுக்கு ஒரு முறையும் நடைபெற்றுள்ளது. இரண்டு மாநிலக்குழுக் கூட்டங்களுக்கு இடையே மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடத்துவதென்றும்யோசிக்கப்பட்டுள்ளது. இது ஒருமுறைதான் நடத்தப்பட்டுள்ளது.

3-65 மாநில சம்மேளனங்கள்-போக்குவரத்து, சர்க்கரை, கைத்தறி, பஞ்சாலை, பீடி, ஒருங்கிணைப்புக் குழுக்கள்—ஸ்தல ஸ்தாபனம், டானரி, கூட்டுறவு, கட்டுமானம், குடிநீர் வடிகால் வாரியம், டாமின், சிமெண்ட் கூட்டங்களும், மின்சாரம், இரயில்வே ஆகிய மாநில சங்க கமிட்டிகளும் நடத்துவதில் மையத்திலிருந்து கவனம் செலுத்தப்பட்டு, அவற்றின் செயல்பாடுகளில் முன்னேற்றம் காணமுடிந்துள்ளது.

மாவட்ட குழுக்கள்

3—66 மாவட்ட சிஐடியு கமிட்டிகளின் செயல்பாடுகளில் இன்னமும் முன்னேற்றம் காண வேண்டியுள்ளது மாவட்ட தொழிற்சங்க வேலைகளுக்கு வழிகாட்டும் உத்தரவாதமுள்ள மாவட்ட சிஐடியு மையங்கள் எந்த மாவட்டத்திலும் இல்லை. மாவட்ட குழுக்களை செயல்படுத்துவதில் மாநில மையம் மற்றும் மாநில நிர்வாகிகளின் கவனமும் போதுமானதாக இல்லை. மாநில நிர்வாகிகளில் மிகப் பெரும்பாலானவர்கள் வேறு பொறுப்புகளுக்குக் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியவர்களாக உள்ளதும் இதற்கு ஒரு காரணமாக உள்ளது. மாவட்டங்களுக்கு மாநிலக் குழுவின் கூடுதலான உதவியையும், வழிகாட்டுதலையும் உத்தரவாதப்படுத்த வேண்டியுள்ளது.

சங்கங்களின் செயல்பாடு

3—67 சங்கங்களின் அன்றாட செயல்பாடுகள் பலஹீனமாகவே உள்ளன. அனைத்து தொழிலாளர்களோடும் நெருக்கமான உறவை வளர்த்துக்கொண்டு நமது செயல்பாட்டை முறைப்படுத்துவதில் பெரும் குறைபாடு உள்ளது. குறுகிய வட்டத்திற்குள் மட்டும் செயல்படும் போக்கு, ஜனநாயகப்பூர்வமான செயல்பாடுகளை உத்தரவாதப்படுத்தாமலிருப்பது போன்ற பல காரணங்களால் சங்க பணிகளில் பங்கேற்கும் தீவிர ஊழியர்களின் எண்ணிக்கை பல இடங்களில் குறைந்து வருகிறது. சில வருடங்களாக ஆண்டு பேரவை நடத்தப்படாமலேயே இருக்கும் சங்கங்களும் உள்ளன. சங்க வரவு-செலவுகளை பராமரிப்பதில் கூடுதலான கவனம் தேவை.

3—68 இவ்வாறு கவனம் செலுத்தப்பட்டால் முன்னேற்றம் காண முடியும் என்பதற்கு நெய்வேலி ஓர் உதாரணமாகும். கடந்த காலங்களில் சுட்டிக்காட்டப்பட்ட பலஹீனங்களை போக்குவதற்கு மாநில மையத்தின் வழிகாட்டுதலோடு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பயனளித்துள்ளன. சங்கத்தை, ஜனநாயகபூர்வமாக செயல்படுத்துவதிலும், கூடுதலான ஊழியர்களை சங்க பணிகளில் ஈடுபடுத்துவதிலும் முன்

னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஒரு சில அரசு போக்குவரத்து கழக சங்கங்களிலும் இந்த அபிவிருத்தியைப் பார்க்கலாம். இதற்கு நேர்மாறாக, மேட்டூர் கெமிக்கல்ஸ் போன்ற சங்கங்களில் நமது செயல்பாடுகளின் பலஹீனம், சங்கத்தை பெரிதும் பலஹீனப்படுத்தியதையும் காணலாம். தொழிற் சங்கங்களை கட்சியின் ஒரு பிரிவாகவே பார்த்து, ஒரு வெகுஜன அமைப்பு என்ற முறையிலான அதன் சுயேட்சை தன்மைக்கு பாதிப்பு ஏற்படுத்தும் போக்குகளையும் பல இடங்களில் காணமுடியும். வெகுஜன அமைப்புகள் பற்றிய கட்சியின் தீர்மானத்தின் அடிப்படையில் நமது செயல்பாடுகள் உத்தரவாதம் செய்யப்பட வேண்டும்.

3—69 கட்சி மற்றும் சிஐடியு மாவட்ட குழுக்களின் தொடர்ச்சியான கண்காணிப்பும், மாநில மைய வழிகாட்டுதல் மூலமும். நமது சங்கங்களின் செயல்பாடுகளிலுள்ள பலஹீனங்களை களைய விசேஷ முயற்சி எடுக்கவேண்டும்.

மாநாடுகள்

3—70 சிஐடியுவின் மாநில மாநாட்டையும் உழைக்கும் பெண்கள் மாநாட்டையும்1989 செப்டம்பரில் நாகர்கோவிலில்சிறப்புறநடத்தினோம். அரசு போக்குவரத்து சம்மேளனம்,சர்க்கரை சம்மேளன அமைப்பு மாநாடு, இரயில்வே,மின்சார—சங்க மாநாடுகளும் இக்காலத்தில் நடத்தப்பட்டுள்ளன.

3—71 இதர துறைகளின் மாநில மாநாடுகளோடு, சிஐடியுவின் மாவட்ட மாநாடுகளையும் நடத்திட வேண்டும். அடுத்த ஆண்டிற்குள் இது நிறைவேற்றப்பட்டாக வேண்டும். அகில இந்திய சிஐடியு மாநாடும், உழைக்கும் பெண்கள் மாநாடும் கல்கத்தாவில் 1990 பிப்ரவரியில் நடைபெற்றபோது நமது மாநில பிரதிநிதிகள் முழுமையாக கலந்து கொண்டனர்.

பத்திரிக்கை பிரசுரங்கள்

3—72 ''சிஐடியு செய்தி''யின் விற்பனை மூன்றாண்டுகளில் 15,000-ஐ எட்டி,சராசரி விற்பனை அதே அளவு நீடிக்கிறது. 1991 நவம்பர் இதழ் 13,500 தான் அச்சிடப்பட்டுள்ளது. பல மாவட்டங்களில் பெயரளவிற்குதான் விற்பனை. போக்குவரத்துத் தொழிலாளி 30,000; மின்கதிர் 50,00; தொழிலரசு 1,500 என விற்பனையாகிறது.

3—73 மிகவும் கூடுதலான நிலுவைகள் காரணமாக பிரசுர வெளியீடுகள் மிகவும் குறைந்துவிட்டது. பிரச்சாரப் பிரசுரங்கள் பற்றிய முடிவும் இதனால் அமுலாகவில்லை. இந்த காலத்தில், பஞ்சாலை அரங்கப் பிரச்சனைகள் பற்றி இரண்டு பிரசுரங்கள் (25,000); சி.சி.ஏ.யு. (50,000); கைத்தறி சம்மேளனம் சார்பில் ஒரு பிரசுரம், போக்குவரத்து சம்மேளனம் சார்பில் ஊதிய ஒப்பந்தம் பற்றிய ஒரு பிரசுரம் மற்றும் புதிய பொருளாதார கொள்கை பற்றிய (சென்னை மாவட்டக்குழு வெளியிட்டது)ஒரு பிரசுரம் (30,000) வெளியிடப்பட்டது. நமது மாத வெளியீடுகளில் கூடுதல்

கவனம் செலுத்தப்பட்டால், நமது பிரச்சார இயக்கம் வலுப்பெறும் வாய்ப்பை நாம் உணர வேண்டும்.

3-74 இந்த நோக்கத்தோடு சி ஐ டி யு செய்தி, போக்குவரத்துத் தொழிலாளி, மின்கதிர் ஆகியவற்றின் 6 மாத இதழ்களை மாநில டி.யு. சப்-கமிட்டி பரிசீலனை செய்தது. அந்த பரிசீலனையின் முடிவுகள் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை. இந்த வெளியீடுகள் பற்றி தொடர்ச்சியான பரிசீலனையும், வழிகாட்டுதலும் அவசியம். விற்பனையில் முன்னேற்றம் காண்பதற்குள்ள வாய்ப்புகளை முழுமையாக பயன்படுத்த வேண்டும். தீக்கதிர், செம்மலர், மார்க்சிஸ்ட் மற்றும் கட்சி வெளியீடுகளை தொழிற்சங்க அரங்கத்தில் திட்டமிட்டு கொண்டு சென்றதாக கூற முடியாது. மிகப் பெரும் பலஹீனத்தை இதில் காணமுடியும். இது, திட்டமிட்டு களையப்படவேண்டும்.

வகுப்புகள்

3-75 மாநில டி.யு. சப்-கமிட்டியின் முடிவுக்கேற்ப தொழிற்சங்க இயக்க வரலாறு, தொழிற்சங்க அரங்க கடமைகள், விலைவாசிப் புள்ளி, கூலியின் தத்துவம் ஆகிய 4 தலைப்புகளில் அனைத்து மாவட்டங்களிலும் வகுப்புகள் நடத்த திட்டமிட்டு ஓரிரு மாவட்டங்கள் தவிர நிறைவேற்றப்பட்டது. அதேபோன்று மின் அரங்கத்திலும் மூன்று, நான்கு மாவட்டங்களை இணைத்து வகுப்புகள் நடத்தப்பட்டது. போக்குவரத்திலும் இதேபோன்று வகுப்புகள் பல மாவட்டங்களில் நடத்தப்பட்டது.

3-76 நமது தேவையை பூர்த்தி செய்ய இது போதுமானதாக இல்லாவிட்டாலும் கூட, திட்டமிட்ட முயற்சியாக இது நடைபெற்றது. கூடுதலான வகுப்புகள் நடத்தப்பட வேண்டிய அவசியம் உள்ளது. வகுப்புகளில் கலந்து கொண்டவர்களை தொடர்ந்து ஊக்குவித்து, சங்கப் பணிகளிலும் அரசியல் பணிகளிலும் ஈடுபடுத்த வேண்டியுள்ளது. அதேநேரத்தில் நடைபெற்ற வகுப்புகளின் போது, நிர்ணயிக்கப்பட்டவர்களில் ஒரு பகுதியினர் கலந்து கொள்ளாத குறைபாடு இருந்ததையும் நாம் கணக்கிலெடுக்க வேண்டும்.

டி.யு. சப்–கமிட்டி/ஃப்ராக்ஷன்கள்

3-77 மாநில தொழிற்சங்கஅரங்கத்திற்கு அரசியல்ரீதியாக வழிகாட்டுவதற்கு மாநிலக் குழுவுக்கு உதவும் முறையில் டி.யு. சப்-கமிட்டி செயல்பட

வேண்டும். கடந்த மூன்றுண்டுகளில் 9முறை டி.யு. சப்-கமிட்டியின் கூட்டம் நடைபெற்றுள்ளது. 'கடமைகள்' ஆவணம் ரிப்போர்ட் செய்வது, மாநில சிஐடியு மாநாடு தயாரிப்பு, 4 முக்கிய போராட்டப் பரிசீலனைகள், அரங்கப் பத்திரிக்கைகள் பற்றிய பரிசீலனை, வேலையின்மை எதிர்ப்பு இயக்கம், தொழிற் சங்க வகுப்புகள் ஆகியவை இந்தக் காலத்தில் மாநில டி.யு. சப்-கமிட்டியின் முக்கிய பணிகளாகும். நாகர்கோவில் மாநாடு முடிவு செய்த கடமைகளை நிறைவேற்ற தலைப்புகள் நிர்ணயிக்கப்பட்டு, விவாதத்தைத் துவக்கினேம். அதை இனிமேல் தொடர வேண்டியுள்ளது.

3—78 மாநில டி.யு. சப்-கமிட்டியின் கூட்டங்களை முறையாக நடத்திடவும், முடிவுகளை முறையாக அமுலாக்கவும் உத்தரவாதம் செய்ய வேண்டும். அதேபோல், மாவட்டத்தில் தொழிற்சங்கப் பணிகளை விஸ்தரிக்கவும், முறைப்படுத்தவும் மாவட்ட டி.யு. சப்-கமிட்டிகள் திட்டமிட வேண்டும். சென்னை மாவட்டக்குழு, மாநில செயற்குழுவின் வழிகாட்டுதலோடு இந்தப் பணியைத் துவக்கியுள்ளது. இந்தப் பணியில் மாவட்டக் குழுக்களும், மாநில செயற்குழுவும், மாநில டி.யு. சப்-கமிட்டியும் எவ்வாறு உதவுவது என்பது முடிவு செய்யப்பட வேண்டும். மேலும், மாவட்டங்களிலுள்ள தொழிற்சங்கப் பணிகள், இடைக் கமிட்டிகளின் செயல்பாட்டோடு இணைக்க வேண்டியுள்ளது. மாநில கமிட்டியின் வழிகாட்டுதலோடு, மாவட்டக் கமிட்டிகள் இதை ஸ்தூலப்படுத்த வேண்டும்.

3—79 மாநில டி.யு. சப்-கமிட்டி தவிர இரயில்வே, மின்சாரம், போக்குவரத்து அரங்கங்களில் மாநில ஃபிராக்ஷன்கள் செயல்படுகின்றன. இது தவிர மத்திய தர வர்க்க தொழிற்சங்க அரங்கங்களில் எட்டு மாநில ஃபிராக்ஷன்கள் செயல்படுகின்றன. மாநில ஃபிராக்ஷன்களின் செயல்பாடுகளில் முன்னேற்றம் உண்டு மாநில செயற்குழு உறுப்பினர்களுக்குப் பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டு அவர்கள் இந்தக் கூட்டங்களில் கலந்து கொள்கின்றனர்.

3—80 ஃபிராக்ஷன்கள், சப்-கமிட்டிகளின் செயல்பாடு, பொறுப்பு பற்றி ஒரு குறிப்பு தயாரித்து செயற்குழுவும், மாநிலக்குழுவும் விவாதித்து இறுதிப்படுத்த வேண்டுமென முடிவு செய்தது இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. இந்த முடிவை நிறைவேற்றி சப்-கமிட்டிகள், ஃபிராக்ஷன்களின் செயல்பாட்டை முறைப்படுத்த வேண்டும். அதைப்போல் சிஐடியு மற்றும் இதர மத்தியதர வர்க்க அமைப்புகள் உட்பட மாநிலத்தின் தொழிற்சங்க அரங்கப் பணிகளை ஒருங்கிணைக்க மாநில டி.யு. ஃபிராக்ஷன்

அமைக்கப்பட வேண்டும். மாநில தொழிற்சங்க அரங்கப் பணிகளையும், கூட்டு நடவடிக்கைகளையும் வலுப்படுத்த இது உதவும்.

தோழர்களே!

3-81 தொழிலாளி வர்க்கம், இதர வர்க்கங்களில் ஒன்றல்ல என்பதையும், அது நமது அடிப்படை வர்க்கம் என்பதையும் உணர்ந்து, நமது பணிகள் அமைய வேண்டுமென்று சேலம், சென்னை மாநாடுகளில் வற்புறுத்தப்பட்டது. ஆனால், இதை கவனத்தில் கொண்டு நமது தொழிற்சங்க அரங்கப் பணிகள் நிறைவேற்றப்படுவதில்லை. தொழிற்சங்கப் பணிகள், தொழிற்சங்க அரங்க முடிவுகள் அமுலாக்கம், தொழிலாளர்களிடையே கட்சியை கட்டுதல், ஊழியர்கள் ஒதுக்கீடு என அனைத்துப் பணிகளிலும் கட்சியின் அனைத்து மட்டங்களிலும் கூடுதலான கவனம் தேவைப்படுகிறது.

3-82 இந்தப் பிரச்சனைகள் மற்றும் தொழிற்சங்க அரங்க கடமைகள் பற்றி கட்சியின் மாநில செயற்குழுவும், மாநிலக்குழுவும் தனியான விவாதம் நடத்த வேண்டும். அதை 6 மாதங்களுக்குள் நடத்தி முடிப்பதை புதிய மாநிலக்குழு உத்தரவாதப்படுத்த வேண்டும். மேலும், இன்றைய சூழ்நிலைக்கேற்ப தொழிற்சங்க இயக்கம் தற்போது சந்திக்க வேண்டியுள்ள புதிய தொழில்நுட்பம், நவீனமயமாக்குதல், உற்பத்தியோடு இணைந்த போனஸ் போன்ற சில விசேஷ பிரச்சனைகளிலும் தெளிவான வழிகாட்டுதல்களை அகில இந்திய மையத்தின் உதவியோடு, நாம் உத்தரவாதப்படுத்த வேண்டியுள்ளது.

கடமைகள்

3-83 இன்றைய உடனடியான பிரச்சனைகளோடு இணைத்து, கீழ்வரும் கடமைகளை நாம் நிறைவேற்றிட வேண்டும்.

1. தொழிற்சங்க அரங்கப் பிரச்சனைகள், பணிகள் பற்றி மாநில செயற்குழுவும், மாநிலக்குழுவும் 6 மாதங்களுக்குள் தனியான விவாதம் நடத்தி, முடிவுகளை மேற்கொள்வது, அமுலாக்குவது.

2. மாநில மையப் பணிகளை மேலும் பலப்படுத்துவது, மாவட்டங்களுக்கு வழிகாட்டுதல்களை உத்தரவாதப்படுத்துவது.

3. மாவட்ட மையங்களை உருவாக்கி, செயல்பட வைப்பது.

4. தொழிற்சங்க அரங்கப் பிரச்சனைகளையும், செயல்பாடுகளையும் கட்சியின் அனைத்து மட்டங்களிலும், கட்சிக் கமிட்டிகள் அவ்வப்போது

பரிசீலனை செய்வது, தொழிற்சங்கப் பணிகளை இடைக்கமிட்டிகளின் பணிகளோடு இணைப்பது.

5. சிஐடியு உறுப்பினர் எண்ணிக்கையை உயர்த்த விசேஷ முயற்சிகள் மேற்கொள்வது, சங்கங்களின் அன்றாட செயல்பாடுகளில் முன்னேற்றம் காண்பது, ஜனநாயக பூர்வ செயல்பாட்டை உத்தரவாதப்படுத்துவது.

6. கேந்திர தொழில்களில் முன்னேற்றம் காண விசேஷ கவனம் செலுத்துவது.

7. அமைப்பு ரீதியில் திரட்டப்படாத தொழில்களில் சிஐடியு ஸ்தாபனங்களை வளர்க்க மாவட்ட ரீதியாக குறிப்பிட்ட தொழில்களை நிர்ணயித்து கவனம் செலுத்துவது.

8. ''முன்னுரிமை கடமைகளை'' நிறைவேற்ற திட்டமிடுவது.

9. தொழிற்சங்க ஒற்றுமையை வலுப்படுத்த முயல்வது; முக்கிய நகரங்களில் அனைத்து சங்க கூட்டுக் குழுக்களை நிறுவி செயல்படுத்துவது.

10. அரசியல்—தொழிற்சங்க வகுப்புகளை திட்டமிட்டு நடத்துவது; ''பிரச்சார'' பிரசுரங்கள் உட்பட கூடுதலான பிரசுரங்களை வெளியிடுவது. ''சிஐடியு செய்தி'' மற்றும் அரங்க பத்திரிக்கைகளின் விற்பனையை 50% மேலும் உயர்த்துவது.

11. வேலையின்மைக்கு எதிரான பிரச்சாரப் போராட்ட இயக்கங்களைத் தொடர்வது.

12. சமுதாயக் கொடுமைகளை எதிர்த்து தொழிற்சங்கங்கள் இயக்கம் நடத்த வழிகாட்டுவது.

13. போராட்டப் பரிசீலனைகளை தொடர்ந்து நடத்தி, கீழ் அணிகள் வரை கொண்டு செல்வது.

14. தொழிலாளர்களிடையே கட்சியைக் கட்டும் பணியை திட்டமிட்டு நிறைவேற்றுவது; சாதாரண தொழிலாளியிடமும் பிரச்சனைகளை கொண்டுசெல்வதை உத்தரவாதப்படுத்துவது.

4. விவசாய அரங்கம்

4—1 கடந்த மூன்றுண்டுகள் என்பது இந்தியா முழுவதும் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் பிரச்னையில் கூர்மையான தாக்குதல்களும், அதன் விளைவாக வலுமிக்கப் போராட்டங்களும் நடந்த காலம் ஆகும். மத்திய—மாநில அரசுகளின் தவருன கொள்கைகளின் விளைவாக இக்காலத்தில் விவசாயிகள் கடன் நிவாரணம், காவிரிநீர் தாவா பிரச்னை, கரும்பு விலை, உர விலையேற்றம் உள்ளிட்ட பல்வேறுபிரச்னைகள் முன்னுக்கு வந்தன. இப்படி முன்னுக்கு வந்த பிரச்னைகள் மீது நாம் தனியாகவும் இதர ஸ்தாபனங்களுடன் கூட்டாகவும் இயக்கம் நடத்தியுள்ளோம். அவைகளை பரிசீலிப்போம்.

கடன் நிவாரணம்

4—2 கடன் நிவாரணத்திற்காக நாம் நடத்திய மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் குறிப்பிடத்தக்க அளவு நடந்தது. ஜூன் 1990-ல் நடைபெற்ற கூட்டு இயக்கத்தில் மாநிலம் முழுவதும் 25,000-க்கும் மேற்பட்டவர்கள் நம் சார்பிலும், 5,000 பேர் சிபிஐ சங்கத்தின் சார்பிலும் கலந்து கொண்டனர். முத்துசாமி கவுண்டர் தலைமையில் உள்ள சங்கமும், செல்லமுத்து தலைமையில் இயங்கும் சங்கமும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டாலும், பெயரளவுக்கே கலந்து கொண்டன. இந்த கூட்டுப் போராட்டத்திற்கு முன்னும் பின்னும் தொடர்ச்சியான தனி இயக்கங்களும் நடத்தியுள்ளோம். மத்திய அரசு, சுமார் 500 கோடி ரூபாயும், மாநில அரசு சுமார் 50 கோடி ரூபாயும் கடன் தள்ளுபடி இக்காலத்தில் செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பாசனப் பிரச்னை

4—3 இக்காலத்தில் முன்னுக்கு வந்த இன்னொரு முக்கிய பிரச்னை காவிரி நீர் பிரச்னை ஆகும். நமது இயக்கத்தின் தளமாக உள்ள பகுதிகளில் பெரும் தாக்கத்தை உருவாக்கிய இப்பிரச்னையில் விவசாயிகள் மற்றும் தமிழகத்தின் நலன்களை பிரதிபலிக்கக்கூடிய இயக்கங்களை நாம் நடத்தியுள்ளோம். அதே நேரத்தில், இப்பிரச்னையைப் பயன்படுத்தி இனவெறியை தூண்டும் நடவடிக்கைகளுக்கு எதிராகவும் நின்று, நெளிவு-சுளிவுடன் இயக்கங்களை நடத்தியுள்ளோம். மூன்றுண்டுகளிலும் பாசனத்திற்கு காவிரி நீர் உரிய நேரத்தில் திறந்துவிடக் கோரி தனியாகவும், கூட்டாகவும் தஞ்சை, திருச்சி, தென்னூற்காடு மாவட்டங்களில் சிறப்பு மாநாடுகள், ஆர்ப்பாட்டங்கள் நடத்தியுள்ளோம். ''காவிரி நீர் தாவா'' தீர்ப்பதற்காக அமைக்கப்பட்ட கமிஷன் தமிழகத்திற்கு விஜயம் செய்தபோது காவிரிப் படுகை முழுவதும், குறிப்பாக தஞ்சையிலும் நாம் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களைத் திரட்டியதும், பிரச்னைக்கான தீர்வை வலியுறுத்தியதும் அனைத்து தரப்பினர்களின் பாராட்டுகளைப் பெற்றது.

உர விலையேற்றம்

4—4 உலக வங்கி நிபந்தனையை ஏற்று, உரத்திற்கு அளிக்கப்படும் மானியம், மத்திய காங்கிரஸ் அரசால் வெட்டப்பட்டது. அகில இந்தியாவிலும் இதனையொட்டி, எழுந்த எதிர்ப்பு போராட்டத்தின் பிரதிபலிப்பு பூரணமாக தமிழகத்தில் இல்லை.

இப்பிரச்னையில் முதலில் எதிர்ப்பு அறிக்கையுடன், மாநிலம் முழுவதும் கண்டன சுவரொட்டிகளும் அச்சடித்து ஒட்டப்பட்டது. பின்னர் தஞ்சை மாவட்டத்தில் மறியலுக்கும், இதர மாவட்டங்களில் ஆர்ப்பாட்டங்களுக்கும் அறைகூவல் விடுக்கப்பட்டது. இதற்கிடையில் ஏழை மற்றும் குறுவிவசாயிகளுக்கு உரம், பழையவிலையிலேயே கிடைக்கும் என்றும், அனைத்து விவசாயிகளுக்கும் இந்த ஆண்டு உரவிலை உயர்வு இல்லை என்றும் மத்திய அரசு அறிவித்ததைத் தொடர்ந்து தஞ்சை மறியல் என்பது ஆர்ப்பாட்டமாக மாற்றப்பட்டது. சிறு—குறு விவசாயிகளுக்கு அட்டை வழங்க கோரியும், இந்த ஆண்டு பழைய விலைக்கு உரம் விற்கக் கோரியும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றது. மாநிலம் முழுவதும் 12,000 பேர் இந்த ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டனர்.

விலை பிரச்னை

4—5 இக்காலத்தில் கரும்புக்கு விலை கிடைக்க வேண்டும் என்று தொடர்ந்து இயக்கங்கள் நடத்தியுள்ளோம். மாநில அரசின் பேச்சுவார்த்தைக் குழுவில் முதல் முதலாக நமது சங்கத்தின் சார்பில் தோழர் ஜி. வீரய்யன் கலந்து கொண்டதும், விலை நிர்ணயத்திற்கு அனைத்து சங்கங்களையும் இணைத்து ஒரே கோரிக்கை வைக்கச் செய்ததும் குறிப்பிடத்தக்கதாகும். இது தவிர, நெல்விலை குறித்து அவ்வப்பொழுது அறிக்கைகள் வெளியிட்டுள்ளோம். எனினும், இதர விளைபொருட்களின் விலை பிரச்னையில் இக்காலத்தில் நாமோ அல்லது இதர சங்கங்களோ தாக்கம் உண்டாக்கும் எந்த இயக்கத்தையும் நடத்தவில்லை.

கூலித் தொழிலாளர்களின் பிரச்னை

4—6 இக்காலத்தில் தஞ்சை, திருச்சி, தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களில் கூலிப்போராட்டங்களை நடத்தியுள்ளோம். மத்திய கூலிக்கமிஷன் வந்தபொழுது, அதன் முன் நமது சங்கத்தின் சார்பில் சாட்சியமளிக்கவும் ஏற்பாடு செய்தோம். மத்திய கூலிச் சட்டம், மற்றும் விவசாய தொழிலாளர்களுக்கு சமூகநல நடவடிக்கைகள் தேவைஎன்பதையும் வலியுறுத்திநாம் தனியாகவும், சிபிஐ சங்கத்துடன் கூட்டாகவும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தியுள்ளோம். எனினும், தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டும், மாவட்டங்களில் குறிப்பிட்ட கிராமங்களைத் தேர்ந்தெடுத்துக் கூலி இயக்கங்களை நடத்திட வேண்டும் எனும் முடிவு பெரும்பாலான மாவட்டங்களில் அமுலாக்கிட முயற்சியே இல்லை என்பது பெரும் குறைபாடு ஆகும்.

நிலத்திற்கான இயக்கம்

4-7 இக்காலத்தில் முன்னுக்கு வந்த இன்னொரு இயக்கம் நிலத்திற்கான இயக்கம் ஆகும். நிலப்பிரபுத்துவ ஒழிப்பு என்பது பிரச்சார கோஷமாக நீடிக்கும் அதே நேரத்தில் தரிசு நிலங்கள், காட்டு நிலங்கள் என்று அறிவிக்கப்பட்டு காடு வளர்ப்புக்கு எடுத்துக் கொள்ளப்படாத நிலங்கள், உபரி நிலம் ஆகியவற்றைப் பெறுவதற்கான போராட்டம் நடத்திட வேண்டும் என 1989ல் அகில இந்திய அளவில் இடதுசாரி இயக்கங்கள் அறைகூவல் விட்டிருந்தன.

4–8 தமிழகத்தில் சிபிஐயுடன் சேர்ந்து மாநிலம் முழுவதும் ''நில மீட்சி இயக்கம்'' நடத்தப்பட்டது. 10 மாவட்டங்களில் உபரி நிலங்கள் அடையாளங் காணப்பட்டது. இது ஒரு அடையாள பூர்வமான இயக்கமாகவே நடத்தப்பட்டது. எனினும் இப்பிரச்னையை தொடர்ந்து எடுத்துச் செல்ல ஒரு துவக்கமாக அமைந்தது.

4–9 நிலத்திற்காக நாம் நடத்திய போராட்டத்தில் குறிப்பிடத்தக்கது வடபாதிமங்கலத்தில், தமிழ்நாடு கரும்பு பண்ணையைக் கலைத்து விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களுக்கு விநியோகிக்க செய்தது ஆகும். 4000 ஏக்கர் நிலம் இப்படி நமது இயக்கத்தால் விநியோகிக்கப் பட்டது. தவிரவும் இந்த நிலங்களுக்கான விலை ஏக்கர் பத்தாயிரம் என்று ஆளுநர் ஆட்சியில் அறிவிக்கப்பட்டதற்கு எதிராக நாம் தொடர்ச்சியாக நடத்திய இயக்கங்களை தொடர்ந்து திமுக ஆட்சிகாலத்தில் விலைகுறைக்கப் பட்டு (நஞ்சை ஏக்கர் 3600—புஞ்சை ஏக்கர் 600) குடும்பத்துக்கு முக்கால் ஏக்கர் என்றளவில் 4800 குடும்பங்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

4–10 சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டத்தில் நிலத்திற்கான போராட்டம் நடத்தி ஒரு பகுதியில் நிலத்தைத் தக்கவைக்க முடிந்துள்ளது. இன்னும் பல்வேறு மாவட்டங்களில் இத்தகைய போராட்டங்கள் நடத்த இயலும் என்கிற நிலை உள்ளது. இதே காலத்தில் தர்மபுரி அம்மாபாளையத்தில் நாம் 700 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்த நடத்திய போராட்டம் வெற்றியடையவில்லை.

4–11 நிலத்திற்கான போராட்டம் என்பது நீண்ட போராட்டமாக, போதிய தயாரிப்புகளுடன் உறுதியாக நடத்திடுவதற்கும், வழக்குகளை சந்திக்கவும் சக்தியுடன் நடத்திட வேண்டும் என்பதை படிப்பினையாக கொண்டு தொடர்ந்து இவ்வியக்கத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளது.

4–12 இது தவிர தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பாக நடத்தப்பட்ட தொடர் வழக்கின் மூலமாக 1971ல் தி.மு.க. சர்க்காரால் அறிவிக்கப்பட்ட தரிசு நிலங்களை 1991ம் ஆண்டு திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் 2221 ஏக்கர் நிலம் கைப்பற்றியுள்ளோம். இதேபோல் 1971ல் திமுக சர்க்காரால் அறிவிக்கப்பட்டு விவசாயிகளுக்கு ஒப்படைக்கப் படாமல் உள்ள நிலங்கள் (சுமார் 30,000 ஏக்கர் நிலம்) தர்மபுரி, வடஆற்காடு, திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் கணிசமாக

இருப்பதை நடவடிக்கைக்கு கொண்டுவர இயக்கங்கள் துவங்கிட வேண்டும்.

4–13 இக்காலத்தில் நிலச்சீர்திருத்தம் குறித்து நமது மாநிலக் குழுவின் சார்பில் அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தமிழ்நாடு நிலச்சீர்திருத்த சட்டத்தில் செய்ய வேண்டிய மாற்றங்களை முன் வைத்து தமிழக சட்டமன்றத்தில் தோழர் ஜீ.வி. மூலம் ஒரு தனி நபர் மசோதாவை தாக்கல் செய்தோம். நிலச் சீர்திருத்தம் உள்ளிட்ட 12 அம்ச கோரிக்கைகளை தயாரித்து 1990ம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் 10 வரை தமிழ் நாடு முழுவதும் பிரச்சார இயக்கத்தையும் நடத்தினோம்.

குடிமனைப் பட்டாவிற்கான இயக்கம்

4-14 இக்காலத்தில் நாம் நடத்திய இயக்கங்களில் ஒரு முக்கிய மான இயக்கம் குடிமனைப் பட்டாவிற்கான இயக்கம் ஆகும். 1989-90ம் ஆண்டுகளில் இப்பிரச்சனைக்காக வட்டமாநாடுகள், மாவட்ட மாநாடுகள் ஆகியவற்றை நடத்தினோம். அச்சிடப்பட்ட மனுக்கள் தயார் செய்து மாநிலம் முழுவதும் விபரங்களை சேகரித்து 1990 மார்ச் மாதம் மாநிலம் முழுவதும் முக்கியமான கிராமங்களில் உண்ணாவிரத இயக்கத்தை நடத்தினோம்.

4-15 நாம் விபரங்களுடனும் போதிய தயாரிப்புடனும் நடத்திய தின் விளைவாக இந்த இயக்கம் கிராமப்புற மக்களிடையே பெரும் வர வேற்பை பெற்றது. தி. மு. க., அ. தி. மு. க. வைச் சார்ந்தவர்களும் ஆங் காங்கே இந்த இயக்கங்களில் பங்கு கொண்டார்கள் என்பதும், பல கிரா மங்களில் அதிகாரிகள் உண்ணாவிரதப் பந்தலுக்கே வந்து நமது கோரிக்கை களின் ஒரு பகுதியை ஏற்றுக்கொண்டனர் என்பதும் பரிசீலனையில் பார்க்க முடிந்தது. தமிழகத்தில் 1500 மையங்களில் நடைபெற்ற இந்த இயக்கம் சரியான பிரச்னையின் மீது, குறிப்பிட்ட காலத்தில், போதிய தயாரிப்பு டன் நடத்தப்பட்டால் சிறப்பான பலனை அடைய முடியும் என்பதற்கு நல்ல உதாரணமாகும்.

ஸ்தல இயக்கங்கள்.

4-16 அகில இந்திய, மாநில அறைகூவல் அடிப்படையில் தொடர்ந்து இயக்கங்கள் நடத்திவரும் பொழுதே ''ஸ்தல இயக்கங்களை'' திட்டமிட்டு நடத்த வேண்டும் என்பது கடந்த மாநாட்டில் சுட்டிக்காட் டப்பட்ட ஒரு முக்கியமான கடமை ஆகும்.

4-17 இந்த வகையில் ஸ்தல இயக்கங்களுக்கான முன்முயற்சிகள் இக்காலத்தில் பல மாவட்டங்களில் எடுக்கப்பட்டுள்ளது என்பதும் அவை உரிய பலன்களை அளித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

4–18 மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி பகுதியில் பருத்திப் பயிர் பூச்சி தாக்குதலினால் பாதிக்கப்பட்டு கடும் சேதம் ஏற்பட்ட சூழ்நிலையில் நமது முன் முயற்சியால் ஒரு வலுவான கூட்டுப் போராட்டம் நடந்ததும், வெற்றிபெற்றதும் சிறப்பான அனுபவம் ஆகும். தி.மு.க., காங்கிரஸ், அதி முக உள்ளிட்ட விவசாயப் பகுதியினர் 5000க்கு மேற்பட்டவர்கள் நாம்

நடத்திய சிறப்பு மாநாட்டில் பங்கு கொண்டதும், 56 லட்ச ரூபாய்க்கு மேல் அழிந்த பயிர்களுக்கு நஷ்டஈடு பெற முடிந்ததும் இப்போராட்டத்தின் விளைவுகளாகும். தமிழ்நாட்டில் பயிர்பாதிப்புக்கு நஷ்டஈடு பெற முடிந்ததும் இப்போராட்டத்தின் விளைவுகளாகும். தமிழ்நாட்டில் பயிர் பாதிப்புக்கு நஷ்டஈடு என்பது முதன்முதலாக இந்த போராட்டத்தின் மூலம்தான் கிடைத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

4-19 இதேபோல் பாசனப் பிரச்னையில் மதுரை, திருச்சி, கோவை மாவட்டங்களிலும், குச்சிக் கிழங்குக்கு விலைப் பிரச்னையில் சேலம் மாவட்டத்திலும், மலைவாழ் மக்களின் பிரச்னைகளில் தென்ஆற்காடு மாவட்டத்திலும் நாம் நடத்திய ஸ்தல இயக்கங்கள் சில ஆயிரம் விவசாயிகள் கலந்துகொள்ளும் இயக்கங்களாக அமைந்தது.

4-20 இந்த அனுபவங்களை கணக்கில்கொண்டு ஸ்தல இயக்கங்களை தீவிரப்படுத்துவதும், போராட்டங்களுக்குப் பின்னர் தொடர்ச்சியாக அந்த மக்களிடம் தொடர்புகொண்டு ஸ்தாபனப்படுத்தவும் எதிர் காலத்தில் கவனம் செலுத்திட வேண்டும்.

கரும்பு விவசாயிகள் சங்கம்

4-21 இக்காலத்தில் நாம் தொடர்ந்து எடுத்த முயற்சிகளின் விளைவாக கடந்த மாநாடு காலத்தில் ஆரம்ப நிலையில் இருந்த நமது 'தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் அமைப்பு' தமிழகம் முழுவதும் பல ஆலைகளில் செயல்படும் சங்கமாக மாறியுள்ளது.

4-22 இதன் விளைவாக கடந்த ஆண்டு விலை நிர்ணயத்திற்கான தமிழக அரசு நடத்திய பேச்சு வார்த்தைகளிலும், ஆலைமட்ட போராட்டங்களிலும் நாம் முக்கிய பங்கு வகிக்க முடிந்தது.

4-23 தென்ஆற்காடு, பாண்டிச்சேரி ஆகிய பகுதிகளில் ஆலை மட்ட அமைப்புகளில் பிரதான அமைப்பாக நமது சங்கம் வளர்ந்திருப்பதும், கட்சி வித்தியாசம் இல்லாமல் பல்வேறு பகுதியினர் நமது அமைப்பில் இணைந்து செயல்படுவதும் சிறப்பு அம்சமாகும்.

4-24 கடந்த இரண்டாண்டுகளில் நமது முயற்சியால் விலைமற்றும் ஆலைமட்ட பிரச்னைகளை வைத்து சில ஆயிரம் விவசாயிகள் கலந்து கொள்ளும் ஆர்ப்பாட்டங்கள், கரும்பு வெட்டு நிறுத்தம் ஆகிய இயக்கங்களை நடத்தி பிரதிபலிப்பை உருவாக்க முடிந்துள்ளது.

4-25 இன்னும் பலவீனமாகஉள்ள ஆலைகளில் மாவட்ட குழுக்கள் விசேஷ கவனம் செலுத்துவதும் பொது அம்சமாக உள்ள இந்த இயக்கத்தை சிறப்பான முறையில் பயன்படுத்திட வழிவகை காண்பதும் அவசியம்.

மலைவாழ் மக்கள் ஸ்தாபனம்

4-26 மலைவாழ் மக்கள் பிரச்னையில் குறிப்பிட்ட கவனம் செலுத்தி தனி ஸ்தாபனம் காணவேண்டும் என்பது கடந்த மாநாடு சுட்டிக்காட்டிய

கடமையாகும். இப்பகுதி மக்களை நம் பக்கம் அணிதிரட்டுவதன் முக்கியத்துவம் 13வது அகில இந்திய காங்கிரசிலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

4—27 தமிழகத்தில் சுமார் 20 மலைகளில் 10 லட்சத்திற்கு மேல் உள்ள இம்மக்களை அணிதிரட்டி ஸ்தாபனமாக்க விசேஷ முயற்சிகள் இக்காலத்தில் திட்டமிட்டு எடுக்கப்பட்டது. இவர்களின் பிரச்னைகள், கோரிக்கைகள் பற்றிமாநிலக் குழு விவாதித்து ஒரு கோரிக்கை சாசனம் தயாரிக்கப்பட்டது. இப்பகுதி மக்கள் மத்தியில் இக்கோரிக்கை சாசனம் பிரச்சாரம் செய்யப்பட்டதுடன் இன்று 10 மலைகளில் தமது ஸ்தாபனம் செயல்படத்துவங்கியுள்ளது. இங்கு மலைவாரியான மாநாடுகளை நடத்தியுள்ளோம். மலைவாழ்மக்களுக்கான தனியான மாநில அமைப்பையும் அமைத்து மாநில மாநாட்டை விரைவில் நடத்த உள்ளோம்.

உழவன் உரிமை, பிரசுரங்கள்

4-28 கடுமையான பிரச்னைகளுக்கிடையிலும் ''உழவன் உரிமை'' மாத இதழைத் தொடர்ந்து நடத்தி வருகிறோம். 5000 பிரதிகள் விற்பனை என்பது தொடர்கிறது. அமைப்பு, உள்ளடக்கம் ஆகியவற்றில் ஓரளவு முன்னேற்றம் உண்டு. சமீப காலத்தில் மாவட்டத்தில் தமது ஊழியர்கள் சந்திக்கும் விவசாயப் பிரச்னைகள் பற்றிய கட்டுரைகள் வருகிறது. இது விவசாயப் பிரச்னைகளை நமது கண்ணோட்டத்தில் அலசும் பத்திரிகையாக வளர்க்கப்பட்டு விற்பனையையும் அதிகப்படுத்த விசேஷ முயற்சிகள் தேவை.

4-29 இக்காலத்தில் தமிழ்நாட்டு விவசாயிகளின் முன்னுள்ள கோரிக்கைகள் பிரசுரம் 40,000 வெளியிட்டோம்.

''நிலமீட்சி'' சம்பந்தமான பிரசுரம் 20,000 அச்சடித்து விநியோகித்துள்ளோம்.

விழுப்புரம் மாநாட்டை ஒட்டி உழவன் உரிமை ''சிறப்பு மலர்'' தயாரிக்கப்பட்டு 7000 பிரதிகள் அச்சடிக்கப்பட்டு விற்கப்பட்டது.

ஊழியர் பயிற்சி

4-30 நமது கட்சியின் விவசாய அரங்கக் கடமைகளை ஊழியர்களுக்கு போதிக்கப்படாமல் இருப்பதும், ஊழியர்கள் பயிற்சிக்கு முன்னுரிமை கொடுக்காமல் இருப்பதும் பெரும் பலவீனமாகும் என்று 13வது அகில இந்திய மாநாட்டின் அரசியல் ஸ்தாபன அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

4-31 இக்காலத்தில் இந்த வகையில் திட்டமிட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளது. விவசாய அரங்கில் நமது கடமைகள், தமிழக விவசாயிகள் இயக்க வரலாறு, கிராமப்புற மக்கள் சம்பந்தமான சட்டங்கள் நமது அணுகுமுறை ஆகிய மூன்று தலைப்புகளில் வகுப்பு குறிப்புகள் தயாரிக்கப்பட்டு மாநில மையத்தில் விவாதித்து இறுதிப்படுத்தப்பட்டது.

4-32 இந்த அடிப்படையில் 7மாவட்டங்களில் 3 நாள் வகுப்புகள் மாநில மையத்தால் நடத்தப்பட்டது. சேலம், திருச்சி, கீழ்தஞ்சை,

மேலத்தஞ்சை, செங்கல்பட்டு, திருநெல்வேலி, காமராசர், ஆகிய மாவட்டங்களில் நடைபெற்ற இந்த வகுப்புகளில் மொத்தம் 800 தோழர்கள் கலந்து கொண்டனர். பலனுள்ளதாகவும் அமைந்தது. இது தவிர சென்னை, திண்டுக்கல் அண்ணா ஆகிய மாவட்டங்களில் இவ்வரங்கில் நமது கடமைகள் மற்றும் ஸ்தாபனம் சம்பந்தமான ஒரு நாள் வகுப்புகளும் நடைபெற்றுள்ளன.

4-33 இதனைத் தொடர்ந்து நடத்த முடியாமல் தேர்தல்கள் மற்றும் இதர பணிகள் குறுக்கிட்டன. எனினும் 1992 மே மாதத்திற்குள் இதர மாவட்ட வகுப்புகளை நடத்தி முடித்து—மாநில அளவில் ஊழியர் பயிற்சி முகாம் 1992 ஜூன் மாதத்தில் நடத்துவது என திட்டமிடப்பட்டுள்ளது.

பிரச்னைகளைப் பற்றி ஸ்தூலமான ஆய்வு

4-34 உற்பத்தி முறை, விவசாயத்தில் முதலாளித்துவம் உள்ளிட்ட அடிப்படைப் பிரச்னைகளிலும், மாவட்ட ரீதியாக விவசாயிகளுக்கு முன்னுள்ள பிரதான பிரச்னைகள் குறித்தும் ஆய்வு நடத்தப்பட வேண்டும் என்பது கடந்த மாநில மாநாட்டின் ''கடமைகள்'' பகுதியில் சுட்டிக் காட்டப்பட்டது.

4-35 இதனடிப்படையில் நமது சங்கம் சார்பில் ஒரு குழு அமைக்கப்பட்டு கேள்வித்தாள் ஒன்று தயாரித்து மாவட்டங்களுக்கு இந்த ஆண்டு துவக்கத்தில் அனுப்பப்பட்டுள்ளது. இவை குறித்து மாவட்டங்களில் இருந்து ஆறுமாத காலத்தில் விபரம்பெற்று மாநில அளவில் இப்பிரச்னைகள் குறித்து விவரமான பரிசீலனை அறிக்கை தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சி.ஐ டி.யு. உதவி

4-36 இந்தியாவிலேயே விவசாய அரங்கத்திற்கு தொழிலாளர்களின் உதவி என்பது நமது மாநிலத்தில் மட்டுமே அமுலாகிறது என்பதை நாம் அறிவோம். வருடா வருடம் இப்படி அளிக்கப்படுகிற நிதி உதவி விவசாய அரங்கப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல ஒரு முக்கிய நிதி ஆதாரமாக திகழ்கிறது. இந்த நிதியின் மூலம் மாநில மையத்தை தொடர்ந்து செயல்படுத்தவும், வடஆற்காடு, புதுக்கோட்டை, தர்மபுரி, முகவை ஆகிய மாவட்டங்களில் மாவட்ட மைய ஊழியர்கள் அலவன்ஸும் வழங்கப்படுகிறது. சி.ஐ.டி.யு செய்கிற உதவி என்பது வெறும் வரவு - செலவு பிரச்னை அல்ல. தொழிலாளி—விவசாயி ஒற்றுமையை கட்டும் முயற்சியில் நல்ல துவக்கம். இந்த உதவியின் முக்கியத்துவத்தை விவசாயிகள் உணரச் செய்வது, தொழிலாளர் இயக்கத்துக்கு ஆதரவாக அவர்களை திரட்ட உத்வேகம் அளிக்கும்.

ஸ்தாபனம்

உறுப்பினர் எண்ணிக்கை

4-37 கடந்த மாநாட்டின்போது வி.ச.,வி.தொ.ச.உறுப்பினர்கள் இரண்டும் சேர்ந்து 2 லட்சத்து 62 ஆயிரமாக 1988ல் இருந்தது. 1990ம்

வருடம் இந்த எண்ணிக்கை 3 லட்சத்து 50 ஆயிரமாக உயர்ந்துள்ளது. 1991-ல் (இந்த வருடத்திற்காக) 5 லட்சம் உறுப்பினர்கள் சேர்ப்பது என திட்டமிடப்பட்டுள்ளது. இரண்டாண்டுகளில் சுமார் 90,000 உறுப்பினர் எண்ணிக்கை கூடியுள்ளது. (பட்டியல் தனியாக இணைக்கப்பட்டுள்ளது.)

4-38. கீழ்த்தஞ்சை உறுப்பினர் எண்ணிக்கையில் ஒரு தேக்கம் இருப்பதாக கடந்த மாநாட்டில் சுட்டிக்காட்டியிருந்தோம். கடந்த ஆண்டுகளில் எடுக்கப்பட்ட தொடர் முயற்சியின் விளைவாக ஓரளவுமுன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. வி.ச., வி.தொ ச. இரண்டும்சேர்ந்து 70,000ஆக இருந்த உறுப்பினர்எண்ணிக்கை இன்று சுமார் 90,000 என்ற அளவுக்கு வந்திருக்கிறது. எனினும் விவசாயத தொழிலாளர்கள் பகுதியிலே மட்டும் உள்ள நமது இயக்கத்தை இதர பகுதிகளுக்கும் எடுத்துச் செல்ல வேண்டும் என்கிற முக்கியமான பிரச்னையில் குறிப்பிடத்தக்க மாற்றம் இல்லை.

4-39 இதேபோல் கடந்த மாநாட்டு காலத்தில் தேக்கநிலை என்று சுட்டிக்காட்டப்பட்ட தெ.ஆற்காடு, காட்டுமன்னார்குடி பகுதியில் தொடர்ந்து முயற்சிகள் எடுக்கப்பட்டும் குறிப்பிடத்தக்க மாற்றம் இல்லை.

4-40 இக்காலத்தில் திருச்சி, மதுரை, தர்மபுரி, குமரி, பெரியார் ஆகிய மாவட்டங்களில் உறுப்பினர் எண்ணிக்கையில் முன்னேற்றம் உண்டு.

4-41 குமரி மாவட்டத்தில்சக்திக்கேற்ற வளர்ச்சியில்லை என்பதும், கோவை மாவட்டம் போன்ற முக்கியமான மாவட்டத்தில் போதுமான முயற்சிகளே இல்லை என்பதும் பெரும் பலவீனம். இதர மாவட்டங்களில் சிறிய அளவு வளர்ச்சியே காண முடிகிறது.

4-42 உறுப்பினர் சேர்க்கப்பட்ட கிராமங்களில் கிளை அமைத்து அதனை தொடர்ச்சியாக செயல்படுத்த வேண்டும் என்கிற கடமை நிறைவேற்றப்படாமலேயே உள்ளது. ஆகவே கட்சி முழுவதும் இறங்கி உறுப்பினர் சேர்ப்பு நடத்துவது, பின்னர் அடுத்த வருடம்தான் செல்வது என்பது கணிசமான கிராமங்களின் நிலைமையாக நீடிக்கிறது.

மாநில உபகுழு

4-43 ஆறு மாதத்திற்கு ஒரு முறை 'மாநில உப குழு தொடர்ந்து கூடியுள்ளது. ஊழியர் பயிற்சி, கரும்பு விவசாயிகள் சங்கம், மலைவாழ் மக்கள் ஸ்தாபனம், கோரிக்கை சாசனம் இறுதி செய்தல், ஸ்தாபன பலவீனங்களை பரிசீலித்தல் ஆகிய பிரச்னைகள் விவாதிக்கப்பட்டு வழிகாட்டப்பட்டுள்ளது.

மாநில மையம்

4-44 மாநில மைய செயல்பாட்டில் இக்காலத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. 15 தினங்களுக்கு ஒரு முறை கூடுவது, மாவட்டங்களுடன் தொடர்ச்சியான தொடர்புகொள்வது, தனி அலுவலகத்தை தொடர்ந்து செயல்படுத்துவது, அகில இந்திய கமிட்டிக்கு தொடர்ச்சியாக ரிப்போர்ட்டுகள் அனுப்புவது, வகுப்புக்கான குறிப்புகள் இறுதி செய்வது, பிரச்னைகளை பற்றி கூட்டாக விவாதித்து வழிகாட்டுதல்,

மாவட்ட குழுக்களுக்கு சென்று தொடர்ந்து உதவுதல், உழவன் உரிமை பணிகளின் முன்னேற்றம் ஆகியவை இக்காலத்தில் குறிப்பிட்டு கூறவேண்டிய முன்னேற்றங்கள் ஆகும். வளர்ந்து வரும் தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் வண்ணம் இதில் மேலும் அபிவிருத்தி காணல் அவசியம்.

மாநிலக்குழு

4-45 இக்காலத்தில் ஸ்தாபனத்துறையில் ஏற்பட்ட இன்னொரு முன்னேற்றம் மாநிலக்குழு 3 மாதங்களுக்கு ஒரு முறை தொடர்ச்சியாகக் கூடுவதும், எழுத்து மூலம்அறிக்கை வைத்து விவாதிப்பது என்பதும் ஆகும். இக்கூட்டங்களில் 90 சதமான உறுப்பினர்கள் பங்கு கொள்வதும் தொடர்ந்து நடைபெறுகிறது. இடைக்காலத்தில் தேவைப்படும் பிரச்னைகளில் மாநில நிர்வாகிகள் கூட்டம், மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நடத்தப்படுவதும் நடைபெறுகிறது.

4-46 ஆனால் இதே காலத்தில் விவசாயத் தொழிலாளர் சங்க மாநிலக்குழு கூட்டங்களை தொடர்ச்சியாக நடத்துவதில் தொய்வு ஏற்பட்டுள்ளது கவனிக்கப்படவேண்டிய பலவீனம் ஆகும். மாநில மட்டத்தில் இதற்கென ஊழியர் இன்மை, உறுப்பினர்கள் பங்கேற்பதில் உள்ள பலவீனம் ஆகியவை காரணமாக 6 மாதங்களுக்கு ஒரு முறை இக்கூட்டங்கள் 60 சதமான பங்கேற்புடன் நடைபெறுகிறது என்பதே இன்றைய நிலை.

மாவட்ட குழுக்கள் செயல்பாடு

4-47 மாவட்டக்குழு கூட்டங்கள் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கூடுவது, குறிப்பிடத்தக்க அளவுக்கு உறுப்பினர்கள்பங்குகொள்வதில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பது இக்காலத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் ஆகும். மாநில மைய தோழர்கள் இக்கூட்டங்களில் தொடர்ந்து கலந்து கொள்வதும் குறிப்பிடத்தக்கது.

4-48 திருச்சி, கி. தஞ்சை, மதுரை, தெ.ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் விவசாயத் தொழிலாளர்களுக்கென தனி கமிட்டி அமைத்துள்ளோம். எனினும் போதுமான ஊழியர்கள் இல்லாத நிலையில் கி. தஞ்சை தவிர இதர மாவட்டங்களில் தனியான வி.தொ.ச. மாவட்ட குழு செயல்பாட்டில் தேக்கம் உள்ளது. அநேகமாக கூட்டுக் கூட்டங்களாக நடத்தப்படுவது எனும் நிலையே உள்ளது.

4-49 மாவட்ட குழுக்கள் தொடர்ச்சியாக கூடினாலும், வலுவான மாவட்ட மையம் அமைக்கப்படாமலும், தொடர்ச்சியான செயல்பாடில்லாமையாலும் மாவட்டகுழுக்களில் எடுக்கப்படும்முடிவுகளை அமுலாக்க உத்தரவாதம் இல்லாத நிலை ஏற்படுகிறது. கி.தஞ்சை, திருச்சி தவிர மற்ற மாவட்டங்களில் மாவட்ட மையம் செயல்படுத்தப்படுவதில்லை அல்லது பெயரளவுக்கே உள்ளது என்பது இன்று ஸ்தாபனத்துறையில் பிரதான பலவீனமாக உள்ளது. இதில் பெருத்த முன்னேற்றம் காண்பதும், குறைந்தபட்சம் இரண்டு முழுநேர ஊழியர்களைக் கொண்டு மாவட்ட

மையங்கள் அமைக்கப்படுவதும் இன்று நம் முன்னுள்ள பிரதான கடமை யாக ஆகிறது.

வட்ட குழுக்கள்

4-50 தமிழகத்தில் உள்ள 170க்கு மேற்பட்ட தாலுகாக்களில் சுமார் 100 வட்டங்களில் நமக்கு இயக்கம் உள்ளது. இதில் சுமார் 50 வட்டங்களில் ஓரளவு குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் (5000 முதல் 10,000) உறுப்பினர் எண்ணிக்கையும், கிராமத் தொடர்புகளும் உள்ளன. இந்த வட்டங்களைத் தேர்ந்தெடுத்து இங்கு செயல்படக்கூடிய வட்ட குழுக்களையும், பொருத்தமான ஊழியர்களையும் நியமிப்பது உடனடியான முக்கியத்துவம் பெறுகிறது.

4-51 தீர்மானிக்கப்படுகிற அனைத்து வேலைகளுக்கும், களத்தில் ஈடு கொடுக்க வேண்டிய வட்ட அமைப்புகள் உறுதிப்படுத்தப்படாமல் கிளைகளை இயக்குதல் என்பதோ, ஜனநாயகபூர்வமான செயல்பாடு என்பதோ சாத்தியம் இல்லை.

4-52 ஆகவே வட்ட குழுக்களை தொடர்ந்துசெயல்பட வைக்கவும், குறிப்பிட்ட 50வட்டங்களை தேர்ந்தெடுத்து முன்னுரிமை கொடுத்து செயல்படுத்தவும் வருங்காலத்தில் பிரதான கடமையாக்கப்பட வேண்டும். ஒட்டு மொத்தமாக இவ்வரங்கப் பணிகளை பரிசீலித்தால்,

(அ) தொடர்ந்து கடுமையான முயற்சிகள் மாநில மட்டத்தில் எடுக்கப்பட்டு மாநில மையம், மாநிலக்குழு செயல்பாடுகளில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதைக் காணமுடியும்.

(ஆ) பிரச்னைகளில் தலையிடுதலிலும், இயக்கங்கள் நடத்துவது, ஸ்தலப் பிரச்னைகளை எடுத்து இயக்கம் நடத்துவது ஆகியவற்றில் முன்னேற்றம் உண்டு என்பதையும் காணமுடியும்.

4-53 எனினும் இன்று தமிழகத்தில் உள்ள ஏழை விவசாயிகள், விவசாயத் தொழிலாளர் எண்ணிக்கை சுமார் ஒண்ணேகால் கோடி என்பதை கணக்கில் கொண்டால் நாம் எவ்வளவு சிறிய இயக்கமாக இருக்கிறோம் என்பதை உணர முடியும்.

4-54 விவசாயத் தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள் ஆகியோரை மையமாகக் கொண்டு மத்திய விவசாயிகள், ஓரளவு பணக்கார விவசாயிகள் ஆகியோரை அணிதிரட்டி கிராமப்புறத்தில் வலுவான இயக்கம் கட்டப்படாமல் தமிழக அரசியல் பலாபலன் மாற்றம் என்பது சாத்தியம் இல்லை என்பதை நாமறிவோம்.

4-55 குறிப்பாக இன்று கிராமப்புற மக்களில் 3ல் ஒரு பகுதியினராக இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்களைத் திரட்டுவதில் நமக்குள்ள பெரும்பலவீனம் முறியடிக்கப்படாமல் வர்க்க பலாபலனில் மாற்றம் சாத்தியமே அல்ல. கூலிப்பிரச்னைக்கான இயக்கங்களை திட்டமிட்டு நடத்துவது, அவர்களின் ஸ்தலத் தேவைகளுக்கான கோரிக்கைகள்மீது இயக்கம் நடத்துவது என்பதில் மாவட்ட, வட்ட குழுக்கள் விசேஷ கவனம் எடுக்க

வேண்டியுள்ளது. குறிப்பாக ஜாதீய ஒடுக்குமுறைகளுக்கு எதிராக இப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள உணர்வுக்கு சரியான வடிவம் கொடுத்து போராடுவதும், இப்பகுதி மக்களை ஜனநாயகப் போராட்ட அலைக்கு ஈர்ப்பதும் நம்முன்னுள்ள பிரதான கடமை ஆகும். இத்துறையில் நமது பலவீனத்துக்கு ஊழியரின்மை, ஸ்தாபன ஏற்பாடின்மை ஆகியவைகள் காரணம் என்றாலும் அதுவே முழுமையான காரணம் அல்ல. நமது அணிகள் இக்கடமை பற்றிய உணர்வு குறித்த பலவீனமே பிரதான காரணமாகும். கிராமப்புற மக்களை திரட்டுவதில் நமக்குள்ள இன்னொரு முக்கியமான பலவீனம் கிராமப்புற பெண்கள் சம்பந்தமான பிரச்னைகளில் நமது தலையீடின்மை ஆகும். குறிப்பாக இன்று தமிழகம் முழுவதும் பெண்கள் கூலி என்பது மிகவும் மோசமாக இருக்கிற சூழலில் இக் கடமைக்கு விசேஷ முக்கியத்துவம் ஏற்படுகிறது. கூலி உயர்வுக்கான இயக்கத்தில் பெண் தொழிலாளர்கள் கூலிக்கு முக்கியத்துவம் அளித்தல், குழந்தைகள் காப்பகம், பிரசவகால சகாயம், கூட்டுப்பட்டா போன்ற பெண்களின் விசேஷமான பிரச்சனைகளின் மீது கவனம் செலுத்தி இயக்கம் நடத்துவது அவசியம். ஸ்தாபனத்துறையில் அனைத்து மட்டத்திலும் பெண் தோழர்களை இணைத்து செயல்பட உரிய நடவடிக்கைகளை மாநில மையம் முன்முயற்சி எடுத்து செய்ய வேண்டியுள்ளது.

4-56 நாம் தொடர்ச்சியான தனி இயக்கங்களும் ஓரளவு மாநில அளவில் கூட்டு இயக்கங்களும் நடத்தியுள்ளோம். எனினும் கிராமப்புற மக்களை பெருமளவு திரட்டி போராட்டத்தில் ஈடுபடுத்த முக்கியமான ஆயுதமான கூட்டுப் போராட்டத்தில் நாம் போதிய அளவு கவனம் செலுத்துவதில்லை. நமது சங்கம், சி.பி.ஐ. சங்கம் தவிர மாநில அளவில் வேறு சங்கங்கள் இல்லை என்பது உண்மையே. எனினும், நாயுடு சங்கம் போன்ற சங்கங்களால் திரட்டப்பட்டு சங்க உணர்வு பெற்ற விவசாயிகள் இன்று ஒரு அமைப்பாக இல்லாமல் நிற்கின்றனர். இந்த பகுதிகளில் விசேஷ கவனம் எடுத்து ஏதாவது ஒரு வகையில் கூட்டு இயக்கங்களை உத்தரவாதப்படுத்துவதன் மூலமே இப்பகுதியினரை வென்றெடுக்க முடியும்.

4-57 இந்த மிக முக்கியமான அரங்கத்தை கிராமப்புறத்தில் உள்ள வட்ட, ஒன்றியக் குழுக்களும், கிராமப்புற கிளைகளும் தங்களது பிரதானமான அரங்கமாகக் கொண்டு செயல்பட்டால்தான் மாற்றம் காணமுடியும் இதற்கான முயற்சிகளை செய்துகொண்டே கீழ்க்கண்ட உடனடி கடமைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

(1) மாநில மைய செயல்பாட்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை உத்தரவாதப்படுத்துவது. விவசாய தொழிலாளர்களுக்கான மாநில அமைப்புக்கு பொருத்தமான ஊழியரை இணைத்து வலுப்படுத்துவது.

(2) மாவட்டத்தில் குறைந்தபட்சம் இரண்டு ஊழியர்கள் என்பதையும் தேர்வு செய்யப்பட்ட 50 வட்டக் குழுக்களுக்கு, குழுவுக்கு ஒரு ஊழியர் என்பதையும் உத்தரவாதப்படுத்துவது, மாவட்ட மைய செயல்பாட்டை அனைத்து மாவட்டங்களிலும் உருவாக்குவதை பிரதான பணியாக கொள்வது.

(3) உழவன் உரிமை தரத்திலும், விற்பனையிலும் பெரும் அபி விருத்தி காண்பது.

(4) மலைவாழ் மக்கள் ஸ்தாபனத்தை கெட்டிப்படுத்தி வளர்ப்பது.

(5) கரும்பு விவசாயிகள் மத்தியில் இன்று ஏற்பட்டுள்ள ஸ்தாபனத்தை விஸ்தரிப்பது, கெட்டிப்படுத்துவது.

(6) ஊழியர் பயிற்சியை தொடருவது, மாநில ரீதியான பயிற்சியை நடத்துவது.

(7) கிராமப்புற பெண்கள்-குறிப்பாக விவசாய பெண் தொழிலாளர்- கோரிக்கைகள் மீது விசேஷ கவனம் செலுத்துதல், ஸ்தாபனத் துறையில் பெண் தோழர்களை இணைத்து செயல்படுத்துதல்.

(8) ஸ்தல இயக்கங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை உறுதிப்படுத்தி, விஸ்தரிப்பதுடன், இப்பிரச்னைகளில் கூட்டு இயக்கங்களுக்கும் விசேஷ கவனம் செலுத்துவது.

(9) ஸ்தூலமான பிரச்னைகள் சம்பந்தமான ஆய்வை தொடர்ந்து நடத்தி 6 மாதகாலத்திற்குள் இறுதிப்படுத்துவதுடன், இவ்வரங்கில் இன்றுள்ள நிலையிலிருந்து பெரும் மாற்றம் காண செய்ய வேண்டியது குறித்து புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் மாநிலக்குழு விசேஷமான பரிசீலனையை விரைவில் நடத்துவது.

5. வாலிபர் அரங்கம்

5—1. கடந்த மூன்றுண்டுகளில் வாலிபர் அரங்கத்தில் உறுப்பினர்கள் எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது; செயல்பாட்டிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

வருடம்	உறுப்பினர்கள்	கிளைகள்	இடை. கமிட்டிகள்	இளைஞர் முழக்கம்	சென்ற ஆண்டை விட அதிகம்
1988	1,73,377	3,392	130	13,000	29.242
1989	2,38,996	4,191	198	15,000	65,619
1990	2,89,226	4,836	281	15,000	50,230
1991	இன்னும் முடியவில்லை			15,000	

5-2 தமிழகத்தின் மொத்த இளைஞர்கள் 1990 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 2,14,42,538; இதில் நாம் சேர்த்தது 2,89,195 மட்டுமே. அதாவது, தமிழக இளைஞர்களில் 1.35 சதவிகிதத்தினரை மட்டுமே வாலிபர் சங்கத்தில் திரட்டியுள்ளோம்.

5-3 மற்ற கட்சிகளின் பின்னுல் உள்ள வாலிபர்கள், எந்த கட்சியையும் சாராத வாலிபர்கள், சினிமா ரசிகர் மன்றங்களில் உள்ளவர்கள் போன்ற பல்வேறு உணர்வுள்ள வாலிபர்களை திரட்ட அதற்கேற்ற அணுகுமுறையை உருவாக்க வேண்டும்.

முக்கிய பணிகள்

5-4 வேலையின்மைக்கு எதிராக நடத்திய இயக்கங்கள் சிசிஏயு உட்பட தேசிய ஒற்றுமை, ஒருமைப்பாடு காக்க நடத்தப்பட்ட இயக்கங்கள்- குறிப்பாக மனித சங்கிலி, ஜோதி ஓட்டம் முதலியன. ஜனநாயகம் காக்க 'பாரத் பந்த்', இரயில் மறியல், ஏகாதிபத்திய எதிர்ப்பு ஊர்வலங்கள், இராக் பிரச்னையில் ஊர்வலங்கள், இராக்கிற்கு சுமார் ரூ. 3,00,000 பெறுமான மருந்து மற்றும் குழந்தை உணவுகள் சேகரித்துக் கொடுத்தது, மக்கள் பிரச்னையில் அரிசி கேட்டு மறியல், புதிய தொழிற் கொள்கைக்கான ஆர்ப்பாட்டம், மருத்துவமனை சீர்கேடுகளை கண்டித்து நடத்திய இயக்கம்—இப்படி பல இயக்கங்களை நடத்தினுலும் பெரிய அளவு மக்களை கவ்விப் பிடித்த இயக்கமென்பது 1991, அக்டோபர் 23ல் நடந்த பஸ் கட்டண உயர்வு எதிர்ப்பு மறியல், குறுகிய இடைவெளியில் 10,000க்கும் மேற்பட்டோர் சிறை சென்றனர். சென்னையிலும், வேறு சில இடங்களிலும் கடுமையான போலீஸ் தாக்குதல்களை சந்தித்தனர். இவ்வியக்கம், மக்களை விரைவில் எட்டியது, ஈர்த்தது. ஆசிரியர், அரசு ஊழியர் போராட்டத்தின் போது எட்டு நாள் அவகாசத்தில் 8,000 பேரை மறியலில் ஈடுபடுத்தியது அப்பகுதியினர் மத்தியில் வரவேற்பை பெற்றது. இராக் போராட்டத்தின் போது நடத்திய இயக்கங்களும், செய்த உதவியும் சிறு

பான்மையோர் மத்தியில் செல்ல உதவியது. வகுப்புவாதத்தை எதிர்த்து நடத்திய இயக்கங்களும், பொதுவான வரவேற்பை பெற்றன.

பன்முக, சமூக, கலாச்சார நடவடிக்கைகள்

5-5 சென்னை, செங்கை, திருச்சி, கோவை, வடஆற்காடு, தஞ்சாவூர், தென்ஆறகாடு போன்ற இடங்களில் 'இரத்த தான முகாம்' நடத்தப் பட்டுள்ளன. சென்னை, 'இரத்த தான மையம்' ஒன்றை இயக்குகிறது. மதுரையும், சென்னையும் போதை பழக்கத்திற்கு எதிராக இயக்கங்கள் நடத்தியுள்ளன. சாலை சீரமைப்பு, செப்பனிடல் போன்ற பணிகள் திருப்பூர், குமரி என சில இடங்களில் நடந்துள்ளன. இது சீர்திருத்த இயக்கம் என்கிற பார்வை இன்னும் சில மட்டங்களில் நீடிக்கிறது. இது தவறு. ஆக்கப் பணிகளில் இளைஞர்களை ஈடுபடுத்துவது என்பது மிக அவசியம். நம் போன்ற பின்தங்கிய நாடுகளில் இப்பணி மிக முக்கியமானது ஆகும்.

5-6 நாம் மதச்சார்பற்ற விழாக் கொண்டாட்டங்களை உருவாக்க வேண்டும், பொங்கல் விழாக்களை இப்போது வாலிபர் சங்கம் தொடர்ந்து கொண்டாடி வருகிறது. விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் நடக்கிறது. இதைத் தொடர்ந்து செய்யவும், பொங்கல் விழாவை, இடதுசாரி— மதச்சார்பற்ற— ஜனநாயக சக்திகளின் விழாக் கொண்டாட்டமாக மாற்றுவதும் வருங்காலத் தேவையாகும்.

5—7, 800-க்கும் மேற்பட்ட கிளைகள், விளையாட்டுப் போட்டிகள் நடத்தியுள்ளன. மதுரையில் வருடந்தோறும் மாநில அளவிலான போட்டியும், சென்னையில் மாவட்ட அளவிலான போட்டியும் நடத்தப்பட்டுள்ளன. விளையாட்டுப் போட்டிகளும் உடற் பயிற்சிக் கூடங்களும், புதிய இளைஞர்களை வென்றெடுக்கவும், மதச்சார்பற்ற திசையில் இட்டுச் செல்லவும் நல்ல வழியாகும்.

ஸ்தல இயக்கங்கள்

5—8 ஸ்தல இயக்கங்கள் நடத்துவதில் கடந்த காலத்தில் இருந்த வேகம் தற்போது குறைந்துள்ளது. பல இடங்களில் ஸ்தல பிரச்சனைகளின் மீது நடத்தப்பட்ட இயக்கங்களுக்கு நல்ல பிரதிபலிப்பு கிடைத்தது. வாலிபர் சங்க ஸ்தாபனம் வேரூன்ற, ஸ்தல பிரச்சனைகள் மீதான இயக்கங்கள் காரணமாக இருந்தன என்ற படிப்பினையை கணக்கில் எடுத்துத் தொடர்ச்சியாக ஸ்தல பிரச்சனைகள் மீது இயக்கங்கள் நடத்த திட்டமிட வேண்டும்.

இளைஞர் முழக்கம்

5-9, 37 மாதங்களில் 31 இதழ்கள் மட்டுமே வெளிவந்துள்ளன. நிதி நெருக்கடியால் 6 மாத இதழ்கள் வெளிவரவில்லை. விற்பனை 15,000—ல் நிற்கிறது. வாய்ப்பும், தேவையும் அதிகம். அச்சுக்கூலி, காகித விலையேற்றம், மாவட்டங்களில் பாக்கி ஆகிய காரணங்களினால் முறையாக வெளியிட இயலவில்லை. முறையாகக் கொண்டுவரவும், விற்பனையை அதிகப்படுத்தவும் முயற்சி எடுக்கவேண்டும். வாலிபர் சங்கத்தின் கடந்த மாநில மாநாடு திருச்சியில் நடைபெற்றது. வாலிபர் சங்கத்தின்

செயல்பாடு, உறுப்பினர் சேர்ப்பு போன்று பல அம்சங்களில் முன்னேற்றம் காண இந்த மாநாடு பயனளித்துள்ளது.

ஸ்தாபனம்

5–10 கடந்த மாநாட்டிற்கு முன் 1,00,000 உறுப்பினர்கள் இருந்தபோது 2 பேர் மையத்தில் முழுமையாகச் செயல்பட்டனர். சில செயற்குழு உறுப்பினர்கள் உதவியுமிருந்தது. இன்று அமைப்பு 3 மடங்கு விரிவடைந்துள்ள நிலையில், அகத்தியலிங்கம் பிரதானமாக சென்னை மாவட்டக் கட்சி வேலைக்குச் சென்ற பிறகு ரவீந்திரன், பாக்கியம் இருவர் மட்டுமே மைய வேலைகளைச் செய்ய வேண்டியவராயுள்ளனர். இது பெருத்த சிரமத்தை உருவாக்குகின்றது. மையத்திலிருந்து, மைய வேலைகளைக் கவனித்துக்கொண்டு, மாவட்டங்களுக்கு உதவுவது சிரமமாக உள்ளது. உடனடியாக இன்னொருவரை மாநில மையத்திற்கு கொண்டு வரவேண்டும். மாநில மையத்தில் இருந்துகொண்டு மூவருக்கும் மேற்பட்ட தோழர்கள் செயல்பட வைக்க வேண்டும்.

மாவட்டக்குழு/இடைக்கமிட்டி/கிளைகள்

5-11 நீலகிரி மாவட்டம் தவிர, மற்ற மாவட்டங்களில் கடந்த மாநாட்டிற்குப் பிறகு மாவட்ட மையத்திலிருந்து 1 முழுநேர ஊழியராவது வாலிபர் அரங்க வேலைகளை கவனிக்க உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது. உறுப்பினர்களின் எண்ணிக்கையும், இடைக்கமிட்டிகளின் எண்ணிக்கையும் பலமடங்கு அதிகமாகியுள்ள நிலையில் ஒன்றிற்கும் மேற்பட்ட முழுநேர ஊழியர்கள் மாவட்ட மையத்திலிருந்து செயல்பட வேண்டிய தேவையுள்ளது. கிளைகளை உயிரோட்டமாக இயக்கிட இடைக் கமிட்டிகளின் செயல்பாட்டை வலுப்படுத்திட வேண்டும். ஒன்றிய அளவில் இடைக் கமிட்டிகள் அமைக்கப்பட்டது, ஸ்தாபனத்தை விரிவுபடுத்த உதவிகரமாக இருந்தது. இடைக் கமிட்டிகளின் எண்ணிக்கை அதிகமாகியுள்ள நிலையில் இதை கண்காணிக்க, இடைக்கமிட்டிகளை பலப்படுத்த மாவட்ட மையத்தைப் பலப்படுத்த வேண்டும்.

1. மாவட்ட அளவில், மாவட்டமையம்உருவாக்கப்பட வேண்டும். மாவட்ட மையத்தைப் பலப்படுத்த வேண்டும்.

2. இடைக் கமிட்டிகளின் செயல்பாட்டை, கட்சி கமிட்டிகள்மூலம் உத்தரவாதப்படுத்திட வேண்டும்.

வெகுஜன உறுப்பினர் சேர்ப்பு

5-12 இது பரவலாக அமுலாக்கப்படவில்லை. மாநிலம் முழுவதும் வீடு வீடாக சென்று உறுப்பினர் பதிவை நடத்த வேண்டும். இது அமுலாக்கப்படாமல் பல லட்சம் வாலிபர்களை கொண்ட அமைப்பாக உயர்வது சாத்தியமில்லை. தற்போது சென்னை, திருப்பூர், மதுரை போன்ற இடங்களில் இம்முறை பின்பற்றப்படுகிறது. வருங்காலத்தில் மாநிலம் முழுவதும் குறிப்பிட்ட வாரத்தைத் தேர்வு செய்து, பிரச்சாரம் செய்து உறுப்பினர் பதிவை நடத்திட வேண்டும். பெண்களை உறுப்பினர்களாக சேர்ப்பதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

5—13 வாலிபர் சங்க வளர்ச்சியிலும் உறுப்பினர் சேர்ப்பிலும் வடஆற்காடு, நெல்லை, சிதம்பரனார், புதுக்கோட்டை, நீலகிரி, முகவை—பசும்பொன், தருமபுரி போன்ற மாவட்டங்களில் தேக்கம் நீடிக்கிறது. மாநில அளவில் ஏற்றத்தாழ்வான வளர்ச்சியாக உள்ளது. மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதி சென்னை, கோவை, மதுரை மாவட்டங்களில் உள்ளது. கோவை மாவட்டத்திலும் திருப்பூரில் ஏற்பட்ட முன்னேற்றத்தை கோவை நகரத்தில் உருவாக்க முடியவில்லை. மாநில அளவில் இயக்கத்தை பலப்படுத்த திட்டமிட வேண்டிய அதே நேரத்தில் சென்னை, கோவை, மதுரை. திருச்சி, சேலம், கடலூர், நாகர்கோவில், திருப்பூர் போன்ற நகரங்களில் முன்னுரிமை கொடுத்து உறுப்பினர் சேர்ப்புக்கு திட்டமிட வேண்டும்.

அணுகுமுறை

5—14 வாலிபர் சங்கத்தின் பன்முக நடவடிக்கையினால் மற்ற கட்சிகளின் பின்னால் உள்ள வாலிபர்களையும் ஆகர்ஷிக்க முடிகிறது. அப்படி சேருகின்ற வாலிபர்களை அரசியலாக வென்றெடுக்க தொடர்ச்சியாக முயற்சிக்க வேண்டும்.

5-15 மக்கள் பிரச்னைகளின் மீது வாலிபர் சங்க கிளைகள் இயக்கங்களை உருவாக்குகின்றபொழுது சில பகுதிகளில் சமூகவிரோதிகளோடு முரண்பாடு வருகிறது. மோதல் ஏற்படுகிறது. வாலிபர் சங்க வேலை, வாலிபர் சங்க வளர்ச்சி பாதிக்காத அளவில் நீக்குப் போக்கான அணுகுமுறையை கடைப்பிடிக்க வேண்டும்.

நிதி நிலைமை

5-16 மாநில மையத்திற்கு சந்தா தவிர வேறு வருவாய் இல்லை. மாவட்ட, வட்ட நிலையும் இதுதான். தொடர்ச்சியான இயக்கங்கள் நடைபெறுகின்றன. இளைஞர் முழக்கம், ஆரம்ப காலத்தில் மாநில நிதி தேவைகளை ஓரளவு நிறைவு செய்தது. கடுமையான விலையேற்றத்தினால் தன்னை சரிக்கட்டி நிற்பதற்கே பத்திரிக்கை சிரமப்படுகிறது. வட்டம் மற்றும் கிளையளவில் போதுமான நிதி ஆதாரமில்லாத நிலையில் இளைஞர் முழக்கம் மற்றும் உறுப்பினர் சந்தாவை செலவிடும் போக்கு உள்ளது. எனவே இவ்வரங்க நிதிதேவை குறித்து கவனித்து வழிகாட்ட வேண்டியுள்ளது.

கட்சியின் வழிகாட்டுதலும், கட்சியை கட்டும் பணியும்

5—17 மாநில ஃபிராக்ஷன் முறையாக கூடியுள்ளது. அரங்கில் வரும் பிரச்னைகள் குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது. கட்சியின் பிளீனத்திற்கான தயாரிப்பையொட்டி ஒரு அறிக்கை, மதுரை, சென்னை, கோவை நகரங்களில் வாலிபர் சங்கம் கட்டிய அனுபவம், சமீபத்தில் தேர்தலுக்குப் பின்பிந்திய நிலவரம் என மூன்று முறை எழுத்துபூர்வமான அறிக்கை வைத்து விவாதிக்கப்பட்டுள்ளது. வாலிபர்கள் மத்தியில் கட்சியை கட்டும் பணி பற்றி போதுமான முயற்சிகள் எடுக்கப்படவில்லை. பெரும்பகுதி மாவட்டங்களில் மாவட்ட ஃபிராக்ஷன்கள் செயல்பட்டாலும், கட்சியை கட்டும் பணி பற்றி மாவட்ட ஃபிராக்ஷன்களும் போதிய முயற்சிகள் எடுக்க முடியவில்லை. வெகுஜன அரங்க வேலைகளுக்கே முக்கியத்துவம்

கொடுக்கப்பட்டுவருகிறது. இந்நிலையில். கட்சிக் கிளைகளை உருவாக்கக்கூடிய பணியை கட்சியின் இடைக்கமிட்டிகள்தான் கவனிக்க வேண்டியுள்ளது.

அரசியல் பயிற்சி

5-18 இவ்வரங்கில் எந்த அளவு அரசியல், தத்துவார்த்த பயிற்சி அளிக்கிறோமோ அந்த அளவே முன்னேற்றம் காணமுடியும். இரண்டுமுறை மாவட்ட அளவிலான பயிற்சி முகாம் நடத்தப்பட்டுள்ளன. கூடங்குளம் பிரச்சனை முன்வந்த போது சிதம்பரனார், நெல்லை, சென்னை மாவட்டங்களில் விளக்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இட ஒதுக்கீடு, சோசலிச முகாமில் பிரச்சனைகள் — இவைகள் குறித்து சில மாவட்டங்கள் மட்டும் முன் முயற்சி எடுத்துப் பேரவைகள் நடத்தின. (1) வட்ட வாரி வகுப்புகள் நடத்துவது, (2) கருத்தரங்கங்கள், அவை கூட்டங்கள், சிறப்புக் கூட்டங்கள் நடத்துவது (3) பிரசுரங்கள் வெளியிடல், (4) பேரவையில் அரசியல் விளக்கம் (5) மாவட்ட—மாநில பயிற்சி முகாம் என இன்னும் செல்ல வேண்டியது அதிகம். சேர்த்த உறுப்பினர்களை உறுதிப்படுத்தவும், மேலும் விரிவுபடுத்தவும் வாய்ப்புள்ள வாலிபர் சங்க கிளைகளில், கட்சிக் கிளைகளை உருவாக்க வேண்டியுள்ளது.

எதிர்காலக் கடமைகள்

5-19 ❀ உறுப்பினர்கள் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குவது
❀ மாநில மையத்தை பலப்படுத்துவது
❀ மாவட்டங்களுக்கு தனி அலுவலகம் அமைப்பது (இப்போது சென்னை, கோவை, மதுரை என 3 இடங்களில் உள்ளது)
❀ அனைத்து மாவட்டத்திலும் ஒன்றிற்கும் மேற்பட்ட முழுநேர ஊழியர்களைக் கொண்ட மாவட்ட மையத்தை உருவாக்குவது
❀ அனைத்து ஒன்றியம், நகராட்சி, பேரூராட்சிகளில் ஸ்தாபனத்தை விரிவுபடுத்துவது
❀ எழுத்தறிவு இயக்கத்தில் வாலிபர்களை ஈடுபடுத்துவது
❀ எஸ்.சி., எஸ்.டி., சிறுபான்மையோர்களை சேர்க்க விசேஷ கவனம் செலுத்துவது
❀ பெண்களை திரட்ட விசேஷ கவனம் எடுப்பது
❀ (அ) மாணவர் அரங்கத்திற்கு உதவுவது
(ஆ) கிராமத்தில் விவசாய சங்கம் கட்ட உதவுவது

பம்பாயில் நடந்த அகிலஇந்திய வாலிபர் சங்கமாநாடுசுட்டிக்காட்டிய மதச்சார்பின்மை, அனைவருக்கும் வேலை, தேசஒற்றுமை, ஜனநாயக உரிமைகளை பாதுகாத்தல், சமூக மாற்றம் ஆகிய அடிப்படையில் வாலிபர்களை ஒன்றிணைத்து இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வது

5-20 அரசியல், பொருளாதார, சமூக நெருக்கடிகள் ஆழமாகி வரும் இன்றைய சூழலில் வாலிபர்களை அணிதிரட்ட வேண்டிய பணி முன்னைக்காட்டிலும் முக்கியத்துவம் பெறுகிறது. பல்வேறு பாதிப்புக்குள்ளான வாலிபர்களை திரட்ட நாம் முயற்சிக்கின்ற இந்த வேளையில் மதவாத, ஜாதீய, அதிதீவிரவாத சக்திகளும் முனைப்புக் காட்டுகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் வாலிபர் அரங்கத்தில் இருந்து கட்சிப் பணிக்கு பல தோழர்கள் வந்திருக்கிறார்கள். கேடர்களை உருவாக்கக் கூடிய ஊற்றுக் கண்ணாக இருக்கக்கூடிய இந்த அரங்கத்திற்கு கட்சி, கூடுதல் கவனம் செலுத்தி தமிழகத்தில் வலுவான வாலிபர் இயக்கத்தை உருவாக்க வேண்டும்.

6. மாதர் அரங்கம்

6–1 தமிழகத்தில் கட்சியின் வரலாற்றில் பெண்களின் பங்கெடுப்பும், செயல்படுதலும் இன்றுள்ளது போல் இதற்கு முன் இருந்ததில்லை என்று கூற முடியும். பொது வாழ்வில் பெண்களின் பிரவேசம் என்பது இன்று பரவலாக அதிகரித்துள்ளது. இப்படி பொது வாழ்வில் பெண்கள் பிரவேசத்திற்கு நமது கட்சியின் பாத்திரம் பிரதானமானது என்பது பெருமைக்குரிய விஷயமாகும். சென்ற மாநில மாநாட்டுக்குப்பின் கட்சியில் பெண்களின் எண்ணிக்கை இரண்டாயிரத்திற்கு மேல் உயர்ந்து இரு மடங்கு அதிகரித்துள்ளது. தெருமுனை பிரச்சாரங்களில், பொது மேடைகளில் 200-க்கும் அதிகமான பெண்கள் கலந்து கொண்டு, பெண்கள் பற்றிய பிரச்னைகளை மட்டுமல்லாமல், பொதுவான அரசியல் பொருளாதார விஷயங்களையும், நம் கட்சி அரசியலையும் பேசுவதும், பல்வேறு அரசியல் போராட்டங்களில் பெண்களது பங்கெடுப்பு அதிகரித்திருப்பதும், கட்சியின் பெருமையை உயர்த்தியுள்ளது.

6–2 சமீபத்தில் நடந்தேறிய கட்சியின் மாவட்ட மாநாடுகளில் 350-க்கும் மேற்பட்ட பெண் பிரதிநிதிகள் பங்கு கொண்டுள்ளனர். கட்சியின் எல்லா மாவட்ட குழுக்களிலும் (நீலகிரி, பெரியார் தவிர) பெண்கள் இடம் பெற்றிருப்பதும், வட்ட, நகர பகுதிக் குழுக்களில் அங்கம் வகிப்பதும் முன்னேற்றகரமான வளர்ச்சிப் போக்காகும்.

6–3 கடந்த மாநாட்டுக்குப்பின், பெண்களை பாதித்துள்ள சில அரசியல், பொருளாதார வளர்ச்சிப் போக்குகளை இங்கு சுட்டிக்காட்டுவது அவசியம். பெரும்பான்மை மக்கள், தாழ்த்தப்பட்ட மக்களில் கணிசமானோர் குறிப்பாக பெண்கள் அதிமுக-வின் பின் ஆகர்ஷிக்கப்பட்டு நிற்கிறார்கள். ஜனநாயக மாதர் சங்கத்தின் பல்வேறு நடவடிக்கைகளை அங்கீகரிக்கின்ற பெண்களில் கூடப் பெரும்பாலோர் இன்னமும் அரசியல் என்றால் வேறுபட்ட நிலைபாட்டைத்தான் எடுக்கிறார்கள். அவர்களை அரசியல்ரீதியாக ஈர்க்கின்ற குறிப்பிட்ட பிரச்னைகளில் தொடர்ச்சியாக கவனம் செலுத்துவதன் மூலமாகத்தான் அவர்களது உணர்வுமட்டத்தில் மாற்றம் கொண்டுவர முடியும். தாக்குதல் ஒருபுறம், சலுகைகள் மறுபுறம் என சாகசம் செய்யும் தமிழக அரசின் இன்றைய நிலையில், பெண்களை வென்றெடுக்க நாம் தீவிரமாக செயல்படவேண்டியுள்ளது.

6–4 இந்தியாவின் வட மாநிலங்களைப் போல இல்லாவிட்டாலும் தமிழகத்திலும் வகுப்புவாத சக்திகள் தங்களது இருப்பை மக்கள் மத்தியில் உயர்த்த தலைப்பட்டுள்ளன. பெண்களுக்கு மதத்தின் மேலும், கடவுளின் மேலும் உள்ள பக்தியை, மத அடிப்படைவாதிகள் துஷ்பிரயோகம் செய்ய முயற்சிக்கின்றனர். ராமஜென்மபூமி பிரச்னை வந்த பிறகு, குறிப்பாக மத்தியதர பெண்கள் மதத்தை பற்றி பேச தலைப்பட்டுள்ளனர். அலுவலகங்களில் ஓய்வு நேரத்திலோ, கலாச்சார அமைப்புகளின் மூலமோ, ரயில், பஸ் பயணங்களிலோ பக்தி புத்தக வாசிப்பு, மத சம்பந்தமான விஷயங்களில் ஈடுபாடு போன்ற நடவடிக்கை

கள் கடந்த சில வருடங்களில் அதிகரித்து வந்துள்ளது காணப்படுகிறது. இது கவனத்தில் எடுக்கவேண்டிய போக்காகும்.

6–5 பொருளாதார ரீதியில் பெண்கள் புறக்கணிக்கப்படும் போக்கை நவீனமயமாக்கல் அதிகப்படுத்தியுள்ளது. கல்வியிலும் பின் தங்கியநிலை என்பது தொடர்கிறது. மேற்கத்திய கலாச்சார தாக்கம், குறுகிய அளவிலேயானாலும்கூட, பெண்களை போகப் பொருட்களாக பார்க்க வைத்து, அவர்கள் மீதான கொடுமைகளை அதிகரிக்கிறது. சுருக்கமாகக் கூறினால், சமுதாயத்தில் அனைத்து துறைகளிலும் பெரும்பான்மையான பெண்கள் பின்தங்கியவர்களாகவே நீடிக்கின்றனர்.

6-6 கட்சியின் அறைகூவலுக்கிணங்க சர்வாதிகார எதிர்ப்பு, மதச் சார்பின்மை, ஏகாதிபத்திய எதிர்ப்பு, ஜனநாயக உரிமைகள் போன்றவற்றிற்கான பிரச்சாரத்தை இக்காலகட்டத்தில் முடிந்தளவில் ஜனநாயக மாதர் சங்கம் முன்னெடுத்துச் சென்றுள்ளது. இவை தவிர, பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை வெளிக் கொண்டு வருவதிலும், எதிர்த்துப் போராடுவதிலும் முன்னிலையில் நின்றுள்ளோம். கலாச்சார சீரழிவு, விலை உயர்வு, பழைமைவாதப் பிடிப்பு ஆகியவற்றுக்கு எதிராகவும் பல வடிவங்களில் இயக்கங்கள் நடத்தியுள்ளோம்.

6–7 சர்வாதிகார எதிர்ப்பு என்ற முறையில் 'ராஜீவ் அரசே ராஜினாமா செய்' என்ற இயக்கத்தில் பங்கெடுத்ததின் தொடர்ச்சியாக ''பாரத் பந்த்''தில் செயல்பட்டு பெண்களும் கைதாயினர். வளைகுடாப் போரில், அமெரிக்க ஏகாதிபத்திய நிலைபாட்டை எதிர்த்து மற்ற வெகுஜன அமைப்புகளுடன் இணைந்து கண்டன நடவடிக்கைகளை மேற்கொண்டோம். சென்னை ஊர்வலத்தில், காவல் துறையின் தடியடியை சந்தித்த பின்னும் கூட, மறுமுறை நடந்த யுத்த எதிர்ப்பு ஊர்வலத்தில் ஏராளமாக பெண்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

6–8 சென்னையில் 12 மாதர் அமைப்புகளை அழைத்து, பல சிரமங்களுக்கிடையே ஒத்த கருத்தை உருவாக்கி யுத்த எதிர்ப்பு தீர்மானம் நிறைவேற்றிப் பத்திரிக்கைகளுக்கு அனுப்பினோம். ரூ. 40,000 பெறுமானமுள்ள மருந்துப் பொருட்களை இராக் தூதரகத்துக்கு அனுப்பினோம். இப் பிரச்னை குறித்து தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்களை பெரும்பாலான மாவட்டங்களில் நடத்தியுள்ளோம்.

6-9 அரசியல் சட்டத்தின் 356-வது பிரிவைத் திருத்தக் கோரியும், திமுக அமைச்சரவை கலைக்கப்பட்டதைக் கண்டித்தும், ஜனநாயக உரிமைகளுக்காக 1991 பிப். 18ம் தேதி தமிழகமெங்கும் 'பட்டினிப் போராட்டம்' நடத்தப்பட்டது. உடனடியாக இக்கோரிக்கையை முன்வைத்து முதலில் இயக்கம் நடத்திய அமைப்பு ஜனநாயக மாதர் சங்கமே. சுமார் 252 மையங்களில் 5,000க்கும் மேல் பெண்கள் கலந்து கொண்டனர்.

6-10 தேச ஒற்றுமைக்காகப் பல்வேறு சந்தர்ப்பங்களில் தெருமுனை கூட்டங்கள், துண்டுப் பிரசுரம் விநியோகிப்பது, கலை நிகழ்ச்சிகள் மூலம் தொடர்ந்து பிரச்சாரம் நடத்தியுள்ளோம்.

6-11 மத நல்லிணக்கத்தைப் பொறுத்தவரை, கலை நிகழ்ச்சிகள், மனிதச் சங்கிலி, தெருமுனைக் கூட்டங்கள், பிரசுர வெளியீடு, நடைப் பயணம் மூலமாக இப்பிரச்சாரம் அதிகமாகவே ஜனநாயக மாதர் சங்கத்தால் செய்யப்பட்டுள்ளது.

6-12 பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை எதிர்ப்பதைப் பொறுத்தமட்டில் ஜனநாயக மாதர் சங்கத்தின் பெயர் பிரபலமடைந்துள்ளது. பல்வேறு தரப்பினர், நடவடிக்கை கோரி மாதர் சங்கத்தை அணுகுவது அதிகரித்துள்ளது. சென்னையில் சட்ட உதவி மையம் தொடர்ந்து இயங்கி வருகிறது. தற்போது பதிவும் செய்யப்பட்டுள்ளது. காவல்துறையினரால் நடத்தப்படுகின்ற ஆலோசனைக்குழுக் கூட்டங்களில் சென்னையில் பல்வேறு அமைப்புகள் பங்கெடுத்தாலும், திறமையான தலையீட்டை நமது அமைப்பே செய்து வருகிறது. வழக்குகள் பல ஆண்டுகளாக தேங்கிக் கிடப்பதை எதிர்த்து, சென்னையிலும் மற்றும் மாநிலம் முழுவதும் 4 மையங்களில் "நீதி மறுக்கப்பட்டோர் இயக்கம்" என்ற பெயரில் நடத்தப்பட்டு, பாதிக்கப்பட்ட பெண்களின் குடும்பத்தினரும் பங்கேற்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டது.

6-13 பொதுவாகப் பார்த்தால், கடந்த மூன்றாண்டுகளில் பெண்களைத் திரட்டுவதில் கணிசமான முன்னேற்றம் உண்டு. தேவையான தயாரிப்பும், ஒத்துழைப்பும் இருந்தால் மாநிலம் முழுவதும் சுமார் 25,00 பெண்களைப் பங்கு பெற வைக்க முடிகிறது. பிரச்சனைகளைப் பொறுத்தும், பெண்களின் பங்கேற்பு அமைகிறது.

6-14 போடியில் சாதிக் கலவரம் நடந்ததையொட்டி மதுரையில் ஏற்பாடு செய்யப்பட்ட மனிதச் சங்கிலி இயக்கத்தில் 3,000 பெண்களும், சென்னையில் மத்திய அரசின் வரி உயர்வை எதிர்த்து நடத்தப்பட்ட மனிதச் சங்கிலியில் 800 பெண்களும், தாதர் எக்ஸ்பிரசில் 3 பெண்கள் பலாத்காரம் செய்யப்பட்டதைக் கண்டித்து, சென்னையில் குறுகியகால அவகாசத்தில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் 400 பெண்களும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கதாகும். இப்படி பல மாவட்டங்களில் பல்வேறு இயக்கங்களில் பெண்களைத் திரட்டியிருக்கிறோம்.

6-15 மேற்சொன்ன இயக்கங்களும், நாம் முன்வைத்த கோரிக்கைகளும் அனைத்துத் தரப்புப் பெண்களையும் கவரக்கூடியதா? என்றால் இல்லை. தமிழகத்துப் பெண்களில் பல்வேறு பகுதியினர் முன்னுள்ள பிரச்சனைகள் என்ன என்பதை பகுத்தறிந்து, அவற்றிற்கான கோரிக்கைகளை உருவாக்கி, முன்னுரிமை எவற்றிற்குக் கொடுக்க வேண்டும் என்பதையும் கணக்கிலெடுத்து நாம் இனி இயக்கங்களைத் திட்டமிடுவது அவசியம்.

நம் முன்னுள்ள பிரச்சனைகள்

6-16 கணிசமாக உள்ள கிராமப்புற பெண்களது பிரத்யேகமான கோரிக்கைகளின்பேரில் வலுவான இயக்கம் என்பது நடத்தப்படவில்லை. மாநில அளவிலான கிராமப்புற பெண்களின் ஸ்தூலமான பிரச்னைகள் பற்றி, ஓரளவு ஆய்வு நடத்தி, கோரிக்கைகள் உருவாக்கப்பட்டுள்ளது.

அந்த முழுமைப்படுத்தி, மாநில அளவில் இப்பெண்களது மாநாட்டை நடத்தும் ஏற்பாடு உள்ளது.

6-17 மூடநம்பிக்கை, பழமைவாதம் போன்றவற்றிற்கு எதிரான இயக்கங்கள் இன்னும் தீவிரமாக்கப்படவேண்டும். சாதிக் கொடுமைகள், தாழ்த்தப்பட்ட பெண்கள் மீதான ஒடுக்குமுறைகள் மீது போதிய கவனம் செலுத்தப்படவில்லை.

6—18 பெண் கல்வி, எழுத்தறிவு இயக்கம், உடல் ஆரோக்கியம் பற்றிய பிரச்னைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தி பிரச்சாரம் மற்றும் இயக்கங்களுக்கு திட்டமிட வேண்டியுள்ளது.

மற்ற மாதர் அமைப்புகளுடன் கூட்டு இயக்கங்கள்

6-19 பொதுவாக சென்னை மற்றும் பாண்டிச்சேரியில் இதற்கான வாய்ப்புகள் நன்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. சமீபத்தில் மத நல்லிணக்கத்திற்கான பெண்கள் அமைப்பு ஒன்றை பல்வேறு மாதர் அமைப்புகள் சென்னையில் இணைந்து அமைத்துள்ளது சிறப்பான முயற்சியாகும். பாண்டிச்சேரியில் மார்ச்—8 சர்வதேச பெண்கள் தினத்தையொட்டி, நாம் முன்முயற்சி எடுத்து மற்ற மாதர் அமைப்புகளை இணைத்து எடுத்த நடவடிக்கை, அவர்கள் மத்தியில் நமது அமைப்பின் மீதான மரியாதையை உயர்த்தியுள்ளது.

6-20 திருச்சி,கோவையில் கூட்டு இயக்கங்கள் சில சந்தர்ப்பங்களில் நடைபெறுகிறது. குமரியில் சில கிறிஸ்துவ மிஷினரி அமைப்புகள் பிரச்னைகளைப் பொறுத்து நம்மோடு கூட்டுப் போராட்டத்தில் இறங்குகின்றன. மற்ற மாவட்டங்களில் இதர மாதர் அமைப்புகள் சரிவர செயல்படாததால், கூட்டு இயக்கத்திற்கான வாய்ப்பு குறைவாகவே உள்ளது.

மற்ற வெகுஜன அமைப்புகளுடன் கூட்டு நடவடிக்கை

6-21 ஸ்தல பிரச்னைகளுக்காக மாவட்டங்களில் வாலிபர் சங்கத்துடனும், கிராமப்புறக் கோரிக்கைகளுக்காக வி ச., வி.தொ.ச.—வுடனும் அவ்வப்போது கூட்டு இயக்கங்கள் நடத்தியுள்ளோம். மருத்துவமனை சீர்கேடுகளை எதிர்த்து வாலிபர் சங்கத்துடன் பல மாவட்டங்களில் கூட்டுப் போராட்டம் நடத்தியுள்ளோம். வேலையின்மையை எதிர்த்து அனைத்து வெகுஜன அமைப்புகளுடனும் இணைந்து பிரச்சாரப் பயணம் நடத்தினோம்.

சங்க உறுப்பினர் எண்ணிக்கை

6-22 ஸ்தாபன வளர்ச்சியின் ஒரு முக்கிய அளவுகோல் உறுப்பினர் எண்ணிக்கையாகும். கடந்த இரண்டு ஆண்டுகளில்தான் ஒரு லட்சத்திற்கு மேல் எண்ணிக்கை வந்துள்ளது. மாதர் சங்க அமைப்பு துவக்கப்பட்டதிலிருந்து மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் தஞ்சை மாவட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை 50% இருந்து வந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளாக தஞ்சை உறுப்பினர் எண்ணிக்கை சரிபாதி குறைந்து விட்டது. இது கவலை தரும் விஷயமாகும். அப்படி இருந்தும், ஒரு லட்சத்தைத் தாண்ட முடிந்

துள்ளதற்கு சென்னை போன்ற சில மாவட்டங்களில் உறுப்பினர்கள் அதிகரித்துள்ளது காரணமாகும். தேர்தல் பணிகள், தொடர்ச்சியான இயக்கங்கள் காரணமாக இந்த ஆண்டு உறுப்பினர் சேர்ப்பு சரிவர நடைபெறாமல் இருந்து வருகிறது.

6-23 குறிப்பிட்ட மாதங்களில் கோட்டாவை முடிப்பது என்பதற்காக யாந்திரிகமாக செய்யப்பட்டு ஆண்டு கடைசி வரை இழுத்தடிக்கின்ற ஏற்பாடு உதவிகரமாக இல்லை. நாம் நடத்தும் இயக்கங்களோடு இணைந்து ஆண்டு முழுவதும் உறுப்பினர் சேர்ப்பு என்கிற மேற்கு வங்க அனுபவத்தையும் கவனத்தில் எடுப்பது நல்லது. நமது செல்வாக்கை பிரதிபலிக்கின்ற வகையில் உறுப்பினர் சேர்ப்பு என்ற இலக்கை இதுவரை எட்டவில்லை. இதில் ஒரு முறிப்பை ஏற்படுத்த கட்சி கமிட்டிகள் கவனம் செலுத்த வேண்டும்,

மாநில மையம்

6-24 சென்ற மாநில கட்சி மாநாட்டுக்கு பிறகு மாநில மைய செயல்பாட்டில் அபிவிருத்தி உண்டு. சராசரியாக மாதம் ஒரு முறை மாநில மையம் கூடுகிறது. சில சந்தர்ப்பங்களில் இடையிலும் கூடுவது உண்டு. இயக்கங்களுக்கு திட்டமிடுதல், பிரச்சார குறிப்புகள், துண்டு பிரசுர மேட்டர், கோஷங்கள் தயாரித்து அனுப்புதல், மாவட்டங்களிலிருந்து வந்துள்ள பிரச்னைகள் குறித்து விவாதித்து வழிகாட்டல் ஆகியவை செய்யப்படுகிறது. வேலைகள் அதிகரித்து வருகிற நிலையில் மையத்தை வலுப்படுத்திட பாப்பா, மைதிலி, விஜயா, வாசுகியுடன் தோழர்க்ள் சுதா, சாவித்திரி ஆகியோரையும் மைய வேலைகளில் கூடுதல் பங்கு பெறுகின்ற வகையில் மைய கூட்டங்களில் கலந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாநில ஃபிராக்ஷன்

6—25 சராசரியாக 3 மாதங்களுக்கு ஒருமுறை கூடுகிறது. 85 சதவிகித உறுப்பினர்கள் கலந்துகொள்கின்றனர். நடத்தப்பட்ட பல இயக்கங்கள் குறித்து பரிசீலனை செய்யப்படுகிறது. ஆயினும், இந்த பரிசீலனையின் அனுபவங்கள் சங்கத்தின் கீழ்மட்ட உறுப்பினர்களை எட்டுவதில்லை. மாவட்டக் குழுக்கள் அளவில் நிற்கிறது. பெண்களை கட்சி உறுப்பினர்களாக ஆக்குவது பற்றி மாநில ஃபிராக்ஷனில் விவாதித்து ம்ாவட்டக் குழுக்கள் மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

மாவட்டக் குழுக்கள்

6-26 கடந்த இரண்டு ஆண்டுகளில் அபிவிருத்தி இருக்கிறது. மாவட்டக் குழுக்கள் ஒன்றிரண்டு தவிர பெரும்பாலான கமிட்டிகள் தானாகக் கூடி முடிவெடுத்து இயங்குகிறது. மைய செயல்பாடு பல மாவட்டங்களில் உண்டு. இயங்குதல் குறித்து மாவட்டக் குழுக்களை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1. சென்னை, திருச்சி, மதுரை, திண்டுக்கல், கோவை, பாண்டி.

2. கி. தஞ்சை, சேலம், தர்மபுரி, சிதம்பரனார், காமராஜர், முகவை, குமரி, வட ஆற்காடு.

3. மே. தஞ்சை, செங்கற்பட்டு, பெரியார், நெல்லை, தென் ஆற்காடு.

6-27 இடைக்கமிட்டிகள், முன்பு இருந்ததைவிட சில மாவட்டங்களில் இயங்கி வருகிறது. பெரும்பாலானவை ஓரளவே செயல்படுகிறது.

மாதர் இயக்க முழுநேர ஊழியர்கள்

6-28 வளர்ச்சிக்கான வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்வதற்கு மாவட்டங்களுக்குக் குறைந்தபட்ச தேவையான முழுநேர ஊழியர்கள் நியமிக்கப்பட வேண்டும். இவ்விஷயத்தில் தற்போதுள்ள நிலை போதுமானதல்ல. சொற்ப அலவன்சில் மாநிலம் முழுவதும் 29 ஊழியர்கள் உள்ளனர். ஊதியம் பெறாத முழுநேரம் பணியாற்றும் தோழர்கள் 20பேர் வரை இருக்கின்றனர். மாவட்டங்களில் குறைந்தபட்சம் இரண்டு முழுநேர ஊழியர்கள், போதிய அலவன்ஸுடன் உத்தரவாதப்படுத்த வேண்டும். ஊதியம் இல்லாமல் முழுநேரம் செயல்படும் தோழர்கள் பற்றி உரிய பரிசிலனை நடத்தி அவர்களுக்கு அலவன்ஸ் நிச்சயிக்க வேண்டும்.

சங்கத்தின் மாநிலக்குழு

6-29 ஆண்டுக்கு 4 முறை கூடுகிறது. தேர்தல் போன்ற நேரத்தில் சில மாதங்கள் தள்ளிப் போவதுண்டு. 54 உறுப்பினர்களில் 70லிருந்து 75 சதவிகிதத்தினர் பங்குகொள்கின்றனர். விவாதத்தின் தரமும் உயர்ந்துள்ளது. பரிசிலனையுடன் கூடிய வேலை அறிக்கை வைப்பதில் கவனம் செலுத்தப்படுகிறது. இந்த வருடம் 14 மாவட்ட மாதர் சங்க மாநாடுகள் நடைபெற்றுள்ளன. பல மாவட்டங்களில் 180லிருந்து 220க்குக் குறையாமல் பிரதிநிதிகள் பங்கு பெற்றனர். விவாதமும், பங்கெடுப்பும் தரமாக இருந்தது.

கலைக்குழுக்கள்

6-30 பெண்களேபங்குபெறும் வகையில் சென்னை, திருச்சி, பாண்டி, புதுக்கோட்டை, மதுரை ஆகிய இடங்களில் கலைக் குழுக்கள் துவக்கப்பட்டுள்ளன. சென்னையில் இருக்கும் அளவில் மற்ற குழுக்களும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

நிதி நிலைமை

6-31 ஜனநாயக மாதர் சங்கத்தைப் போன்ற வெகுஜன அமைப்புகள் முறையாக இயங்கிட பலவிதத்திலும் நிதி தேவைப்படுகிறது. ஆண்டுக்கு ஒரு முறை வளர்ச்சி நிதி என்ற முறையில் நிதி வசூல் செய்வதற்கு திட்டமிட்டு உதவிட வேண்டும்.

மகளிர் சிந்தனை

6-32 1985ஆம் ஆண்டு முதல் ஜனநாயக மாதர் சங்கத்தின் சார்பாக மாதம் ஒருமுறை வெளிவருகிறது. 6 ஆண்டு காலமாக முறையாக

தொடர்ந்து வெளிவருவது என்பதே பெரிய சாதனையாகும். இன்று 70,000-ரூபாய் வரை பாக்கி நிற்பது என்பது முன்வந்துள்ள பெரிய பிரச்சனையாகும்.

6-33, 12,000 வரை மாதா மாதம்வந்த எண்ணிக்கை தற்போது 8,500-ல் நிற்கிறது. தமிழகத்தில் வேறு ஒரு சில பத்திரிகைகள் மாதர் இயக்கத்தின் சார்பாக வந்ததெல்லாம் நின்றுவிட்ட நிலையில் 'மகளிர் சிந்தனை' ஒன்றுதான் தமிழகத்தில் மாதர் இயக்கத்தின் சார்பாக வெளிவருகிறது. இந்த பத்திரிக்கை விற்பனையை அதிகரிக்க திட்டமிட வேண்டும்.

பிரசுரங்கள்

6-34 இக்காலகட்டத்தில் தேசிய தொலைநோக்கு திட்டம் 10,000 பிரதிகளும், பூர்வீக சொத்தில் பெண்களுக்கு சம பங்கு மற்றும் குடும்ப கோர்ட் சட்டங்களைப் பற்றிய ''நீதியா அநீதியா''–10,000 பிரதிகளும், மாதர் சங்கத்தின் அடிப்படை கொள்கைகளை விளக்கும் ''விடியலை நோக்கி'' 20,000 பிரதிகளும் போடப்பட்டன.

எதிர்காலக் கடமைகள்

6-35 1. தமிழகத்தில் பெண்களை பாதிக்கும் பல்வேறு பிரச்சனைகளின் மீது தொடர்ந்து இயக்கங்களை நடத்துவது.

2. நகரங்களில் மாதர் இயக்கத்தைக் கட்டுவதற்கு கூடுதல் கவனம் செலுத்துவது, குறிப்பாக சென்னை, திருச்சி, மதுரை, கோவை, பாண்டி, திண்டுக்கல் ஆகிய நகரங்களுக்கு முன்னுரிமை தந்து தீவிர கவனம் செலுத்தி இயங்குவது. குறிப்பாக நகரின் குடிசைப் பகுதி பெண்கள் பிரச்சனைகளுக்கு முன்னுரிமை கொடுத்து ஸ்தலஇயக்கங்களை நடத்துவது.

3. மாவட்டங்களில் ஒரு தளத்தை நிர்ணயித்து, அதைச் சுற்றி இயக்கத்தை வலுப்படுத்துவது.

4. கிராமப்புற பெண்களின் பிரத்தியேகமான கோரிக்கைகளை உருவாக்கி, சாத்தியமான இயக்கங்களை நடத்துவது.

5. 'மகளிர் சிந்தனை' உருவம், உள்ளடக்கம் ஆகியவற்றில் மாற்றம் காண்பது, விற்பனையை உயர்த்துவது.

6. பெண்களது ஆரோக்கியம், கல்வி போன்ற துறைகளில் கவனம் செலுத்துவது; அறிவொளி திட்டத்தைப் பயன்படுத்தி நமது மாதர் சங்கப் பெண்களுக்கு படிப்பறிவை ஏற்படுத்துவது.

7. சங்கத்தின் உறுப்பினர்களை இரட்டிப்பாக்குவது; இடைக்கமிட்டிகளை உயிரோட்டம் உள்ளதாக செயல்பட வைப்பதின் மூலம் கிளைகளை இயங்கச் செய்வது.

8. கட்சியில் பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது, வகுப்புகள் தொடர்ந்து நடத்துவது.

7. மாணவர் அரங்கம்

7—1 கடந்த மூன்று ஆண்டுகளில் மாணவர் அரங்கத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. உறுப்பினர்கள் எண்ணிக்கை, கிளைகள் எண்ணிக்கை உயர்ந்துள்ளன. செயல்பாட்டிலும் முன்னேற்றம் உள்ளது.

தமிழக கல்வி நிலை:

7-2 தமிழகத்தில் தற்போதுள்ள கல்வி வசதிகள் தேவையை பூர்த்தி செய்வதாக இல்லை. மத்திய, மாநில பட்ஜெட்டுகளில் கல்விக்காக ஒதுக்கும் தொகை குறைக்கப்பட்டு, சுயநிதி கல்லூரிகள் துவங்க அனுமதித்து கல்வி கடைச் சரக்காக பணம் படைத்தோருக்கே என்ற நிலை உருவாகியுள்ளது. தமிழகத்தில் கல்வித்துறையில் உள்ள நெருக்கடியை எதிர்த்து மாணவர் இயக்கம் மட்டுமல்ல, ஜனநாயக இயக்கங்களும் போராட வேண்டியுள்ளது.

7—3 தற்போதைய நிலையில், மாணவர்களில் பெரும் பகுதியினர் எந்த அரசியல் கட்சியையும் சாராதவர்களாக உள்ளனர். கல்லூரிகளில் இடம் பிடித்து, படிப்பை முடித்தாலும் எதிர்காலத்தில் வேலை கிடைக்குமா? என்ற கேள்வி எழுந்து எதிர்காலம் பற்றிய நம்பிக்கையின்மை வளர்ந்து வருகிறது. நச்சிலக்கியங்கள், போதை பழக்கவழக்கங்கள் ஒரு பகுதி மாணவர்களை சீரழிக்கிறது. இருப்பினும், பொதுவான பிரச்னைகள் மீதும் கல்வி பிரச்னைகள் மீதும் நாம் சரியான முன்முயற்சி எடுக்கின்ற பொழுது மாணவர்கள் சக்தியாக போராட்டங்களில் கலந்து கொள்கிறார்கள்.

7—4 மாணவர்கள் மத்தியில்-திமுக, அதிமுக-மாணவர் அமைப்புகளுக்கு செல்வாக்குள்ளது. பி.ஜே பி.யின் மாணவர் அமைப்பு இந்து வெறியைத் தூண்டிவிட்டு ஏ.பி.வி.பி. என்ற அமைப்பின்கீழ் மாணவர்களை திரட்ட முயற்சித்து வருகிறது. சில நக்சலைட் குழுக்களும் ஒருசில இடங்களில் உள்ளன. சிபிஐ தலைமையிலான மாணவர் அமைப்பு மிகவும்பலஹீனமாக உள்ளது. மாநில அளவில் அமைப்பு ரீதியாக செயல்படுவது இந்திய மாணவர் சங்கம் என்ற நமது அமைப்புதான்.

கடந்த கட்சி மாநாட்டில் தீர்மானித்த கடமைகள்

7-5 ஃ ஒரு லட்சம் உறுப்பினர்களை சேர்ப்பது
- ஃ கல்லூரி மாணவர்களை திரட்ட கூடுதல் கவனம் செலுத்துவது
- ஃ மாநில மையத்தை பலப்படுத்துவது
- ஃ மாவட்டத்திற்கு ஒரு முழுநேர ஊழியரை ஏற்பாடு செய்வது
- ஃ மாணவிகளை திரட்ட விசேஷ கவனம் செலுத்துவது

மாணவர்கள் மத்தியில் அரசியல் சித்தாந்த பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது, மாணவர்கள் மத்தியில் கட்சி கிளைகளை உருவாக்குவது

ஃ மாணவர் அரங்க தோழர்களின் பணி பிரதானமாக மாணவர்கள் மத்தியில் இருக்க உத்தரவாதப்படுத்துவது.

கடந்த மூன்றுண்டுகளில் மாணவர் அரங்கத்தில்நமது செயல்பாட்டை பரிசீலிப்போம்

முக்கிய இயக்கங்கள்

ஃ 7-6 1989ல் ராஜீவ் அரசே-ராஜினுமா செய் எனக் கோரி அகில இந்திய அளவில் எஸ்எப்ஐ விடுத்த அறைகூவலுக்கிணங்க தமிழகத்திலும் வேலைநிறுத்தம் நடைபெற்றது.

ஃ 7-7 பாடநூல் விலேயேற்றத்தைக் குறைக்கவும், பனிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் விஞத்தாள் மாற்றம் கூடாது என்பதற்காகவும் நடைபெற்ற மாநில அளவிலான வேலே நிறுத்தம் மிகப்பெரிய அளவில் நடந்தது. பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் எஸ்எப்ஐ தலைமையில் வேலை நிறுத்தத்தில் பங்கேற்ருர்கள். கோரிக்கையையும் தமிழக அரசு ஏற்றது.

ஃ 7-8 ஐடிஐ.,பாலிடெக்னிக்,மருத்துவம், எஞ்சினியரிங்- என பிரிவு வாரி சப்-கமிட்டிகளை உருவாக்கி அந்த குழு பரிந்துரைத்த கோரிக்கைகளின் அடிப்படையில் மாநில அளவில் இயக்கங்கள் நடத்தினேம். அப்பொழுது இருந்த சாதகமான அரசியல் நிலைமையை பயன்படுத்தி கோரிக்கைகளை வென்றிருக்கிறேம். பாலிடெக்னிக் மாணவர்கள் பிரேக் சிஸ்டத்தை ரத்து செய்யக் கோரும் போராட்டம், ஐடிஐ மாணவர்களின் விஞத்தாளை தமிழில் கோரி மாநிலம் தழுவிய வேலை நிறுத்தம், மருத்துவ கல்லூரி மாணவர்கள் போராட்டம் ஆகிய இயக்கங்கள் குறிப்பிடத்தகுந்தது.

ஃ 7-9 எல்லாவற்றிற்கும் மேலாக 1991 அக்டோபர் மாதத்தில் தமிழக அரசு பஸ் கட்டணத்தை உயர்த்தியதை எதிர்த்து மாநிலம் முழுவதும் கல்லூரி, பள்ளிகளில் எஸ்எப்ஐ முன் முயற்சியினல் ஒரு வாரம் வேலே நிறுத்தம் நடந்தது. சென்னே, மதுரை போன்ற நகரங்களில் மாணவர்கள் மீது போலீஸ் தடியடி நடத்தியது. மக்களின் கவனத்தை ஈர்த்த இந்த மாணவர்களின் போராட்டத்தையொட்டி வாலிபர் சங்கத்தின் சார்பில் மறியல் நடைபெற்றது. பிறகு தேசிய முன்னணி, இடதுசாரி கட்சிகளின் சார்பில் ஆர்ப்பாட்டமும் நடந்தது. தமிழக அரசு மாணவர்கள் பஸ்பாஸ் கட்டணத்தை ஓரளவுக்குக் குறைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

கடந்த காலங்களேவிட பொதுவான பிரச்சனைகள் மீதும், கல்வி பிரச்சனைகள் மீதும் எஸ். எப். ஐ. தலைமையில் மாணவர்களை மாநிலம் தழுவிய அளவில் திரட்ட முடிந்துள்ளது. ஒரு சில கோரிக்கைகளை வெல்ல முடிந்துள்ளது.

மாநில மையம், மாநிலக்குழு, மாவட்டக்குழுக்கள்

7-10 இரண்டு தோழர்கள் என்பதற்கு பதிலாக குணசேகரன், ராமகிருஷ்ணன், கோவிந்தராஜன் ஆகிய மூன்று தோழர்கள் மாநில

மையத்தில் இருந்து செயல்பட்டு வருகிறார்கள். மாநில அளவில் கோரிக்கைகள் மீது முன்முயற்சி எடுக்கவும், மாவட்ட குழுக்களுக்கு உதவி செய்யவும், தன்னெழுச்சியாக எழும் போராட்டங்களில் தலையிட்டு எஸ். எப். ஐ. தலைமை பாத்திரத்தை உத்தரவாதப்படுத்தவும் மாநில மையத்தினால் முடிந்துள்ளது.. மையத் தோழர்களின் வேலைகளை முறையாக திட்டமிட்டு மாநிலமையத்தின் செயல்பாட்டை மேலும் பலப்படுத்த வேண்டும்.

7–11 மாநிலக்குழு சராசரியாக இரண்டு மாதத்திற்கு ஒருமுறை கூடுகிறது வடஆற்காடு, நீலகிரி, புதுக்கோட்டை, வ.உ.சி. ஆகிய மாவட்டங்களை தவிர மற்ற மாவட்டங்களில் மாவட்டரீதியான செயல்பாடு உள்ளது. மாவட்டத்திற்கு ஒரு முழுநேர ஊழியர் ஏற்பாடு செய்யவேண்டுமென்ற முடிவு 9 மாவட்டங்களில் மட்டுமே அமுலாகி உள்ளது. தேக்கம் இருந்த கோவை, மதுரை, மே. தஞ்சை போன்ற மாவட்டங்களிலும் முழுநேர ஊழியரை ஏற்பாடு செய்து கட்சியின் மாவட்ட மையம் கவனம் செலுத்தியதால் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மாவட்டங்களில் இருந்து ஒரு டீமாக வேலை செய்யக்கூடிய ஏற்பாடு வேண்டும்:

7–12 இடைக்கமிட்டிகள் ஒரு சில மாவட்டங்களில் மட்டுமே செயல்படுகின்றன. கிளைகள் அமைத்து முறையாக செயல்படவைப்பது என்பது இன்னும் கடினமான காரியமாகவே உள்ளது.

முன்னுரிமை

7–13 சென்னை, மதுரை, கோவை, திருச்சி, தெ. ஆற்காடு, நெல்லை போன்ற முக்கியமான கல்வி மையங்களில் மாணவர்களை திரட்ட கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

தொடர்ச்சியின்மை

7–14 ஸ்தல கோரிக்கைகள் மீதும், கல்வி பிரச்சனைகள் மீதும் மாநில அளவிலான இயக்கங்கள் நடைபெறுகின்றன. இதைப் பயன்படுத்தி மாணவர் சங்க கிளைகளை அமைக்கும் வேலை ஒரு சில மாவட்டங்களில் மட்டுமே நடைபெறுகிறது. இதைச் செய்யாத கல்வி நிலையங்களில் மாணவர் சங்க வேலைகளில் தொடர்ச்சியின்மை ஏற்படுகிறது. இந்த பலஹீனத்தைப் போக்க ஜூனியர், சீனியர் ஆகிய இரண்டு பகுதி மாணவர்கள் மத்தியிலும் ஸ்தாபனத்தை பலப்படுத்த வேண்டும்.

7–15 மாணவிகளை திரட்ட விசேஷ கவனம் செலுத்த வேண்டுமென்ற அடிப்படையில் மாநில அளவிலான மாணவிகள் மாநாடு தஞ்சையில் நடந்த பிறகு மாணவிகள் பங்கேற்பு ஓரளவிற்கு அதிகரித்துள்ளது.

உறுப்பினர் சேர்ப்பு

7-16, 1989ல் சென்னையில் நடைபெற்ற எஸ். எப். ஐ. மாநில மாநாடு, 1991 துவக்கத்தில் சேலத்தில் நடைபெற்ற மாநில சிறப்பு மாநாடு, ஸ்தாபன துறையில் முன்னேற்றம் ஏற்படுத்த உதவியளித்துள்ளது.

ஆண்டு	உறுப்பினர்கள்
1988	32,037
1989	64,500
1990	77,000
1991	உறுப்பினர் சேர்ப்பு முடியவில்லை

7–17 கட்சியின் கடந்த மாநாட்டின் பொழுதே 32,037ஆக இருந்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 1990ல் 77,000ஆக உயர்ந்துள்ளது. இந்த ஆண்டு ஒரு லட்சமாக உயர வாய்ப்புள்ளது. கடந்த மாநாட்டிற்கு பிறகு உறுப்பினர்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் 44லட்சம் உள்ளமொத்த மாணவர்களில் நமது பலம் மிகவும் குறைவே. போராட்டங்களில் கலந்து கொள்ளும் மாணவர்களை உறுப்பினர்களாக சேர்ப்பதிலும், பதிவு செய்யப்பட்ட சந்தா தொகையை மாநில மையத்தில் சேர்ப்பதிலும் பலஹீனம நீடிக்கிறது. மாணவர் சங்கத்தின் செல்வாக்களவிற்கு உறுப்பினர் சேர்ப்பு உயரவில்லை.

பத்திரிக்கை

7–18 மாணவர் சங்க இதழ் 'புதிய பாதை' துவக்கப்பட்டு சில இதழ்கள் வெளிவந்துள்ளன. இரண்டு மாதத்திற்கு ஒரு இதழ் என்றமுறையில் முறையாக வெளியிட முயற்சிக்க வேண்டும்.

கட்சியின் வழிகாட்டுதல் மற்றும் கட்சியை கட்டும் பணி

7-19 மாநில ஃபிராக்ஷன் சராசரியாக இரண்டு மாதத்திற்கு ஒரு முறை கூடுகிறது. மாணவர்களை திரட்டுவதற்கும், மாணவர்கள் மத்தியில் கட்சியை கட்டுவதற்கும் மாநில ஃபிராக்ஷன் முயற்சி எடுத்திருக்கிறது. பல மாவட்டங்களில் ஃபிராக்ஷன் அமைத்து செயல்படுவது. அரங்க வேலைகளை திறம்பட செய்ய உதவியுள்ளது. ஃபிராக்ஷன் இல்லாத மாவட்டங்களில் ஃபிராக்ஷன் அமைக்க வேண்டியுள்ளது.

7-20 கடந்த மாநாட்டின்பொழுது இருந்ததைவிட மாணவர்கள் மத்தியில் கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகமாகியுள்ளது. இப்பணியை முறையாக செய்ய, கட்சியின் மாவட்டக் குழுக்கள் கூடுதல் முயற்சி எடுக்க வேண்டியுள்ளது.

7-21 மாணவர் சங்க உறுப்பினர்கள் எண்ணிக்கை உயர்ந்தாலும். கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதில் பலஹீனம் உள்ளது. போராட்டங்களில் கலந்து கொள்ளும் மாணவர்களில் இருந்து ஊழியர்களை தயார் செய்வதும், கல்வி நிலைய அளவில் கட்சிக் கிளைகளை உருவாக்குவதிலும் பல மாவட்டங்களில் முன் முயற்சி இல்லை. சில மாவட்டங்களில் கல்விநிலைய கட்சிக் கிளையில் சேர்க்காமல் மாணவர்களை பிரதேச கட்சிக் கிளையில் சேர்க்கும் தவறான அணுகுமுறையும் உள்ளது. கல்விநிலைய அளவில் கட்சிக் கிளைகளை உருவாக்க வேண்டும்.

7-22 மற்ற அரங்கங்களைப்போல் அல்லாமல் மாணவர் அரங்கத்திற்கு கட்சியின் மாவட்டக்குழுக்கள் பிரத்யேக கவனம் செலுத்த

வேண்டும். மாணவர்களின் உணர்வு நிலைக்கேற்ப நெளிவு சுளிவான அணுகுமுறையை கடைப்பிடிக்க வேண்டும். மாணவர்களின் அரங்க கேடர்களின் வேலை, பிரதானமாக மாணவர் அரங்கத்திற்கு உத்தரவாதப் படுத்த வேண்டும்.

நிதி ஆதாரம்

7-23 சங்க சந்தா மூலம் வரும் வருமானத்தை வைத்து அமைப்பை நடத்த இயலவில்லை. மாணவர்கள் மத்தியில் நிதி வசூல் செய்வதும் சிரம மானது. இந்நிலையில், சந்தா தொகையை இயக்க வேலைகளுக்கு செலவு செய்துவிட்டு மாநில மையத்திற்கு ஈவுத் தொகை அனுப்பாத பலஹீனம் தொடர்கிறது. மாவட்ட அளவிலும், கல்வி நிலைய அளவிலும் மாணவர் அரங்க வேலைகளுக்குத் தேவையான நிதி வசூலிக்க, நிதி ஆதாரத்தை ஏற் படுத்திக்கொடுக்க வேண்டும்.

எதிர்காலக் கடமைகள்

7-24 ஃ உறுப்பினர்கள் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குவது

ஃ எல்லா மாவட்டங்களிலும் குறைந்தபட்சம் ஒரு முழுநேர ஊழி யரையாவது ஏற்பாடு செய்வது

ஃ மாவட்ட மையங்களை பலப்படுத்துவது, இடைக்குழுக்களின் செயல்பாட்டில் முன்னேற்றம் காண்பது

ஃ கேந்திரமான கல்வி மையங்களில் மாணவர்களை திரட்ட முன் னுரிமை கொடுப்பது

ஃ மதுரை கல்விப் பட்டறையில் உருவாக்கப்பட்ட கோரிக்கைகள் மீது இயக்கங்களுக்கு திட்டமிடுவது

ஃ மாணவர் அமைப்பிற்கும், ஆசிரியர் அமைப்புகளுக்கும் இடையே ஒருங்கிணைப்பை உருவாக்குதல்

ஃ மாணவிகளை திரட்ட விசேஷ முயற்சி எடுப்பது

ஃ தாழ்த்தப்பட்ட, ஆதிவாசி மாணவர்களை திரட்ட கூடுதல் கவனம் செலுத்துவது

ஃ கல்வி நிலைய அளவில் கட்சிக் கிளைகளை உருவாக்குவது

8. கலை-இலக்கிய அரங்கம்

8-1 யதார்த்தம், மனிதாபிமானம் என்ற அடிப்படையில் கலை-இலக்கியம் யாவும் மக்களுக்கே எனும் முற்போக்குச் சிந்தனையினை தமிழக மக்களிடையே பரப்பிடப் பாடுபட்டு வரும் அமைப்பு ''தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம்''.இந்த அமைப்பில் நமது கட்சி உறுப்பினர்களும்,ஆதரவாளர்களும் அல்லாமல் இதன் கொள்கையினை ஏற்கும் இதரரும் உண்டு.இவர்களுடன் இணைந்து நமது தோழர்கள் இந்த அமைப்பினை நடத்தி வருகிறார்கள்.கலை- இலக்கியம் மூலமாக நமது கருத்துக்களை மக்களிடையே கொண்டு செல்வதுடன் நமது-கட்சியின் கொள்கைகளை மக்களிடம் கலை-இலக்கிய வடிவில் கொண்டு செல்லவும் நமது தோழர்களை பயன்படுத்துகிறோம்.

8-2 கலை-இலக்கியம் பற்றிய ஒரு தெளிவான கொள்கை பிரகடனத்துடன் ஜனநாயக ரீதியாக கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து இயங்கி வருகிற அமைப்பு இது. அண்மைக் காலத்தில் பல்வேறு மாநிலங்களில் உள்ள முற்போக்கு கலை-இலக்கிய அமைப்புகளுடனும் இதற்குநெருங்கிய தொடர்புஏற்பட்டுள்ளது.இதன் பிரதிபலிப்பினை நெல்லையில் நடைபெற்ற அதன் ஐந்தாவது மாநில மாநாட்டில் காண முடிந்தது. இதற்கு இந்தி பேசும் மாநிலங்கள்,மேற்கு வங்கம்,ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகியவற்றிலிருந்து கலை-இலக்கியவாதிகள் வந்து வாழ்த்தினார்கள்.இந்த மாநில மாநாடு த மு எ ச வளர்ச்சியின் வேறு பல தன்மைகளையும்-பல படைப்புகள் நூல் வடிவில் வெளிவருவது, கிராமியக் கலைகளின்பால் ஈடுபாடு, வெளிவட்டாரத்தவரையும் ஈர்ப்பது.மக்களைத் திரட்டக் கூடிய வெகுஜனத் தன்மை போன்றவற்றையும்-வெளிப்படுத்தியது.

8-3 முற்போக்கு இலக்கியப் படைப்புகளை ஊக்குவிக்க தமுஎச பல்வேறு போட்டிகளை நடத்தி வருகிறது. முன்பு, சிறுகதைப்போட்டி நடத்தியது. இக்காலத்தில் நாவல் போட்டி, நாடக(ஸ்கிரிப்ட்) போட்டி போன்றவற்றை நடத்தி, அவற்றில் வெற்றிபெற்ற படைப்புகளுக்கு ரொக்கப் பரிசுகளை தந்துள்ளது.நாவல் போட்டியில் முதலாவது மற்றும் மூன்றாவது பரிசுகளைப் பெற்ற படைப்புகள் செம்மலரில் தொடர் கதைகளாகவும் வெளிவந்துள்ளன. தமுஎச எழுத்தாளர்களின் சிறுகதைகளைக் கொண்ட தொகு-ப்பு ஒன்றும் கொண்டுவரப்பட்டுள்ளது. இன்னும் பல படைபபுகள்-தமுஎச—வின் உறுப்பினர்கள் படைத்த நாவல்கள், சிறுகதை மற்றும் கவிதை தொகுப்புகள்-இக்காலத்தில் வெளியாகியுள்ளன.

8-4 சேலம் மாவட்டம், நாமக்கல் பாலப்பட்டியில் நடத்தப்பட்ட இலக்கிய முகாம் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டிய ஒன்றாகும். பழந்தமிழ் இலக்கியம் மற்றும் எழுபதுகள் மற்றும் எண்பதுகளில் நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் ஆகியவை பற்றி ஆய்வு செய்த முகாம் அது. நல்லதொரு முன் தயாரிப்போடு நடத்தப்பட்ட அந்த முகாம், பழந்தமிழ் இலக்கியம் மற்றும் தற்கால இலக்கியப் படைப்புகளை நமது கண்ணோட்டத்திலிருந்து எப்படி புரிந்துகொள்ள வேண்டும் என்பதனை உணர்த்தியது.

நம்மாலும் சிறந்த இலக்கியத் திறனாய்வுகளை வழங்க முடியும் என்பதனை நிரூபித்தது.

8—5 இந்த மூன்றாண்டு காலத்தில் மூன்று தேர்தல்களை தமிழகம் சந்தித்துள்ளது. இந்த மூன்று தேர்தல்களிலும் தமுஎச-வில் உள்ள நமது கட்சியின் கலைஞர்கள், எழுத்தாளர்கள் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டுள்ளனர். வீடியோ, ஆடியோ கேசட்டுகள் தயாரிப்பில் உதவினர். கடைசியாக நடந்த தேர்தலுக்காக திருச்சியில் கட்சி சார்பில் ஒரு ''கலை பட்டறை'' (தயாரிப்பு முகாம்) நடத்தப்பட, அதிலும் உற்சாகமாகப் பங்கேற்றனர். மக்களைத் திரட்டும் இவர்களின் கலை ஆற்றல் கண்டு சில இடங்களில் இ. காங்கிரஸ்—அதிமுக-வினர் இவர்கள் மீது தாக்குதல்களை நடத்தினர். அண்மைக்கால வரலாற்றினைப் புரட்டினால் இந்த அளவிற்கு கலை ஆயுதத்தினை நமது அரசியல் பிரச்சாரத்திற்கு முன்னெப்போதும் பயன்படுத்தியதில்லை என்று கூறலாம்.

8-6 நாட்டு ஒற்றுமை—மக்கள் ஒற்றுமைக்கு தற்பொழுது ஏற்பட்டுள்ள மிகப்பெரும் அபாயத்தினை உணர்ந்து, அதனை முறியடிக்க கலை ஆயுதத்தினைக் கையில் ஏந்த வேண்டும் என்று தமுஎச முடிவு செய்துள்ளது. இதற்காக தமிழகம் முழுவதும் நடத்துவதற்கு ஏற்ற நாடகங்களை, இசைப் பாடல்களை, கிராமிய நிகழ்ச்சிகளை தயாரிப்பதற்காக மதுரையில் மூன்று நாள் கலை பட்டறை ஒன்றும், இறுதி நாளில் கலை விழாவும் நடத்தப்பட்டது. இது விஷயம் குறித்த ''கவிதைப் போட்டி'' ஒன்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

8-7 மக்கள் கலைஞர் சப்தர் ஹஷ்மி படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து நடந்த நாடு தழுவிய ஆர்ப்பாட்டத்தில் தமுஎச—வும் வலுவாகப் பங்கேற்றது. அவரது தியாகம் இதர மாநிலங்களைப் போல தமிழகத்திலும் வீதி நாடக இயக்கத்திற்கு புத்துயிர்ப்பினைத் தந்தது. இதே காலத்தில் மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் மணி விழாவும், பாவேந்தர் பாரதிதாசனின் நூற்றாண்டு விழாவும் சிறப்புறக் கொண்டாடப்பட்டன காரைக்காலில் துவங்கி சென்னை வரை அநேகமாக அனைத்து மாவட்டங்களிலும் பாரதிதாசன் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டுள்ளது. பொதுவாகவே முற்போக்குச் சிந்தனைகளைப் பரப்பிட பாரதி, பாரதிதாசன், பட்டுக்கோட்டை ஆகியோரின் பாடல்களை தமுஎச தனது மேடையில் வலுவாகப் பயன்படுத்தி வருகிறது.

8-8 கட்சியின் கலை-இலக்கிய ஏடாகிய ''செம்மலர்'' தமுஎச எழுத்தாளர்களின் படைப்புகளை அதிகம் வெளியிட்டு வருவதனை சுட்டிக்காட்டி அதன் விற்பனையில் தமுஎச கிளைகள் நேரடியாக பங்கேற்க வேண்டுமென கூறப்பட்டுள்ளது. கிளைகளும் அதில் கவனம் செலுத்த துவங்கியுள்ளன.

8-9 தமுஎச-வின் மாவட்டக் குழுக்களை முடுக்கி விடவும், தற்போதைய கலை-இலக்கிய படைப்புகளையும், பணிகளையும் விஸ்தரிக்கவும் மாவட்ட பேரவை கூட்டங்கள் நல்ல முறையில் நடைபெற்றன.

8-10 கலை—இலக்கிய அரங்கில் நாம் ஒரு சித்தாந்தப் போராட்டத்தினை கவனமாகவும்,இடைவிடாமலும் நடத்திச் செல்ல வேண்டியுள்ளது. சீரழிந்த மக்கள் விரோத கலை—இலக்கியங்களுக்கு எதிராக மட்டுமல்லாது வாழ்க்கையையே ஒரு பேத்தலாகக் கருதுகிற நம்பிக்கை வறட்சிக்கு எதிராகவும், மொழியையே சின்னாபின்னப்படுத்தி, எவருக்கும் புரியாமல் எழுதுகிற போக்கிற்கு எதிராகவும், வக்கிரமான எழுத்திற்கு எதிராகவும் தமுஎச போராட வேண்டியுள்ளது. இவையெல்லாம் ''கலை காசுக்காகவே அல்லது கலை கலைக்காகவே'' எனும் முதலாளித்துவச் சிந்தனைகளின் வெளிப்பாடுகளாக இருப்பதனை அடையாளம் காட்டி வருகிறது. அண்மைக் காலத்தில் சோஷலிஸ யதார்த்தவாதத்திற்கு எதிராக சில பேரிடமிருந்து வந்துள்ள தாக்குதல்களையும் தமுஎச எதிர்த்து நின்றுள்ளது. அதே நேரத்தில் மனிதாபிமானத்திலிருந்து சோஷலிஸ யதார்த்தவாதம் வரை எழுதக்கூடிய படைப்பாளிகள் இயங்கும் ஒரு விரிந்த மேடையாகவும் தமுஎச—வை நடத்திச் செல்ல வேண்டியுள்ளது.

8—11 தமுஎசவிற்கு தற்பொழுது பாண்டிச்சேரி உள்ளிட்ட பத்தொன்பது மாவட்டக் குழுக்கள் உள்ளன பெரியார், நீலகிரி போன்ற மாவட்டங்களில் இனிமேல்தான் உருவாக்க வேண்டியுள்ளது. உறுப்பினர் எண்ணிக்கை 1988-2,292,1989-4,065,1990—2,697, 1991-1, 037 (அக்டோபர் இறுதிவரை) உறுப்பினர் சேர்ப்பில் ஒரு நிலையான கவனம் இருப்பதில்லை. தமிழகம் முழுக்க அறுபதுக்கும் மேற்பட்ட கலைக்குழுக்கள் உள்ளன. இவற்றிற்கு இன்னும் பயிற்சி அளித்து, முழுமையாகப் பயன்படுத்தினால் முற்போக்கு கலைக்கு மட்டுமல்ல,தமிழகத்தின் இடதுசாரி- ஜனநாயக இயக்கத்திற்கும் நல்ல பலன் கிடைக்கும்.தமுஎசவினரின் செயல்பாட்டுக்குக் கட்சியின் மாவட்டக் குழுக்களின் தொடர்ந்த வழிகாட்டுதல்களும்,கவனிப்பும் இருக்குமானால் இன்னும் வலுவான, இன்னும் விரிவான முற்போக்குக் கலை இலக்கிய இயக்கத்தினை தமிழகத்தில் உருவாக்க முடியும்.

9. தீக்கதிர்

9-1 நமது கட்சியின் லைனை மக்களிடம் கொண்டு செல்வதில் தீக்கதிர் தனது பங்கினை நிறைவேற்றி வருகிறது கருத்துக்களையும், செய்திகளையும் இணைந்து தரும் ஏடாக வெளி வருகிறது. தொடர்ந்து கட்சி மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக தீக்கதிரில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது.

9-2 தேர்தல் காலத்தில் ''தீக்கதிர்'' ஆற்றிய பணி குறிப்பிடத் தக்கது. இதில் வெளிவந்த கட்டுரைகள் மற்றும் கார்ட்டூன்கள், இதர கட்சிகளின் பத்திரிக்கைகளிலும் பயன்படுத்தப்பட்டனஎன்பது குறிப்பிடத் தக்க அம்சமாகும். தீக்கதிரின் உள்ளடக்கம் மற்றும் செய்திகளை வெளி யிடும் விதம் குறித்தும், நிர்வாக ஏற்பாடுகள் குறித்தும் தொடர்ந்து பல விமர்சனங்கள் வருகின்றன. அவற்றை சரிய தீக்கதிர் மையத்திலும், கட்சி மையத்திலிருந்தும் தொடர்ச்சியான பல முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

ஆசிரியர் குழு

9-3 ஆசிரியர் குழுவில் 12 தோழர்கள் பணியாற்றி வருகிறார்கள். இவர்களுக்குத் தனித்தனி பொறுப்புகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தீக்கதி ரில் வெளிவரும் கட்டுரைகள் மற்றும் செய்திகள் சம்பந்தமாக ''ரெவியூ'' செய்யும் முறை பின்பற்றப்பட்டு வருகிறது. இதில் தவறுகள் சுட்டிக்காட் டப்பட்டு விமர்சிக்கப்படுகிறது. மாதா மாதம் நடைபெறும் தீக்கதிர் சப்- கமிட்டி கூட்டங்களையும் சிக்கலான நிர்வாக மற்றும் இதர பிரச்சனைகள் குறித்தும் விவாதித்து வழிகாட்டப்படுகிறது.

9-4 மத்தியக்குழு மற்றும் மாநிலக்குழுவின் முடிவுகளை முறையாக ஆசிரியர்குழு மற்றும் நிர்வாக பிரிவில் பணிபுரியும் தோழர்களுக்கு ரிப் போர்ட் செய்ய ஏற்பாடு உள்ளது. இருந்தபோதிலும், மேலும் தீக்கதிர் மையத்துடன் நெருங்கிய தொடர்பு வைத்து அதில் வரும் கட்டுரைகள் மற்றும் செய்திகள் பற்றி ஆலோசனை தருவதில் மாநில மையத்தில் பலஹீனம் நீடிக்கிறது. மாநிலசெயற்குழு மற்றும் மாநிலக்குழு தோழர்கள் தீக்கதிருக்கு கட்டுரைகள் மற்றும் பெட்டிச் செய்திகள் ஆகியவற்றினை தருவதில் பலஹீனம் உள்ளது.

கட்சிக் கிளைகள்

9-5 தற்போது தீக்கதிரில் 90 பேர் பணிபுரிகின்றனர். இவர்களில் 56 பேர் கட்சி உறுப்பினர், பரீட்சார்த்த உறுப்பினர்களாக உள்ளனர். 5 கிளைகளும், ஒரு துணைக்குழுவும் உண்டு. இடைக்கமிட்டி ஒன்றும் உருவாக் கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இவை முறையாக கூடி தீக்கதிர் சம்பந்த மான பிரச்சனைகள் குறித்து விவாதித்து வருகின்றன.

தீக்கதிர் விற்பனை

9-6 தற்போது தீக்கதிர் விற்பனை 8,500 என்ற அளவிலேயே உள்ளது. இது போதுமானதல்ல. நியூஸ் பிரிண்ட், அச்சுப் பொருட்களின் விலைகள் கூடியுள்ள நிலையில் ஒரு மாதத்திற்கு சுமார் ரூ.84,000/— நஷ்டம் ஏற்பட்டு வந்தது. எனவேதான் 6 பக்கமாக இருந்ததை 4 பக்கமாகக் குறைத்தோம். இருந்தும் சிறிது நஷ்டம் ஏற்பட்டு வருகிறது. இந்நிலையில் கட்சி காங்கிரஸ் நடைபெறுவதையொட்டி டிசம்பர் 1 முதல் 6 பக்கமாகவும், பிரதியின் விலை 1-60 என்றும் வெளியிடுவது என மாநிலக்குழு முடிவு செய்து நிறைவேற்றி வருகிறது.

9-7 நமது கட்சியின் அரசியல் லைனை பரந்த பகுதி மக்களிடம் கொண்டுசெல்லவும், விற்பனையை அதிகரிப்பதன் மூலம் நஷ்டத்தை ஈடுகட்டவும் தீக்கதிரின் விற்பனையை பெருமளவு அதிகரிக்க வேண்டியுள்ளது. கட்சி அணிகளின் அரசியல், தத்துவார்த்த ஆர்வத்தினை உயர்த்துவது இதற்கு அவசியமாகும். இதற்கு கிளை மற்றும் கட்சி கமிட்டிகளின் திட்டமிட்ட விடாப்பிடியான முயற்சி தேவை. ஏற்கெனவே தீக்கதிர் விற்பனையை அதிகப்படுத்துவது குறித்து பல இயக்கங்கள் நடத்தினோம். ஆனால், இயக்கங்கள் நடக்கும் காலங்களில் விற்பனை உயர்வதும் இதர காலங்களில் பழைய நிலைக்கே வந்துவிடுவதுமாகவும் உள்ளது. ஒவ்வொரு கட்சி உறுப்பினரும் ''தீக்கதிர்'' படிப்பதன் அவசியத்தை உணரச் செய்வதன் மூலம் தீக்கதிர் விற்பனையை அதிகரிப்பதே அதிமுக்கியமான அரசியல் கடமைகளில் ஒன்று என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

தீக்கதிர் மீது தாக்குதல்

9-8 ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்டதையொட்டி அதிமுகவினரால் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறை சம்பவங்களினால் தீக்கதிர் பெரும் சேதத்திற்குள்ளாகியது. முதல்நாள் இரவு நடைபெற்ற தாக்குதலின்போது தீக்கதிரில் அதிக தோழர்கள் இருந்ததால் குண்டர்களின் தாக்குதலை முறியடிக்க முடிந்தது. ஆனால், மறுதினம் பட்டப்பகலில திடீரென நடத்திய பெருந்தாக்குதலில் தீக்கதிர் பெரும் சேதத்திற்குள்ளாகியது. தோழர் ஆர். ராமராஜ் உள்ளிட்ட பல தோழர்கள் படுகாயமடைந்தார்கள். முன்கூட்டியே பாதுகாப்பிற்காக ஏற்பாடு செய்வதில் பலஹீனம் இருந்தது. மதுரை நகர் குழுவுக்கும் குறுகிய கால அவகாசத்தில் பாதுகாப்புக்குத் தோழர்களை திரட்டி அனுப்புவதில் பலஹீனம் இருந்தது.

9-9 தீக்கதிர் அலுவலகத்தைத் தாக்கியவர்கள் மீது வழக்குபதிவு செய்யும் எவ்வித நடவடிக்கையும் அரசு எடுக்கவில்லை. நஷ்டஈடு கோரி அரசுக்கு எழுதியும் எவ்விதபயனும் இல்லை. சமீபத்தில் அறிவிக்கப்பட்ட உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் நஷ்டஈடு கோருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தீக்கதிர் அலுவலகத்தையொட்டியுள்ள பகுதிகளில் நமது கட்சியின் தளத்தை விரிவுபடுத்த விசேஷ முயற்சிகளை மேற்கொள்ளவும் மதுரைநகர் குழு முடிவு செய்துள்ளது.

செம்மலர்

9–10 கலை இலக்கிய துறையில் நமது கொள்கை நிலையினை கொண்டுசெல்ல 'செம்மலர்' பயன்படுகிறது. தற்போது 11,000 பிரதிகள் விற்பனையாகின்றன. காகித விலை உயர்வு உள்ளிட்ட பல காரணங்களால் இதன் விலையை ரூ. 2லிருந்து 3ஆக உயர்த்தினோம். ஆனால் விற்பனை குறையவில்லை. இருப்பினும், இதன் விற்பனையை மேலும் அதிகரிக்க திட்டமிட்ட ஏற்பாடு அவசியம்.

மார்க்சிஸ்ட்

9-11 நமது தத்துவ மாத இதழ். இதில் தத்துவார்த்த கட்டுரைகள் வெளிவருகின்றன. 1989ம் ஆண்டு துவங்கியபோது 7500 பிரதிகள் விற்பனை ஆகியது. தற்பொழுது 7,000 என்ற அளவில் குறைந்துள்ளது. கட்சி அணிகளிடையே தத்துவார்த்த அறிவை வளர்க்க பயன்படும் இந்த மாத இதழினை ஒவ்வொரு தோழரும் படிக்க ஏற்பாடு செய்வது அவசியம்.

நமது ஏடுகள்

9-12 தமிழகத்தில் கட்சி வெளியிடும் தின இதழ் தீக்கதிர்; தத்துவ மாத இதழ் மார்க்சிஸ்ட்; கலை இலக்கிய மாத இதழ் செம்மலர். இவையல்லாமல் நமது தலைமையில் உள்ள வெகுஜன, வர்க்க அமைப்புகள் தமது அரங்கிற்கென பத்திரிக்கைகளை நடத்தி வருகின்றன. சிஐடியு செய்தி, போக்குவரத்து தொழிலாளி, மின்கதிர், புதிய ஆசிரியன்; அரசு ஊழியர், உழவன் உரிமை, மகளிர் சிந்தனை, இளைஞர் முழக்கம் மற்றும் இன்னும் பல ஏடுகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

9-13 இவையெல்லாம் சேர்த்து கட்சியின் கொள்கை நிலையை சமுதாயத்தின் பல்வேறு துறைகளிலும் கொண்டுசெல்ல ஒரு ஒருங்கிணைந்த முயற்சியாக உள்ளன.

10. கட்சி ஸ்தாபனம்

10-1, 13-வது மாநில மாநாட்டில் கீழ்க்கண்ட எதிர்கால கடமை களை நிச்சயித்து இருந்தோம். அவையாவன:—

- மாநில, மாவட்ட மையங்களை வலுப்படுத்துவது
- கட்சி கிளை செயலாளர்கள் கூட்டத்தை இரு மாதத்திற்கு ஒ முறை நடத்துவது
- ''தீக்கதிர்'' பத்திரிக்கை விற்பனையை இரு மடங்காக்குவது
- தத்துவார்த்த மாத இதழ் ஒன்றினை கொண்டு வருவது
- வர்க்க, வெகுஜன அமைப்புகளில் மேலும் பல்லாயிரக்கணக்கான உறுப்பினர்களை சேர்ப்பது
- தோழர் பி.ஆர். நினைவகம் ஒன்றினை உருவாக்குவது
- தொழிலாளர்கள், அரிஜனங்கள் மற்றும் சிறுபான்மையோர் பகுதியிலிருந்து கூடுதலான கட்சி உறுப்பினர்களை கொண்டு வரு வது
- முதலாளித்துவ சித்தாந்தங்களுக்கும், திராவிட இயக்க சித்தா தங்களுக்கும் எதிராக பிரசுரங்கள் கொண்டு வருவது

10-2 இத்தகைய எதிர்கால கடமைகளையும், மூன்றாண்டில் எதி பட்ட ஸ்தாபன கடமைகளையும் நிறைவேற்ற நாம் முயற்சிகளை மேற் கொண்டுள்ளோம். இத்துறையில் நாம் அடைந்துள்ள முன்னேற்றத்தை யும், தொடர்ந்து களைய வேண்டிய பலஹீனங்களையும் சரியாக மதிப்பீ செய்திட வேண்டும்.

புதிய மாநிலக்குழு தேர்வு

10-3 சென்னையில் நடைபெற்ற கடந்த மாநில மாநாட்டில் 7! பேர் கொண்ட மாநிலக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பிறகு தோழர் பி. சுந்தரராஜன்(செங்கை-எம்ஜிஆர் மாவட்ட செயலாளர் இணைக்கப்பட்டு 73பேர் மாநிலக்குழு உறுப்பினர்களாக செயல்பட்டு வந் தார்கள்.

10-4 மாநிலக்குழு உறுப்பினர்களில் தோழர் டி.பி. முத்துசாமி விபத்துக்குள்ளாகி மரணமடைந்தார். தோழர் ஆரோக்கியசாமி, ராஜி னாமா செய்துவிட்டார். இப்போது 71 பேர் மாநிலக்குழு உறுப்பின களாக செயல்பட்டு வருகிறார்கள். இவர்களில் 14 பேர்—தோழர்கள் ஏ.நல்லசிவன்,ஆர்.உமாநாத், என்.சங்கரய்யா, பி. ஆர். பரமேஸ்வரன், பி.ராமச்சந்திரன்,கே.ரமணி,ஆர்.ராமராஜ்,கே.முத்தையா, ஏ. அப்துல் வஹாப்,ஜி.வீரய்யன், என். வரதராஜன், ஏ.கே.பத்மநாபன், கே.வரத ராசன், டி.லட்சுமணன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாக தேர்ந் தெடுக்கப்பட்டார்கள்.தோழர் ஏ.நல்லசிவன் மாநிலக்குழு செயலாளராக

தேர்ந்தெடுக்கப்பட்டார். பிறகு பிப்ரவரி 1989—ல் திருவாரூரில் நடந்த மாநிலக்குழு கூட்டத்தில் தோழர்கள் வீ. மீனுட்சிசுந்தரம், டி. கே. ரங்க ராஜன், ஜி. ராமகிருஷ்ணன் ஆகிய மூவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களில் தோழர் ஆர். ராமராஜ், மாநில செயற்குழுவிலிருந்து விடுவிக்கப்பட்டு மதுரையில் தீக்கதிர் நிர்வாகப் பொறுப்பில் ஈடுபட்டு வருகிறுர். தோழர் பி. ராமச்சந்திரன், கட்சி காங்கிரஸ் முடிவுப்படி மத்திய செயற்குழு உறுப்பினராக பணியாற்றி வருகிறுர். தோழர் ஆர். உமாநாத் அரசியல் தலைமைக்குழு முடிவுப்படி இப்போது அகில இந்திய சிஐடியு மையத்தில் பணிபுரிகிறுர். ஆனுல் தோழர் ஆர். யு. வாய்ப்புள்ள போதெல்லாம் மாநில செயற்குழுவிலும், மாநிலக்குழுவிலும் கலந்து கொள்கிறுர். ஆக, இப்போது 14 பேரைக் கொண்ட செயற்குழு இயங்கி வருகிறது.

மாநில மையம்

10-5 தோழர்கள் *(1)* ஏ. நல்லசிவன் *(2)* என். சங்கரய்யா *(3)* பி. ஆர். பரமேஸ்வரன் *(4)* என். வரதராஜன் *(5)* டி. லட்சுமணன் ஆகியோர் மாநில மையத்திலிருந்து செயல்பட்டு வருகிறுர்கள்.

சி. ஐ. டி யு. மையம்

10-6 தோழர்கள் ஏ. கே. பத்மநாபன், கே. வைத்தியநாதன், சந்திரசேகரன், அண்மையில் டி. கே. ரங்கராஜனும் சேர்ந்து சி ஐ டி யு மாநில மையத்திலிருந்து செயல்படுகிறுர்கள்.

தீக்கதிர் மையம்

10-7 தோழர்கள் *(1)* கே. முத்தையா *(2)* ஏ. அப்துல் வஹாப் *(3)* வி. பரமேஸ்வரன் *(4)* ஆர். ராமராஜ் *(5)* அருணன் ஆகியோர் செயல்பட்டு வருகிறுர்கள்.

வி. ச. மையம்

10-8 கே. வரதராசன், ஜி. வீரய்யன், வி. ஏ. கருப்புசாமி ஆகியோர் செயல்பட்டு வருகிறுர்கள்.

மாவட்ட கமிட்டிகளுக்கு மாநில செயற்குழு தோழர்கள் பொறுப்பு:

10—9	*1)* சென்னை	பி. ஆர். பரமேஸ்வரன் ஏ நல்லசிவன் வீ. மீனுட்சிசுந்தரம்
	2) செங்கை எம். ஜி. ஆர்.	டி. இலட்சுமணன்
	3) வட ஆற்காடு	ஏ. கே. பத்மநாபன்
	4) தென்ஆற்காடு	பி. ஆர். பரமேஸ்வரன் ஜி. ராமகிருஷ்ணன்
	5) தஞ்சை (கி)	ஜி. வீரய்யன் கே. வரதராசன்

6)	தஞ்சை (மே)	ஜி. வீரய்யன்
7)	புதுக்கோட்டை	டி. கே. ரங்கராஜன்
8)	பெரியார்	கே. ரமணி
9)	திருச்சி	கே. வரதராசன்
10)	மதுரை	என். வரதராஜன்
11)	திண்டுக்கல் அண்ணா	என். வரதராஜன்
12)	முகவை—பசும்பொன்	லாசர் [மாநிலக்குழு உறுப்பினர்]
13)	காமராஜர்	அப்துல் வஹாப்
14)	நெல்லை கட்டபொம்மன்	டி. லட்சுமணன்
15)	சிதம்பரனார்	டி. லட்சுமணன்
16)	கோவை	ஏ. நல்லசிவன் என். வரதராஜன் கே. ரமணி
17)	சேலம்	பி. ஆர். பரமேஸ்வரன்
18)	தர்மபுரி	கே. வரதராசன்
19)	குமரி	என். வரதராஜன்
20)	பாண்டி	ஜி. ராமகிருஷ்ணன்
21)	நீலகிரி	ஆர். வெங்கிடு (மாநிலக்குழு உறுப்பினர்)

10–10. மாநில செயற்குழு தோழர்களுக்கு அரங்க பொறுப்புகள்

1)	ஏ. நல்லசிவன்	கட்சி மாநில மையம் (அரசியல் தலைமைக்குழு உறுப்பினர், மாநிலங்களவையின் உறுப்பினர்)
2)	என். சங்கரய்யா	கட்சி மாநில மையம், சட்டமன்றம், கண்ட்ரோல் கமிஷன்.
3)	பி.ஆர். பரமேஸ்வரன்	கட்சி மாநில மையம், கட்சி கல்வி, மார்க்சிஸ்ட் மாத இதழ், தபால்-தந்தி ஊழியர் அரங்கம், நிதிக் குழு, சமாதானக் குழு.
4)	என். வரதராஜன்	கட்சி மாநில மையம், ஆசிரியர் அரங்கம், சட்டமன்றம், நிதிக் குழு (பொருளாளர் பொறுப்பு)
5)	டி. லட்சுமணன்	கட்சி மாநில மையம், கட்சி கல்வி, அரசு ஊழியர் அரங்கம், சமாதானக் குழு.
6)	கே. வரதராசன்	வி.ச. மாநில மையம், கட்சி கல்வி, மாதர் அரங்கம்
7)	ஜி. வீரய்யன்	வி.ச. மாநில மையம், உழவன் உரிமை

8)	ஏ. கே. பத்மநாபன்	தொழிற்சங்க அரங்க மாநில மையம், மின்சாரம், மருத்துவ பிரதிநிதிகள், டாக்டர்கள்
9)	கே. முத்தையா	தீக்கதிர், முற்போக்கு எழுத்தாளர் சங்கம்
10)	ஏ. அப்துல் வஹாப்	தீக்கதிர், கண்ட்ரோல் கமிஷன்
11)	கே. ரமணி	போக்குவரத்து, மின்சாரம், பஞ்சாலை
12)	வீ. மீனாட்சி சுந்தரம்	வங்கி அரங்கம், கட்சிக் கல்வி
13)	டி.கே. ரங்கராஜன்	தொழிற்சங்க அரங்கம்
14)	ஜி. ராமகிருஷ்ணன்	தொழிற்சங்கம், வாலிபர்-மாணவர்-அறிவியல் அரங்கம், கட்சிக் கல்வி

மாநில மையம்

10-11 பெரும் முயற்சிக்குப்பின் மாநில மையம் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. சால்கியா பிளீனத்தில் ஒரு மாநில மையமே இல்லை என்ற நிலை போய் மெல்ல மெல்ல முன்னேறி இப்போது 5 செயற் குழு தோழர்கள் மாநில மையத்தில் இருந்து பணி ஆற்றி வருகிறார்கள். இத்தகைய செயல்பாட்டின் மூலம் நமது அரசியல் நிலையினை முன்னெடுத் துச் செல்ல முடிந்துள்ளது. மாவட்டக் குழுக்களுடன் நெருங்கிய தொடர்பு; வர்க்க-வெகுஜன அரங்கங்களுக்கு தொடர்ந்து வழிகாட்டுதல் ஆகியவற்றில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. இதர அரசியல் கட்சிகளுடன் உறவுகளை வளர்க்கவும், கருத்து பரிமாற்றம் செய்து கொள்ளவும் முடிந் துள்ளது. இந்த அரசியல் கட்சிகளை கூட்டு இயக்கங்களுக்கு கொண்டு வருவதில் முன்னேற்றம் காண முடிந்தது. சிக்கலான அரசியல் பிரச்சனை கள் முன்னெழுந்த போது அரசியல் தலைமைக்குழுவுடன் கலந்துகொண்டு முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளது. மாநிலக்குழு அலுவலகம் 24 மணிநேரமும் இயங்கும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது. மாநில செயற்குழு, மாநிலக்குழு கூட்டத்திற்கான அறிக்கைகள் தயாரிப்பது, முடிவுகளை உடனுக்குடன் சுற்றறிக்கையாக அனுப்புவது ஆகியவற்றிலும் பெரும் முன்னேற்றம்காண முடிந்துள்ளது.

10 12 இருந்தபோதிலும், ஒவ்வொரு அரங்கத்திலிருந்தும், வரும்
சப்-கமிட்டி மற்றும் ஃபிராக்ஷன் ரிப்போர்ட்களை உடனுக்குடன் மையத்
தில் விவாதித்து வழிகாட்டுதலில் உள்ள பலஹீனம் தொடரவே செய்
கிறது. மத்திய கமிட்டிக்கு எழுத்துபூர்வமாக அறிக்கைகள்
அனுப்புவதில் ஓரளவு பலஹீனம் நீடிக்கிறது. தீக்கதிர் மையத்துடன்
நெருக்கமான தொடர்பு வைத்து வெளியாகும் கட்டுரைகள், செய்
திகள் பற்றிய விமர்சன பூர்வமான ஆலோசனை வழங்குவது என்
பதில் பலஹீனம் உள்ளது. கட்சி கல்வியிலும் மேலும் கவனம்
செலுத்திட வேண்டியுள்ளது. இத்தகைய பணிகளுக்கு மையத்தில் கூடு
தலாக தோழர்கள் தேவைப்படுகிறது. தேர்தல் போன்ற காலங்களில்
மையத்தில் செயற்குழு தோழர்கள் இல்லாத நிலையும் ஏற்படுகிறது.

மாநில செயற்குழு

10-13 மாநில செயற்குழு 14 தோழர்களைக் கொண்டு செயல்படுகிறது. முதற் செயற்குழு கூட்டத்திலேயே தேதிகள் நிச்சயித்துக் கொள்வதோடு, பெரும்பாலும் எல்லா தோழர்களும் கலந்து கொள்ளும் சாத்தியப்பாடான தேதி நிர்ணயித்தே கூட்டங்கள் கூட்டப்படுகின்றன. அதனால், மாநில செயற்குழு கூட்டங்களுக்கு வருகை என்பது பெரும்பாலும் முழுமையாகவே இருக்கும். பெரும்பாலான செயற்குழு கூட்டங்களில் அதற்கு முன்னால் நடந்த பணிகள் பற்றி எழுத்து மூலமான வேலை அறிக்கைகள் வைக்கப்படுகின்றன.

10-14 பிராக்ஷன் கூட்டங்களின் முடிவுகளும், சப்-கமிட்டி முடிவுகளும் எழுத்து பூர்வமாக செயற்குழு தோழர்களுக்கு வழங்கப்படுகிறது. மாநில செயற்குழு கூட்டங்களில் அவ்வப்போது எழும் அரசியல் பிரச்சனைகள், கட்சி மற்றும் வெகுஜன அமைப்புகளின் முக்கிய ஸ்தாபன இயக்கப் பிரச்சனைகள், அரங்கங்களில் எழும் முக்கிய பிரச்சனைகள் போன்றவை குறித்து விவாதிக்கப்படுகிறது. கட்சியின் அரசியல் தலைமைக்குழு மற்றும் மத்திய கமிட்டி எடுக்கும் அரசியல் ஸ்தாபன இயக்கம் சம்பந்தமான முடிவுகளை தமிழகத்தில் அமுல்படுத்துவது குறித்தும் செயற்குழு கூட்டங்களில் விவாதித்து நடைமுறைப்படுத்தப்படுகிறது.

10-15 கீழ்க்குறிப்பிட்ட சப்-கமிட்டிகளும், பிராக்ஷன்களும் மாநில செயற்குழுவின் நேரடி பொறுப்பில் இருந்து இயங்கி வருகின்றன.

சப்-கமிட்டிகள் :

1) தொழிற்சங்க சப்–கமிட்டி
2) வி.ச. சப்-கமிட்டி
3) தீக்கதிர் சப்–கமிட்டி
4) கலை-இலக்கிய சப்-கமிட்டி
5) கட்சி கல்வி சப்-கமிட்டி

மாநில பிராக்ஷன்கள்:

1) வாலிபர் அரங்கம்
2) மாணவர் அரங்கம்
3) மாதர் அரங்கம்
4) அறிவியல் அரங்கம்
5) மின் அரங்கம்
6) போக்குவரத்து அரங்கம்
7) அரசு ஊழியர் அரங்கம்
8) ஆசிரியர் அரங்கம்
9) தபால்-தந்தி அரங்கம்

10) வங்கி அரங்கம்

11) மருத்துவ பிரதிநிதிகள் அரங்கம்

12) டாக்டர்கள் அரங்கம்

13) இரயில்வே அரங்கம்

14) எல்ஐசி அரங்கம்

மாநிலக்குழு

10-16 மாநிலக்குழுவை ஜனநாயக முறையில் நடத்துவதற்கான முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அதில் ஓரளவு வெற்றியும் காணப்பட்டுள்ளது. மாநிலம் தழுவிய அனைத்து கொள்கை முடிவுகள் பற்றியும் அரசியல் ஸ்தாபன பிரச்சனைகள் பற்றியும் மாநிலக்குழு கூட்டங்களில் விவாதித்த பின்னரே அமுல்படுத்தப்படுகிறது. ஓரிரு சமயங்களில் அவசர அவசியத்தையொட்டி மாநில செயற்குழு சில பிரச்சனைகள் மீது முடிவுகள் எடுக்கிறது.

10-17 சட்டமன்ற தேர்தல்களிலும், பாராளுமன்ற தேர்தல்களிலும் வேட்பாளர்களை நியமிப்பது, தொகுதிகளை நிர்ணயிப்பது போன்ற முக்கிய பிரச்சனைகளில் மாவட்டக்குழு அளவிலும் விவாதித்து, பின் மாநிலக்குழுவிலும் விவாதித்து, முடிவுகள் எடுப்பதில் முழுமையாக கவனம் செலுத்தப்பட்டது.

10-18 மாநிலக்குழு உறுப்பினர்களையும், மாநில ரீதியான பணிகளில் ஈடுபடுத்த வேண்டும் என்ற நோக்கில் ஓரளவு வெற்றியும் கண்டுள்ளோம். உதாரணமாக கீழ்க்குறிப்பிட்ட அரங்கங்களை மாநிலக்குழு உறுப்பினர்கள் பொறுப்பேற்று பணியாற்றி வருகிறார்கள்.

சி.ஐ.டி.யு.	கே. வைத்தியநாதன்
விவசாய அரங்கம்	வி.ஏ. கருப்புசாமி
மாதர் அரங்கம்	பாப்பா உமாநாத், மைதிலி சிவராமன்
தீக்கதிர்	வி. பரமேஸ்வரன், ஆர். ராமராஜ், அருணன்
வாலிபர் அரங்கம்	எஸ்.பி. அகத்தியலிங்கம்
போக்குவரத்து அரங்கம்	ஏ. செளந்தரராஜன்
இரயில்வே அரங்கம்	வி. இராமதாஸ்
மின் அரங்கம்	டி. ஜானகிராமன்
முற்போக்கு எழுத்தாளர் சங்கம்	அருணன்
கட்சி மாநில மையம்	க. உதயகுமார்

10-19 இதுதவிர தோழர் லாசர், தோழர் ஆர். வெங்கிடு ஆகிய மாநிலக்குழு உறுப்பினர்களுக்கு முறையே முகவை மற்றும் நீலகிரி மாவட்டங்களுக்கு உதவி செய்யும் பணி தரப்பட்டுள்ளது. பொதுக்கூட்டங்களில்

கலந்து கொள்ளவும், வகுப்பு—அரசியல் ரிப்போர்ட் தரவும் சில மாநிலக் குழு தோழர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள்.

10-20 பெருவாரியான மாநிலக்குழு உறுப்பினர்கள், மாவட்டங்களில் ஸ்தாபனப் பொறுப்பினை ஏற்று நிறைவேற்றி வருகிறார்கள்.

1)	உ.ரா. வரதராசன்	சென்னை மாவட்ட மையம், தொழிற்சங்க அரங்கம்
2)	பி.ஜி. கிருஷ்ணன்	சென்னை மாவட்ட மையம், தொழிற் சங்க அரங்கம்
3)	பி. சுந்தரராஜன்	செங்கை மாவட்ட செயலாளர்
4)	ஆர். சங்கரன்	பாண்டிச்சேரி மாவட்ட செயலாளர்
5)	கே. பாலகிருஷ்ணன்	தென்னாற்காடு மாவட்ட செயலாளர்
6)	சி. கோவிந்தராஜன்	தென்னாற்காடு மாவட்ட மையம், தொழிற் சங்க அரங்கம்
7)	என். ஆர். ராமசாமி	தென்னாற்காடு மாவட்ட மையம் வி. ச. அரங்கம்
8)	எம். செல்லமுத்து	கி. தஞ்சை மாவட்ட செயலாளர் வி. தொ. ச. அரங்கம்
9)	வி. தம்புசாமி	கி. தஞ்சை மாவட்ட மையம் சட்டமன்ற பணி
10)	பாரதிமோகன்	கிழக்கு தஞ்சை மாவட்ட மையம்
11)	பி. எஸ். தனுஷ்கோடி	கிழக்கு தஞ்சை மாவட்ட மையம்
12)	ஜி. ரத்தினவேலு	திருச்சி மாவட்ட செயலாளர்
13)	பி. கே. கருப்புசாமி	திண்டுக்கல் அண்ணா மாவட்ட செயலாளர்
14)	எஸ்.ஏ. தங்கராஜன்	திண்டுக்கல் அண்ணா மாவட்ட மையம் தொழிற்சங்க அரங்கம்
15)	பி. சண்முகம்	புதுக்கோட்டை மாவட்ட செயலாளர்
16)	கருப்புராஜா	முகவை மாவட்ட செயலாளர்
17)	பி. மோகன்	மதுரை மாநகர் மாவட்ட செயலாளர்
18)	பி. எம். குமார்	மதுரை மாநகர் மாவட்ட மையம், தொழிற்சங்க அரங்கம்
19)	கே.பி. ஜானகியம்மாள்	உடல்நிலையின் காரணமாக பணியாற்ற இயலவில்லை
20)	நன்மாறன்	மதுரை மாநகர் மாவட்ட மையம்
21)	ஏ. லாசர்	மதுரை புறநகர் மாவட்ட செயலாளர்
22)	எஸ்.ஏ. பெருமாள்	காமராஜர் மாவட்ட செயலாளர்
23)	வி. பழனி	நெல்லை மாவட்ட செயலாளர்

24) எம். பாண்டியன் — நெல்லை மாவட்ட மையம்
25) பி. சம்பத் — சிதம்பரனூர் மாவட்ட செயலாளர்
26) ஜே. ஹேமச்சந்திரன் — குமரி மாவட்ட செயலாளர்
27) பி. திவாகரன் — குமரி மாவட்ட மையம்,
வி.ச. அரங்கம்
28) கே. தங்கவேல் — கோவை மாவட்ட செயலாளர்
29) சி. கோவிந்தசாமி — கோவை மாவட்ட மையம்
30) ஆறுமுகம் — கோவை மாவட்ட மையம்
31) ஆர். வெங்கிடு — கோவை மாவட்ட மையம்
32) வி. கணேசன் — தற்போது அரங்கம் நிச்சயிக்கப்படவில்லை
33) என். வாசு — நீலகிரி மாவட்ட செயலாளர்
34) கே. துரைராஜ் — பெரியார் மாவட்ட செயலாளர்
35) பி. தர்மலிங்கம் — சேலம் மாவட்ட செயலாளர்
36) கே. கருணாகரன் — சேலம் மாவட்ட மையம்,
தொழிற் சங்க அரங்கம்
37) கே.ஆர். சுந்தரம் — வடஆற்காடு அம்பேத்கார் மாவட்ட
செயலாளர்
38) டி.ஆர். புருஷோத்தமன் — வடஆற்காடு அம்பேத்கார் மாவட்ட மையம்
39) ஆர்.சி. பழனிவேல் — மே. தஞ்சை மாவட்ட செயலாளர்
40) என். சீனிவாசன் — மே. தஞ்சை மாவட்ட மையம்
41) பி. குமரவேல் — புதுக்கோட்டை மாவட்டம்
42) கே.எம். ஹரிபட் — தர்மபுரி மாவட்ட செயலாளர்
43) யு.கே. வெள்ளிங்கிரி — கோவை மாவட்ட மையம்,
தொழிற் சங்க அரங்கம்

10-21 பெருகி வரும் மாநில கட்சி ஸ்தாபன பணிகளை மாநிலக் குழு உறுப்பினர்கள் இன்னும் கூடுதலான பொறுப்பினை ஏற்று நிறைவேற்றி வைத்திட வேண்டும் என்றும், புதிய மாநிலக்குழு இந்த வகையில் வேலைப் பிரிவினைக்கு திட்டமிட வேண்டும் என்றும் மாநிலக்குழு தீர்மானித்துள்ளது.

10-22 மாநில மையம், மாநில செயற்குழு, மாநிலக்குழுவின் செயல்பாட்டில் ஓரளவு அபிவிருத்தி கண்டுள்ளதால், மாநில செயற்குழுவும், மாநிலக்குழுவும் கட்சியின் அரசியல் சித்தாந்த வழியில் நின்று ஒற்றுமையுடன் செயல்பட முடிந்துள்ளது.

10-23 சென்ற 13வது மாநில மாநாட்டிற்குப்பின் மாநில செயற்குழு கூட்டங்கள் 53 முறையும், மாநிலக்குழு கூட்டங்கள் 17 முறையும் நடந்துள்ளன. மாநில செயற்குழு கூட்டம் 3 வாரங்களுக்கு ஒரு முறையும், மாநிலக்குழு கூட்டம் இரு மாதத்திற்கு ஒரு முறையும் நடைபெற்றுள்ளது.

மாநிலக்குழு கூட்டங்களில் 95% உறுப்பினர்கள் வருகை தரும்நிலை உள்ளது.

10-24 ஸ்தாபனத் துறையில் மேற்கூறப்பட்ட வகையில் ஓரளவு முன்னேற்றம் இருப்பினும் சில பலஹீனங்கள் தொடரவே செய்கின்றன.

10-25 ஏராளமான அரங்கங்களுக்கு மையத்திலிருந்து வழி காட்ட வேண்டியுள்ளது. மையத்தில் தற்போதுள்ள ஊழியர்களை மட்டும் வைத்து இந்தப் பணிகளுக்கு ஈடு கொடுப்பதில் சிரமம் உள்ளது, தோழர் ஆர். உமாநாத் அகில இந்திய தொழிற்சங்க மையபணிக்கு டெல்லிசென்று விட்டார். வி. ச. அரங்கப் பணியினை மேலும் பலப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் மாநில மையத்திலிருந்து பணியாற்றி வந்த தோழர் கே. வரத ராசன் வி.ச.வின் பொதுச்செயலாளராக பொறுப்பு ஏற்று பணியாற்று கிறார். மற்ற மையத் தோழர்களுக்குள்ள அரங்க வேலைகளும், மாவட்டப் பொறுப்புகளும் சேர்ந்து மைய வேலைக்கு போதுமான தோழர்கள் கிடைக் காத நிலை இப்போது உள்ளது.

10-26 சில நேரங்களில் முன்னுரிமை கொடுத்து ஆற்றவேண் டிய பணிகளும் தள்ளிப் போகிறது. மாநிலக்குழுவிலிருந்து மத்தியக் கமிட் டிக்கு தகவல் கொடுக்கும் வேலைகள் தொடர்ந்து நடைபெறும் பணியாக மேற்கொள்ளவில்லை. அவ்வப்போது நடக்கும் சில முக்கிய பிரச்சனைகள் மீது மட்டுமே, உதாரணமாக, ''பாரத் பந்த்'', தேர்தல், காவிரி பிரச்சனை போன்றவைகள் பற்றி மட்டும் எழுத்துபூர்வமான அறிக்கைகள் அனுப்பப் படுகின்றன. மற்றும் மாநிலத்தில் நடைபெறும் மாநிலம் தழுவிய அரசியல் இயக்கங்கள், வர்க்க, வெகுஜன இயக்கங்கள் பற்றி மத்திய கமிட்டிக்கு தகவல் அனுப்புவதில் பலஹீனம் உள்ளது.

10-27 மாநில செயற்குழு உறுப்பினர்கள், மாநிலக்குழு உறுப் பினர்கள் ஆகியோர் தரும் எழுத்துபூர்வமான அறிக்கைகள் மீது பரி சீலனை என்பது முறையாக நடைபெறுவதில்லை. இந்தக் குறைபாடுகளை நீக்க மாநில மையப் பணிகளுக்கு கூடுதலாக இரண்டு, மூன்று தோழர் களை கொண்டுவர வேண்டியுள்ளது.

மாவட்டக்குழுக்கள்:

10-28 சென்றஆண்டு நடைபெறுவதாக இருந்த அகிலஇந்திய பிளீ னத்தையொட்டி நமது மாநிலக் குழுவில் ஸ்தாபனம் குறித்து விவாதித்து முடிவு செய்தபடி, வடஆற்காடு மாவட்டக் குழுவினை வடஆற்காடு - அம் பேத்கார், திருவண்ணாமலை - சம்புவராயர் என இரு மாவட்டக் குழுக் களாகவும், தென்ஆற்காடு மாவட்டக் குழுவினை, தென்ஆற்காடு - வள்ள லார் என இரு மாவட்டக் குழுக்களாகவும், மதுரை மாவட்டக் குழுவினை மதுரை நகர் மற்றும் மதுரை புறநகர் என இரு மாவட்டக் குழுக்களாக வும் நடைபெற்று முடிந்த மாவட்ட மாநாடுகளில் பிரிக்கப்பட்டன.

10-29 ஆக, இப்போது 24 கமிட்டிகள் மாவட்ட அந்தஸ்தில் செயல்பட்டு வருகின்றன. மாவட்டங்களில் கட்சிப் பணிகள் அதிகரித்து வருவதாலும், பொறுப்புகளை பகிர்ந்து அளிக்க வேண்டிய கட்டாயம் ஏற்

பட்டதாலும் மாவட்டக் கமிட்டி உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் மாவட்டக் குழுக்கள் கோரியிருந்தன. இதனடிப்படையில் எல்லா மாவட்டக் குழுக்களிலும் உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்ட குழு தவிர இதர அனைத்து மாவட்டக் குழுக்களும் அலுவலக வசதியோடு செயல்பட்டு வருகின்றன.

10-30 நடந்து முடிந்த வேலைகளையும், இயக்கங்களையும் எழுத்து மூலமாக வைத்து அதை மாவட்ட செயற்குழுவிலும், மாவட்டக்குழுவிலும் வைத்து விவாதிப்பது, பரிசீலனை செய்வது என்கிற நடைமுறையை அமுல் படுத்தினால் மாவட்டக் குழுவிற்கு ஒட்டு மொத்தமான அனுபவமும், படிப்பினையும் உருவாக வழியுண்டு. இதை அமுல்படுத்துவதில் மாவட்ட மையங்களில் பலஹீனம் நீடிக்கிறது. சிதம்பரனார் மாவட்டக் குழுவில் கடந்த மூன்று ஆண்டுகளில் 26முறை நடைபெற்ற மாவட்டக் குழு கூட்டங்களில் இயக்கங்கள் குறித்து 21முறை எழுத்து பூர்வமான அறிக்கைகள் வைத்து விவாதித்துள்ளது. அதனால், அங்கு மாவட்டக்குழு உறுப்பினர்களுக்கு மாவட்டம் தழுவிய வேலைகள், ஸ்தாபன செயல்பாடுகள் குறித்து ஞானமும், அனுபவமும் கிடைத்துள்ளது என்பதையும் பார்க்க முடிகிறது. இந்தப் பணி கடுமையானதுதான். ஆனால் முயற்சி எடுத்து நிறைவேற்றினால் மாவட்டக் குழுவில் அனுபவ இணக்கமும், செயல்படுவதில் ஒற்றுமை பலமும் உருவாக வழியுண்டு.

10-31 மத்தியக் கமிட்டியின், மாநிலக் குழுவின் ஏராளமான அறைகூவல்களை ஏற்று, மாவட்டக்குழுக்கள் இயக்கங்கள் நடத்துகின்றன. மாவட்டக் குழுக்களே திட்டமிட்டு சுயமான இயக்கங்களும் நடத்துகின்றன, ஆனால் அவைகளை உடனுக்குடன் மாநில மையத்திற்கு எழுத்து பூர்வமான தகவல் தெரிவிக்கும் போக்கை ஒரு சில மாவட்ட கமிட்டிகள் தான் தொடர்ந்து கடைப்பிடிக்கின்றன.

10—32 மாவட்டக்குழு செயல்பாட்டில், மாவட்ட மைய செயல்பாடு என்பது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. மாவட்ட மையம் சீராக செயல்பட வேண்டும் என்பதில் மாநில செயற்குழு கடுமையாக முயற்சிகள் எடுத்து அதில் ஓரளவு முன் னேற்றம் கண்டுள்ளது அநேகமாக பெரும்பாலான மாவட்டங்களில் மாவட்ட மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை ஒழுங்காக கூடுவதில் பலஹீனம் உண்டு. இதை ஒழுங்காக கூடவைப்பதில்கூட மாநில செயற்குழு தலையிட வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. எங்கெல்லாம் மாவட்ட மையங்கள் ஒழுங்காக செயல்படுகின்றனவோ அங்கெல்லாம் ஸ்தாபன இயக்கப் பணிகளில் முன்னேற்றம் உள்ளது. மையம் சீராகசெயல் படும் இடங்களில் மாவட்டக் குழுக்கள் சீராக செயல்பட உதவுகிறது.

10—33 ஆனால் இன்னும் ஒரு சில மாவட்டங்களில் மையம் என்பதே மிக பலஹீனமாக உள்ளது. உதாரணமாக, செங்கை-எம்ஜிஆர் மாவட்டம், அம்பேத்கார், புதுக்கோட்டை, நீலகிரி, குமரி, முகவை, தருமபுரி போன்ற மாவட்டங்களில் மைய செயல்பாட்டில் அபிவிருத்தி காண வேண்டியுள்ளது.

10-34 சென்னை, சிதம்பரனூர், நெல்லை, மதுரை, திண்டுக்கல், திருச்சி, மே. தஞ்சை, கி. தஞ்சை, கோவை, தென்ஆற்காடு, பாண்டிச்சேரி போன்ற மாவட்டங்களில் தொடர்ச்சியாக மாவட்ட மையங்கள் கூடுவதில் முன்னேற்றம் உண்டு; ஒப்பிடும்போது சில ஏற்றத்தாழ்வுகள் இருக்கலாம்.

10-35 எல்லா மாவட்டங்களிலும் மையங்களை சீராக செயல்பட வைக்க வேண்டிய பிரதான கடமை நம்முன்னால் உள்ளது.

10-36 மாவட்டக்குழு கூடுவதில் எல்லா மாவட்டங்களிலும் முன்னேற்றம் இருந்தாலும், வரவு-செலவு கணக்குகளை பராமரிப்பது, மூன்று மாதத்திற்கு ஒருமுறை மாவட்டக்குழுவின் ஒப்புதல் வாங்குவது, கணக்குகள் தணிக்கை செய்யப்படுவது, நிதிக்குழு அமைத்து அவைகளின் ஒப்புதலுடன் செலவுகள் செய்வது என்பதில் பல மாவட்டங்களில் பெரும் குறைபாடு உண்டு. சில மாவட்டங்களில் மாவட்ட செயலாளரே வரவு-செலவு பார்க்கும் நிலையும் உண்டு; மாவட்ட செயலாளர் நிதி பொறுப்புகளை கவனிக்கக்கூடாது; அதற்கு தனி ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

10-37 சில மாவட்ட செயலாளர்கள் தொழிற்சங்க பணிகளில் பொறுப்புகளை ஏற்றும் செயல்பட்டு வருகிறார்கள். தொழிற் சங்கப் பணிகளிலிருந்து அப்படிப்பட்ட மாவட்ட செயலாளர்களை படிப்படியாக விடுவித்து கட்சி ஸ்தாபன பணிகளில் முழுமையாக ஈடுபட்டிட வேண்டும்.

10-38 மாவட்ட செயலாளர்களில் சிதம்பரனூர் மாவட்ட செயலாளரும், சம்புவராயர் மாவட்ட செயலாளரும்தான் பகுதி நேர ஊழியர்களாக பணியாற்றுகிறார்கள்.

10-39 மாவட்ட குழு, மாவட்டக் செயற்குழு, மாவட்ட மையம்— இவைகளின் செயல்பாடுகள் குறித்து பரிசீலனை செய்ய வேண்டும் என மாநில செயற்குழு முடிவெடுத்து இது சம்பந்தமான கேள்வித்தாள்கள் தயாரித்து மாவட்ட கமிட்டிகளுக்கு அனுப்பியது. மாவட்டங்களிலிருந்து கிடைத்த இத்தகைய ஸ்தாபனம் குறித்த விபரங்களின் அடிப்படையில், ஒன்றுக்கும் மேற்பட்ட மாநில செயற்குழு தோழர்கள் அந்தந்த மாவட்ட செயற்குழு, மாவட்டக்குழு கூட்டங்களில் கலந்து கொண்டு மாவட்ட ஸ்தாபனம் பற்றி விரிவாக பரிசீலனை செய்யப்பட்டது. பல்வேறு மாநில பணிகளுக்கு மத்தியில் தொடர்ந்து 6-மாத காலம் இத்தகைய பணிகளில் மாநில செயற்குழு தோழர்கள் பங்கேற்றனர். இந்த ஸ்தாபன பரிசீலனைக்கான கூட்டங்களில் மாவட்ட ஸ்தாபன செயல்பாடு, கமிட்டிகளை விரிவுபடுத்துதல், ஸ்தாபன தேவைகளுக்கேற்ப புதிய மாவட்டக்குழு உறுப்பினர்களை இணைத்தல், செயல்படாத தோழர்களை மாவட்டக்குழு பொறுப்புகளிலிருந்து விடுவித்தல், கட்சியின் நிதி ஆதாரம், முழு நேர ஊழியர்களுக்கு அலவன்ஸ் வழங்குவதற்கான உத்தரவாதமான ஏற்பாடு, மாவட்டத்தில் முன்னுரிமை கொடுத்து பணியாற்ற வேண்டிய பணிகள் ஆகியவை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டு வழிகாட்டப்பட்டது. இது மாவட்ட கட்சி ஸ்தாபனத்தைப் பலப்படுத்த பெரும் உதவியாக இருந்தது. இந்த காலத்தில் நாம் மேற்கொண்ட மிகச் சிறந்த ஸ்தாபனபணியாகும் இது. மாவட்டங்களில் நடந்த கட்சி ஸ்தாபன

பரிசீலனை அறிக்கைகளையும், முடிவுகளையும் மாநிலக்குழுவின் பொது ஞானமாக்காத பலஹீனம் ஏற்பட்டது. குறைந்தது வருடத்திற்கு ஒரு முறையாவது மாவட்ட கட்சி ஸ்தாபன பரிசீலனை அவசியம் என்பதை அனுபவம் காட்டுகிறது.

மாவட்ட, தாலுகா மாநாடுகள்

10-40 அண்மையில் நடைபெற்ற அனைத்து மாவட்ட மாநாடுகளும் சிறப்பாக நடைபெற்றுள்ளன. மாநாடு நடத்துவதற்கான அரங்கம் கிடைப்பதில் ஏற்பட்ட சிரமம் காரணமாக தெ. ஆ., தருமபுரி மாவட்ட மாநாடுகளின் தேதிகளை இருமுறை மாற்றி வைக்க வேண்டியிருந்தது. சமீபத்தில் நடைபெற்ற பஸ் கட்டண மறியலின் விளைவாக தெ. ஆற்காடு, தருமபுரி ஆகிய இரு மாவட்ட மாநாடுகள் நடத்துவதில் சிறிது சிரமமேற்பட்டது, மற்ற மாவட்ட மாநாடுகளில் 90 முதல் 95% வரை தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். சேலம் மாவட்ட மாநாட்டில் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளில் 65 பேர் வரை கலந்து கொள்ளாதது கவனிக்கப்படவேண்டிய விஷயமாகும். பொதுவாக நடந்து முடிந்த அனைத்து மாநாடுகளின் இறுதிநாள். பேரணி மற்றும் பொதுக் கூட்டங்களில் பெருமளவு கட்சி அணிகள் உற்சாகமாக கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

10-41 மாவட்ட மாநாடுகள் சிறப்பாக நடைபெற்ற அளவிற்கு, பிரதிநிதிகள் வருகை புரிந்த அளவிற்கு பாதிக்கு மேற்பட்ட இடைக்கமிட்டி மாநாடுகள் சிறப்பாக நடைபெறவில்லை என்பதையும் பார்க்க முடிந்தது. குறிப்பாக பிரதிநிதிகள் வருகை என்பது 45% மட்டுமே இருந்த வட்ட/இடைக் கமிட்டி மாநாடுகளும் உண்டு இதுபற்றி பரிசீலனை செய்து எதிர்காலத்தில் வட்ட/இடைக்கமிட்டிகளின் ஸ்தாபன அமைப்புகளை பலப்படுத்திட வேண்டியுள்ளது.

வட்டக்குழுக்கள்—இடைக்கமிட்டிகள்

10-42 தாலுகா கமிட்டிகள், இடைக் கமிட்டிகள் என்பவைதான் மாவட்டக் கமிட்டிகளுக்கும், கிளைகளுக்கும் இடையில் தொடர்புபடுத்தும் ஸ்தாபன அமைப்புகள். இவைகளின் செயல்பாட்டின் முன்னேற்றத்தை வைத்துதான் கட்சி கிளைகளின் செயல்பாடுகளை செழுமைப்படுத்தமுடியும். மாவட்ட கமிட்டிகளுக்கு பல வகையில் உதவிடும் ஸ்தாபன தளமாக இவைகள் செயல்பட முடியும். ஆனால் நம் முன்னால் உள்ள பல்வேறு அரசியல் கடமைகளை, ஸ்தாபன ஏற்பாடுகளை நிறைவேற்றுவதில் இடைக் கமிட்டிகள் வெகுதூரம் முன்னேற வேண்டியுள்ளது. இவைகளை கருத்தில் கொண்டுதான் ஸ்தாபன சம்பந்தமாக விவாதிக்கப்பட்ட மாநிலக்குழுவில் ''இடைக் கமிட்டிகளை பலப்படுத்துவோம்'' என்ற கோஷம் வைக்கப் பட்டது.

10-43 தற்போதுள்ள தாலுகா கமிட்டிகளில் மூன்றில் ஒருபகுதி அமைப்புகள்தான் முறையான செயல்பாட்டுடன் இயங்குகின்றன. இந்த நிலைமையை களைந்து அனைத்து கமிட்டிகளையும் முறையாக செயல்பட

வைக்க பெரும் முயற்சி செய்ய வேண்டும். அனைத்து தாலுகா கமிட்டிகளுக்கும் கட்சி அலுவலகம் உருவாக்கப்பட வேண்டும்.

10-44 தாலுகா கமிட்டி உறுப்பினர்கள் நன்கு பயிற்சிக்கப்பட வேண்டும். தாலுகா கமிட்டிகளின் பணிகளை கண்காணிப்பதிலும் குறைபாடுகள் உண்டு. எடுக்கப்பட்ட முடிவுகளை இடைக்கமிட்டிகள் நிறைவேற்றுகின்றனவா என்பதை பார்வையிடுவதும் கண்காணிப்பதும், மாவட்ட மையத்தின் கடமையாகும். எங்கெல்லாம் மாவட்ட மையங்கள் குறிப்பாக, மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள், எடுத்த முடிவுகளை இடைக்கமிட்டிகள் நிறைவேற்றுகின்றனவா என்று கண்காணிக்கிறார்களோ அவ்வப்போது எழும் பிரச்சனைகளில் தலையிட்டு தீர்வுகாணுகிறார்களோ, தொய்வு இருந்தால் அதை களைவதற்கு உதவி செய்கிறார்களோ அங்கெல்லாம் இடைக்கமிட்டிகள்/வட்டக்குழுக்கள் ஓரளவு செயல்படுகின்றன.

10-45 இப்போதும்கூட பெரும்பாலான இடைக்கமிட்டி, தாலுகா குழு உறுப்பினர்கள் சுயேட்சையாக கிளைகளுக்கு அரசியல் ரிப்போர்ட் செய்ய முடியாமல் உள்ளனர். சுயமாக படித்து குறிப்புகள் எடுத்துக்கொண்டு ரிப்போர்ட் செய்வது, அடிப்படை மார்க்சீய நூல்களைப் படித்து தத்துவார்த்த ரீதியாக தங்களை வளர்த்துக் கொள்வது என்பதில் தாலுகா கமிட்டி உறுப்பினர்கள் மேலும் ஊக்குவிக்கப்பட வேண்டியவர்களாக உள்ளனர்.

10-46 பல தாலுகா குழுக்களில், இடைக்கமிட்டிகளில் திட்டமிட்ட நிதி ஆதார ஏற்பாடு என்பது இல்லை. அவ்வப்போது வரும் பணிகளு-க்கு அவ்வப்போது நிதி வசூலித்து இயக்கம் நடத்துவதோடு சரி. நிதி ஆதாரத்தை ஒரு நிரந்தர ஏற்பாடாக உருவாக்கிக் கொள்ளவேண்டும் என்பதில் பலஹீனம் நீடிக்கிறது. இதனால் நிதி இல்லாத காரணத்தால் இயக்கம் சம்பந்தமான துண்டு பிரசுரங்கள்கூட வெளியிட முடியாமல் அந்தப்பணிகள் விடப்படும் நிலையும் சில நேரங்களில் ஏற்பட்டதுண்டு.

10-47 எனவேதான் தாலுகா குழுக்கள், இடைக்கமிட்டிகள் திட்டமிட்ட நிதி ஆதாரத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. இதற்கு மாவட்டக்குழுக்கள் இடைக்கமிட்டிகளு-க்கு உதவவேண்டும், வழிமுறைகளை வகுத்துத்தர வேண்டும்.

10-48 மாவட்ட கமிட்டிகள், தாலுகா கமிட்டிகளுக்கு பிரசுரங்கள் வாங்கித் தந்தால் அவைகளை தாலுகா கமிட்டிகள் விற்றுவிட்டு, வசூலாகும் தொகையை மாவட்டக் கமிட்டிகளுக்கு உடனுக்குடன் வழங்காமல் கணிசமான தொகை நிலுவையில் உள்ளது. இதனால் மாவட்டக்குழுக்கள் தொடர்ந்து பிரசுரங்கள் வாங்கி விநியோகிக்க முடியாமல் அந்தப் பணியே தடைபட்டுப் போகிறது.

10-49 ஆனால் இவ்வளவு குறைபாடுகளுக்கு இடையிலேயும் தாலுகா கமிட்டிகள், இடைக் கமிட்டிகள் அரசியல் ஸ்தாபன பணிகளை ஆற்றி வருகின்றன. எனவே இடைக்கமிட்டிகளின், தாலுகாகமிட்டிகளின் குறைபாடுகள் நீக்கப்பட்டு, அமைப்புகள் மேலும் பலப்பட்டு செயல்படு

மானுல் நம்முடைய அரசியல் வீச்சு மேலும் அதிகமாக, பரவலாக அமைய வாய்ப்புஉண்டு.

கட்சிக் கிளைகள்

10-50 தற்போது மாநிலம் முழுவதும் 5877 கட்சிக் கிளைகள் உள்ளன; தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கான கிராமங்கள், சிற்றூர்கள் உள்ள நிலையில் இந்த எண்ணிக்கை என்பது மிகமிக குறைவுதான்.

10-51 கிராமப்புறங்களில் ஆண்டு பூராவும் இரண்டு அல்லது மூன்று முறை கூடுகின்ற கிளைகள் உண்டு. உறுப்பினர் புதுப்பித்தலுக்கு மட்டும் கூடுகின்ற கிளைகளும் சில உண்டு. உறுப்பினர் புதுப்பித்தலுக்காக கூட்டப்படுகின்ற கிளைகள் கூட முதல் முயற்சியிலேயே கூடுவது இல்லை. இரண்டு, மூன்று முறை முயற்சி எடுத்துதான் கூட்ட வேண்டும். ஆக, கிராமப்புறங்களில் ஆண்டுக்கு ஒருமுறை உறுப்பினர் புதுப்பித்தலுக்காக கூடுகின்ற கிளைகள் 30 சதவீதம் இருக்கும்.

10-52 ஆனுல், நகர்ப்புறங்களில் ஆண்டுக்கு 3 அல்லது 6 முறை கூடுகின்ற கிளைகள் உண்டு. இவைகளையெல்லாம் கணக்கிடுகின்ற போது தானுக முன்வந்து கூடும் கிளைகள் என்பது 15சதமே இருக்கும் என நாம் ஊகிக்க முடியும். மேல் கமிட்டி தோழர்கள் சென்று கலந்து கொண்டால் தான் கூடும் கிளைகளும் உன்டு.

10-53 ஆனுல், தேர்தல் காலத்தில் மாநாடுகள் போன்ற விசேஷ காலத்தில் கூடும் கிளைகள் கணிசமாக உண்டு. மக்களோடு நேரிடையாக தொடர்பு உள்ள அமைப்பு கட்சி கிளைதான். இந்த கிளைகளின் செயல்பாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டால்தான் நம் வளர்ச்சிக்குத் தேவையான வலுவான அமைப்புகளை உருவாக்க முடியும். இந்த கிளைகள் ஜீவனுடன் செயல்பட வேண்டும்.

10-54 மாவட்ட, மாநில அளவிலான இயக்கங்களையொட்டி நடைபெறுகிற பிரச்சாரங்களில் மட்டுமே கிளைகள் பங்கு பெறுகின்றன. ஸ்தல இயக்கங்களைத் தங்களது முன்முயற்சியால் நடத்தும் கிளைகள் மிகக் குறைவே.

10-55 ஸ்தல பிரச்னைகளை எடுத்து செயல்பட்ட கட்சி கிளைகளுக்கு மக்கள் மத்தியில் மரியாதையும், பிடிப்பும் ஏற்பட்டுள்ளது. அப்படி உள்ள போது கட்சிக் கிளைகள் இந்த முக்கியமான பிரச்னைகளில் கவனம் செலுத்துவது அவசியமாகும். கட்சியின் தாலுகா குழுவின் தலையீடு இதற்கு தேவைப்படுகிறது. இத்தலையீடு தொடர்ந்து இருந்தால் கட்சிக் கிளைகள் ஸ்தல பிரச்னைகளை எடுத்து இயக்கம் நடத்த இயலும்.

10-56 கட்சிக் கிளைகளை மாதம் ஒருமுறை கூட்டும் கட்டாயத்தை உருவாக்கிட மேல் கமிட்டி உறுப்பினர்கள் சகலரும் மாவட்ட கமிட்டி முதல், இடைக்கமிட்டி உறுப்பினர் வரை கடுமையாக போராட வேண்டும்.

10-57 கட்சி கிளை செயலாளர்கள் கூட்டத்தை இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கூட்டி, அவர்களுக்கு அரசியல் பயிற்சி அளிக்கவேண்டும்

என்று முடிவெடுத்து இருந்தோம். ஒரு சில மாவட்டங்கள் இதை அமுல் படுத்துகின்றன. ஆனால் பெரும்பாலான மாவட்டங்கள் இதை கறாராக நடத்துவதில்லை. அவ்வாறு நடைபெறும் கிளைச்செயலாளர் கூட்டங்களில் சால்கியா பிளீன வழிகாட்டுதல்படி அரசியல் ரிப்போர்ட் தருவதும் எழுப் பப்படும் கேள்விகளுக்கு பதில் அளிப்பது என்ற நடைமுறையும் பின்பற்றப் படவில்லை. கிளைகளை இயங்கச் செய்வதில் கிளைச்செயலாளர்களின் கூட்டம் மிகவும் பயனுள்ளதாக இருக்கமுடியும். மாவட்டக் குழுக்களும், இடைக் கமிட்டிகளும் கவனமாக இருந்து கிளைச் செயலாளர்களுக்கான கூட்டத்தை இரண்டு மாதத்திற்கு ஒருமுறை கூட்டுவதற்கு உத்தரவாதப்படுத்துவ தோடு வெறும் அறிவிப்புகளை தெரிவிக்கும் கூட்டமாக அதை மாற்றிவிடா மலும் பார்த்துக்கொள்ள வேண்டும். கிளைக் கூட்டங்கள் முறையாக கூடா ததற்கு கிளைச் செயலாளரின் முன் முயற்சி குறைவும், கிளைத்தோழர்களின் அரசியல் உணர்வு மட்டம் போதுமானதாக இல்லாததும் காரணமாக உள்ளது.

10-58 கிளைச் செயலாளர்கள் கூட்டத்தில் ரிப்போர்ட் செய்வதற் கான குறிப்பினை ஒருமுறை மாவட்டக் குழுக்களுக்கு மாநில மையம் அனுப்பியது. இந்த ரிப்போர்ட் குறிப்புகள் எவ்வாறு பயன்பட்டன என் பதை மாவட்டக் குழுக்களும் தெரிவிக்கவில்லை. மாநிலக்குழுவும் தொடர்ந்து ரிப்போர்ட் செய்வதற்கான குறிப்பினை அனுப்பவும் இல்லை. சால்கியா பிளீனம் தெரிவித்த முறையில் கிளைச்செயலாளர்கள் கூட்டம் நடைபெற ரிப்போர்ட்டிங் குறிப்புகளை இரு மாதத்திற்கொரு முறை மாவட்டங்களுக்கு மாநிலக்குழு வருங்காலத்தில் அனுப்பி வைத்திட வேண்டும்.

கட்சி உறுப்பினர்கள்

10-59 கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை:

	பி.எம்.	சி. எம்.	ஏ. எம்.
1988	*24,349*	*8,804*	*11,793*
1989	*27,954*	*10,446*	*18,341*
1990	*32,282*	*12,567*	*13,886*
1991	*36,770*	*12,401*	*13,391*

10—60 கட்சிஸ்தாபன பிரச்சனைகள் மீது விவாதித்து முடிவுகள் எடுத்த மாநிலக்குழு கூட்டத்தில் வருடத்திற்கு சராசரி 10 சதவீதம் உறுப்பினர் எண்ணிக்கையைஉயர்த்த வேண்டும் எனக் கோரி இருந்தோம். இந்த முடிவு வெற்றிகரமாகவே நடந்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் கட்சி உறுப்பினர் எண்ணிக்கை கூடியுள்ளது.

10—61 பொதுவாக பரீட்சார்த்த உறுப்பினர்களை கட்சிக்கு கொண்டு வருவதில் மாவட்ட கமிட்டிகளும், இடைக்கமிட்டிகளும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். ஒருமுறை அவர்களை துணைக்குழுவில் சேர்த்து விட்டபிறகு, திரும்பவும் அந்தக் கிளைகளை கூட்டாமலேயே விடுவது, அரசி யல் பயிற்சியோ, வகுப்போ, ரிப்போர்ட்டோ தராமல் விடுவது, இயக்கங் களில் அவர்களைக் கொண்டு வருவதில் போதிய கவனம் செலுத்தாமல்

விடுவது ஆகிய காரணங்களினால் துணைக்குழு உறுப்பினர்களில் கணிசமான பேர் அடுத்த பதிவின்போது விடுபட்டு போகிறார்கள்.

10–62 1980-க்குப் பின் கட்சியில் சேர்ந்தோர் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். இவர்கள் கட்சி உறுப்பினர்களில் 60 சதவீதமாகும். இவர்களுக்கு கட்சியின் வரலாறு பற்றி தெரிய வாய்ப்பில்லை. ஒன்றுபட்ட கட்சியில் வலது திருத்தல் வாதத்தை எதிர்த்து நடத்திய, இடதுசாரி அதிதீவிர போக்கை எதிர்த்து நடத்திய போராட்டத்தில் பங்கு பெற்றவர்கள் அல்லர். சிறை வாழ்க்கை, தலைமறைவு வாழ்க்கை, அடக்குமுறை இவையெல்லாம் கூட சந்தித்து அனுபவம் பெறாதவர்கள். இவர்களுக்கு கட்சியின் வரலாற்றினை போதிக்கும் கடமை நம்முன் உள்ளது.

10-63 மாவட்டங்களில், தாலுகாக்களில், கிளை மட்டத்தில் எத்தனையோ போராட்டங்களைக் கடந்த மூன்றாண்டு காலத்தில் நடத்தியுள்ளோம். மக்களின் பிரச்சனைகளுக்காக நின்றோம். மக்கள் மத்தியில்ஓரளவு தான் நம் பிரச்சாரத்தை எடுத்துச் சென்றுள்ளோம். ஆனால் இன்னமும் நம் கட்சி ஒரு பலம் பொருந்திய வெகுஜன புரட்சி கட்சியாக வளர நீண்ட தூரம் போக வேண்டியுள்ளது.

10-64 நம் போராட்டத்தின் மூலம் மக்களுக்கு கிடைத்த வெற்றிகளைப் பயன்படுத்தி மேலும்மேலும் கட்சிக்கு தோழர்களைக் கொண்டு வருவதில் அதிகபட்ச கவனம் தேவைப்படுகிறது.

10–65 அண்மைக்காலமாக கட்சியில் எடுக்கப்பட்டு வரும் ஒரு
நல்ல அம்சம்-பெண் தோழர்களை கட்சிக்கு கொண்டு வருவதில் கட்சி
அணிகள் முயற்சிகள் எடுத்து வருகின்றன. மாவட்ட மாநாடுகளில்
முன்பைவிட அதிக பெண் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். மாவட்ட
குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளார்கள். தேர்தல் பிரச்
சாரத்தில் பல மாவட்டங்களில் பெண்கள் பங்கு கொண்டார்கள். பிரச்
சாரங்களில் நன்கு எடுப்பாக பேசினார்கள் பெண் கட்சி
உறுப்பினர்கள் எண்ணிக்கை சென்ற ஆண்டைவிட ஓரளவு
உயர்ந்துள்ளது. (விபரம் தனியாக தரப்பட்டுள்ளது.) பெண்
கள் அரசியலில் பங்கேற்பது, உறுப்பினர்கள் அதிகப்படுத்தப்
பட்டுள்ளது பற்றி மகிழ்ச்சி என்றாலும், கட்சியில் பெண்கள் குறித்த நிலப்
பிரபுத்துவ கண்ணோட்டம் முற்றிலுமாக தீர்ந்து விட்டது என்று சொல்ல
முடியாது. இத்தகைய கண்ணோட்டத்திற்கு எதிராக கட்சி முழுவதும்
தொடர்ந்து விழிப்புடன் போராட வேண்டும். கட்சி பெண் ஊழியர்களை
மேலும் வளர்ப்பதில் கட்சி ஆண் தோழர்கள் கூடுதல் கவனம் செலுத்த
வேண்டும்.

சிறுபான்மையினரையும், தாழ்த்தப்பட்ட மக்களையும் கட்சி
10–66 வேண்டும் என்கிற கட்சியின் அறைகூவலையும் ஏற்று
-க்குள் கொண்டுவர வேண்டும் என்கிற கட்சியின் அறைகூவலையும் ஏற்று
கட்சி அணிகள் முயற்சிகள் எடுத்து வருகின்றன. கட்சி உறுப்பினர் பதிவில்
விவரங்கள் சேகரிக்கின்றன. இந்த திசை நோக்கி ஓர் அசைவு உண்டு.

கட்சி உறுப்பினர் பதிவு

10–67 கட்சி உறுப்பினர் பதிவின்போது ஒவ்வொரு கட்சிக் கிளையும் கூட்டப்பட்டு கட்சித் தோழர்களின் வேலைப் பரிசீலனை நடந்து, மீண்டும் கட்சி உறுப்பினர்கள் பதிவு நடக்கவேண்டும் என்கிற முறை கையாளப்படுகிறது. ஆனால் இதற்காக கூட்டப்படுகிற கிளைகளில்சரியாக தோழர்கள் வருவதில்லை. இரண்டு, மூன்றுமுறை கூட்ட வேண்டிய கட்டாயம் உள்ளது. பதிவின்போது உறுப்பினர் முழு எண்ணிக்கையில் கிளைகளுக்கு வராமல் போனால், அவர்களைப் பற்றி பரிசீலனை ஏதுமில்லாமல் சந்தா பெற்று உறுப்பினர் பதிவு நடப்பதாக காணமுடிகிறது. இதை எந்த வகையிலும் நாம் அனுமதிக்க முடியாது. உறுப்பினர் பதிவுக்காக மட்டும் கூடுகிற கிளைகளும் உண்டு. எல்லா மாவட்டங்களிலும் உறுப்பினர் பதிவின்போது படிவம் அச்சடித்துக்கொடுத்து அதில் விவரங்கள் பதியப்பட்டு பரிசீலனை நடத்துகிற வழிமுறை கடைபிடிக்கப்படுகிறது.

10–68 உறுப்பினர் பதிவின்போர்து விடுபட்டுப் போகிற எண்ணிக்கை சராசரி 5 சதம் முதல் 10 சதம் வரை தொடர்கிறது.

10-69 கட்சி உறுப்பினர்களில் சிலர் லெவி தரமுடியாத காரணத்தாலும், மொத்தமாக லெவி பாக்கி வைத்து பின்னர் அதை செலுத்த முடியாமல் தாங்களாகவே பதிவினை புதுப்பிக்காமல் விடுவதாலும், தொடர்ந்து கிளைக் கூட்டங்களில் பங்கேற்காத நிலை, நடைபெறும் பல்வேறு இயக்கங்களில் அவர்களை கலந்து கொள்ளச் செய்வதில் உள்ள குறைபாடு, போதுமான அரசியல், தத்துவார்த்த பயிற்சி தருவதில் உள்ள பலஹீனம் ஆகியவையும் கட்சி உறுப்பினர்கள் விடுதலுக்கு காரணமாக உள்ளன. ஒழுங்கு நடவடிக்கை எடுத்து நீக்கப்படுகிறவர்களும் உண்டு; என்றாலும் இது மொத்தத்தில் ஒரு சதவீதம்கூட இருக்காது. அரசியல் காரணங்களுக்காக உறுப்பினர் பதிவில் விடுபட்டவர்கள் என்பது இருபது அல்லது முப்பது என்ற எண்ணிக்கையில்தான் இருக்கும்.

10-70 மத்திய கமிட்டி நிர்ணயித்துள்ள லெவி அடிப்படையில் சுமார் 10 % உறுப்பினர்களே லெவி செலுத்துகிறார்கள். மீதமுள்ள உறுப்பினர்கள் அவர்கள் வருவாய்க்கும் கொடுக்கும் லெவிக்கும் சம்பந்தமில்லாமல் லெவி தருகிறார்கள்.

10-71 நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும், ஆலைத் தொழிலாளர்களும்கூட, மத்திய கமிட்டி விகிதாச்சாரத்தில் லெவி தருவதில்லை. அவர்களில் கூட சில பகுதியினர்தான் சரியான விகிதாச்சாரத்தில் லெவி அளிக்கிறார்கள். லெவி அதிக விகிதத்தில் உள்ளதாக அவர்கள் தொடர்ந்து கருத்து தெரிவித்து வருகிறார்கள்.

10-72 கட்சி உறுப்பினர்களில் மாதம் ரூ.10/-அதற்கு மேல் லெவி செலுத்துபவர்கள் சுமார் 5% பேரும், ரூ.5/- அல்லது அதற்கு மேல் செலுத்துபவர்கள் 10% பேரும், மீதமுள்ளவர்கள் அனைவரும் ரூ.1/– அல்லது ரூ.2/- என்ற அடிப்படையிலேயே லெவி செலுத்துகிறார்கள். பின் தங்கிய சில மாவட்டங்களில் கடுமையான வறட்சி,புன்செய் நிலப் பகுதிகளில் எவ்வித வருமானமும் இல்லாத நிலை ஆகிய காரணத்தால் இந்த

லெவியும் கிடைப்பதில்லை, ஒரே அரங்கத்தில் பணிபுரியும் தோழர்களிட மிருந்து லெவி வசூல் செய்யும் தொகையானது மாவட்டத்திற்கு மாவட் டம் வித்தியாசமானதாக உள்ளது.

10-73 உறுப்பினரிடமிருந்து மாதாமாதம் லெவி வசூல் செய்வது என்பது 90% கிளைகளில் நடைபெறுவதில்லை. மத்தியதர வர்க்க கிளை களில்கூட இது சீராக நடைபெறுவதில்லை. ஆண்டுக்கு ஒரு முறை உறுப் பினர் பதிவின்போது லெவி வசூல் செய்யும் கிளைகள்தான் பெரும்பாலும் உண்டு.

10-74 வசூலாகும் மொத்த லெவியில் 10% மாநில மையத் திற்கு சேர வேண்டிய தொகையை எல்லா மாவட்டங்களும் சீராக அனுப்புவதில்லை. மாவட்டங்களில் வசூலாகும் மொத்த லெவி விவரமோ, மொத்தம் வசூலாக வேண்டிய விவரமோ மாநில மையத்திற்கு அனுப் பப்படுவதில்லை. உதாரணமாக, 1988-ல் 5 மாவட்டக் குழுக்களும், 1989-90ல் 9 மாவட்டக் குழுக்களும்தான் தங்களுக்குக் கிடைத்த மொத்த லெவி விவரங்களை மாநில மையத்திற்கு தந்துள்ளன. மற்ற மாவட்டக் குழுக்கள் தரவில்லை. இந்த விவரம் இல்லாததால் மாநில மையத்திற்கு வரவேண்டிய லெவி பகுதி முழுமையாக செலுத்தப் பட்டதா என்பதை ஒப்பிட வாய்ப்பில்லை. மாவட்டக் குழுக்கள் தோராய மாக லெவி தொகை அனுப்புகின்றன. (லெவி செலுத்திய விவரங்கள் தனியாக தரப்பட்டுள்ளன) இதில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவர முயல வேண்டும். இந்தப் போக்கு நீடிப்பது கட்சி ஸ்தாபன கோட்பாட் டிற்கு உகந்ததல்ல.

10—75 நமது கட்சி ஒரு தொழிலாளி வர்க்க கட்சி என்ற முறை யில் கட்சி உறுப்பினர்களில் தொழிலாளி வர்க்கத்திலிருந்து வந்தவர்கள் எண்ணிக்கை பற்றி துல்லியமான கணக்கு நம்மிடமில்லை. ஆனால் தொழி லாளி வர்க்கத்திலிருந்து கட்சி உறுப்பினராக வந்தவர்கள் எண்ணிக்கை என்பது சமீப காலங்களில் குறைவாகவே உள்ளது. தொழிலாளிகள் குடும் பத்தைச் சேர்ந்தவர்கள் வாலிபர் அமைப்பு ஆகியவற்றிலிருந்து கட்சிக்கு வந்துள்ள போதிலும், நேரடியாக் தொழிலாளர்கள் எவ்வளவு சதவீதம் பேர் கட்சிக்கு வந்தனர் என்று பார்க்கும்போது குறைவாகவே உள்ளது. எதிர்காலத்தில் இதற்கான காரணம் பற்றி ஒவ்வொரு மட்டத்திலும் ஆய்வு நடத்தி இந்த பலகீனத்தை களைய வேண்டியுள்ளது.

ஃபிராக்ஷன் - சப் - கமிட்டிகள்:

10—76 மாநில அளவிலான ஃபிராக்ஷன், சப்-கமிட்டிகள் தொடர்ச்சியாக சம்பந்தப்பட்ட மாநில செயற்குழு உறுப்பினர்கள் பங்கு பெற்று முறையாக நடைபெறுகின்றன.

10-77 இந்த காலத்தில் மாநில பிராக்ஷன்களின் செயல்பாட்டில் நல்ல அபிவிருத்தி உண்டு. இதன் விளைவாக வர்க்க வெகுஜன அரங்கில் நமது கட்சியின் அரசியல் லைனைக் கொண்டுசெல்ல முடிந்துள்ளது. இதன் மூலம் இவ்வரங்கங்களின் இயக்கங்கள் வலுப்பெற்றுள்ளது.

10-78 ஆனால் இந்த அரங்கங்களில் கட்சியைக் கட்டுவது என்ற பிரச்சனையில் தொடர்ந்து பலகீனம் நீடிக்கிறது.

10-79 மாநில ஃபிராக்ஷன்களின் செயல்பாட்டினை ஒப்பிடும் போது மாவட்ட ஃபிராக்ஷன்களின் செயல்பாட்டில் பெரிய பலகீனம் உள்ளது. பல சப்-கமிட்டி/ஃபிராக்ஷன்கள் பெயரளவுக்கே உள்ளன. வெகுஜன அமைப்பின் நிர்வாகக்குழு போன்று செயல்படும் நிலைமையும் உள்ளது.

10-80 எதிர்காலத்தில் மாவட்ட ஃபிராக்ஷன்களின் செயல்பாட்டில் பெரும் அபிவிருத்தி காண கடுமையான முயற்சி தேவைப்படுகிறது.

தோழர் பி. ராமமூர்த்தி நினைவகம்

10-81 சென்னையில் நம் கட்சிக்கென மாநில அலுவலகம் செயல்பட ஓரளவு வசதியுள்ள கட்டிடம் ஒன்று வாங்கமுடிவெடுத்தோம். தியாகராய நகரில் இப்போதுள்ள கட்டிடம் மொத்தத்தில் ரூ. 45 லட்சத்திற்கு விற்பனைக்குவந்த காரணத்தால் இக்கட்டிடம் நமக்கு மிகவும் பயன்படுமாதலால் மாநிலக்குழு இம்முடிவினை மேற்கொண்டது.

10-82 தோழர் பி.ஆர். நினைவக நிதியாக ரூ. 40லட்சம் வசூலிக்க மாநிலக்குழு முடிவு செய்தது. கட்சி அணிகள் முழுமூச்சாக நிதி வசூலில் ஈடுபட்டன. மத்தியதர வர்க்க அரங்கங்களும் கணிசமாக நிதி வழங்கி உதவி செய்தன. குறுகிய காலத்தில் ரூ. 35 லட்சம் வசூலித்து தந்தது மிகவும் பாராட்டவேண்டிய விஷயம். மாநிலத்திற்கென தோழர் பி. ஆர். நினைவக கட்டிடம் வாங்க கட்சிஅணிகள் முழுவதும் அரசியல் உணர்வுடன் செயல்பட்டு கடமையை நிறைவேற்றின. பி. ஆர். நினைவகத்தை தோழர் ஜோதிபாசு திறந்துவைத்த நிகழ்ச்சியும் சிறப்பாக நடைபெற்றது.

10-83 திருவல்லிக்கேணியில் நம்முடைய பழைய மாநில கட்டிடம் ரூ.8 லட்சத்திற்கு விற்கப்பட்டது.

தோழர் வி.பி.சிந்தன் நினைவகம்

10-84 தோழர் வி.பி.சி.நினைவக நிதிக்கு ரூ.15,27,200 வசூலாகியது.ரூ.4,55,000-க்கு நிலம் வாங்கினோம். ஒரு லட்ச ரூபாய் குடும்ப உதவி நிதியாக தரப்பட்டுள்ளது. நிலத்தின் மீது நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது.தற்போது நமக்கு சாதகமாக தீர்ப்பு கிடைத்துள்ளது. பத்திர பதிவுகள் நடந்து முடிந்தவுடன் நினைவக கட்டுமான பணிகளை துவங்கிட வேண்டும்.

கட்சி நிதி

10-85 கட்சியின் மாநிலக்குழுவின் தோராயமான மாதாந்திர வருட வரவு—செலவு கணக்குகள் கீழே தரப்பட்டுள்ளது.

மாநிலக்குழுவின் செலவின வகையில்—

முழுநேர ஊழியர் அலவன்ஸ், போக்குவரத்து, தொலைபேசி—டெலக்ஸ், கார் பராமரிப்பு, ஸ்கூட்டர், சில்வர் பிளஸ் பராமரிப்பு, கட்டிட பராமரிப்பு, ஸ்டேஷனரி உள்ளிட்ட பல செலவுகளுக்கு மாதம் சராசரியாக ரூ. 30,000வரை நிதி தேவைப்படுகிறது. இதில் சில மாதங்களில் குறைவாகவும், ஒருசில மாதங்களில் கூடுதலாகவும் செலவாகலாம்.

10-86 புதிய கட்டிடம் வாங்கிய பிறகு அதன் பராமரிப்பு செலவு, ஸ்தலஸ்தாபன வரி, மின்கட்டணம் ஆகியவை கணிசமாக உயர்ந்துள்ளது. எனவே, ஒரு ஆண்டிற்கு ரூ 5லட்சம் தேவைப்படுகிறது. ஏற்கனவே பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர் லெவி ஆண்டிற்கு 1989ல் ரூ. 85,000ம், 1990ல் ரூ. 93,000ம் கிடைத்து வந்தது. தற்போது ஒரு சட்டமன்ற உறுப்பினரே உள்ள நிலையில் சட்டமன்ற லெவி வரவு குறைந்துள்ளது. மாநில மையத்திற்கு நிதி என்பதே கட்சி உறுப்பினர்களின் லெவியிலிருந்து மாவட்டக் குழுக்கள் மூலம் கிடைக்கும் ஈவுத் தொகை, துணைக்குழு உறுப்பினர்களின் சந்தா, சட்டமன்ற உறுப்பினர்களின் வரவு-லெவி என்றுதான் இருக்கிறது. எதிர்காலத்தில் கட்சி வளர்ச்சி நிதி என மாநில மையம் அறைகூவல் விட வேண்டிவரும்.

10-87 மேலும் கடந்த மூன்ருண்டுகளாக ஆண்டுதோறும் மாநிலக் குழுவின் விசேஷ கட்சி நிதி என்று ஏதும் வசூலிக்க முடியவில்லை. அடுத்தடுத்து, இரண்டு சட்டமன்றத் தேர்தல், இரண்டு பாராளுமன்றத் தேர்தல் என்று வந்ததால் இதற்கான பெரும் தொகையை மாவட்டக் குழுக்களே வசூல் செய்து செலவு செய்தன. மேலும் தோழர் பி. ஆர். நினைவக நிதி வகையில் ரூ. 33, 99, 846/– மாவட்டக் குழுக்கள் வசூலித்து தந்துள்ளன.

10—88 மாநில மையம், மாவட்டக்குழுக்களுக்கு ரூ 10 லட்சம் வரை கடன் தர வேண்டியுள்ளது. இது தோழர் பி.ஆர். நினைவகம் வாங்கியதில் ஏற்பட்ட கடனாகும். கட்சியின் நிதி ஏற்பாடுகளைக் கவனிக்க தோழர் என். வரதராஜன், பி.ஆர். பரமேஸ்வரன், கே.வரதராசன் ஆகிய மூன்று பேரைக்கொண்ட நிதிக்குழு செயல்பட்டு வருகிறது; மாநிலக்குழுவின் கணக்குகளை தணிக்கை செய்ய டி. ஜானகிராமன், என். சீனிவாசன், ஜி. ரத்தினவேலு ஆகிய தோழர்களைக் கொண்ட தணிக்கைக்குழு அமைக்கப்பட்டு, வரவு-செலவு கணக்கு தணிக்கை செய்யப்பட்டுள்ளது.

10-89 ஒவ்வொரு மாநிலக்குழு கூட்டத்திலும் மாநிலக்குழுவின் மாதாந்திர வரவு-செலவு கணக்குகள் வைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்படுகின்றன. இவ்வாறே மாவட்டக்குழு மட்டத்திலும் நிதிக் குழுக்களையும், தணிக்கைக் குழுக்களையும் அமைக்குமாறு கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டக்குழு கூட்டத்திலும் வரவு-செலவு கணக்கை சமர்ப்பிக்கும் ஏற்பாடு பெரும்பான்மை மாவட்டங்களில் இல்லை. எதிர்காலத்தில் மாவட்டக் குழுக்கள் இதில் கவனம் செலுத்த வேண்டும். கிளைவரை கணக்குகள் பராமரிக்கப்பட வேண்டும்.

10-90 கடந்த மூன்ருண்டு காலத்தில் மாநில மையத்திலிருந்து விசேஷ நிதி வசூலிக்க அறைகூவல் விடப்பட்டுள்ளது விபரம் வருமாறு:-

1989	சட்டமன்ற தேர்தல் நிதி	ரூ. 6,66,851-00
	சட்டமன்ற இடைத் தேர்தல் நிதி	87,186-65
	பாராளுமன்ற தேர்தல் நிதி	6,97,462-50
1991	பாராளுமன்ற, சட்டமன்ற தேர்தல் நிதி	5,39,707-70
	தோழர் பி.ஆர். நினைவக நிதி	33,99,846-40
	திரிபுரா பாதுகாப்பு நிதி	1,69,386-85

10-91 தோழர் பி.ஆர். நினைவக நிதி வசூலில் இறுதியாக உண்டியல் வசூலுக்கு அறைகூவல் விடப்பட்டது. அதேபோல், திரிபுரா நிவாரண நிதிக்கும் அறைகூவல் விடப்பட்டது. இதன் அனுபவம் என்னவென்ருல், கட்சி கிளைகள் திட்டமிட்டு தமிழகம் முழுவதும் உண்டியல் வசூலில் இறங்கினுல் ஒரே நாளில் ரூ. 5 லட்சம் நிதி வசூல் செய்ய முடியும் என்பதையே காட்டுகிறது.

முழு நேர ஊழியர்கள்

10–92 மாநிலம் முழுவதும் உள்ள முழுநேர ஊழியர்கள், அலவன்ஸ் ஊழியர்களின் பட்டியல் தனியாக தரப்பட்டுள்ளது.

10-93 மாநிலம் முழுவதும் 448 முழுநேர ஊழியர்களும், 102 அலவன்ஸ் ஊழியர்களும் உள்ளனர். மாவட்டங்களில் மேலும் ஏராளமான முழுநேர ஊழியர்கள் தேவைப்படுகிருர்கள். தாலு-கா மட்டத்திலும் ஒவ்வொரு அரங்கத்திற்கும் முழுநேர ஊழியர்கள் தேவைப்படுகிருர்கள். ஆனுல் மாவட்டங்களில் போதிய வருவாய் இல்லாத காரணத்தால் முழுநேர ஊழியர்களை எடுப்பதில் தயக்கம் உண்டு. முழு நேர ஊழியர்களை கட்சிக்கு கொண்டு வருவதற்கு முன்னுல் நன்கு ஆலோசிப்பது அவசியம். ஊழியர்களை மதிப்பீடு செய்வதில் எச்சரிக்கை தேவைப்படுகிறது. சில நேரங்களில் சிலர் இதை ஒரு இடைக்கால வேலைவாய்ப்பாக கருதியும் வருகிற போக்குகளும் தலைதூக்குவதுண்டு. முழுநேர ஊழியர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றும் தோழர்களுக்கு தத்துவார்த்த பயிற்சி கொடுப்பதில் தனி கவனம் தேவைப்படுகிறது. அவர்களுடைய பணிகள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். ஏற்கனவே, நாம் முழுநேர ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும்; அவர்களின் பணிகள் அடிக்கடி பரிசீலிக்கப்பட வேண்டும் என்று முடிவு எடுத்திருந்தோம். ஆனுல் பெரும்பாலான மாவட்டக்குழுக்கள் இதை அமுல்படுத்தவில்லை. சென்னை, செங்கை, நெல்லை, சிதம்பரனுர் ஆகிய மாவட்டங்களில் இதுபோன்ற பரிசீலனைகள் நடைபெற்றுலும் தொடர்ந்து நடைபெறவில்லை.

10-94 முழு நேர ஊழியர்களுக்கு கடந்த மூன்ருண்டு காலத்தில் இரண்டு முறை அலவன்ஸ் உயர்த்தி, இப்போது திருமணம் ஆனவர்களுக்கு ரூ. 950-ம், திருமணம் ஆகாதவர்களுக்கு ரூ. 750ம் தரவேண்டும்

